

நீங்காத
நினைவுகளுடன்
அமுதவல்லி கல்யாணசுந்தரம்
நீங்காத
நினைவுகளுடன்
அமுதவல்லி கல்யாணசுந்தரம்

# நீங்காத நினைவுகளுடன்

## 1

**வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்**

**அதை வாங்கித் தந்த பெருமை எல்லாம் உன்னைச் சேரும்**

**பெற்றெடுத்துப் பேர் கொடுத்த அன்னை அல்லவோ?**

**நீ பேசுகின்ற தெய்வம் என்பது உண்மை அல்லவோ...**

**சா**ப்பாட்டு மேஜையில் உணவுப் பாத்திரங்களை அடுக்கிக் கொண்டு இருந்தபோது, தன் கழுத்தைக் கட்டிப் பாட்டுப்பாடி கொஞ்சிய மகள் பாரதியை, தள்ளி விட்டார் பாக்கியம்.

''காலங்கார்த்தால இப்படி பாடிட்டு இருக்க? இன்னிக்கு உனக்கு எக்ஸாம் இருக்கு மறந்து விட்டதா? குளிச்சு சாப்பிட்டுட்டுக் கிளம்புற வழியைப் பாரு போ'' என்று தன் தோளைச் சுற்றி இருந்த மகளின் கரங்களை விலக்கி அதட்டினார்.

''என்னம்மா நீங்க? உங்களை தெய்வம் ரேஞ்சுக்குத் தூக்கி வச்சுப் பாடுறேன். அதுக்கு மசியாமல் இப்படித் திட்டுறீங்க? இங்கே இருந்து காலேஜ் போக முக்கால் மணி நேரம் ஆகுமா? எனக்கு பத்து மணிக்கு பரீட்சை. இப்ப மணி எட்டே ஆகலை. டிரைவர் கூட காரில் போகப் போகிறேன். ஏன் இப்படி டென்ஷன் ஆகறீங்க?''

''நீ இன்னும் குளிக்கலை! ட்ரெஸ் மாற்ற உனக்கு ஒரு மணி நேரம் ஆகுமே? பதிலுக்குப் பதில் வாய் அடிக்காமல் போய் கிளம்பு பாரதி..'' என்றவரின் குரலில் அதட்டல் குறைந்து, பரீட்சை சமயத்தில் திட்ட வேண்டாமே என்ற கனிவு தலை தூக்கியது.

''என் நேவி ப்ளூ சல்வார் காணோம். அதைத் தேடி எடுத்துத் தாங்க, என்று நானும் ஒரு மணி நேரமா தாஜா பண்ணிட்டு இருக்கேன். நீங்க அசைஞ்ச மாதிரியே இல்லை. இப்ப நான் லேட் பண்றேன் என்று என்னையே குறை சொல்றீங்களா? சரியான சண்டை கோழி.''

''நான் சண்டை கோழியா? எல்லாம் நேரம் தான்! உனக்கு அந்த சல்வாரை விட்டால் வேறே ட்ரெஸ் இல்லையா? காலையில் கிச்சனில் வேலையா இருக்கும் போது பிராணனை வாங்கினால், எப்படி என்னால் உடனே வர முடியும்?'' என்றவரின் குரலில் கோபம் கூட அவள் உடனே மலை இறங்கினாள்.



''இன்னிக்கு கிளாஸ்ல எல்லோரும் ஒரே கலரில் போட ப்ளான் பண்ணி வச்சு இருக்கோம். பர்ஸ்ட் இயர் படிக்கும்போது பிறந்த நாளைக்கு வாங்கிய அந்த ப்ளூ சுடிதாரை எத்தனை தடவை கேக்கறேன்? கோயம்புத்தூரில் காட்டன் சூப்பரா இருக்கு என்று தேடித் தேடி வாங்கினேன். அது எங்கே போச்சு?'' என்று கேட்ட உடனே அவசரமாகத் திரும்பி மக்களைப் பார்த்தார் பாக்கியம்.

அவள் முகத்தில் எதுவும் வித்தியாசமாக இல்லை. எதற்கு கோவை போனேன் என்று கேட்பாளா? அந்த ஆடையில் என்ன ஸ்பெஷல் என்று கேட்பாளா? என்ன பதில் சொல்வது? யோசனையை நிறுத்தி, கேலிக்கு வந்தார்.

''அது சரி, உங்க பேர் தெரியாதவங்க, அல்லது கல்லூரியில் தூரத்தில் இருப்பவங்க கூப்பிடணும் என்றால், ட்ரெஸ் கலரை வைத்துக் கூப்பிடலாம். இப்படி எல்லோரும் ஒரே கலர் ட்ரெஸ் போட்டால், என்ன பண்ணுவாங்க?'' என்று பாக்கியத்தின் கேள்வி, பாரதியின் நினைவலையில் எதிரொலித்தது.

**நினைவலை 1**

''ஏய் எல்லோ சுடிதார்! எவ்வளவு நேரம் கண்ணை மூடி சாமி கும்பிடுற மாதிரி பில்ட் அப் கொடுப்ப? வா இங்கே'' என்ற அதட்டல் குரல் கேட்டதும் எரிச்சலோடு திரும்பி முறைத்துவிட்டு, தன் வேலையை சலனமின்றித் தொடர்ந்தாள்.

**ஓம் சுமுகாய நம**

**ஓம் ஏகதந்தாய நம**

ஓம் கபிலாய நம

ஓம் கஜகர்ணிகாய நம

மந்திரத்திற்கு ஒரு தோப்புகரணம் என்ற விகிதத்தில் போட்டுக் கொண்டு இருந்தவளின் மனம் வேகமாக ஒவ்வொன்றுக்கும் ஒரு பிரார்த்தனையை விநாயகரிடம் வைத்துக் கொண்டு இருந்தது.

முதல் முதலில் காலேஜ் வந்து இருக்கேன் இங்கே எனக்கு நிறைய நல்ல ப்ரெண்ட்ஸ் கொடு!

அம்மா சமையலை விட மனசில்லாமல் புது ஊருக்கு வந்து இருக்கேன். ஹாஸ்டலில் நல்ல சாப்பாடு போடணும்!

ஆடை வடிவமைப்பு குறித்த பொறியியல் படிப்பு முடித்த பிறகு இந்த தமிழ்நாட்டிலேயே பெரிய தொழில் அதிபர் என்ற பெயரை வாங்கணும்!

இன்னிக்கு ராகிங் என்ற சிக்கலில் மாட்டாமல் இருக்கணும்!

அந்த நான்காவது பிரார்த்தனை விநாயகரின் காதில் விழுவதற்கு முன்பே, ''பாருடா! சொல்லிட்டே இருக்கேன் சொன்னதைச் செய்யாமல் அசராமல் நிற்பதைப் பாரு'' என்ற குரல் அருகே நின்று இருந்த அந்த கும்பலில் இருந்து மீண்டு வர அவளுக்கு கோபம் வந்தது.

''யார் நீங்க? ஏன் என்னை இப்ப தொந்தரவு பண்ணீங்க?''

''எங்களை கேள்வி கேட்பாயா நீ? நாங்க யாரு தெரியுமில்ல?''



''நீங்க யாரா இருந்தால் எனக்கென்ன? யாரா இருந்தாலும் சாமிக்கு முன்னாடி சமம் தான்.''

''ஹேய் நாங்க கடைசி ஆண்டு மாணவர்கள்.''

''அதனால்?'' என்று அவள் கேள்வியாக இழுக்க, பிரதட்சணம் செய்து கொண்டு இருந்த தோழி வந்துவிட அவளின் துப்பட்டாவைப் பிடித்து இழுத்து, ஜாடை செய்தபடி, ''வணக்கம் சார்'' என்று சொன்னவளை முறைத்தாள்.

''அந்த மரியாதையும் பயமும் இருக்கணும்'' என்று ஒரு விரல் காட்டி மிரட்டியவர்கள். ''நீ போகலாம். எல்லோ சுடிதார், சீக்கிரம் வெளியே வா, நாங்க உன்னை தனியா கவனிக்கணும்'' என்று விட்டு வெளியே செல்ல அவள் பிள்ளையாருக்கு ஒரு தோப்புகரணம் போட்டு விட்டு பயப்படாமல் பின்னால் வந்தாள்.

''என்ன விஷயம் சொல்லுங்க.''

''உனக்குக் கொஞ்சம் கூட மரியாதையே தெரியலையே? சீனியர் பார்த்தால் வணக்கம் சொல்ல வேண்டாமா?''

''அவ்வளவு தானே? இனிமேல் சொல்கிறேன்.''

''திடீர் என்று நல்ல பிள்ளையா மாறி மண்டையை ஆட்டுகிறாய்? என்ன ஆச்சு?''

''ஒண்ணும் இல்லை.''

''சரி கோவிலில் என்னவோ முணுமுணுவென்று முனகிக் கொண்டு இருந்தாயே என்ன விஷயம்?''

''ஸ்லோகம் சொன்னேன்.''

''ஸ்லோகம் எல்லாம் எனக்கு வேண்டாம். நீயும் நானும் ஒரே கலரில் ட்ரெஸ் போட்டு இருக்கோமே? இதை வச்ச பீலிங்கோடு ஒரு பாட்டுப் பாடு கேட்போம்.''

''உங்களைப் பார்த்து என்ன பாட்டுப் பாடுவது?'' என்று முனகி விட்டு, ''அண்ணன் ஒரு கோவில் என்றால் தங்கை ஒரு தீபம் அன்றோ?'' என்று சத்தமாக பாவனையுடன் பாட ஆரம்பிக்க, அங்கே வெடிச் சிரிப்புக் கிளம்பியது.

''டேய்! அண்ணன் ஒரு கோவிலாம்டா...'' என்று அவளை விட்டு விட்டு பாட்டுப் பாடச் சொன்னவனை இவர்கள் கேலி செய்ய ஆரம்பிக்க அவன் முகத்தில் சின்னதாகச் சிரிப்பு மலர்ந்தது.

* * *

''இங்கே நான் பேசிட்டு இருக்கேன்? நீ எங்கே பராக்கு பார்த்துக் கொண்டு இருக்கிறாய்? மணி ஆகவில்லையா?'' என்ற பாக்கியத்தின் குரல் இடையிட அவள் திரும்பிப் பார்த்தாள். என்ன ஆச்சு? மீண்டும் யோசித்த போது அவளுக்கு எதுவும் நினைவில்லை.

''என்னம்மா..? சொல்லுங்க.''

''அது சரி, என்னை இந்த நேரத்தில தொந்தரவு பண்ணுகிறாயே? அவ்வளவு அக்கறை இருப்பவள், ராத்திரி பனிரெண்டு மணி வரைக்கும் விம்பிள்டன் ஃபைனல் மேட்ச் பார்க்காமல் இன்னிக்குப் போட வேண்டிய ஆடையை நேற்று இரவே தேடி எடுத்து வைச்சு இருக்கணும் என்று சொன்னேன்.''

''இன்னிக்கு கடைசி நாள்ம்மா! ப்ளீஸ் என் செல்ல அம்மா இல்லையா? எடுத்துத் தாங்க. இதையே நான் எங்க அப்பாவிடம் சொல்லி இருந்தால் இந்நேரம் எனக்கு புது சல்வாரே வந்து இறங்கி இருக்கும் ஹூம்!'' என்று தன் முகவாயைத் தோளில் இடித்த மகளைப் பார்த்துச் சிரித்தார்.



''வரும்! காலையில் பத்தரைக்கு கடை திறந்து, பதினோரு மணிக்கு சுடிதார் வந்து, பனிரெண்டரைக்கு நீ காலேஜ் போகும்போது, அங்கே பரீட்சையே முடிந்து இருக்கும்'' என்று சிரித்தாலும் கூடவே வந்தார்.

''நீ கேட்கும் டிரஸ் எங்கே இருக்கு தெரியலை. ஆனால் இதுவும் நேவி ப்ளூ தானே? இதைப் போட்டுட்டு போ. அழகா இருக்கு'' என்று ஒரு ஆடையை எடுத்து நீட்ட, அதன் அழகு அவளின் மனத்தையும் கவர்ந்ததால், அவள் மனதில் இருந்த ஆடை மின்னலாக மறைந்து, பாக்கியத்தை பெருமூச்சு விட வைத்தது. அடுத்த அரை மணி நேரம் அம்மா பின்னாடியே நிற்க, அவளின் கேள்விகளும் அம்மாவின் எரிச்சலான பதில்களும் தொடர்ந்தன.

''என்னுடைய ஐப்ரோ பென்சில் காணோம்.''

''கண்ணுக்கு மை போடலைன்னா எக்ஸாம் ஹாலுக்குள் விட மாட்டாங்களா பாரதி...?''

''ப்ளூ கலர் வளையல் எங்கே?''

''பரீட்சைக்கு படிச்சு முடித்தாயோ இல்லையோ, இந்த ட்ரெசுக்கு மேட்சிங்கா நகைகள் அணிய மறந்துடாத!''

''பெற்ற பொண்ணு அழகா இருப்பதைப் பார்த்து கண்ணு வைக்காதீங்கம்மா.''

''ஆமா என் கண்ணை உன் மேலே வச்சுட்டு நான் குருடி மாதிரி தடவித் தடவி நடப்பேனா?''

''ஹய்யோ டைம் ஆச்சு!''

''இப்பதான் உனக்கு மணி பார்க்கத் தெரிந்ததா?''

''அம்மா ப்ளீஸ் நக்கல் பண்ணிட்டே இருக்காதீங்க. பர்சில் வைத்து இருந்த ஹால் டிக்கெட் எங்கே?''

''இது உன் பர்ஸ் இல்லை. நேற்று நான் வாங்கி வந்ததைப் பார்த்து ஆசைப்பட்டு உன் பணத்தை அதில் வைத்து விட்டால் அது உன் பர்ஸ் ஆகி விடுமா? பழைய பர்சில் தேடு.''

''நல்லா மெமரி உங்களுக்கு. சின்ன வயதில் வெண்டைக்காய் அதிகம் சாப்பிட்டீங்களா?'' என்று மேலும் வம்பிழுத்தவளை முறைத்தார் பாக்கியம்.

''பயண நேரம் மட்டும் கணக்கு பண்ணக் கூடாது பாரதி. வழியில் ஏதாவது பிரச்னை வந்தால் என்ன பண்ணுவாய்? முதலில் நீ நேற்று இங்கே வந்தே இருக்கக் கூடாது'' என்று அதட்ட ஒரு வழியாக பாரதி கிளம்பி வந்தபோது மணி எட்டே முக்கால் ஆகி இருந்தது.

''பாரதி மாதிரி நல்ல பொண்ணுங்களுக்கு எந்தப் பிரச்னையும் வராது! அப்படியே வந்தாலும் அந்தப் பிரச்னைக்கு உடனே பிரச்னை வந்து துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று காணாமல் போய்விடும் தெரிஞ்சுக்கோங்க'' என்று டயலாக் எடுத்து விட எதிரே வந்த கணவனிடம் பல்லைக் கடித்தார் பாக்கியம்.

''காலையில் ட்ராபிக் நேரத்துல அவ்வளவு தூரம் போகணுமே. சீக்கிரம் கிளம்பணும் என்ற நினைப்பு இருக்கா பாருங்க? எங்கேயாவது போக்குவரத்து



நெரிசல் ஏற்பட்டால், வாகனம் செல்லும் பாதையை மாற்றி விட்டால் என்ன ஆகும் என்று கொஞ்சமாவது பயம் இருக்கா? எல்லாம் நீங்க கொடுக்கும் செல்லம்'' என்று தன் கணவர் ராஜேந்திரனை வறுத்து எடுத்தார்.

''தேர்வுக்குப் போகிறவளை டென்ஷன் படுத்தாமல் இரேன்'' என்று சமாதானம் செய்த அப்பாவை கன்னத்தில் முத்தமிட்டாள்.

''வயசு பொண்ணு தள்ளி நின்று பேசு'' என்று அதற்கும் பாக்கியம் அதட்ட, ''என்னம்மா! இப்ப எல்லாம் பொண்ணுங்க...'' என்று விளக்கம் சொல்ல ஆரம்பித்த மகளை கை எடுத்துக் கும்பிட்டார்.

''விளக்கம் அப்புறம் சொல்லலாம். முதலில் நல்ல நேரத்தில் கிளம்பு. மணியாகுது...'' என்று தன் வலது கையை வாசலை நோக்கிக் காட்டினார்.

''பரீட்சை எழுதப் போகிறவள் மீது எதுக்கு அவள் மேலே இவ்வளவு எரிச்சல் காண்பிக்கிறாய்?'' என்று மனைவியைக் கடிந்து கொண்டவர் மகளிடம் சிரிப்புடன் திரும்பினார்.

''பெஸ்ட் ஆப் லக் செல்லம்! நீ ஜாக்கிரதையா போயிட்டு வா'' என்று இருபத்தி ஒரு வயது மகளைக் கொஞ்சிய ராஜேந்திரன் மைலாப்பூரில் ஜவுளிக் கடை வைத்து இருக்கிறார்.

''உங்களுக்காவது என் அருமை புரிஞ்சு இருக்கே...'' என்று பதிலுக்கு தந்தையை கொஞ்சிவிட்டுக் காரில் ஏறியவளை வாஞ்சையோடு பார்த்தவரின் கண்களில் சின்ன கலக்கம் வந்து மறைந்தது.

ராஜேந்திரன் பொறுப்பான குடும்பத் தலைவர். தேவையான அளவு வருமானம் ஈட்டினாலும், குடும்பத்தினருடன் நேரம் செலவழிக்க முடியாது. கடையிலும் கோடவுனிலும் மாறி மாறி வேலை இருக்கும் என்பதால் குடும்ப வேலைகள் எதுவாக இருந்தாலும் அம்மாவும் பெண்ணுமே பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரே பெண் என்பதால் செல்லம்! அவளும் அதை ஒரு சலுகையாக எடுத்துக் கொள்வதில்லை. கொஞ்சம் சோம்பேறி தனம் உண்டு. வெளிப்படையாகப் பேசுபவள். மிகுந்த இரக்க சுபாவம் உள்ளவள்.

கையில் இருக்கும் பொருளை, தேவை என்று கேட்கும் நபர்களுக்கு உடனே தாரை வார்க்கும் குணம் உடையவள். படிப்பில் கெட்டி. டெக்ஸ்டைல் டிசைனிங் பொறியியல் படிப்பினை முடிக்கப் போகிறாள். இன்று இறுதியாண்டில் இறுதி பரீட்சை.

''அங்கிள், நான் கார் ஓட்டட்டுமா?'' என்று வீட்டில் இருந்து கிளம்பி இரண்டாவது நிமிஷம் வழக்கம் போல ஆரம்பிக்க அவர் மறுத்தார்.

''பரீட்சை இல்லையாம்மா? இன்னிக்கு நானே ஓட்டுகிறேன். நாளை பின்னே எங்கேயாவது போனால் நீங்க ஓட்டலாம்...''

''தினமும் ஏதாவது சாக்கு போக்கு சொல்லுங்க. எனக்கு பதினெட்டு வயசு முடிஞ்சு லைசென்சும் வாங்கியாச்சு அங்கிள்.''

''உங்களுக்குக் கற்றுக் கொடுத்தது ஒரு அவசரத்துக்கு உதவம்மா! நான் எதுக்கு இங்கே வேலைக்கு இருக்கேன்?''



''உங்களுக்கு என்னை மாதிரி ரெண்டு மடங்கு வயசு இருக்கும். நான் உங்களுக்கு அம்மாவா?''

''இருக்கட்டும்மா. அப்படியே பழகிடுச்சு...''

''பேரை சேர்த்தாவது சொல்லலாம் இல்லையா? உங்க பேரன் என்ன படிக்கிறான்? பொண்ணு நல்லா இருக்காங்களா? எப்போ சேலத்துக்குப் போறீங்க?'' என்று குடும்பத்தினரைப் பற்றி விசாரிக்க, நெகிழ்ச்சியுடன் பதில் சொன்னார் அந்த பாசமான பணியாளர்.

''உங்களுக்கு பரீட்சைக்கு முன்னாடி புத்தகம் புரட்டும் பழக்கம் இல்லையா? டென்ஷனே இல்லாமல் எங்க வீட்டுக் கதை பேசிட்டு இருக்கீங்க?'' என்று ஆச்சரியமாகக் கேட்டார்.

''அது சரி! ஆறு மாசத்துல படிக்காததையா கடைசி அரை மணி நேரத்துல படிக்கப் போறோம்? எக்ஸாம் எழுதப் போகும்போது மனசை ரிலாக்ஸ்டா வைத்து இருந்தாலே போதும்! படிச்சது நினைவில் நிற்கும். இருந்தாலும் நீங்க சொன்னதற்காக புரட்டுகிறேன்'' என்று சொல்லி இருக்கையில் சரிந்தவள், கையில் இருந்த நோட்டு புத்தகத்தில் ஆழ்ந்தாள்.

சில நிமிடங்களில் 'க்ரீச்!' என்ற ஒலியுடன் கார் நிற்பது புரிந்து அவசரமாக நிமிர்ந்து 'என்ன ஆச்சு அங்கிள்?' என்று விசாரித்தாள்.

''தெரியலை, ஏர் லாக் ஆகுது. ஒரே நிமிஷம். நீங்க பயப்படாதீங்க. இதோ ரெடி பண்ணிடறேன்'' என்று அவசரமாக இறங்கி பேனட்டைத் திறந்து நோண்டினார். ஐந்து நிமிடங்கள் பத்து நிமிடங்களாக, இப்போது அவளுக்கு பதட்டம் தோன்ற சுற்றிலும் பார்வையை ஓட்டினாள்.

கிண்டியைத் தாண்டி ஐந்து நிமிடங்கள் ஆகி இருக்கும். இன்னும் கல்லூரிக்குச் செல்ல இருபது நிமிடங்களாவது ஆகும். இதயத் துடிப்பு கூடியது.

''நீங்க வண்டியை சரி பண்ணி எடுத்துப் போங்க, மணியாச்சு, நான் ஆட்டோவில் போகிறேன்'' என்று இறங்கப் பதறினார்.

''ஹையோ பூந்தமல்லி ரொம்ப தூரம் ஆச்சேம்மா? ஆட்டோ வராதே? வந்தாலும் டைம் ஆகும். கால் டாக்சி என்றால் பரவாயில்லை.''

''இனிமேல் போன் பண்ணி கால் டாக்சி வர லேட் ஆகி விட்டால், பரீட்சைக்கு போவது சிரமமாகி விடுமே? அம்மா, காலையில் வாய் வச்ச மாதிரியே ஆகிடுச்சே...'' என்று பதறியபோது சற்று தொலைவில் வெள்ளை நிற இண்டிகா வந்து கொண்டு இருந்தது.

அவள் அவசரமாக கையை நீட்டி வண்டியை நிறுத்த முயன்றாள். அவளைத் தாண்டிச் சென்ற வாகனம் என்ன நினைத்ததோ, மீண்டும் ரிவர்சில் வந்து அருகே நிற்க, அவள் அவசரமாக ஓடி வந்து ஜன்னலில் குனிந்தாள்.

## 2

திருவான்மியூர் கடற்கரை சாலையில் இருந்த தனி வீட்டின் வாசல் கதவில் லேசாக தட்டி, ''அம்மா, காபி தரீங்களா?'' என்று உள்ளே குரல் கொடுத்து விட்டு



வெராண்டாவில் இருந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்தான் புகழேந்தி.

வெள்ளை நிறத்தில் ட்ராக் சூட், ஜெர்சி, ஜாகிங் ஷூக்கள் அணிந்து இருந்தவன், முகத்தில் இருந்த வியர்வைத் துளிகளை டர்க்கி டவலால் துடைத்து விட்டு, அருகே இருந்த ஒரு லிட்டர் நீரை மூச்சு விடாமல் குடித்து முடித்தான். பேப்பரில் தலைப்புச் செய்திகளை பார்த்தபோது அம்மா காபியுடன் வருவது கண்ணில் பட்டது.

''காபியோடு வேற ஏதோ பேப்பரும் எடுத்து வருவது மாதிரி இருக்கு? என்ன விஷயம்?'' என்று விசாரித்தபடி செய்தித்தாளை மடித்து வைத்தான்.

''என் பையனிடம் பேச காலை காபி கொடுக்கும் இந்த நேரம் தான் பொருத்தம். இதைத் தாண்டி விட்டால் அப்புறம் பேங்க் மேனேஜர் பிசியோ பிசி என்று ஆகி விடுவார். ராத்திரி எட்டு மணிக்கு மேல் வீட்டுக்கு அலுத்து சலித்து வரும் மகனிடம் விவாதமா பண்ண முடியும்? சாப்பாட்டைக் கொடுத்துத் தூங்கு என்று தான் சொல்ல முடியும்'' என்று சிரித்தபடி சொல்லிவிட்டு அருகே இன்னொரு நாற்காலியில் அமர்ந்தார் பூரணி.

ஓராண்டுக்கு முன்பு சாலை விபத்தில் காலமான கணவரின் இழப்பில் இருந்து மீண்டு வர முடியாமல் இன்னும் தடுமாறிக் கொண்டு இருப்பவர்.

''நீங்க போடுற காபியின் மணம் வேறே எங்குமே கிடைக்க மாட்டேங்குது! என்ன தான் பண்றீங்க என்று தெரியல'' என்று காபியைக் குடிக்கும் முன் டம்ளரை முகர, அவரின் சிரிப்பு மறைந்தது.

''உங்க அப்பாவும் இப்படியே தான் சொல்வார் புகழ்'' என்று சொன்னவரின் குரலில் ஓராண்டு முடிந்த பிறகும், கணவனின் இழப்பும் அது தந்த வருத்தமும் அப்பட்டமாக இருந்தது.

''ப்ச்! சாரிம்மா, நானே காலையில் அப்பாவை நினைவு படுத்தி அழ வைத்து விட்டேனா?''

''நீ சொல்லவில்லை என்றால் எனக்கு அவர் நினைவுகள் மறந்து போய் விடுமா புகழ்?''

''அப்படி இல்லைம்மா வீட்டில் தனியா இருக்கீங்க. அதனால் தான் பழைய சோக நினைவுகள் உங்களைத் தொந்தரவு செய்கிறது. நாலு இடம் போய் வந்தால் தனிமை இருக்காது. நம்ம பாண்டியன் மரம் வளர்ப்பதற்கு என்று ஒரு சங்கம் வைத்து இருக்கிறான். அதில் சேர்ந்தால் ஒன்று மாற்றி ஒன்று நிகழ்ச்சிகள் வரும். தொடர்ந்து வேலை இருக்கும் என்று சொன்னால் கேட்டால் தானே?'' என்று வருத்தப்பட அவர் முகம் மலர்ந்தது.

''புகழ்! சொல்ல மறந்து விட்டேனே? பாண்டியன் நேற்று மாலை இங்கே வந்து இருந்தான். பேங்க் சார்பில் குழந்தையின் இருதய மாற்று அறுவை சிகிச்சைக்கு இருபதாயிரம் ரூபாய் கொடுக்கிறேன் என்று சொல்லி இருந்தாயா? பணம் கட்ட இன்று கடைசி நாள் என்று நினைவு படுத்தச் சொன்னான்.''

''பேங்க் சார்பில் இல்லை. என் நண்பர்களிடமும், உடன் பணி புரிபவர்களிடமும் சொல்லி வாங்கிய பணம் தான். எல்லாத்தையும் சேர்த்து ஒரே செக்கா போட்டுக் கொடுத்து விடலாம். என் செக் புக் எடுத்துட்டு வரீங்களா? என்றபடி மடி கணினியை இயக்கினான்.



''நான் உன்னிடம் உன் கல்யாணம் பற்றிப் பேசணும் என்று நினைத்தேன். அதற்குள் பாண்டியன் வந்து விடுவான் போல...'' என்று அவர் பேசுவதே காதில் விழாத பாவனையில் அவன் கணினியில் மூழ்கி இருந்தான்.

''புகழ்! உனக்கு காது கேட்குமா? உன்னிடம் தான் பேசிட்டு இருக்கேன். பொண்ணு பேர் பாரதி. பனிமலர் எஞ்சினியரிங் காலேஜில் படிச்சுட்டு இருக்கா. நான் பேச வேண்டிய விஷயம் அப்படியே நிக்குதே புகழ்?'' என்று சலித்துக் கொண்டார்.

நண்பர்களிடம் வசூல் செய்த பணத்தை கணக்கிட்டு ஒரே காசோலையாக எழுதி, நன்கொடை கொடுத்தவர்களின் பட்டியலை கணினியில் பிரிண்ட் அவுட் எடுக்கவும் பாண்டியன் வரவும் சரியாக இருந்தது.

''இன்று பேங்க் போகலைம்மா. என்னுடன் வேலை பார்க்கும் சரவணனுக்குக் கல்யாணம் போய்விட்டு மதியம் வந்து விடுவேன். மதியம் சாவகாசமா பேசலாம்.''

''ஊரில் இருப்பவங்க கல்யாணத்துக்கு எல்லாம் போ. உன் கல்யாணம் பற்றிப் பேசினால் பிடி கொடுத்துடாதே'' என்று பூரணி முனகியதைக் கண்டு கொள்ளாமல் விருந்தாளியை வரவேற்பதில் முனைந்தான்.

''பாண்டி, வா வா'' என்று வரவேற்க அவன் கால்களைத் தொட்டு வணங்கி எழுந்தான்.

''ஏய் என்ன பண்றே? எழுந்திரி முதலில்'' என்று அதட்டியவன், ''அம்மா பாண்டிக்கு காபி கொடுங்க'' என்று திரும்பிச் சொன்னான்.

"இதெல்லாம் எனக்குச் சொல்லணுமா? நீ உட்கார்ந்து பேசு. நான் காபி எடுத்துட்டு வரேன்" என்று எழுந்தார் பூரணி.

"என்ன விஷயம் பாண்டி சொல்லு? முதலில் உட்கார்..."

"இருக்கட்டும் சார்" என்று அவன் தயங்க, அவரும் எழுந்தார்.

"நீ உட்காரவில்லை என்றால் நானும் நின்று கொண்டே பேசுகிறேன்" என்றதும், "சார், சார் நீங்க உட்காருங்க சார்" என்று பதறி அவசரமாக இருக்கையில் அமர்ந்தான்.

"போன மாசம் கார் வாங்க லோன் சாங்க்ஷன் பண்ணினீங்களே! அதை வச்சு நேற்று புது இண்டிகா வண்டி எடுத்தேன். உங்க கையால் வண்டியை வாங்கிட்டுப் போக வந்தேன் சார்" என்று சொல்லி புன்னகை செய்தான்.

"சந்தோஷம் பாண்டியன். மனமார்ந்த வாழ்த்துக்கள். நல்லபடியா உழைச்சு முன்னேறணும். சவாரி எப்படிப் பிடிப்பாய்?"

"ஜாத் ட்ராவல்ஸ்ல பதிவு பண்ணி இருக்கேன் சார். அவங்க கஸ்டமர் பிடிச்சுத் தருவாங்க. அவங்களுக்கு கிலோ மீட்டருக்கு ஒரு ரூபாய் கொடுக்கணும்."

"ஆரம்பத்தில் இந்த மாதிரி ஒரு இடத்தில தொடர்பு வைத்துக் கொள்வது தான் நல்லது. இப்ப சின்ன வயசு. பகல் இரவு பார்க்காமல் நாலு இடம் போய் வந்து பழகிக் கொண்டால் தொழில் பிடிபடும். மேலே மேலே வண்டி வாங்கி சீக்கிரமே நீ சொந்தமா ஒரு ட்ராவல்ஸ்



வைக்கணும். மறக்காமல் கடனைத் திருப்பிக் கட்ட நினைக்கணும். அப்ப தான் என்னால் உன்னை மாதிரி இன்னும் நாலு பேருக்கு உதவி செய்ய முடியும்" என்று சொல்ல அவன் அவசரமாக தலை அசைத்தான்.

"நிச்சயமா கடனை சீக்கிரமே கட்டி என் மேலே வச்ச இருக்கும் நம்பிக்கையை நான் காப்பாற்றுவேன் சார். இப்ப நீங்க ப்ரீயா சார்?"

"இன்னிக்கு ஒரு ப்ரெண்ட் கல்யாணத்திற்கு மைலாப்பூர் போகணும். அதனால் பேங்க் போகலை. லீவுதான். என்ன விஷயம் சொல்லு..."

"புது காரை நீங்க ஒரு ரவுண்ட் ஓட்டி பார்க்கறீங்களா சார்?" என்று தயக்கத்துடன் இழுத்தான்.

"இல்லை பாண்டி உன்னுடைய கார். நீ ஓட்டு. முதலில் நீதான் ஓட்டணும்."

"ஷோ ரூமில் இருந்து நான் தானே சார் ஓட்டி வந்தேன். நீங்க இப்ப ஒரு ரவுண்ட் ஓட்டுங்க" என்று சாவியை விடாமல் திணிக்க அவன் எழுந்தான்.

"இப்படி புது காரை என் கையில் கொடுத்தால் நான் விட மாட்டேனே?" என்று ஆசையுடன் சொன்னவன் உள்ளே பார்த்தான்.

சாலை விபத்தில் அப்பா இறந்த பிறகு இந்த ஒரு வருடமாக அம்மா தன்னை வாகனம் ஓட்ட அனுமதிப்பதில்லை. அம்மா கண்ணில் படவில்லை. குனிந்து தன் ஆடையைப் பார்த்தான். வெண்ணிற ட்ராக் சூட் ஸ்போர்ட்ஸ் டீ ஷர்ட். உள்ளே சென்று உடை மாற்றினால் அம்மாவின் கண்ணில் படக்கூடும். அவர்கள்

மறுப்பாக ஏதாவது சொன்ன பிறகு கிளம்ப முடியாது என்று அப்படியே கிளம்பினான்.

''அம்மா இங்கே பக்கத்தில் பாண்டியனுடன் சென்று வருகிறேன்...'' என்று சொன்னவன் கையில் அந்தப் புத்தம் புது கார் சாவி இருப்பதை அவரின் கூர்மையான கண்கள் கவனிக்க மறக்கவில்லை.

''புகழ்! ட்ரீட்மெண்ட் எடுக்கும் குழந்தைக்கு செக் கொடுத்து விட்டாயா?'' என்று ஆரம்பிக்கும் முன்பு, ''கையில் தான் இருக்கு கொடுத்து விடுகிறேன்'' என்ற பதிலுடன் அவசரமாக செக் புத்தகத்தை தன் பாண்ட் பாக்கெட்டில் நுழைத்தபடி, வெளியேறிய மகனை கண்ணில் நீருடன் பார்த்தார் பூரணி.

தன் பயத்தை தேவை இல்லாமல் மகனின் மேல் திணிக்கிறோமோ என்ற வருத்தம் தோன்றியது. ஒரு ஆண்டுக்கும் மேலாக, தனக்காக தன் வசதியை, வாகனம் ஓட்டும் ஆசையை துறந்து நிற்பவன் சென்று வரட்டும்.

''உன்னோட ப்ளான் என்ன பாண்டியன்?'' என்று காரைக் கிளப்பியபடி விசாரித்தான் புகழ்ந்தி.

''ஹாஸ்பிடலில் அந்தக் குழந்தைக்குப் பணம் கட்டணும். பதினோரு மணிக்கு அம்மா புது வண்டி என்பதால் ஒரு பூஜை போடணும் என்று சொன்னாங்க. பனிரெண்டு மணிக்கு ட்ராவல்ஸ் வருகிறேன் என்று சொல்லி இருக்கேன் சார். வண்டி நல்லா போகுதா சார்?'' என்று ஆர்வமாக விசாரித்தான்.

''புதுசு இல்லையா? ஆயிரம் கிலோ மீட்டராவது பழகணும். புது வண்டி ஓட்டினால் ஒரு சந்தோஷம்'' என்று அவனைப் பார்த்துப் புன்னகை செய்தான்.



அம்மாவின் தயக்கத்தை மதிக்கும் நல்ல மகன். மஞ்சள் போர்ட் போட்ட இந்த சாதாரண இண்டிகா காரை இப்படி ரசித்து ஓட்டுகிறான்.

''சார் அந்த ஜெராக்ஸ் கடையில் நிறுத்துங்க. செக் கிற்கு ஒரு காப்பி எடுத்துக் கொள்கிறேன்'' என்று அவன் கொடுத்த காசோலை, மற்றும் உதவி செய்தவர்களின் பெயர் பட்டியல்காரன் உரிமை குறித்த ஆவணங்கள் எல்லாவற்றிற்கும் ஒரு நகல் எடுத்து வந்து ஓட்டுனர் பக்கம் இருந்த கதவுக்கு வந்த பிறகும் அவனுக்கு எழ மனமில்லை.

''ஹாஸ்பிடல் வரை ஓட்டி வருகிறேன்'' என்று அவன் வீட்டில் இருந்து கிண்டி வரும் வரையிலான பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தை அவனே ஓட்டிய பிறகும் கூட அவன் ஆசை தீரவில்லை.

''சார் இங்கே பதினைந்து நிமிடம் ஆகும். வண்டியை இங்கே திருப்ப முடியாது. உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் கத்திபாரா ஜங்ஷன் போய் திரும்பி வந்து எதிர்முனையில் நிறுத்தி விட்டால் நாம் சீக்கிரம் கிளம்ப வசதியாக இருக்கும் சார்'' என்று அவனின் ஆர்வம் அறிந்து சொல்ல அவன் புன்னகை செய்தான்.

''உன் புது வண்டியை என்னை நம்பி கொடுக்கிறாய் உனக்காக இது செய்ய மாட்டேனா?'' என்று சந்தோஷ மாக சொன்னவன் காரைக் கிளப்பினான்.

கத்திபாரா ஜங்ஷனில் புதிதாக கட்டி இருந்த மேம் பாலத்தில் எந்தப் பக்கம் திரும்பினால் கிண்டி போகணும் என்று இருந்த தகவல் பலகையை தவற விட்டு, பு

வண்டியை ஓட்டும் ஜோரில் அவன் விரைய வண்டி போரூர் செல்லும் சாலைக்கு வந்து சேர்ந்து இருந்தது.

தவறை உணர்ந்து திரும்ப முயன்ற போது தொடர்ந்து வந்த வாகனங்கள் யூ டர்ன் எடுக்க விடாமல் செய்தது யோசித்துக் கொண்டே சாலையில் வலது புறம் திரும்ப இடையில் தென்பட்ட ஒரு இடத்தைக் கண்டதும் கூடுதல் வேகம் எடுத்த வினாடியில், ஒரு இளம்பெண் அவசரமாகக் குறுக்கே கை நீட்டி நிறுத்த முயன்றாள்.

முதலில் எடுத்த வேகத்தினால், கார் அவளைத் தாண்டிச் சென்று விட்டாலும், பக்கவாட்டு கண்ணாடியில் அவளின் கைகள் 'ஹையோ..' என்று உதறிய பாவனையில் ஈர்க்கப்பட்டு, தன்னையும் அறியாமல் வாகனத்தை பின்னால் செலுத்தினான் புகழேந்தி.

இளங்காலை வேளையில் பிறை நிலவு தோன்றியது இருந்தது. அந்த நிலா முகத்தில், நெற்றியில் வியர்வைத் துளிகள் முத்து முத்தாக உதித்து இருக்க, கண்ணில் கெஞ்சலுடன் இருந்த அந்த பெண்ணை ரசனையுடன் பார்த்தான். வேகமாக முன்னால் சென்ற வாகனம் மீண்டும் திரும்பி வருவதைக் கண்ட பாரதிக்கு உற்சாகம் மீண்டது.

அவசரமாக ஓடிச் சென்று முன் சீட் இடது புற கண்ணாடியில் குனிந்து, ''நான் அவசரமா பனிமலர் எஞ்சினியரிங் காலேஜ் போகணும் வரீங்களா?'' என்று பதட்டமாகக் கேட்க அவன் திகைத்தான்.

பனிமலர் எஞ்சினியரிங் காலேஜ் என்ற வார்த்தை அவனுக்குள் ஒரு மலர்ச்சியை உண்டு பண்ணியது. இப்ப அம்மா அந்த பேர் தானே சொன்னாங்க? ஆனால்



இவள் அந்த பெண்ணாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒரு கல்லூரியில் எவ்வளவு பெண்கள் படிப்பார்கள்? யோசனை நீள, அவளின் பேச்சு இடையிட்டது.

''என்ன யோசனை? இன்று எனக்கு எக்ஸாம் இருக்கு. சீக்கிரம் போகணும். வரீங்களா? இல்லையா?''

தன்னை அவள் கால் டாக்சி டிரைவர் என்று நினைத்து இருக்க வேண்டும். அதனால்தான் இவ்வளவு இலகுவாக 'வரீங்களா?' என்று அழைக்கிறாள் என்பது புரிந்தது. அதற்கு காரணம் தன் உடையாக இருக்கலாம்.

அது புரிந்தாலும், அதை மனம் ஏற்றுக் கொள்ள மறுத்து, தன்னிடம் எவ்வளவு உரிமையாக தேவையைக் கேட்கிறாள் என்று தோன்றியது. அவளின் முகத்தை மேலும் ஆர்வமாக பார்த்தான். அடர் நீல நிற டிசைனர் சல்வாரிலும், அலங்கரித்து இருந்த விதத்திலும் அவளின் பண செழுமை தெரிந்தது.

தேர்வுக்கு செல்லும் வழியில் வாகனம் பழுதாகி விட்டது என்ற பதட்டத்தினாலும், இளங்காலை பொழுதில் வெளியே நின்று இருந்ததாலும், அவளின் நெற்றியில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் பூத்து இருந்தாலும், அவள் முகத்தில் கம்பீரம் இருந்தது.

''நான் இப்பதான் வண்டியை எடுத்து இருக்கிறேன். அதனால்..'' என்று இழுக்கும்போதே அவள் பதட்டத்துடன் குறுக்கிட்டாள்.

''எக்ஸாம் என்று சொல்கிறேனே? மணி இப்பவே ஒன்பதாகி விட்டது'' என்று சொல்ல அவன் சங்கடமாக விழித்தான்.

அவளின் நிலை புரிந்தாலும் பாண்டியனின் காரை தான் எவ்வளவு தூரம் எடுத்துச் செல்வது? இங்கே இருந்து காலேஜ் போக முப்பது நிமிடங்களுக்கு மேலேயே ஆகும். திரும்பி வரும்போது போக்குவரத்து நெரிசல் இன்னும் தாமதம் ஆகக் கூடும்.

''ரொம்ப யோசிக்காதீங்க. நீங்க என்ன கேட்டாலும் தருகிறேன்'' என்று பதட்டத்தில் என்ன சொல்கிறோம் என்று புரியாமல் வாக்களிக்க, அந்த வினாடியில் அவன் முகம் சிரிப்பில் மலர்ந்து மனம் அவள் புறம் சாய்ந்து விட்டது.

''என்ன கேட்டாலுமா..?'' என்றவன் கண்களில் குறும்பு கூத்தாட ''இடியட்.. இவனுங்களை எல்லாம் நிக்க வச்சு சுடணும். பொண்ணுங்கள பார்த்தால் எப்படி தான் இருக்குமோ?'' என்று பொறுமியவளுக்கு மேற்கொண்டு அவன் சொன்னது அவள் காதுகளில் விழவில்லை.

இப்படித்தான் அன்று மாலை அந்த ஆட்டோ டிரைவர் கூட அழிச்சாட்டியம் பண்ணினான் அவனை தட்டிக் கேட்க.

**நினைவலை 2**

''பீ.எஸ். ஜி. எஞ்சினியரிங் காலேஜ் ஹாஸ்டலுக்குப் போக வேண்டும் வரீங்களா?''

''வரும்போது காலியா தான் வரணும். முந்நூறு ரூபாய் கொடுக்குறீங்களா?''

''முந்நூறு ரூபாயா? இங்கே இருந்து ஏழு எட்டு கிலோ மீட்டர் தூரம் தான் இருக்கும். உங்களுக்கு இது அதிகமாத் தெரியலை?''

''தெரியுது. ஆனால் உங்களுக்கு ஏழு மணிக்கு அங்கே போகணும் என்றும் தெரியுமே? இங்கே வேறே ஆட்டோ வராது.''



''அடப் பாவி! அதுக்காக இப்படி அநியாயமா கூலி கேட்கலாமா?''

''நான் பண்றது அநியாயமா? இருந்துட்டுப் போகட்டும். இந்நேரம் வரை நீ இங்கே வெளியே என்ன பண்ணிக் கொண்டு இருந்தாய் என்று நான் கேட்கலாமே?''

''ஒழுங்கா மரியாதையா பேசு. வாயைக் கிழித்து விடுவேன்'' என்று அவனுடன் சண்டைக்கு நிற்கும் போது அந்த பைக் அங்கே வந்து நின்றது.

''ஹேய் எல்லோ சுடிதார் நீயா? இங்கே என்ன ஆட்டோக்காரரிடம் சண்டை போட்டுக் கொண்டு இருக்க? ஹாஸ்டலுக்கு போகலையா? மணி ஏழாகப் போகுதே?''

''ஹலோ மிஸ்டர்! என் சவாரியைக் கெடுக்க என்றே பைக்கை எடுத்துட்டுக் கிளம்பி வந்துடுவீங்களே..? பெரிய ரோமியோ என்று நினைப்பு.''

''என்ன ப்ரதர் பண்றது? இந்த வயசும் படிப்பும் அப்படி நினைக்க வைக்குது தப்பு இல்லையே? ஏன் உங்களுக்கு என் மேலே பொறாமை? இது நமக்குத் தெரிஞ்ச பொண்ணு பிரதர். தப்பா எடுத்துக்காதீங்க.''

அவன் ஆட்டோக்காரரை சமாதானப்படுத்தியதற்கு தண்டனையாக, அந்த இடத்தில் இருந்து விடுதி வந்து சேரும் வரை, அவனைத் தாளித்து எடுத்துக் கொண்டு இருந்தாள்.

''ஹேய் கம்பி மத்தாப்பு. போதும் பொரிஞ்சது. ஹாஸ்டல் வந்தாச்சு இறங்கு. கோபம் இல்லாமல் போய் படுத்துத் தூங்கு.''

* * *

''அம்மா! சின்னம்மா, என்ன ஆச்சு? தம்பி வண்டியில் ஏறச் சொல்லி விட்டதே? மணி ஆகலையா? கிளம்புங்கம்மா'' என்ற டிரைவரின் குரல் அவளை உலுக்கி நிகழ்காலத்திற்கு கொண்டு வந்து சேர்த்தது.

''அங்கிள் நான் டாக்சியில் போகிறேன். நீங்க நம்பர் நோட் பண்ணி அம்மாவிடம் சொல்லுங்க'' என்று சொல்லிவிட்டு தன் கைப்பையை எடுத்துக் கொண்டு பாரதி வருவதற்குள், அவன் பாண்டியனுக்கும் அம்மாவுக்கும் தந்தி மொழியில் தகவல் சொல்லி இருந்தான்.

## 3

அன்றைய காலைப் பொழுது மிக அழகாகவும் வித்தியாசமாகவும் புலர்ந்து இருந்ததாக புகழேந்திக்குத் தோன்றியது. பெயர் தெரியாத அந்த பாவையைப் பார்த்த பத்து நிமிடங்களுக்குள் பல முகம் காட்டி இருந்தாள்.

முதலில் கார் பழுதாகி நின்றதால் வந்த பயமும் பதட்டமும், வேறு வாகனம் கிடைத்ததால் வந்த சந்தோஷம், 'என்ன வேண்டுமானாலும் தருவாயா?' என்ற கேலிப் பேச்சில் கோபம், என்று ஒவ்வொரு உணர்வையும், அடுத்தது காட்டும் பளிங்காக அவள் முகம் அப்படியே பிரதிபலிக்க, அது அவன் மனத்தில் அழுத்தமாகப் பதிந்தது.



அம்மா காலையில் சொன்ன பெண் இவளாக இருந்தால் எப்படி இருக்கும்? கேட்கலாமா? அவளுக்கே தெரிந்து இருக்காதா? அவசரப்படாதே! அவளே பதட்டத்தில் இருக்கிறாள். இவளாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இவளாக இருந்தால் நல்லா இருக்குமோ? இருந்தால் சந்தோஷம் இல்லை என்றாலும் பரவாயில்லை.

ஆனால் ரொம்ப வழிவது மாதிரி இல்லாமல் கொஞ்சம் கம்பீரமாகவே ஆனால் இலகுவாகப் பேசலாம். தேர்வுக்குப் போகும் போது குழப்பம் வேண்டாம் என்று மனத்திற்குள் முடிவு செய்தான். கோபத்தையும் இறுக்கத்தையும் போக்கி இயல்பாகப் பேச வைக்க என்ன செய்யலாம் என்று யோசித்தவன் கண்களில் முன்புற கண்ணாடியில் ஓடிய சிவப்பு நிற ரிப்பன் பட்டது.

''மேடம், கார் இப்பதான் டெலிவரி எடுத்து இருக்கு. முதல் சவாரி நீங்க தான். அதனால் இந்த கார் ஓனரின் தொழில் அமோகமா வளரணும் என்று இறைவனிடம் வேண்டி உங்க வாழ்த்துக்களைச் சொல்றீங்களா?'' என்று சொல்ல அவள் அப்போது தான் முன்புற கண்ணாடியின் குறுக்கே ஓடிய சிவப்பு ரிப்பனை கவனித்தாள்.

கார் ஓனரின் தொழில் என்றால், இவன் ஓனர் இல்லையா என்ற எண்ணம் தோன்றினாலும், ''ஓ! ரொம்ப சந்தோஷம். உங்க தொழில் அமோகமா நடக்க என் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்'' என்றவளின் முகத்தில் இப்போது புன்னகை சேர்ந்து இருந்தது.

''தாங்க்ஸ் மேடம். தினமும் இங்கே இருந்து காலேஜுக்கு காரிலா போறீங்க?'' என்று மெல்ல துருவ ஆரம்பித்தான்.

கேள்வி கேட்டதும் அந்தப் புன்னகை மறைந்தது. ஒரு இக்கட்டான சூழலில் அவன் உதவி செய்ய முன் வந்து இருக்கிறான் என்றாலும் தேவை இல்லாமல் தன் சொந்த விபரங்களைத் துருவுகிறானே?

''இல்லை...''

''அதானே பார்த்தேன்! எட்டு மணிக்கு காலேஜ் இருக்குமே? இங்கே இருந்து தினமும் போய் வருவது சிரமம் ஆச்சே? ஹாஸ்டலில் இருக்கீங்களா?''

''ம்ம்..'' என்று சொன்னவளின் குரலில் ஏகப்பட்ட கடுப்பு இருந்ததை உணர்ந்தாலும் அவன் பேச்சு நிற்கவில்லை.

''நேற்று வீட்டில் ஏதாவது விசேஷமோ? அதான் வந்துட்டு அவசரமா கிளம்புறீங்க போல.''

இம்முறை 'ம்ம்' என்ற முனகல் கூட அவளிடம் இருந்து வரவில்லை. ஆனால் அதை அவன் கண்டு கொண்ட மாதிரி தெரியவில்லை. இயல்பாகப் பேச்சைத் தொடர்ந்தான்.

''உங்களுக்குப் பிறந்த நாளா...?''

''அதைத் தெரிந்து கொண்டு என்ன செய்யப் போறீங்க?''

''அப்ப இல்லை என்று அர்த்தம். உங்க அண்ணன் தங்கை இப்படி யாருக்காவது பிறந்த நாள்?''

''அப்படி யாரும் இருந்தால் தானே பிறந்த நாள் கொண்டாட முடியும்?'' உன் நினைப்பு தப்பு என்று குட்டும் வேகத்தில் பதில் தானாக வந்து விட, அதன்



பிறகே அதைச் சொல்லி இருக்கத் தேவை இல்லை என்ற எண்ணம் வந்தது.

''உங்க அம்மா அப்பாவுக்கு திருமண நாள்?'' என்று சொன்னதும் அவள் கண்களில் ஒரு மின்னல் தோன்றி மறைந்ததைக் கண்டு கொண்டான்.

''சரியாகக் கண்டு பிடித்து விட்டேனா?'' என்று பெருமையாகச் சொன்னதும் அவளின் உதட்டோரம் ஒரு சுழிப்பு வந்து சென்றதைப் பார்த்துத் திகைத்தான். அந்த உதட்டுச் சுழிப்பு அவனை ஒரு கணம் உறை வைத்தது.

''தப்பா எடுத்துக்காதீங்க. பரீட்சைக்குப் போறீங்க. மனசு நிறைய பதட்டத்தை வைத்துக் கொண்டு போக வேண்டாம் என்று தான் பேச்சுக் கொடுத்தேன். தவறான எண்ணம் எதுவும் இல்லை'' என்று மன்னிப்பு கோர அவள் இப்போது நன்றியுடன் பார்த்தாள்.

அவள் முகத்தில் கடுமை மாறி இளக்கம் வந்ததைக் கண்ணாடி வழியே கவனித்தவன் மீண்டும் உற்சாகம் பெற்றான்.

''உங்களுக்கு என்ன ஸ்போர்ட்ஸ் பிடிக்கும்?'' என்று பேச்சை தொடர அவளின் முகத்தில் புன்னகை வந்தது.

''டென்னிஸ்.''

''அப்படிப் போடுங்க! இப்ப கண்டு பிடித்து விட்டேன். நேற்று விம்பிள்டன் ஃபைனல்ஸ் பார்க்க வீட்டுக்கு வந்து இருக்கீங்க'' என்று அவன் உற்சாகமாகச் சொல்ல அவளின் முகத்தில் வியப்பு பரவியது.

''அதெப்படி அவ்வளவு நிச்சயமா சொல்றீங்க?''

''நிறைய ஹாஸ்டலில் டி.வி. இருக்காது. இருந்தாலும் கிரிக்கெட் அளவுக்கு டென்னிஸ் பாப்புலர் கிடையாது.

நேற்று விம்பிள்டன் ஃபைனல்ஸ் ஆச்சே? இரண்டும் இரண்டும் நாலு கணக்கு சரி தானே?" என்று அவன் கேட்டதும் புன்னகை செய்தாள். ஆனால் அவளின் முகத்தில் தெரிந்த பாராட்டுதலை அவனும் கவனிக்க அந்தப் புன்னகையும் அவனையும் தொற்றிக் கொண்டது.

"என்ன எல்லாம் இன்று?"

"கார் ஓட்டும்போது பேசக்கூடாது என்று டிரைவிங் ஸ்கூலில் சொல்லித் தரலையா உங்களுக்கு?" என்று பாரதி சொன்னதும் சத்தமாகச் சிரித்தான்.

"நான் டிரைவிங் ஸ்கூல் போய் கற்றுக் கொள்ளவில்லையே? ஏன் உங்களுக்கு அப்படி சொல்லித் தந்தாங்களா? அப்படியே இருந்தாலும் காரை ஓட்டுபவன் நான் தானே? நீங்க ஏன் பேசாமல் இருக்க வேண்டும்?"

"ஹையோ! கடவுளே, இன்னிக்கு யார் முகத்தில் விழித்தேன்?" என்று சலித்துக் கொண்டாள் பாரதி.

"நிச்சயமா என் முகத்தில் இல்லை. இந்த மாதிரி மூட நம்பிக்கை வச்சு இருக்கீங்களா என்ன? உங்களுக்கு ஒரு கதை சொல்லட்டுமா?" என்று மீண்டும் ஆரம்பிக்க அவள் திகைத்தாள்.

"நீங்க வேண்டாம் என்று சொன்னாலே சொல்வேன். பேசாமல் இருந்தால் விடுவேனா? மௌனம் சம்மதம் என்று நினைத்துச் சொல்கிறேன்..." என்று கதை சொல்ல ஆரம்பிக்க அவள் முகத்திலும் சின்ன ஆர்வம் வந்தது.

"ஒரு ராஜா காலையில் விழித்த உடனே, ஜன்னல் வழியே ஒரு பிச்சைக்காரன் அவர் கண்ணில் பட்டு



இருக்கிறான். போயும் போயும் இவன் முகத்தில் விழித்தோமே? இன்றைய நாள் எப்படி இருக்கப் போகிறதோ என்று அவருக்கு எரிச்சல். படுக்கை அறையை விட்டு வெளியே வரும் வழியில் நிலைப்படி இடித்து நெற்றியில் லேசான புடைப்பு. அவருக்குக் கடுமையான கோபம். 'பிச்சைக்காரன் முகத்தில் விழித்ததால் காயம் ஏற்பட்டது. அவனை சிரச்சேதம் செய்யுங்கள்' என்று பணியாளர்களுக்கு உத்தரவிட்டான்..."

"ஹையோ...!" என்ற அவளின் பதட்டத்தில் அவன் முகத்தில் புன்னகை பெரிதானது.

"அந்த தண்டனையைக் கேட்ட பின்பு, சிரித்துவிட்டு அந்த பிச்சைக்காரன் சொன்ன பதில் தான் கதையின் ஹைலைட்டே! உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டு விட்டு கண்ணாடியில் அவளின் முகம் பார்த்தான்.

"தெரியும். அதை உங்களிடம் சொல்ல விருப்பம் இல்லை" என்று குறும்பாகச் சொன்ன அவளின் மலர்ந்த முகமும் இதழ் கடையோரம் இருந்த சிரிப்பும் அவன் மனதில் பதிந்தது.

"தெரியாது என்பதை இவ்வளவு அழகா சொல்லலாம் என்பது எனக்குத் தெரியாமல் போய் விட்டதே?" என்று சிரித்துவிட்டு அவனே தொடர்ந்தான்.

"நீங்க என் முகத்தில் விழித்ததனால் உங்களுக்கு நெற்றியில் சிறிய காயம். ஆனால் நான் உங்களின் முகத்தில் விழித்ததனால் என் உயிருக்கே ஆபத்து. யாரின் ராசி எப்படி இருக்கிறது என்று இதை பார்த்துத் தெரிந்து கொள்ளுங்க என்று சொன்னான். ராஜாவுக்கும்

பிச்சைக்காரனுக்கும் எப்படி இருந்ததோ தெரியலை. ஆனால் எனக்கு உங்க முகத்தைப் பார்த்ததும், இவங்க இந்த வண்டியில் ஏறி முதல் சவாரி செய்தால், அமோகமா தொழில் நடக்கும் என்று தோன்றியது'' என்று அவன் சொல்ல அவளின் புன்னகை நல்ல சிரிப்பாக மலர்ந்தது.

இவ்வளவு சரளமாகப் பேசுகிறானே? ஏற்கனவே தன்னைத் தெரிந்து இருக்குமா? அவசரமாகச் சுழன்ற பார்வையில், காரில் முன்னால் 'மருதமலைக்கு நீங்க வந்து பாருங்க' என்ற வாசகத்துடன் கூடிய முருகன் படம் இருந்தது பட்டது. மருதமலை முருகனின் படத்தைப் பார்த்ததும் கோயம்புத்தூர் நினைவில் தோன்றியது.

''உங்க சொந்த ஊர் கோயம்புத்தூரா?''

''ஏன் கேட்கறீங்க?'' என்று எதிர் கேள்வி கேட்டவன் கண்ணிலும் அதே மருதமலை முருகன் படம் பட புன்னகை மலர்ந்தது. பாண்டியன் கோவையில் இருந்து வந்தவன் பாண்டியன் பற்றிய பேச்சு இப்போது வேண்டாமே! சமாளி புகழ்...

''கோவையில் பிறந்து ஆமாம் என்று உண்மை சொன்னால் என்ன செய்வீங்க? உண்மையை மறைத்து இல்லை என்று பொய் சொன்னால் என்ன செய்யப் போறீங்க? கோவை பற்றிய ஐடியாவே இல்லாமல் ஆமாம் என்று சொன்னால் எப்படி கண்டு பிடிப்பீங்க? ஒன்றுமே தெரியாமல் அப்பாவியாக உண்மை சொன்னால் என்ன பரிசு கொடுக்கப் போறீங்க?'' என்று கண்ணில் சிரிப்புடன் அவன் பேச, அவள் 'ஹையோ' என்று அலறியபடி காதுகளை இரண்டு கைகளாலும் மூடிக் கொண்டாள் பாரதி.



காதுகளை மூடிக் கொண்டாலும் அவளின் கண்களில் சிரிப்பு இருக்க, அதைப் பார்த்த புகழேந்தியும் வாய் விட்டுச் சிரிக்க ஆரம்பித்தான்.

அவனின் சரளமான பேச்சும், இயல்பான நகைச்சுவை உணர்வும், வாய் விட்டுச் சிரித்ததும், அவனின் அதீத தன்னம்பிக்கையைக் காட்ட அதைப் பார்த்தபாரதிக்கு யோசனை வந்தது.

ஒரு கால் டாக்சி டிரைவர் இப்படிப் பேசுவானா என்ற சந்தேகம் எழுந்தது. இவன் நமக்குத் தெரிந்தவனா? தனக்கு தான் தெரியவில்லையா என்ற எண்ணம் தோன்ற அவளின் முகம் மெல்ல மெல்ல சிரிப்பைத் தொலைக்க ஆரம்பித்தது.

தனக்கு நினைவில்லையா? கடந்த மூன்று ஆண்டுகளில் சில முறை இப்படி நடந்து இருக்கிறது. தன்னை அறிந்து ஆர்வமாக வந்து பேசும் சிலரை அவளுக்கு அடையாளம் தெரியாமல் போய் இருக்கிறது. இரண்டு வாரங்களுக்கு முன்பு தி.நகரில் தன்னுடன் சண்டைக்கு வந்த பெண்ணின் நினைவு வந்தது. இள வயது தான்!

ஐநூறு ரூபாய்க்கு சில்லரை இருக்குமா என்று பேச்சை ஆரம்பித்தவள் இல்லை என்று சொன்னதும், தன் முகத்தை நன்றாகப் பார்த்தவளின் தொனி மாறி விட்டது. ''பாரதி 100 ரூபாய் கொடு. இந்த ஜூஸ் கடையில் கொடுக்கணும்'' என்று உரிமையாக ஆரம்பிக்க அவள் முறைத்துவிட்டு நகர்ந்தாள்.

அதன் பிறகு அந்தப் பெண் பேசிய பேச்சுக்கள் காது கொண்டு கேட்க முடியவில்லை.

''நீ எல்லாம் ஒரு ப்ரெண்டா? உன்னிடம் காசு பணம் இருந்தால் அது உன்னுடன்? என்னை நம்பி ஒரு 100 ரூபாய் கொடுக்கக் கூடாதா? அதற்குக் கூடத் தகுதி இல்லையா? நான் இனாமாகவா கேட்டேன்? கடனாகத் தான் கேட்டேன். இத்யாதி இத்யாதி.

அந்த பெண் யார் என்றே தெரியாதபோது 100 ரூபாய் கொடுக்கவில்லை என்று சண்டை பிடித்ததை என்ன வென்று சொல்வது? தன் இயல்பு அந்த மாதிரி திமிராக நடப்பது இல்லை என்பதால், அவளுக்கு வருத்தம் வரும். வீட்டில் கேட்டால் பதில் இருக்காது. 'கோவை கல்லூரியில் படித்து இருக்கலாம்' என்று ஒற்றை வரியில் அம்மா முடித்து விடுவார்.

அவளுக்கு ஒரு விபத்து நடந்து ஹாஸ்டலில் ரொம்ப சிரமப்பட சென்னைக்கு அழைத்து வந்து விட்டதாக அம்மா சொல்லி இருக்கிறார். ஆனாலும் அவளுக்கு மனம் ஆறாது.

தனக்கு நடந்த விபத்து அவர்களுக்குத் தெரியாதா? ஏன் இப்படிப் பேச வேண்டும்? பொறுமையாகப் பேச லாமே என்ற கேள்விகள் தோன்றும். யாரிடம் கேட்பது?

இப்போது இவனும் அதிக உரிமை எடுத்துக் கொள் வதைப் போலத் தோன்ற, இவன் தொடர்ந்து பேசுவதில் இருந்து எப்படி தப்பிப்பது என்ற சிந்தனை தோன் றியது. அவளின் பார்வை சுற்றிலும் அலைய, காரின் பின்புற இருக்கையில் அந்த காரின் பதிவேடுகள் அடங்கிய கவரும் கூடவே இன்னொரு ஃபைலும் கண்ணில் பட்டது.

''கொஞ்ச நேரம் அமைதியா வருகிறீர்களா? நான் பரீட்சைக்கு ரிவிஷன் பண்ணணும்.'' என்று சொல்ல



அவன் ஒரு வினாடி திரும்பிப் பார்த்து விட்டு சாலையில் கவனம் வைத்தான்.

''ஒரு செமஸ்டருக்கு இருக்கக் கூடிய ஆறு மாசத்தில் எல்லாம் படிக்காமல் இப்படி கடைசி அரை மணி நேரத்தில் படிப்பீங்களா?'' என்ற அவனின் கேள்வியில் திகைத்தாள்.

சில நிமிடங்கள் முன்பு தான் சொன்ன அதே வார்த்தைகள். தன்னைப் போலவே சிந்தனை படைத்த ஒருவனைப் பார்த்ததும் தன்னையும் அறியாமல் ஒரு ஈர்ப்பு வந்தது! அவனிடம் படிக்கப் போகிறேன் என்று சொல்லி விட்டதற்காகத் தன் இருக்கையில் அருகே கிடந்த ஃபைலை எடுத்துப் புரட்டினாள்! பாண்டியன் என்ற பெயரில் முன்தினம் அந்த வாகனம் பதிவு செய்யப் பட்டு இருந்தது. பெயர் பாண்டியனா?

மதுரைக்கே ராஜா என்று நினைப்பு! முறுவலுடன் அடுத்த பைலை பார்த்தவளுக்கு விழிகள் விரிந்தது. அது ஒரு குழந்தையின் இருதய மாற்று சிகிச்சைக்காக நிதி உதவி செய்தவர்களின் பட்டியல் அறுபதுக்கும் மேற் பட்டவர்களிடம் இருந்து இரண்டு லட்சம் ரூபாய் சேகரித்து இருந்தான்.

தன்னிடம் வந்து கேட்பவர்களுக்கு அம்மா படிப்பு உதவியும் மருத்துவ உதவிக்காக சில ஆயிரங்கள் செலவழிப்பதை அவளும் பார்த்து இருக்கிறாள். ஆனால் அன்றாடம் உழைத்தால் தான் வருமானம் என்ற நிலையில் இருக்கும். ஒரு மனிதன் ஒரு குழந்தையின் மருத்துவ செலவுக்கு பலரிடம் கையேந்துவது என்பது நிச்சயம் பிரமிக்கத் தக்க விஷயம். அவள் பிரமித்து

மீனும் முன்பே வண்டி நிற்க வெளியே பார்த்தாள். கல்லூரி வந்து இருந்தது.

''உங்க கல்லூரி வந்து விட்டது. பத்து மணிக்கு இன்னும் பத்து நிமிஷம் இருக்கு. நிதானமா உங்க ஹாலைத் தேடிக் கண்டு பிடித்துப் போங்க. பெஸ்ட் ஆப் லக்'' என்று சொல்லிவிட்டு காரைக் கிளப்ப அவள் அவசரமாக ஓட்டுனர் இருக்கையின் புறம் வந்தாள்.

''ஒரு நிமிஷம்! எவ்வளவு பணம்? சொல்லாமல் கிளம்புறீங்க?''

''பரவாயில்ல. நேரமாச்சு. நீங்க உங்க தேர்வினைக் கவனிங்க. கிளம்புங்க'' என்றதும் அவள் வேகமாகத் தலை அசைத்தாள்.

''இல்ல! முதல் சவாரி என்று சொல்லிட்டுப் பணம் வாங்காமல் போனால் எப்படி? அப்புறம் என் மனசுல இது உறுத்திக் கொண்டே இருக்கும். பரீட்சை கூட ஒழுங்கா எழுத முடியாது.''

''இதுக்கு ஏன் இவ்வளவு டென்ஷன் ஆகுறீங்க? நீங்க நல்லபடியா எழுதணும் என்பதற்காகவே பணம் வாங்கிக் கொள்கிறேன். எப்படி கணக்குப் போடணும் என்று நான் முடிவு பண்ணவில்லை. அதனால், நீங்களே பார்த்து ஏதாவது கொடுங்க.''

''ரொம்ப நல்லா இருக்கு. உங்க பிசினெஸ் டெக்னிக்..'' என்று சிரிப்புடன் சொன்னவள் கணக்கிட்டாள். அங்கிருந்து இருபது கிலோ மீட்டர் இருக்கும். ஒரு கிலோ மீட்டருக்கு எழு ரூபாய் என்று வைத்துக் கொண்டால் 1400 ரூபாய். தன்னிடம் ஆயிரம் ரூபாய் தான் இருக்கும். படிக்கிற பெண்ணுக்கு இதுவே ஜாஸ்தி



என்று அம்மா திட்டுவாங்க. தன் கையில் இருந்த நான்கு கிராம் மோதிரத்தைக் கழட்டினாள்.

''பணம் ஆயிரம் ரூபாய் தான் இருக்கு. அந்தப் பணம் எனக்கு வேண்டும். இதை வைத்துக் கொள்ளுங்க. எப்படியும் பத்தாயிரம் பெறும் ஆயிரத்து ஐநூறு ரூபாய் நீங்க எடுத்துக் கொண்டு, மிச்சத்தை அந்த ஹார்ட் சர்ஜரி நடக்க இருக்கும் குழந்தைக்குக் கொடுத்து விடுங்க'' என்று சொல்ல அவன் உறைந்தான்.

''அதெப்படி உங்களுக்குத் தெரியும்?'' என்று கேட்டவன் கண்களில் வியப்பும், ஒரு மரியாதையும் வந்தது.

''நீங்க மட்டும்தான் உதவி செய்வீங்களா? நாங்களும் செய்வோம்'' என்று சொல்லிவிட்டு நகர, ''குழந்தைக்கு உதவி பண்ணும் ஆட்களின் பேர் வேண்டுமே? உங்க பேரைச் சொல்லாமல் போறீங்க?'' என்று அவசரமாக இடையிட்டான்.

''பா..ர..தி'' என்று அவள் நின்று திரும்பி, சொல்லி புன்னகை சிந்திவிட்டுச் செல்ல அந்தப் புன்னகை அவன் முகத்திலும் ஒட்டிக் கொண்டது. அங்கிருந்து மருத்துவமனை வந்து சேரும் வரையிலும் நீடித்தது.

மருத்துவமனைக்கு வந்து சேர்ந்த புகழேந்தி பத்தாயிரம் ரூபாய்க்கு ஒரு செக் போட்டு பாண்டியனிடம் நீட்டி, ''1500 ரூபாய் சவாரிக்காகவும், 8500 ரூபாய் சர்ஜரிக்காகவும் கொடுத்தாங்க பாண்டியன்'' என்று பெருமிதத்துடன் ஒப்படைத்தவன் கரங்கள் சட்டைப் பையில் இருந்த மோதிரத்தை ஆவலுடன் வருடியது.

# 4

மருத்துவமனையில் தன் வருகைக்காக வாயிலில் காத்திருந்த பாண்டியனைக் கண்டதும் பெரிதாக புன்னகை செய்தான் புகழ்.

''சாரி பாண்டியன் எதிர்பாராமல் இந்த விஷயம் நடந்து விட்டது. கல்லூரிக்குச் செல்ல வேண்டும் தேர்வு இருக்கிறது என்று சொன்ன பிறகு மறுக்க முடியவில்லை. இந்த தாமதத்தால் உனக்கு ஒன்றும் பிரச்னை இல்லையே?'' என்று விசாரித்தான்.

''எனக்கு ஒன்றும் பிரச்னை இல்லை ஸார். ஆனால் உங்க அம்மா தான் மூன்று முறை போன் பண்ணி விட்டாங்க. அவங்களுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் தடுமாறி நான் போனை எடுக்காமல் விட்டு விட்டேன். நீங்க அவங்களிடம் என்ன சொல்லி இருக்கீங்க என்று தெரியாமல் நான் உளறி விடக்கூடாது இல்லையா?''

''தாங்க்ஸ் பாண்டியன் நல்ல வேலை செய்தாய் இந்தா, பத்தாயிரத்திற்கு செக். அந்த பெண்ணிடம் கேஷ் அதிகம் இல்லை. சொந்த வாகனத்தில் போவதால் பணம் இல்லையாம், செக் கொடுத்து விட்டாங்க.''

''பத்தாயிரமா? எதுக்கு ஸார் அவ்வளவு பணம்?''



''உனக்கு மொத்தமும் இல்லை பாண்டியன். இந்தக் குழந்தைக்கு 8500 ரூபாய் கொடுத்தாங்க.''

''நிஜமாவா? இந்த சர்ஜரி பற்றி அவங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்க சொன்னீங்களா?''

''நான் சொல்லலை. பின்னால் நீ வைத்து இருந்த ஃபைல் சொல்லி இருக்க வேண்டும்.''

''ரொம்ப இரக்க சுபாவம் உள்ளவங்களா இருக்கணும். ஆமா இதென்ன ஸார் உங்க செக் மாதிரி இருக்கு. நீங்க ஏன் பணம் தரீங்க?'' என்று பாண்டியன் துருவ அவன் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தான்.

''அவங்க தரேன் என்று சொல்லி இருக்காங்க. அதனால்.''

''சரி அப்படியே இருந்தாலும் கிண்டியில் இருந்து பூந்தமல்லி போக 1500 ரூபாயா? ஐநூறு ரூபாய் கொடுத்தாலே அதிகம் ஸார்'' என்று சொல்லி செக்கை திருப்பி நீட்ட அவன் திருதிருவென்று விழித்தான். 'இவன் என்ன இப்படிச் சொல்கிறான்? அவள் ஏதோ கணக்கு போட்டாளே?''

''என்ன பாண்டியன் கிலோ மீட்டர் சார்ஜ் வாங்குவதில்லையா?'' என்று அவசரமாக விசாரிக்க அவன் மறுப்பாக தலை அசைத்தான்.

''சிட்டிக்குள்ளே மணி கணக்கு தான் 50 கிலோமீட்டர், ஐந்து மணி நேரம். 750 ரூபாய். இப்படி இருக்கும் இல்லை என்றால் முதல் மூன்று கிலோ மீட்டருக்கு 100 ரூபாய். அப்புறம் கிலோ மீட்டருக்கு எட்டு ரூபாய் பத்து ரூபாய், என்று வண்டியின் வகையைப் பொறுத்து

இருக்கும். எப்படிப் பார்த்தாலும் ஐநூறு ரூபாய்க்கு மேல் வாங்குவது ரொம்ப அநியாயம் ஸார்.''

''ஓ! என்று சொல்லும்போதே பாரதி போட்ட கணக்கில் இருந்த அபத்தமும் புரிந்து விட்டது. 140 ரூபாய்க்கு 1400 என்று கணக்கு போட்டு பணம் தந்து இருக்கிறாள். இவ்வளவு வராது என்று சொல்லிப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து இருக்க வேண்டும்.

ப்ச்! அவள் பணம் எங்கே கொடுத்தாள்? மோதிரத்தைப் பெருமையாக வாங்கி வந்து உள்ளே மறைத்து வைத்துக் கொண்டு கதை படிக்கிறானே?

தன் மீதே வெறுப்பாக இருந்தது. அவனைப் பணத்தாசை பிடித்தவன் என்று நினைப்பாளோ? கிடைத்த காசை வரைமுறை இல்லாமல் செலவழிப்பவன் என்று நினைத்து இருப்பாளோ? மனம் என்னென்னவோ எண்ணித் தவித்தது. இதில் ஒரு ஆயிரம் ரூபாயாவது அவளிடம் திருப்பிக் கொடுத்து விட வேண்டும் என்ற எண்ணம் தோன்றும் போதே, அவள் குழந்தையின் சிகிச்சைக்கும் சேர்த்து பணம் கொடுத்தது உரைத்தது.

உடனே கல்லூரிக்குப் போக வேண்டும் என்ற எண்ணத்தை மூட்டை கட்டினான். வீட்டில் அம்மாவிடம் தனக்குப் பார்த்து இருக்கும் பெண் பற்றிய விபரங்களைக் கேட்க வேண்டும். அதை செய்து விட்டு தான் அடுத்த வேலை. அவசரமாக பாண்டியனுடன் காரில் ஏறி வீட்டுக்குச் சென்றான்.

* * *

மகளை அனுப்பி விட்டு தன் அறைக்குச் சென்று குளித்துத் தயாராகி கீழே வந்த ராஜேந்திரனைப் பிடித்துக் கொண்டார் பாக்கியம்.



''பரீட்சை சமயத்தில், ஹாஸ்டலில் இருந்து 'அம்மா அப்பாவுக்கு திருமண நாள்' என்று பொய் சொல்லி விம்பிள்டன் மேட்ச் பார்க்க வந்து இருக்கிறாள். அவளை கேள்வி கேட்காமல், பெண்ணை எப்படி வளர்ப்பது என்று எனக்கு அட்வைஸ் பண்றீங்க? உங்களுக்குக் கொஞ்சமாவது அறிவு இருக்கா?''

''இருந்தது பாகி. என்று உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேனே அன்று...'' என்று கேலியாக பதில் சொல்ல ஆரம்பித்தவர் மனைவியின் கண்ணில் தெரிந்த கோபக் கனலை கண்டதும் பாதியில் நிறுத்தி விட்டுச் சமாதானம் சொன்னார்.

''பொய் சொல்லிட்டு வேறே எங்கேயும் போகவில்லையே? நம்ம வீட்டுக்குத் தானே வந்து இருக்கிறாள். அதையும் நம்மிடமே சொல்லி விட்டாள் தானே? அப்புறம் என்ன?''

''நீங்க தெரிஞ்சு தான் பேசறீங்களா? இன்று காலையில் கல்லூரிக்குக் கிளம்பிச் சென்றபோது வண்டி பாதியில் நின்று விட்டது என்று கொஞ்ச நேரம் முன்னாடி கதிர் போன் பண்ணினார்'' என்று பாக்கியம் சொல்லி முடிக்கும் முன்பே, 'ஹையோ! பாரதிக்கு இன்று தேர்வு இருந்ததே?' என்று ராஜேந்திரன் பதற பாக்கியத்தின் கோபம் இன்னும் கூடியது.

''இப்ப குதிங்க. இந்த மாதிரி தேவை இல்லாமல் பரீட்சை சமயத்தில் நினைத்த உடனே வீட்டுக்குக் கிளம்பி வரக்கூடாது என்று சொன்னால், உங்களுக்கும் உங்க பெண்ணுக்கும் மண்டையில் ஏறாது. சின்ன

பெண்ணோடு சேர்ந்து என்னை மட்டம் தட்ட வேண்டியது.''

''பாக்கியம்! என்னோடு சண்டை அப்புறம் போடலாம். அவள் என்ன பண்ணினாள் என்று முதலில் சொல்லப் போகிறாயா இல்லையா?''

''கால் டாக்சி ஒன்று பிடித்து ஏற்றி விட்டேன் என்று ஏற்கனவே சொல்லி விட்டார். வண்டி நம்பரும் கொடுத்து இருக்கார். இந்நேரம் கல்லூரிக்குப் போய் சேர்ந்து இருப்பாள்'' என்று எரிச்சலுடன் அவர் சொல்ல நிம்மதிப் பெருமூச்சை வெளியிட்டார் ராஜேந்திரன்.

''எதை முதலில் சொல்லணும். எதை அப்புறம் சொல்லணும் என்று முதலில் நீ படி. தகவல் பரிமாற்றம் இப்படி தான் இருக்கணும் என்று முதன் முதலில் விளக்கம் கொடுத்த எக்ஸ்பர்ட் யாரு தெரியுமா?''

''ஆமா! நான் இப்பதான் எம்.பி.ஏ. வகுப்பில் இருந்து வெளியே வருகிறேன். என்னிடம் கேளுங்க இந்தக் கேள்வி எல்லாம்...?''

''இதெல்லாம் வகுப்பில் சொல்லிக் கொடுத்த விஷயம் இல்ல. ராமாயணம் தெரியாதா? முதலில் தகவல் பரிமாற்றம் எப்படி இருக்கணும் என்று பாடம் எடுத்த எக்ஸ்பர்ட் அனுமன்'' என்று சொல்ல பாக்கியத்தின் இதழ்கள் புன்னகையில் விரிந்தது.

''தன் மனைவியைப் பிரிந்து, துயரத்தில் வாடிக் கொண்டு இருந்த ராமனிடம் அனுமன் சொன்ன, 'கண்டேன் சீதையை' என்ற வாசகம் தான் பெஸ்ட் கம்யூனிகேஷன். 'சீதையை கண்டேன்' என்று சொல்லி இருந்தால் கூட இரண்டாவது வார்த்தை கண்டேன்



என்று வரும் வரை ராமனின் துயரம் நீடிக்குமே என்று வருந்தி, 'கண்டேன் சீதையை' என்று சொன்னார் என்று கம்பன் சொல்கிறான்.''

''விளக்கம் நல்லாத் தான் இருக்கு.''

''நல்லாத்தான் இருக்கு என்று இழுக்காதே. எதை முன்னால் சொல்லணும், எதைப் பின்னால் சொல்லணும் என்று படி'' என்று அதிகாரமாகச் சொல்ல அவர் தலை அசைத்தார்.

''சுத்தி வளைக்க வேண்டாம் என்று சொல்லிட்டீங்க. சரி நேரடியா பட்டுன்னு ஒரு முக்கியமான விஷயம் சொல்லிடறேன். அவளுக்கு வயசு 21 ஆச்சு. இன்னியோடு B.E. படிப்பை முடிக்கப் போகிறாள். உடனே பாரதிக்கு கல்யாணம் பண்ணனும்'' என்று சொல்ல அவர் திகைத்து நின்றார்.

இன்று B.E. பட்ட படிப்பின் இறுதியாண்டு இறுதி பரீட்சை எழுதச் சென்று இருக்கும் பாரதிக்கு, உடனே திருமணம் செய்ய வேண்டும் என்று பாக்கியம் சொன்ன வார்த்தைகளில் பிழை இல்லை.

ஆனாலும், எப்போதும் மகளுக்கு சாதகமாக மனைவியை குட்டி பேசும் வார்த்தைகள் தற்காலிகமாக காணாமல் போய் விட்டன. பெண்ணுக்குத் திருமண வயது என்று அரசாங்கம் சொல்வது 21 அல்லவா?

பாரதிக்குக் கல்யாணமா? அந்த வார்த்தையைக் கேட்டதும், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஊட்டி ஏரியில் எதிர்பாராமல் உயிரை விட்ட அந்த 'சிவாவின்' நினைவு கண் முன்னால் நிழலாடியது. அது பாரதிக்கு நினைவு வருமா? வந்தால் என்ன சொல்வாள்?

''அவள் இன்னும் சின்னக் குழந்தை இல்லை. படிப்பை முடிச்சுட்டு வீட்டுக்கு வந்து விடுவாள். வேலைக்குப் போகிறேன் என்று ஆரம்பிப்பாள். வேண்டாம் என்று சொல்லிட்டு நல்ல பையனா பாருங்க'' என்று கணவனின் தோளை ஆதரவாகப் பற்றி அழுத்த, அவர் தயக்கத்துடன் பார்த்தார்.

''அப்படி என்ன தலை போகும் என்ன அவசரம்?''

''உங்களுக்கும் உங்க பொண்ணுக்கும் அவசரமே கிடையாது. காலா காலத்தில் நடக்க வேண்டியது நடந்தால் தான் எனக்கு நிம்மதி...''

''இந்தக் காலத்தில் ஒரு பொண்ணு சுயமாக சம்பாதிக்க ஆரம்பித்து, தன் சொந்தக் காலில் நின்ற பிறகு திருணம் செய்யலாமே பாக்கியம்? அத்துடன் அந்த சிவா பிரச்னை?''

''பெண்ணுக்கு சுதந்திரம் வேண்டாம் என்று நான் சொல்லலை. சொந்தக் காலில் நிற்காமல் வாடகை காலில் நிற்க வேண்டிய அவசியமும் அவளுக்கு இல்லை. நமக்கு ஒரே பெண். நம் சொத்து அவளுக்கு இல்லாமல் வேறு யாருக்கு? படிப்பும் தன்னம்பிக்கையும் அவளுக்குக் கொடுத்தாச்சு. இனிமேலும் கல்யாணத்தைத் தள்ளிப் போட வேண்டிய அவசியம் இல்லை...'' என்று கண்டிப்பாகச் சொன்னவர் கணவர் சொன்ன சிவா பிரச்னையை காற்றில் பறக்க விட்டார்.

மனைவியிடம் பேசுவதற்கு முன்னால் மருத்துவரிடம் பேச வேண்டும். இப்போதைக்கு இதை கண்டு கொள்ளாமல் விடுவது தான் சிறந்தது என்று முடிவு பண்ணி, ''இன்னிக்கு மேடம் ரொம்ப கெடுபிடியா



இருக்காங்க. ஒரு வார்த்தைப் பேச முடியலையே? சரி மாப்பிள்ளை பார்க்கும் வேலை ஆரம்பி...'' என்று பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்றார்.

''ஏற்கனவே பேசி, ஏகப்பட்ட போட்டோ ஜாதகம் வாங்கி முதல் நிலை வடிகட்டுதல் முடிஞ்சு நாலு போட்டோவில் வந்து நிற்கிறேன். அதுல ஒன்றை நீங்க செலக்ட் பண்ணுங்க. அப்படியே உங்க விருப்பத்தை இன்னைக்கு ராத்திரியே உங்க பெண்ணிடம் சொல் நீங்க...'' என்று சொல்ல திகைப்புடன் பார்த்தார் ராஜேந்திரன்.

''இப்பதான் நல்ல பையனா பார்க்க ஆரம்பிங்க என்று சொன்னாய்?''

''ஜாதகப் பொருத்தம் பார்ப்பது, குடும்பப் பின்னணி, பொருளாதார வசதி, தோற்றம் போன்ற அடிப்படை விஷயங்களை எல்லாம் நானே பார்த்து, ஓரளவிற்கு வடிகட்டி நாலில் கொண்டு வந்து நிறுத்தி இருக்கேன்'' என்று பாக்கியம் சொல்ல அவர் ஒரு தீர்மானமான முடிவில் இருப்பது புரிந்தது. இதற்கு மேல் தள்ளிப் போட முடியாது.

''என் வேலையைச் சுலபமாக்கி விட்டாய். கொண்டா பார்ப்போம்...'' என்று முதலில் ஒரு போட்டோவை எடுத்து ஆராய்ந்தார்.

''இந்த பையன் என்ஜினியரா? ரெண்டு பேரும் ஒரே படிப்பா? வேண்டாமே'' என்றவரின் குரலில் அதிருப்தி இருக்க, ''பையன் அமெரிக்காவில் இருக்கிறான். நல்ல சம்பாத்தியம். பார்க்க லட்சணமா இருக்கிறான்'' என்று இடையிட்டார் பாக்கியம்.

"ப்ச்! இருப்பது ஒரே பொண்ணு அவசரத்துக்கு வந்து போக முடியாமல் கண் காணாத தேசத்தில் வேலை. பாரதிக்கு இந்த இடம் வேண்டாம்" என்று தீர்மானமாகச் சொல்ல பாக்கியம் அடுத்த போட்டோவை நீட்டினார்.

"டாக்டரா? ஆனால் ரொம்ப படிப்ஸா இருப்பான் போல! நெற்றி எவ்வளவு தூரம் மைதானம் மாதிரி விரிஞ்சு இருக்கு. என் பெண்ணோட அழகுக்கு. இவன் வேண்டாம்..."

"ஆண் பிள்ளைக்கு அழகா முக்கியம்? உத்தியோகம் புருஷ லட்சணம் என்று கேள்வி பட்டதில்லையா? டாக்டர் என்று சொல்கிறேன். ரெண்டு நிமிஷம் செல வழித்து போட்டோவை நிதானமாக நிறுத்தி பார்க்காமல், குடும்பம் பற்றி பேச்சுக்குக் கூட விசாரிக்காமல், போகிற போக்கில் போட்டோவை அந்த பக்கம் தூக்கி போட்டால் என்ன அர்த்தம்?" என்று கோபமாக பாக்கியம் இடையிட ராஜேந்திரன் முறைத்தார்.

"என் பெண்ணுக்கு வரும் மாப்பிள்ளைக்கு அழகும் வேண்டும்" என்று சொல்லிவிட்டு அடுத்த போட்டோவை எடுத்தார்.

"வேலூரில் ஜவுளிக்கடை வச்சு இருக்காங்க. பக்கம் தான். வரப் போக வசதியா இருக்கும். ஆளும் அழகா இருக்கான்..." என்று முதல் இரண்டு வரன்களிலும் அவர் சுட்டிக் காட்டிய குறைகள் இவனிடம் சொல்ல முடியாது என்று விற்பனை பிரதிநிதி மாதிரி அந்த வரனின் சிறப்பு குணங்களை பட்டியலிட்ட பாக்கியத்தின் வார்த்தைகள் அவரின் காதுக்குள் ஏறவில்லை.

"சொந்த தொழிலா? லாப நஷ்டம் என்று ஏற்ற இறக்கங்கள் அவளுக்கு வேண்டாமே! வேலையாக இருந்தால் பரவாயில்லை" என்று அதையும் தூக்கி வைத்து விட்டு அடுத்த வரனை எடுத்தார்.

எடுத்து வைத்த மூன்று வரன்களை எடுத்த எடுப்பில் ஏதோ ஏப்பை சாப்பையாய் ஒரு காரணம் சொல்லிப் போகிற போக்கில் நிராகரித்து விட்ட கணவனிடம் அவருக்கு எரிச்சலும் கோபமும் பொங்கியதால் அடுத்த வரனுக்கு அவர் ஒன்றுமே சொல்லவில்லை.

இதற்கும் ஏதாவது சொத்தை சொள்ளை என்று சொல்லப் போகிறார் பல்லைக் கடித்துக் கொண்ட பாக்கியம் காத்திருக்க அவரிடம் இருந்து சத்தமே இல்லை. அவசரமாக நிமிர்ந்து பார்த்தால் அவர் போட்டோவை ரசனையுடன் பார்த்துக் கொண்டு இருந்தார்.

"பையன் என்ன செய்கிறார் பாகி...?" என்ற இனிமையான குரலில் வந்த கேள்வியை கேட்டு அவருக்கு மயக்கமே வந்தது.

"ஐ.ஓ.பி.யில் உதவி பொது மேலாளரா இருக்கார். ஒரே பையன். அம்மா மட்டும் தான். வசதி சுமார் தான் ஆனால் நல்ல குடும்பம்."

"அப்போ, உடன் பிறந்தவர்கள்...?"

"ஒரே பையன் என்று இப்ப தானே சொன்னேன்? அப்புறம் என்ன உடன் பிறந்தவர்கள் பற்றி கேட்கறீங்க? அப்பா எல்.ஐ.சி.யில் ஆபீசரா இருந்து போன வருடம் ஒரு சாலை விபத்தில் இறந்து விட்டார்."

"சின்ன குடும்பம். பொறுப்புகள் எதுவும் கிடையாது. சொத்து கம்மி என்றால் என்ன? நமக்கு ஒரே பெண் தானே? நம் சம்பாத்தியம் எல்லாம் அவளுக்கு.

பிறகென்ன?'' என்று கேள்வியையும் கேட்டு பதிலையும் அவர் சொன்ன விதத்திலேயே இந்த வரனின் புறம் சாய்ந்து விட்டார் என்பதை பாக்கியத்தால் உணர முடிந்தது.

''நீலாங்கரையில் தனியா சொந்த வீடு. திருவான்மியூர் பிராஞ்சில் வேலை. பிரச்னை இல்லாத அமைதியான வாழ்க்கை.''

''பேரு என்ன?'' என்று கேட்டவர் புகைப்படத்தைத் திருப்பிப் பார்த்தார். புகழேந்தி! பி.காம். எம்.சி.ஏ. அந்த சுத்தமான தமிழ் பெயர் அவரின் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த அவர் திருப்தியுடன் தலை அசைத்தார்.

''இந்த பையனை எனக்குப் பிடிச்சு இருக்கு. உன் பெண்ணுக்கும் பிடித்து இருக்கிறதா என்று கேட்டு விட்டு அவங்களை வரச் சொல்லி விடலாம்'' என்று திருப்தியோடு சொன்னவரைப் பார்த்து புன்னகை செய்தார் பாக்கியம்.

# 5

புகழேந்தியின் புகைப்படத்தைப் பார்த்துத் திருப்தியுடன் கணவர் சம்மதம் சொன்ன உடனே பாக்கியத்தின் மனம் குளிர்ந்தது.

''ரொம்ப சந்தோஷம். உங்களுக்குப் பிடித்த மாப்பிள்ளை பற்றிய விபரங்களை இன்றே உங்க பொண்ணு



வந்த உடனே சொல்லி அவளின் சம்மதத்தையும் வாங்கிடுங்க. நான் மாப்பிள்ளை வீட்டில் இருந்து உடனே வரச் சொல்கிறேன்'' என்று சந்தோஷமாகத் திட்டமிட அவர் அரண்டு போனார்.

''ஹேய் என்ன சொல்ற? பாரதியிடம் நான் கல்யாணம் பற்றிப் பேசுவதா? என்னால் முடியாது. இந்தப் பேச்சு வார்த்தையில் கெட்டிக்காரி. நீதான். நீயே பேசிடு'' என்று அவசரமாக மறுக்க பாக்கியம் முறைத்தார்.

''இந்த வேலை மட்டும் என்னிடம் சொல்லாதீங்க. அவள் நான் ஏதாவது சொன்னால் வேண்டும் என்றே ஏட்டிக்குப் போட்டி பேசுவாள். அதனால நீங்களே சொல்லிடுங்க. அவள் அப்பா செல்லம் தான்...''

''ஈசியான வேலை நீ செய்து விட்டு கஷ்டமான வேலையை என் தலையில் கட்டுகிறாய்? பெண்ணின் மனசு ஒரு பெண்ணுக்கு தான் புரியும். நீயே பேசு'' என்று பொறுப்பை மனைவியிடம் தள்ளி விட்டவரின் குரலில் கவலை வந்து இருந்தது.

''கல்யாணம் பற்றிப் பேச என்னால் முடியாது. கல்யாணப் பேச்சை ஆரம்பித்தால் எப்படிப் பேசுவாள்? என்ன செய்வாள் என்று நினைத்துப் பார்க்கக் கூட முடியலை. அவள் ரெண்டு மாசம் பிரமை பிடிச்ச மாதிரி உட்கார்ந்து இருந்தது தான் நினைவில் வருது. முதலில் டாக்டர் முன்னிலையில் பேச்சை ஆரம்பித்து விட்டு. அவள் நார்மலா இருந்தால் சொல்லுங்க. அப்புறம் பேசகிறேன்.''

''பாரதி நம் மகள் பாகி. அவளைப் பார்த்து நீயே பேசப் பயந்தால் எப்படி? மூன்று வருடம் முன்பு நடந்ததை நீ இன்னும் மறக்க வில்லையா?''

''நம்ம பொண்ணு தான்! எனக்கு மட்டும் தான் பொண்ணா? உங்களுக்கு இல்லையா? நீங்க பேச வேண்டியது தானே? கல்யாணம் பற்றிப் பேசினால் அவள் மனசு எப்படி மாறுமோ என்று நினைக்கவே கவலையா இருக்கு.''

''அந்த சிவாவை அவள் இன்னும் மறந்து இருக்க மாட்டாள் என்று நினைக்கிறாயா?'' என்று கேட்டதும் அதுவரை தைரியமாக இருப்பது போல காட்டிக் கொண்டு இருந்த பாவனை அந்த ஒற்றை கேள்வியில் காணாமல் போக அவசரமாகத் திரும்பி ஒரு விம்மலுடன் கணவரின் மார்பில் சாய்ந்து கொண்டார் பாக்கியம். கண்களில் நீர் பெருக ஆரம்பித்து இருந்தது.

''அவ மனசுல இன்னும் அவன் இருக்கிறானா என்றே தெரியலை. என்ன செய்யட்டும்? எவ்வளவு நாள் தான் இதைப் பற்றிப் பேசாமல் தள்ளி தள்ளி போடுவது? எந்த வார்த்தைகளில் அவளுக்கு என்ன நினைவு வருமோ? அவளின் நடத்தை எப்படி மாறுமோ என்று ஒவ்வொரு நிமிஷமும் நான் பயந்து சாவது எனக்குத் தான் தெரியும். அதை நினைச்சாலே வயிறு கலங்குது. பயந்து பயந்து எத்தனை நாள் இந்த விஷயத்தைத் தள்ளிப் போடுவது? ஏதாவது ஒரு முடிவு எடுத்துத் தானே ஆக வேண்டும்?'' என்று கலங்கிய குரலில் புலம்பினார் பாக்கியம்.

மனைவியின் விழிகளில் கண்ணீர் வருவதை, மார்பு சட்டை ஈரமாவதில் இருந்து உணர முடிந்தது. கண்ணீர்



பெருக்கும் மனைவியைத் தேற்றும் வகை தெரியாமல் திகைத்து நின்றார் ராஜேந்திரன்.

''அப்படியே அவள் மறக்கவில்லை என்றாலும், நாம் திருமணம் பற்றிய பேச்சை எடுக்காமல் இருக்க முடியுமா பாகி? இன்று இல்லா விட்டாலும் நாளை எடுத்து தானே ஆக வேண்டும்.''

''அதுக்காக தான் அவளை கூடிய சீக்கிரம் டாக்டரிடம் அழைத்துப் போங்க என்று சொல்கிறேன்'' என்று பாக்கியம் சொல்ல அவர் அரை மனத்துடன் ஆமோதிப்பாக தலை அசைத்தார்.

* * *

காலையில் எட்டு மணிக்கு பாண்டியனுடன் கிளம்பிப் போன புகழேந்தி, வீட்டுக்குள் நுழைந்த போது பத்தரை மணி ஆகி இருக்க தவிப்புடன் வாசலுக்கும் உள்ளுக்குமாக அலைந்து கொண்டு இருந்தார் பூரணி.

உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக, ''அம்மா, நீங்க எனக்கு ஒரு பெண் பார்த்து வைத்து இருக்கிறேன் என்று சொன்னீங்களே அந்த பொண்ணு பேர் பாரதியா?'' என்று விசாரிக்க அவருக்குக் கோபம் வந்தது.

''இல்லை எதையும் சொல்லும் போது ஒழுங்கா காது கொடுத்து கேட்பதே இல்லை. நீ எங்கே போயிட்டு வருகிறாய்?'' என்று கோபமாக அவன் காரோட்ட வேண்டாம்' என்று சொல்வதை நினைத்துச் சொல்ல, அவன் 'பெண் பெயர் பாரதி இல்லை' என்று நினைத்துக் கொண்டதால் அவன் முகம் வாடிச் சுருங்கியது.

''புகழ்! ஏன் இவ்வளவு நேரம்? உன்னைக் கண்ணில் பார்க்கும் வரைக்கும் என் உயிர் என் கையில் இல்லை. எங்கே போய்ட்ட? உன்னை பார்க்காமல் பயந்து போய் விட்டேன்'' என்று ஓடி வந்து அவன் கன்னம் பற்றி விசாரித்த குரலில் பதட்டத்துடன் கோபமும் கலந்து இருக்க, அவனுக்கு உறைத்தது.

அம்மாவுக்கு தான் காரை எடுத்துச் சென்றேன் என்று சொல்லும்போது பதட்டம் கூடி இருக்குமே? வர நேர மாகும் என்று தகவல் சொன்னான். ஆனால் அம்மாவுக்கு அது போதாதே?

''சாரிம்மா. ரொம்ப பயந்து விட்டீர்களா? பாண்டியன் காரை ஒரு ரவுண்ட் ஓட்டிப் பார்த்தேன். போகும் வழியில் பூந்தமல்லி வரை செல்ல ஒரு சவாரி வந்தது. அவன் பிழைப்பைக் கெடுக்க வேண்டாமே, இன்று அலுவலகம் கூட இல்லையே என்று அப்படியே சென்று விட்டேன்மா சாரி'' என்று அவசரமாக விளக்கம் சொல்லி, மன்னிப்பு கோர, அவருக்கு நிம்மதி பெருமூச்சு வெளியேறியது.

''குளிக்கலை சாப்பிடலை. இப்படியே வியர்த்து வழிந்த ஆடையுடனா வெளியே சென்றாய்?'' என்று கேட்டவரின் குரலில் ஓரளவுக்கு இயல்பு நிலை திரும்பி இருக்க அவன் திருப்தி அடைந்தான்.

''பக்கத்தில் ஒரு ரவுண்ட் என்று கிளம்பினேன். ஆனால் எதிர்பாராமல் இழுத்து விட்டது. இதோ குளிச்சுட்டு வருகிறேன்'' என்று சென்றவன் வெளியே செல்லத் தயாராக வந்தான்.



தனக்குப் பார்த்த பெண்ணின் பெயர் பாரதி இல்லை என்று அம்மா சொன்னது மனத்தை பலவீனம் ஆக்கி இருந்தது. அப்படி என்றால் என்ன பெயர் என்று கேட்க கூட மனம் வரவில்லை. என்ன பெயராக இருந்தால் என்ன என்ற அலட்சியம் வந்தது.

மனம் எதையோ இழந்த பாவனையில் இருந்தது. ஆனாலும் அவள் தன்னைத் தவறாக நினைக்கக் கூடாது என்ற எண்ணம் அழுத்தமாகத் தோன்றியது. 'ஆயிரம் ரூபாயை அவளிடம் கட்டாயம் திருப்பிக் கொடுத்து விட வேண்டும்' எங்கே? எப்படி? அவசரமாக யோசித்தபடி காலை உணவை முடித்தான்.

''கல்யாணத்துக்கு போய்ட்டு வரேன்'' என்று அம்மாவிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினான். நண்பனின் திருமணத்தில் 'கலந்து கொண்டேன்' என்று தலையைக் காட்டி விட்டு அங்கிருந்து மின்னல் வேகத்தில் கிளம்பியவன் சென்ற இடம் பனிமலர் பொறியியல் கல்லூரி.

கூடுதலாக பணம் கொடுத்து விட்டீர்கள் என்ற முன்னுரையுடன், 8500 ரூபாய் குழந்தையின் சிகிச்சைக்காக கொடுத்து விட்டேன் என்ற குறிப்பு எழுதி அதுதான் 1000 ரூபாய் தாள் ஒன்றையும் கவரில் வைத்து ஒட்டினான்.

அவளை நேரில் சந்திக்க மனம் இல்லை. கவரை வாசலில் இருந்த பணியாளரிடம் ''காலையில் வந்த டாக்ஸி டிரைவர் கொடுக்கச் சொன்னார் என்று கடைசி வருஷம் டெக்ஸ்டைல் டிசைனிங் படிக்கிற பாரதியிடம் கொடுத்து விடுங்க'' என்று ஒப்படைத்தவன் அந

அவளின் கையில் சென்று சேரும் வரை ஜன்னல் வழியே பார்த்திருந்து விட்டு, அடுத்த வினாடி அந்த இடத்தில் நில்லாமல் கிளம்பினான்.

* * *

தேர்வு அறையில் இருந்து வெளியே வந்த பாரதியின் சிந்தனை முழுவதும் பாண்டியன் (புகேழந்தி) கொடுத்து அனுப்பி இருந்த சுவரிலேயே இருந்தது.

அவன் ஆயிரம் ரூபாயைத் திருப்பிக் கொடுத்தது அவளுக்குப் பிடித்து இருந்தது தான் கணக்கு போட்ட அழகை எண்ணி வெட்கம் வந்தாலும், அவன் அதைத் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்தது பிடித்து இருந்தது. ஆனால் தன்னிடம் நேரே சொல்லிக் கொடுத்து இருக்கலாம் என்ற எண்ணமுட் தோன்றியது.

ப்ச்! தினமும் வாடகைக்கு கார் ஓட்டி பிழைப்பவன் வேலையைக் கெடுத்துக் கொண்டு தனக்காகக் காத்திருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது அதிகம் என்று அறிவு நினைவூட்டியது. தனக்குள் மூழ்கி முத்தெடுத்துக் கொண்டு இருந்தவள் பின்னே இருந்து யாரோ தன் கையைப் பற்றி இழுத்த உடனே நின்று திரும்பியவள், அங்கே அப்பாவைப் பார்த்ததும் வியப்பின் எல்லைக்குச் சென்றாள்.

''அப்பா நீங்களா? எங்கேப்பா இங்கே? நான் எதிர் பார்க்கவே இல்லை. பெரிய சர்பிரைஸ்'' என்று உற்சாகத்துடன் கூவினாள்.

''நானும் இதை எதிர்பார்க்கவே இல்லை பாரதி. ஆனால் எனக்கு ஷாக் சர்பிரைஸ் இல்லை...'' என்று



சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு சொன்னார் ராஜேந்திரன்.

''என்னப்பா ஆச்சு? ஏன் அப்படிச் சொல்றீங்க? அப்படி என்ன ஷாக் யார் கொடுத்தாங்க?''

''என் பெண் தான்'' என்று சொன்னதும் அவள் முகத்தில் குழப்பம் வந்தது.

''என்னப்பா சொல்றீங்க?''

''பின்னே என்னம்மா? என் பெண் என்னைப் பார்த்ததும் ஓடி வந்து கட்டிக் கொள்வாள் என்று எதிர்பார்த்தேன். அது நடக்கவில்லை. சரி, அட்லீஸ்ட், ஹாய்ப்பா, என்று சொல்லி ஒரு கை அசைப்பு கிடைக்கும் என்று பார்த்தேன். இது ரெண்டும் நடக்கவில்லை என்பதைக் கூட என்னால் ஜீரணித்துக் கொள்ள முடியும். ஆனால் என்னைப் பார்த்தும் பார்க்காத மாதிரி கையில் உள்ள பேப்பரை பார்ப்பது மாதிரி குனிந்து கொண்டு போனது எனக்கு லைப் டைம் ஷாக் பாரதி'' என்று சொன்னதும் அவசரமாக கையைப் பற்றிக் கொண்டாள்.

''சாரிப்பா. நான் வேறே ஏதோ யோசனையில் உங்களை கவனிக்கலைப்பா இல்லை என்றால் பார்த்தும் பார்க்காமல் போவேனா? ஐ லவ் யூப்பா'' என்று பட்டென்று கன்னத்தில் ஒரு முத்தம் வைக்க அவர் சிரித்தார்.

''போச்சுடா. இந்த வார்த்தையைக் கேட்டு, இப்படி ஒரு முத்தமும் வாங்கிய பின்பு நான் எப்படி என் கோபத்தை இழுத்துப் பிடித்து வைத்துக் கொள்வது?'' என்று சிரிக்க அவளும் அவரின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

''என்னப்பா சிரிச்சு மழுப்புறீங்க. இன்னிக்கு இங்கே வரப் போகிறேன் என்று நீங்க காலையில் சொல்லவே இல்லையே?''

''நீ படிப்பை முடித்து விட்டாய் இல்லையா பாரதி? அதுக்கு உனக்கு ட்ரீட் கொடுக்கணும் என்று மோகன் ஆசைப் பட்டான். இன்று அவனுக்கு 25வது திருமண நாள் வேறே. அதான் லஞ்ச் வெளியே சாப்பிடலாம் என்று அழைத்துக் கொண்டு வந்தேன்...''

''அங்கிள் வந்து இருக்காரா? நான் டிரைவர் வருவார். இன்றே ஹாஸ்டல் காலி பண்ணி விடலாம் என்று நினைத்தேனே?''

''பரவாயில்லைம்மா. ஆள் அனுப்பி எடுத்துக் கொள்ள லாம். என்ன பெரிய சொத்து காணாமல் போகிறது. பத்து ட்ரெஸ் இருக்கும் அவ்வளவு தானே?'' என்று சொல்ல அவளும் உற்சாகமாகக் கிளம்பி வந்தாள்.

கல்லூரிக்கு மிக அருகே இருந்த ஒரு உயர்தர ஹோட்டலில் குளிருட்டப்பட்ட அறையில் அமர்ந்து உணவுக்கு ஆர்டர் கொடுத்த பிறகு மோகனரங்கத்தைப் பார்த்து, ''சொல்லுங்க அங்கிள், எப்படி இருக்கீங்க? உங்களைப் பார்த்து ரெண்டு வருஷத்துக்கு மேலே ஆகுதே? என்னை மறந்துட்டீங்களா?'' என்று கேலியாக விசாரித்தாள்.

மருத்துவ சிகிச்சை தொடரும் வரை வாரம் இருமுறை பார்த்துக் கொண்டு இருந்தவர்களின் சந்திப்பு தேய்ந்து இல்லாமல் போய் இரண்டு ஆண்டுகள் இடைவெளி விழுந்து இருந்தது.



''இன்னிக்கு தான் உங்க அப்பாவுக்கு என்னைப் பார்க்கணும் என்று தோன்றி இருக்கு. வெடிங் டேயை சாக்கா வச்சுட்டு தேடி வந்தான்...'' என்று சொல்ல அவள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''என்ன விஷயம்பா?'' என்று கூர்மையான பார்வை யுடன் பாரதி கேட்க அவர் அழகாக புன்னகை செய் தார்.

''எல்லாம் நல்ல விஷயம் தான் பாரதி. நீ படிப்பை முடித்து விட்டாய். உன் கடமை முடிந்து விட்டது. அடுத்து ஒரு தகப்பனா நான் என் கடமையைச் செய்ய வேண்டாமா? அதனால் உன் கல்யாணம் பற்றிப் பேசலாம் என்று நினைத்தேன் பாரதி. அதற்கு நீ மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தகுதியாக இருக்கிறாயா என்று அறிந்து கொள்ள மோகனை கூட்டி வந்தேன். உன்னை ஒரு நல்லவன் கையில் பிடித்துக் கொடுத்து விட்டால்...'' என்று அவர் அவளின் கை பற்றி நெகிழ் வுடன் பேசிக் கொண்டு இருக்கும்போதே அவளுக்கு கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. மேலே யோசிக்க முடியாமல் நினைவு இன்றி மேஜையில் சரிந்தாள் பாரதி.

* * *

நாலரை மணி அளவில் சோர்ந்த உடல் மற்றும் மனத்தோடு அவன் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது மகனுடன் பேசக் காத்திருந்தார் பூரணி.

''வா புகழ்! உனக்காக தான் காத்திருக்கிறேன். ஏன்பா இவ்வளவு நேரம்?'' என்று சொல்ல அவனுக்குப் பெரு மூச்சு வந்தது.

பிற்பகலில் பேசலாம் என்று பெருமையாக காலையில் சொன்னது நினைவில் வந்தது. அம்மா என்ன பேசப் போகிறார் என்பது தெரிந்ததாலேயே இப்போது பேசப் பிடிக்கவில்லை. இதுவரை பிடிக்கும் பிடிக்காது என்று பாகுபாடு இல்லாமல் சம நிலையில் இருந்த மனது இப்போது திருமணம் வேண்டாம் என்ற பக்கம் கொஞ்சம் நகர்ந்து இருந்தது.

''கொஞ்சம் காபி தர்றீங்களா?'' என்று பேச்சை தற்காலிகமாக ஒத்தி வைக்க முயன்றான்.

''வெறும் காபி போதுமா? கேசரியும் பஜ்ஜியும் பண்ணி இருக்கிறேன் புகழ். டிபன் சாப்பிடலாமே?''

''இல்லை வேண்டாம்மா. காபி போதும். நீங்க ஏதோ பேசணும் என்று சொன்னீங்களே. சொல்லுங்க'' என்று கேட்டபடி உணவு மேஜையில் அமர, ''போடா! என்னிக்கோ ஒரு நாள் வீட்டில் இருக்கிறாய். அன்னிக்கு கூட டிபன் வேண்டாமா?'' என்று அவர் ஆர்வத்துடன் தட்டில் பரிமாற அவன் அதையே பார்த்தபடி அமைதியாக இருந்தான்.

''மதியம் கல்யாண வீட்டில் சாப்பிட்டு இருக்கேனே? காபி மட்டும் போதுமே?'' என்று வாய் வரை வந்த வார்த்தைகளை மென்று விழுங்கினான்.

''என்னடா புது இடத்தில் பெண் பார்க்கப் போகும் போது பார்ப்பது மாதிரி இப்படி முறைச்சு பார்க்கிறாய்? சாப்பிடு'' என்று அவர் சொல்ல எரிச்சலுடன் நிமிர்ந்தான்.

''இங்கே பாருங்கம்மா. இந்த பெண் பார்க்கிறேன் என்று பேர் பண்ணிக் கொண்டு வீடு வீடா ஏறி



இறங்குவது. மூக்கு முட்ட டிபன் சாப்பிடுவது. வீட்டுக்குப் போய் சொல்லி அனுப்புகிறோம் என்று கதை சொல்வது. இதெல்லாம் கூடாது என்று ஒரு பெண்ணைப் பார்க்கணும். ஏறத்தாழ இருந்தாலும் முடிக்கணும். சொல்லிட்டேன்'' என்று தீவிரமான குரலில் சொல்ல அவர் அவனை திகைப்புடன் பார்த்தார்.

இவனுக்கு ஏன் இந்த சின்ன கேலிக்கு இவ்வளவு கோபம்?

## 6

திருமணப் பேச்சை ஆரம்பிக்கும் முன்பே இவ்வளவு கடினமான குரலில், முதலில் பார்க்கும் பெண்ணையே தான் கல்யாணம் பண்ணணும் என்று அழுத்தமாகச் சொன்ன புகழேந்தியின் கருத்தில் அவருக்கு உடன்பாடு இருந்தாலும் அதைச் சொன்ன விதம் அவரின் மனத்தைப் பாதித்தது.

''அது சரி புகழ். ஆனால் ஒரு சாதாரண கேலிக்கு எதுக்கு இப்படி பச்சை மிளகாயை முழுசா கடிச்ச மாதிரி பேசுகிறாய்? பையனும் பொண்ணும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து நாலு வார்த்தை பேச வேண்டாமா?''

''பேசட்டும். யார் வேண்டாம் என்று சொல்றாங்க. எடுத்த எடுப்பில் வீட்டுக்குப் போக வேண்டாம். ஏதாவது பொது இடத்தில் சந்திக்கலாமே?''

''எல்லாம் ஒன்று தானேப்பா?''

''அது எப்படி ஒன்றாகும்?''

''சரி, விடு. உனக்கு பிடிச்ச மாதிரியே நடந்து கொள்ள லாம். நீ போகலாம் என்றால் போகலாம் இல்லை என்றால் வேண்டாம்'' என்றவரின் குரலில் ஏக்கமும் சின்னக் கோபமும் ஒளிந்து இருந்தது.

''என்னம்மா நீங்க? வரிசையா பொண்ணு பார்ப்பதை ஒரு பொழுது போக்கா செய்ய வேண்டாம். நமக்குப் பிடிச்சு இருக்கு என்று தோன்றும் பெண்ணைப் போய் பார்க்கணும். அப்படியே கல்யாண தேதி குறிக்கணும். வேறே ஏதாவது பிரச்னை அதன் பிறகு நமக்கு தெரிய வந்தால் கூட நம்ம முடிவில் மாறக் கூடாது என்று சொன்னேன். அது தப்பா?'' என்றவன் குரலில் தீவிர பாவனை இருக்க, அவர் மேலும் திகைத்தார். ஏன் இப்படி பேசுகிறான்?

''உனக்குப் பிடிச்ச அந்த பொண்ணு உன்னைப் பிடிக்கலை என்று சொல்லி விட்டால் என்ன செய்வது புகழ்?'' என்ற அம்மாவின் குரலில் திரும்பிப் பார்த்தவன் அவர் முகத்தில் தெரிந்த கலக்கத்தைப் பார்த்ததும் முகத்தை சீர் செய்தான். தேவை இல்லாமல் அவங்களை ஏன் டென்ஷன் படுத்தணும்? ரிலாக்ஸ் புகழ்! என்று இரண்டு முறை தனக்குள் சொல்லிக் கொண்டு விளை யாட்டாகப் பேச்சைத் தொடர்ந்தான்.

''அவள் என்னைப் பிடிக்கலை என்று சொன்னால் விட்டு விடுவேனா? அவள் பின்னாடியே போய் சுத்திச் சுத்தி வந்து, என் செயல்கள் மூலம் அவளுக்கு என் அன்பை புரிய வைப்பேன்'' என்ற புகழின் கேலிக் குரல்



கேட்டதும் அவருக்கு கலக்கம் குறைந்து புன்னகை வந்தது.

''பார்த்து புகழ்! உன் மேல் ஈவ் டீஸிங் என்று கேஸ் போட்டு விடப் போகிறாள்.''

''எனக்கு பிடிக்கும் பெண் நல்லவளாக இளகிய மனம் படைத்தவளாக தான் இருப்பாள். அதனால் அப்படி எல்லாம் செய்ய மாட்டாள். ஆனால் அவளே செய்யலை என்றாலும் நீங்களே கேஸ் போடச் சொல்வீங்க போல'' என்று அவன் சொல்லிய பாவனையில் மேலும் சிரித்தார் பூரணி.

''சே! சே! அப்படி எல்லாம் செய்ய மாட்டேன் புகழ். என்ன தான் மருமகளாக போகிறவள் என்று அவள் மேல் ஆசையா இருந்தாலும், என் மகன் என்ற எண்ணமும் இருக்கத்தானே செய்யும்...'' என்று சொல்லிச் சிரிக்க அவரின் சிரிப்பையும் மலர்ந்த முகத்தையும் பார்த்தவன் மனம் நிறைந்தது.

இந்த முகத்தில் இந்த சிரிப்பு நிலைத்து நிற்க வேண்டும். அதற்கு ஏற்றபடி நடந்து கொள் புகழ் என்று மீண்டும் மனதுக்குள் உறுதி செய்து கொண்டான்.

''புகழ், டிபன் அப்படியே இருக்கே? சாப்பிட வில்லையா?'' என்று நிறைந்த மனத்துடன் விசாரித் தார்.

''நீங்க சாப்பிட்டு இருக்க மாட்டீங்களே? உங்களைப் பார்க்க வைத்துச் சாப்பிட்டால் எனக்கு வயிறு வலிக்காதா?'' என்று தன் தட்டில் இருந்து ஒரு பஜ்ஜியை எடுத்து ஊட்ட முயல அவர் அவசரமாக அதை மறுத் தார்.

"இன்னிக்கு பிரதோஷம். ஆறு மணிக்கு மேல் தான் சாப்பிடுவேன்."

"பகல் பூரா சாப்பிடாமல் இருக்கறதோட இதை எல்லாம் ஏன்மா செஞ்சீங்க?" என்று அவன் திட்ட, அவன் தலையை வருடி, "விரதம் இருப்பதே உனக்காகத் தானே?" என்று பூரணி பரிவுடன் சொல்ல பெருமூச்சை விட்டான்.

"என்னம்மா தினமும் விரதம்? அப்படி என்ன வேண்டுதல்...?"

"உனக்கு ஒரு நல்ல பொண்ணு அமைஞ்சு நீ சந்தோஷமா குடித்தனம் நடத்தணும் என்ற வேண்டுதல் தான். வேறென்ன? இந்த போட்டோவைப் பாரேன்" என்று ஒரு கவரை நீட்ட அவன் உச்சு கொட்டினான். சற்று முன்பு செய்து கொண்ட தீர்மானம் நினைவில் தோன்ற அதை வாங்கிப் பிரித்தான்.

"போட்டோவைப் பார்த்து வாழ்க்கை முழுவதும் உடன் வரக் கூடிய ஒரு பெண்ணை எப்படிம்மா செலக்ட் பண்ண முடியும்?" என்ற வார்த்தைகள் அவன் கட்டுப்பாட்டை மீறி வெளியே வந்து விட்டது.

"பொண்ணு வீட்டுக்குப் போகலாம் என்றால் அதுவும் முடியாது. என்ன தான் பண்ண சொல்ற? இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி சாக்கு போக்கு சொல்லலாம் என்று நினைக்கிறாய்? உனக்கு இருபத்தி ஆறு முடிந்து விட்டது தெரியுமா?" என்றபடி தன் கையில் இருந்த போட்டோவை உருவி, கண் முன்னால் அம்மா லேசாக ஆட்ட அதைப் பார்த்தவன் விழிகள் விரிந்தது.



போகிற வழியில், எதிர்பாராமல் சில நிமிடங்கள் சந்திக்க நேர்ந்த ஒரு பெண்ணை மனத்தில் வைத்துக் கொண்டு, தன்னைப் பெற்ற தாயின் மனத்தை வருந்தச் செய்வது நியாயம் இல்லை என்ற எண்ணத்துடன் வேண்டா வெறுப்பாக அம்மா நீட்டிய புகைப்படத்தை மேம்போக்காகப் பார்த்த புகழேந்தியின் கண்கள் சந்தோஷத்தில் விரிந்தது.

"அம்மா, இது பாரதியா?" என்று அவன் வியப்புடன் கேட்டு முடிக்கும் முன்பே, "பாரதியை உனக்குத் தெரியுமா?" என்ற பூரணியின் குரல் உச்ச பட்ச வியப்புடன் ஓங்கி ஒலித்தது.

"நீங்க கேட்கும் கேள்விக்கு எல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது. முதலில் நான் கேட்கும் கேள்விக்கு நீங்க பதில் சொல்லுங்க. காலையில் நான் பொண்ணு பேர் பாரதியா என்று கேட்டதற்கு நீங்க ஏன் இல்லை என்று சொன்னீங்க?" என்று போட்டோவைப் போட்டு விட்டு அவரின் கன்னத்தைப் பிடித்து ஆட்டியபடி பொய்க் கோபத்துடன் விசாரிக்க அவர் திகைத்தார்.

"நீ எப்போ கேட்டாய்? நான் எப்போ இல்லை என்று சொன்னேன்?"

"ஹய்யோ அம்மா! நான் காலையில் வெளியே போய்ட்டு வீட்டுக்கு வந்த உடனே முதலில் இதைதான் கேட்டேன்."

"நான் கவனிக்கலை புகழ். நீ வெளியே போய் ரொம்ப நேரம் ஆகியும் வரவில்லையே என்ற பயத்திலும் குழப்பத்திலும் இருந்ததால் கவனிக்காமல் பதில் சொல்லி இருப்பேன் புகழ்" என்று சொன்னதும்

அவனுக்குப் பெருமூச்சு வந்தாலும், சிரிப்பும் கூட வந்தது.

''ஏன் புகழ் இவ்வளவு பெரிய பெருமூச்சு விடுகிறாய்? ஏதாவது பிரச்னையா?'' என்று கவலையுடன் கேட்க அவன் சப்தமாகச் சிரித்தான்.

''இல்லைம்மா. ஒரு பிரச்னையும் இல்லை. எல்லாமே சூப்பர். குறையே கிடையாது'' என்று விதம் விதமாக தன் மனநிலையைச் சொன்னவன் முகத்தில் சந்தோஷம் மின்னியது.

''இப்பத்தான் உன் முகம் பார்க்கிற மாதிரி இருக்குடா. இவ்வளவு நேரம் இருண்டு கிடந்தது பார்க்கவே சகிக்கலை. என் மனசே ஆறலை தெரியுமா?'' என்று அவன் கன்னம் வழித்து திருஷ்டி கழித்தார்.

''அம்மா, சந்தடி சாக்குல என் முகம் நல்லா இல்லை என்று சொல்லி காட்டுறீங்களா?'' என்று கேலி செய்து சிரித்தவன் முகம் மலர்ந்து மேலும் அழகாக அவருக்கும் சிரிப்பு விரிந்தது.

''உன்னைப் போய் அழகில்லாதவன் என்று கண் இருப்பவங்க சொல்வாங்களா புகழ்? இப்ப சொல்லு. 'பாரதியை உனக்குத் தெரியுமா?''

''தெரியும். ஆனால் தெரியாது'' என்று பதில் சொன்னவன் குரலில் குதூகலம் இருக்க, கண்கள் அந்த புகைப் படத்தை விட்டு வினாடி கூட விலகவில்லை.

''சிவசிவா! கொஞ்சம் புரியுற மாதிரி பேசேன் புகழ்! பாரதியைத் தெரியுமா? தெரியாதா?'' என்று சொன்னதும் அவன் சப்தமாகச் சிரித்தான்.



''மண்டை காயுது இல்லை. இவ்வளவு நேரம் எனக்கும் அப்படி தான் இருந்தது'' என்று மேலும் கொஞ்ச நேரம் ரசித்துச் சிரித்து விட்டு, ''உட்காருங்க விளக்கமா சொல்கிறேன்'' என்றவன் அம்மாவின் கையைப் பற்றி இழுத்து அருகே அமர வைத்தான்.

''இன்று காலையில் பத்து நிமிஷத்தில் வரேன் என்று சொல்லி விட்டு பாண்டியனுடன் சென்ற நான் பத்தரை மணிக்கு இரண்டு மணி நேரம் கழித்து வந்ததற்குக் காரணம் பாரதி தான். அவள் தான் காலையில் நான் சொன்ன முதல் சவாரி'' என்று ஆரம்பிக்க அவரின் கண்கள் விரிந்தது.

''ஓ!''

''ஆமாம் ஓ.தான் அவளை ஏற்கனவே பார்த்து இருப்பதால் தெரியும் என்று சொல்லலாம். ஆனால குடும்பம் கூட பிறந்தவங்க. என்ன பிடிக்கும்? என்ன பிடிக்காது? அவளுடைய குண நலன்கள் என்ன என்று தெரியாது. விளக்கம் ஓகேயா? இப்ப நீங்க அவளைப் பற்றி சொல்லுங்க. நான் தெரிந்து கொள்கிறேன்'' என்றவனின் குரலிலும் பாவனையிலும் குதூகலம் இருந்தது.

''பொண்ணு பேர் பாரதி.''

''அதான் தெரியுமே.''

''அவள் எஞ்சினியரிங்'' என்று பூரணி ஆரம்பிக்கும் முன்பே, ''கடைசி வருஷம் டெக்ஸ்டைல் டிசைனிங் படிக்கிறாள்...'' என்ற புகழின் குரல் இடையிட முறைத்தார்.

''சரிம்மா, இனிமேல் வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசினால் நீ லூசாடா என்று கேளுங்க'' என்று

சொல்லிவிட்டு கைகளை கட்டி ஒரு விரலை வாயில் வைத்து அப்பாவியாக போஸ் கொடுக்க அவர் சிரித்து விட்டு மேலே தொடர்ந்தார்.

''அவங்க அப்பா ஜவுளிக் கடை மைலாப்பூரில் வைத்து இருக்கிறார். நல்ல வசதியான குடும்பம். அம்மா பாக்கியம் வீட்டு நிர்வாகம் பார்த்துக்கறாங்க. அவங்களை மருந்தீஸ்வரர் கோவிலில் போன பிரதோஷ சமயத்தில் பார்த்தேன். என்னிடம் சில முறை போனில் பேசி இருக் காங்க. ரொம்ப தைரியசாலி, திறமைசாலி. பொண்ணும் அம்மா மாதிரியே இருக்கலாம். அவள் படிப்பை முடித் ததும்...''

''பாரதிக்கு படிப்பு முடிஞ்சு மூன்று மணி நேரத்துக்கு மேலே ஆச்சு'' என்று இடையிட்டு விட்டு வாயை மீண்டும் மூடிக் கொள்ள இப்போது பூரணியின் முகத்தில் சிரிப்பு வந்தது.

''லூசாடா நீ?''

''ஒரு பேச்சுக்குச் சொன்னால் நிஜமாகவே என்னை லூசாக்கி விட்டீங்களே அம்மா'' என்று குறைபட அவர் சிரித்தார்.

''நீ சொன்னதைத் தானே செய்தேன். சரி சரி அழாதே. ஆனால் அவள் படிப்பை முடித்து விட்டாள் என்று உனக்கெப்படித் தெரியும்?''

''நான் தானே காலையில் கடைசி எக்ஸாம் என்று கொண்டு போய் விட்டு வந்தேன். அப்ப பேசியது தான் இப்ப கூட...'' என்று ஆரம்பித்து விட்டு பேச்சை பாதியில் நிறுத்தி திருதிருவென்று விழித்தான்.



''என்னடா நடக்குது இங்கே?'' என்று போலியாக மிரட்ட அவன் மேலும் அசடு வழிந்து விட்டு பின் சமாளித்தான்.

''ஆடு, மாடு, கோழி இதெல்லாம் நடக்கும். சொல்ல மறந்துட்டேனே மனுஷங்க கூட நடப்பாங்கம்மா.''

''உனக்கு ரொம்ப முத்திப் போச்சு போ. கணவரிடமும் பெண்ணிடமும் பேசி விட்டு, நீங்க எப்போ வரலாம் என்று தகவல் கொடுக்கிறேன் என்று சொல்லி இருந் தாங்க. நீ போகிற போக்கைப் பார்த்தால் நாம் அவ்வளவு நேரம் காத்திருக்க முடியாது போல இருக்கே? இப்பவே நான் அவங்களுக்கு போன் பண்ணி ஞாயிறு வரட்டுமா என்று கேட்கிறேன்'' என்று போலியாக சலித்துக் கொண்டு தொலைபேசி இருக்கும் இடத்தை நோக்கி நகர்ந்தார்.

''ஞாயிறு ஏன்? நாளைக்கே வரலாமா என்று கேட்க லாமே?''

''நாளைக்கு ஏன்? இன்றே வரலாமா என்று கேட்க லாமே?''

''ஓ! பிரமாதமான ஐடியா, செய்யலாமே?'' என்று சொல்லிய பிறகே அதன் அர்த்தம் புரிந்து அசடு வழிந்தவன், ''டிபன் மட்டும் கொடுத்து விட்டு காபி கொடுக்காமல் கதை பேசிக் கொண்டு இருந்தால் என்ன அர்த்தம்? காபி கொடுங்க உங்க மாமியாரா வரு வாங்க?'' என்று அதட்டலாகச் சொல்வது போல நடிக்க அவர் சிரித்தார்.

''காபி கொடுக்க என் மாமியார் வந்தாலும் அவருக்கு தள்ளாத வயசா இருக்குமே? அதனால் சீக்கிரமே என்

மருமகளை வரச் சொல்கிறேன்'' என்று சொல்லிச் சிரிக்க, அவரை ஓடி வந்து தாவி அணைத்தான் புகழ்.

''என் செல்லக் குட்டி அம்மா, தாங்க்ஸ்'' என்று கொஞ்சலாகச் சொல்லிச் சிரித்து விட்டு அருகே வந்து கட்டி அணைத்து கன்னத்தில் முத்தமிட்டான் புகழேந்தி.

* * *

மாலை நான்கு மணி அளவில் கணவன் கடைக்குச் சென்று இறங்கிக் கொண்டு, தனக்கு போன் பண்ணி 'பாரதி வீட்டுக்கு வந்து கொண்டு இருக்கிறாள்' என்ற தகவலையும் முன்பே சொல்லி விட்டதால், அரை மணி நேரமாக பெண்ணை பார்க்க வாசலுக்கும் ஹாலுக்கும் என்று நடை பயின்று கொண்டு இருந்தார் பாக்கியம்.

''திருமணப் பேச்சை ஆரம்பித்து விட்டேன். முதலில் தடுமாறினாள். மயக்கம் கூட வந்தது. ஆனால் பழைய நினைவுகள் எதுவும் அவளிடம் இருப்பது மாதிரி தெரியலை. கல்யாணம் வேண்டாம். நான் தொழில் செய்யணும் என்ற மாதிரி தான் பேசினாள்'' என்று நல்ல செய்தியையும் சேர்த்துச் சொல்லி இருந்ததால், மகளைச் சந்திக்கக் கூடுதல் ஆர்வத்துடன் காத்திருந்தார்.

'இன்னும் மகளைக் காணோமே' என்று வாசலுக்கு வந்தவரின் கண்களில் மகள் வந்த கார் போர்டிகோவில் நிற்க, முகம் மலர்ந்தது.

''உங்க வீட்டுக்காரர் காலேஜுக்கே நேரே வந்து அவருடைய நண்பருடன் லஞ்ச் சாப்பிட கூட்டிட்டுப் போயிட்டார். அங்கிளுக்கு இன்று 25வது திருமண நாளாம். நீங்க ஏன் வரலை?'' என்ற கேள்வியுடன் வந்த பாரதியை புன்னகையோடு எதிர் கொண்டார்.



''சாயங்காலம் வீட்டுக்குப் போகலாம் என்று அப்பாவிடம் சொன்னேன். நீ அங்கிளுக்கு க்ரீட் பண்ணினாயா? நல்லா சாப்பிட்டாயா? ஒரு வழியா படிப்பை முடிச்சுட்டு வந்து விட்டாயா?''

''ஒவ்வொரு கேள்வியா கேளுங்க. இப்படி மொத்தமா கேட்டால் மறந்து விடாதா? கிரீட் பண்ணியாச்சு. சாப்பிட்டாச்சு. படிப்பு முடிச்சாச்சு. இனிமேல் ஹாஸ்டல் வாசம் தேவை இல்லை. உங்களை விதம் விதமா சமைக்கச் சொல்லி மூக்குப் பிடிக்கச் சாப்பிடப் போகிறேன்.''

''பொண்ணுக்கு விதம் விதமா சமைத்துப் போடுவதை விட வேறென்ன வேலை எனக்கு? காலையில் நேரத்திற்கு காலேஜுக்குப் போய் சேர்ந்து விட்டாய் அல்லவா? ஒன்றும் பிரச்னை இல்லையே?''

''அதெல்லாம் இல்லைம்மா. கரெக்டா போயிட்டேன். ஆனால் அவருக்குக் கொடுக்க என்னிடம் பணம் இல்லை தெரியுமா?'' என்று உதட்டைப் பிதுக்க அவர் கவலையாகப் பார்த்தார்.

''ஏன் 1000 ரூபாய் பர்ஸில் வைத்து இருந்தாயே? என்ன ஆச்சு?''

''டாக்சிக்கான பணம் மட்டும் என்றால் நீங்க சொல்வது சரி. ஆனால் ஒரு குழந்தைக்கான மருத்துவ சிகிச்சைக்கும் சேர்த்துப் பணம் கொடுக்க வேண்டி இருந்தது. பத்தாயிரம் ரூபாய்க்கு நான் எங்கே போவேன்?''

''பத்தாயிரமா? அப்புறம் என்ன செய்தாய்?''

"கையில் இருந்த மோதிரத்தைக் கொடுத்து விட்டேன்" என்று சொன்னதும் அவரின் முகம் மாறியது.

"ஏன் அப்படிச் செய்தாய் பாரதி? அப்பா நம்பர் சொல்லி அவரிடம் நேரில் பணம் வாங்கிக்கோ என்று சொல்ல வேண்டியது தானே?"

"வந்ததும் வராததுமா குறை சொல்ல ஆரம்பிச்சாச்சா? நான் இருந்த டென்ஷனில் இதை எல்லாம் யோசிக்க முடியுமா? பணம் கொடுக்காமல் போனால் நல்லா இருக்குமா? அப்படிச் செய்து இருந்தால் அதற்கும், உழைப்பவன் வயிற்றில் அடித்த காசு நம் குடி கெடுக்கும் என்று திட்ட மாட்டீங்களா?" என்று எரிச்சலோடு சொல்ல அவரின் முகம் மாறியது.

"பாரதி, ஏதாவது நல்ல காரியம் செய்வதற்காக என்றாலும் கூட, இந்த மாதிரி கையில் கழுத்தில் இருக்கும் நகைகளைக் கழட்டிக் கொடுக்கக் கூடாது என்று உனக்கு எத்தனை முறை சொல்வது? தங்கம் விலை அதிகம், கூடுதல் செலவு என்பது ஒரு பக்கம் இருந்தாலும், மோதிரம் பரிசாகக் கருதப்படும் என்பதால் கொடுக்க வேண்டாமே என்று சொன்னேன். ஏற்கனவே ஒரு முறை செய்து, வந்த பிரச்னைகள் போதாதா?" என்று சொல்லிவிட்டு நாக்கைக் கடித்தார். இதைச் சொல்லி இருக்க வேண்டாமோ?

தொட்டது தொண்ணூற்றுக்கும் தன்னைக் குற்றம் குறை சொல்லிக் கொண்டே இருக்கும் அம்மாவை முறைத்துக் கொண்டு இருந்தவளின் பார்வை அந்தக் கடைசி வரியில் மாறியது.



**நினைவலை 3**

"இந்த மோதிரத்தை வச்சுக்கோங்க. ஹாஸ்பிடலில் செலவினைப் பார்க்க பயன்படும். என்னிடம் பணம் அதிகமா இல்லை."

"நகைகளை வாங்கினால் பின்னால் பிரச்னை ஏற்படக் கூடும். அதிலும் நீ பணக்கார பெண் வேறு. உன்னை ஏமாற்றி வாங்கி விட்டதாக நீயே குற்றம் சுமத்தக் கூடும்."

"நான் தான் இதை உங்களுக்கு விரும்பிக் கொடுத்தேன் என்று எழுதி கையெழுத்து போட்டு தருகிறேன் போதுமா. எந்த நேரத்தில எதை பேசணும் என்று அறிவில்லாமல் பேசி பொழுதை வீணாக்காதீங்க. சொல்றதைக் கேளுங்க."

"பின்னால் நீ மனசு மாற மாட்டியே..."

"பிராமிசா மாற மாட்டேன். போதுமா? லேட் ஆகுது. ஒற்றையா இரட்டையா போட்டு பார்க்கவோ, தயங்கி விவாதம் பண்ணவோ இது நேரம் இல்லை. சொன்னால் கேளுங்க. ஒரு உயிரைக் காப்பாத்துங்க..."

* * *

திருமணம் பற்றி தான் பேசியது அவள் காதுகளில் சென்றடைய வில்லை என்பதை உணர்ந்து மகளின் தோளைப் பற்றி லேசாக உலுக்கினார்.

"பாரதி, என்ன ஆச்சு? என் இப்படி பிரமை பிடிச்ச மாதிரி நிற்கிறாய்?"

"ஹூம்! என்னம்மா கேட்டீங்க?" என்று கனவில் இருந்து விழிக்க பாக்கியம் கவலையுடன் பார்த்தார்.

# 7

முதலில் கோபத்துடன் தன்னுடன் சண்டை இட்டவள், மோதிரம் பற்றிய பேச்சுக்குப் பிறகு கவனம் கலைந்து விட்டாள் என்பதைத் தாமதமாக உணர்ந்து பாக்கியம் சுதாரித்தார். ''என்ன பாரதி உடம்பு சரி இல்லையா? உனக்குக் கல்யாணம் பண்ணனும் என்று நான் நினைப்பது கொலைக் குற்றமா என்று கேட்டேன். நீ பதிலே சொல்லவில்லை.''

''ப்ச்! என்னம்மா நீங்க. நான் அப்படியா சொன்னேன்? நான் இந்த வீட்டில் இருக்கறதில உங்களுக்கு என்ன பிரச்னை? கல்யாணம் என்ற பெயரில் துரத்தி விடுவதிலேயே குறியா இருக்கீங்க என்று தான் நானும் கேட்டேன். உங்களை குறை சொல்லும் நோக்கம் எனக்கும் இல்லை'' என்று சொல்லிவிட்டு அவரை நெருங்கி கட்டிக் கொண்டாள்.

''அப்படி இல்லை பாரதி. ஆனால்...'' என்று ஆரம்பித்தவர் பின் அந்தப் பேச்சைத் தொடராமல், ''காபி தரட்டுமா?'' என்று கரிசனத்துடன் விசாரித்தார்.

''ப்ச்! இத்தனை நாள் ஹாஸ்டலில் இருந்து விட்டு வீட்டுக்கு வரும் பெண்ணை காபி குடிக்கிறாயா என்று கேட்கவே உங்களுக்கு ஒரு மணி நேரம் ஆகி விட்டது? டிபன் எதுவும் பண்ணலையா?''



''இன்னிக்கு பிரதோஷம் ஆச்சே? நான் நைட் தான் சாப்பிடுவேன். நீ எப்போ வருவாய் என்று தெரியவில்லை என்பதால் டிபன் செய்யவில்லை பாரதி''

''ஓ! பிரதோஷமா? நீங்க கோவில் போகவில்லையா?''

''போகணும். கதிர் பெர்மிஷன் கேட்டார். நீ காரை எடுத்துக் கொண்டு வருகிறாயா? போகலாம்'' என்று மகளை அழைத்ததும், அவளின் கண்கள் மலர்ந்தது. அதுவரை செய்த விவாதமும் அதனால் வந்த மனகசப்பும் காணாமல் போனது.

''ஓ! எஸ் போகலாமே? நான் ரெடி...'' என்று ஆர்வமாக எழுந்திரிக்க பாக்கியம் புன்னகையை பூசிக் கொண்டார்.

''சரி வா, மருந்தீசுவரர் கோவில் போய்ட்டு வரலாம்...''

''என்னம்மா இது? வீட்டுக்குப் பக்கத்தில இருக்கும் கபாலீஸ்வரரை டீலில் விட்டுட்டு, பத்து கிலோ மீட்டர் அந்தப் பக்கம் இருக்கும் மருந்தீஸ்வரரை பிடிச்சு இருக்கீங்க என்ன விஷயம்?'' என்று கேட்டபடி காரைக் கிளப்பினாள்.

''அப்பனே ஈசுவரா, உன்னை நம்பி என் உயிரையே என் பெண்ணிடம் ஒப்படைக்கிறேன், என்னை பத்திரமா கோவிலுக்குக் கூட்டிட்டுப் போய் வருவது உன் பொறுப்பு...'' என்ற அம்மாவின் வேண்டுகோளைக் கேட்டதும் அவள் முகம் இன்னும் சிரிப்பில் மலர்ந்தது.

''அம்மா! இந்த மதம் உயர்ந்தது, மற்ற மதம் உயர்ந்தது, என்ற வேறுபாடுகள் பற்றி கேள்விப்பட்டு

இருக்கிறேன். இந்து தெய்வங்களுக்குள் சைவம் உசத்தி வைணவம் உசத்தி என்று சண்டை இடுவதைக் கூட புத்தகங்களில் படித்து இருக்கிறேன். ஆனால் இந்த கபாலீஸ்வரரை விட மருந்தீசுவரர் உசத்தி என்று சொல்லும் வாதம் எனக்குப் புரியவே இல்லையே?'' என்று கேலியாகக் கேட்டு சிரிக்க அவள் முதுகில் ஒன்று வைத்தார் பாக்கியம்.

''எதெதில் விளையாடுவது என்பதே இல்லையா? சாமி விஷயத்தில் கிண்டல் பண்ணக் கூடாது நான் இன்று மருந்தீசுவரர் கோவிலுக்கு போவதில் ஒரு காரணம் இருக்கு. நான் போன முறை அங்கே சென்ற போதுதான்...'' என்று நிறுத்தினார். பூரணியைச் சந்தித்தேன். மாப்பிள்ளை ஜாதகம் வாங்கினேன் என்று மகளிடம் சொல்ல முடியவில்லை.

மகள் சிக்னலில் கவனமாக இருக்க வந்து விட்ட சின்ன இடைவெளியை அடுத்து வந்த வார்த்தைகளால் சாமர்த்தியமாக இட்டு நிரப்பினார்.

''பிரதோஷம் என்றால் என்ன என்று தெரியுமா உனக்கு?''

''என்னம்மா இது கேள்வி? உங்க பெண்ணா இருந்து கொண்டு இது கூடத் தெரியாமல் இருப்பேனா? மூன்று மாசம் பிரதோஷ விரதம் இருந்தேனே?''

''நீயா பிரதோஷ விரதம் இருந்தாயா? எப்போ? என்ன வேண்டி கொண்டு விரதம் இருந்தாய்?'' என்று வியப்புடன் கேட்க, பாரதிக்கு நினைவில்லை.

''எப்போ? ப்ச்! எனக்கு நினைவில்லை. அதை விடுங்க. பிரதோஷம் அமாவாசை பௌர்ணமிக்கு



இரண்டு நாட்களுக்கு முன்னால் வரும் நாள் மாலை சந்தியா காலத்தில் சிவனுக்கு பூஜை செய்யும் நேரம்.''

'நினைவில்லை' என்று சொன்னதாலேயே அவள் எப்போது எதற்காக விரதம் இருந்து இருக்கக் கூடும் என்பது புரிந்துவிட பிரமை பிடித்தாற் போல இருந்த பாக்கியம், தன்னை சுதாரித்துக் கொண்டு பேச்சை மாற்றினார்.

''அது மட்டுமில்லை பாரதி. அது சிவனுக்கு உகந்த நாள் அன்று சிவனை வேண்டிக் கொள்பவர்களுக்கு, குறிப்பா, பிரதோஷ நேரத்தில், வேண்டி கொள்பவர் களுக்கு சிவன் முக்தி அளிப்பதாக நம்பிக்கை பாற்கட லில் அமிர்தத்தைத் தேடி, தேவர்களும் அசுரர்களும், வாசுகியை மத்தாகக் கொண்டு கடைந்தபோது அமிர்தம் வருவதற்கு முன்பாக ஆலகாலம் விஷம் தோன்றியது. அதை பார்த்துப் பயந்து போன தேவர்களும் அசுரர்களும் சிவபெருமானிடம் முறையிட, அவர்களை காக்க, அதை எடுத்து அவரே உண்டார்'' என்று பாக்கியம் பிரதோஷ மகிமையை எடுத்துச் சொல்ல, மகள் இடையிட்டாள்.

''எனக்கும் எங்க அம்மா புராணக் கதைகள் எல்லாம் சொல்லி இருக்காங்க. அவர் உண்ட விஷம் அவரைத் தாக்கக் கூடாது என்பதற்காக அவரின் தொண்டையைப் பிடித்து பார்வதி இறுக்கியதால் அந்த விஷம் அங்கேயே நின்று விட்டது. அதனால் தான் நீலகண்டன் என்ற பெயர் வந்தது என்று கூடத் தெரியுமே? பார்வதி தேவி அவங்க கணவன் மேலே அவ்வளவு உயிரா இருக்காங்க. நீங்க எப்படி?''

''அந்த அளவு இல்லை என்றாலும் நானும் என் கணவர் மேலே அன்பாக இருக்க முயற்சி செய்வேன்

பாரதி. நீ பிரதோஷ கதையை முழுசா கேளு'' என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தார்.

''விஷம் தோன்றியது. துவாதசி திதி அன்று. அடுத்த நாள் திரயோதசி திதி அன்று அமிர்தம் தோன்றியது. அதைக் கொண்டாட தேவர்கள் பாட்டுப் பாடி நடனமாடி சிவபெருமானுக்கு நன்றி சொன்னார்களாம். அந்த சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்ள, அன்று சிவன் பார்வதி இருவருமே, அந்த மாலை நாலரை முதல் ஏழு மணி வரையிலான காலத்தில் சந்தோஷமாக மன நிறைவுடன் ஆனந்த தாண்டவம் ஆடுவதாகவும், அந்த நேரத்தில் பக்தர்களின் கோரிக்கைகளுக்கு எல்லாம் செவி சாய்ப்பதாகவும் ஐதீகம்'' என்று முடித்தார்.

''இந்த காக்கா பிடிக்கிறது. ஐஸ் வைக்கிறது எல்லாம் புராண காலத்திலேயே இருக்கு. ஒன்றும் புதுசு இல்லை என்று சொல்றீங்க. அதானே விஷயம்?'' என்று சிரிப்புடன் பாரதி கேட்கப் புரியாமல் விழித்தார் பாக்கியம்.

''என்னம்மா இப்படி முழிக்கறீங்க? கொஞ்ச நேரம் முன்பு தானே சிவன் பார்வதி ஆனந்த தாண்டவம் ஆடும் பிரதோஷ காலத்தில் என்ன வேண்டுதல் வைத்தாலும் பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவாங்க என்று சொன்னீங்களே?''

''ஓ! அதுவா. இதுக்கு இப்படி ஒரு விளக்கம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை தாயே'' என்று சலித்துக் கொள்ள பாரதி சிரித்தாள்.

''சரி. பிரதோஷ மகிமை பற்றித் தெரிந்து கொண்டு விட்டேன். நீங்க சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லுங்க. என்னைக் குஷிப் படுத்தும் நோக்கத்தில் தானே



கார் ஓட்ட அனுமதி கொடுத்தீங்க இல்லை என்றால், டிரைவர் அங்கிள் இருக்கும்போது என்னைக் கூட்டிக் கொண்டு கோவிலுக்கு வருவீங்களாக்கும்?'' என்று நேரடித் தாக்குதலை நடத்த, ஒரு கணம் அசந்து நின்ற பாக்கியம் மறுகணம் பாரதியின் புத்திசாலித்தனத்தை நினைத்து மகிழவே செய்தார்.

''அப்பா என்னைப் பார்க்க கல்லூரிக்கு வந்தாங்க என்று நினைத்தேன். அவங்க ப்ரண்ட் ஆனிவர்சரி என்று ஹோட்டலுக்கு அழைத்துப் போய் அங்கே கல்யாணம் பற்றிப் பேசுறாங்க. நீங்க சொல்லாமல் அப்பா பேசி இருப்பாங்க, என்று நான் நம்பத் தயாரா இல்லை. அங்கிள் ஒரு பக்கம், நீ யாரையாது லவ் பண்ணுகிறாயா என்று கேட்டுத் துளைச்சாங்க. அடுத்து நீங்க என்னைக் கோவிலுக்குக் கடத்திக் கொண்டு வந்து புராணக் கதை சொல்லிக் கொண்டு இருக்கீங்க. என்னம்மா நடக்குது?'' என்று பொரிய அவர் புன்னகை செய்தார்.

''வயசு பெண்ணை வீட்டுல வச்சு எத்தனை நாள் அழகு பார்க்க முடியும்? காலாகாலத்தில் நடக்க வேண்டியது நடக்க வேண்டாமா?'' என்று அவளின் முகத்தைப் பார்த்தபடி கேட்டார் பாக்கியம். பேசும்போது உணர்ச்சிகளின் பிரளயம் என்ற அளவில் எதுவும் இல்லை. சாதாரணமாகத்தான் பேசுகிறாள்.

''நான் ரெண்டு வருஷம் கழிச்சு தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன். என்னைத் தொந்தரவு பண்ணாதீங்க'' என்றவளின் கண்களில் இக்கட்டான சூழலில் உதவி செய்த அவன் வந்து போனான்.

''டாக்சி டிரைவரா இருந்தாலும் கம்பீரமா இருந்தான். பேச்சு தெளிவான சிந்தனையுடன் இருந்தது. கூட சமூக அக்கறை வேறு! ஆரம்பத்தில் வேறு வேலை இருப்பதை எண்ணித் தயங்கினாலும், உதவ முன் வந்தானே? அதிலும் கூடுதலாகக் கொடுத்த பணத்தை அவன் திருப்பித் தந்த அழகு?

நீங்க தான் முதல் சவாரி என்று சொன்னானே? தன்னை அவன் வாழ்வில் மறக்கவே மாட்டான் அல்லவா? அவன் பேச்சில் இழையோடிய நகைச்சுவை முதலில் எரிச்சல் ஏற்படுத்தினாலும் அவன் மனசில் கள்ளம் இல்லை என்பதை உணர்ந்த பிறகு இதமாகவே இருந்தது என்ற ரீதியில் அவளின் சிந்தனை ஓடிக் கொண்டு இருக்க அம்மாவின் குரல் இடையிட்டது.

''மேலே என்ன பண்ணப் போகிறாய் என்று கேட்டுட்டே இருக்கேன். நீ பதில் சொல்லாமல் எங்கே பார்த்துக் கொண்டு இருக்கிறாய்? என்ன விஷயம்?''

''அதான் யோசித்துக் கொண்டு இருந்தேன். நான் ஒரு கார்மெண்ட் பேக்டரி வைக்கணும். என்னிடம் அப்பா சரக்கு வாங்கணும். அதான் என் லட்சியமே!''

''ரொம்ப நல்ல இலக்கு. ஆனால் அதுக்காக கல்யாணத்தை தள்ளிப் போட வேண்டிய அவசியம் இல்லை. நான் பார்த்து வைத்து இருக்கும் மாப்பிள்ளையைக் கல்யாணம் செய்து கொண்டால் உன் லட்சியம் உடனேயே நிறைவேறும்.''



''ஜீ பூம்பா!'' என்று மந்திரக்கோலை அசைத்தால் அடுத்த வினாடி எல்லாம் கண் முன்னால் வந்து நிற்குமா?''

''நிற்கும்! நான் சொல்வதை நீ கேட்டால் எல்லாமே உன் கண் முன்னால் உடனே வந்து நிற்கும்'' என்று பிரமாதமாக கண்களை விரித்து அதிசயம் போல பாவனையுடன் பாக்கியம் சொல்ல அவள் சிரித்தாள்.

அந்த சிரிப்பு பாக்கியத்தின் மனதில் மேலும் நம்பிக்கையை வளர்த்தது. மகள் திருமணத்திற்குத் தயாராக இருக்கிறாள். தள்ளிப் போட நினைக்கிறாள் என்ற எண்ணம் வந்தது.

''நீ நல்லா இருக்கணும் என்ற அக்கறை எங்களுக்கு மட்டும் இருக்காதா பாரதி? நீ நல்லபடியா படிப்பை முடித்துவிட்டு வரட்டும். உனக்கு முன்னாடியே டென்ஷன் ஏற்ற வேண்டாம் என்று தான் சொல்லவில்லை. மற்றபடி ஏற்கனவே ஜாதகம் பார்த்து பொருந்திய வரன்களில், குடும்பம், தோற்றம், வசதி வாய்ப்பு, பார்த்து நாலு வரன் எடுத்து வைச்சு இருக்கேன். அதுல ஒன்றை பார்த்து செலக்ட் பண்ண வேண்டியது தான். உன் வேலை'' என்று தீர்மானமாகச் சொல்ல கோபத்தை அடக்கியபடி காரை ஓட்டி கோவிலின் பின்புறம் இருந்த மண்டபத்தில் நிறுத்தினாள்.

''நீங்க போய்ட்டு வாங்க. நான் இங்கேயே இருக்கிறேன்'' என்று சொல்ல பாக்கியம் முறைத்தார்.

"நான் கோவிலுக்குப் போவதே, உன் கல்யாணம் நல்லபடியாக நடக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ள தான். அதற்கு கூட நீ வரமாட்டாயா?"

"எப்போதும் தங்களுக்கு தானே வேண்டிக் கொள்வதை விட, அடுத்தவருக்கு ஒன்று வேண்டும் என்ற வேண்டுதலை முன் வைக்கும்போது, ஆண்டவன் மனம் இறங்கி வரம் கொடுக்கும் வாய்ப்பு நிறைய உண்டு. அதனால் நீங்களே வேண்டிக்கோங்க" என்று சொல்லிவிட்டு காரில் சாய்ந்து நின்றாள் பாரதி.

"எப்போதில் இருந்து நீ நாத்திகவாதி ஆனாய் பாரதி?"

"சாமி மேலே நம்பிக்கை இல்லாமல் இல்லை. ஆனால் இப்ப உள்ளே வரும் மூட் இல்லை. நீங்க போங்க. சிவபெருமானிடம் உங்க பிரார்த்தனையை வைங்க. உங்க வேண்டுதலை நிறைவேற்றலாம் என்று அவர் நினைத்து விட்டால், அவர் என்னை உள்ளே கயிறு கட்டி இழுக்கட்டும்" என்று சின்ன கோபம் வெளிப்படும் வகையில் பேசி விட்டு காரில் சாய்ந்தபடி, அந்த தெருவில் பூஜை சாமான்களை விற்றுக் கொண்டு இருந்த ஆட்களை வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்தாள் பாரதி.

தான் சொல்லும் வார்த்தைகளுக்கு தேவதைகள் 'ததாஸ்து' சொல்கிறார்கள் என்பதையோ, அடுத்த சில நிமிடங்களில் தான் கோவிலின் உள்ளே இருப்போம் என்பதையோ அவள் அந்த நேரம் உணரவில்லை.



# 8

"அக்கா, வில்வ மாலை வாங்கிக்கக்கா, அர்ச்சனை தட்டு வாங்கிக்கோங்க அக்கா, பூமாலை ரோஜாப்பூ மாலை 150 ரூபாய் தான் அக்கா" என்ற விதம் விதமான குரல்களின் நடுவே நீந்தி சென்று கொண்டு இருந்த பக்தர்களின் கூட்டத்தையும், பொருட்களை விற்பவர்களின் சாமர்த்தியத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தவளின் பார்வை இலக்கில்லாமல் நகர்ந்தது.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு கால் வலிப்பது போலத் தோன்ற காரை திறந்து உள்ளே உட்காரலாம் என்று முடிவு பண்ணி காரக் கதவைத் திறந்தபோது, தன் காரில் இருந்து ஐந்தாவதாக நிறுத்தப்பட்டு இருந்த வெண்ணிற இண்டிகா டாக்சியில் பார்வை பதிந்தது.

இங்கே இருந்து பார்க்கும்போது பதிவு எண் தெரியவில்லை. மீண்டும் கார் கதவைப் பூட்டி சாவியை வெளியே எடுத்தவள், அந்த காரை நோக்கி நகர்ந்தாள். பதிவு எண்ணைப் பார்த்ததும் முகம் மலர்ந்தது. அதே வண்டிதான்.

இப்போது முன்னாடி குறுக்கே ஓடிய சிவப்பு ரிப்பன் மட்டும் இல்லாமல், இரண்டு மாலைகள் வேறு அலங்காரம் செய்து கொண்டு இருந்தது. அந்த மருதமலை

முருகன் பற்றிய போட்டோ, பதிவு எண் நினைவில் இல்லையோ என்ற சந்தேகத்திற்கு வழி இல்லாமல் செய்தது.

வண்டியில் யாரும் இல்லை. அவன் உள்ளே போய் இருப்பான் என்ற சந்தேகம் வந்த உடனே அவளின் கால்கள் கோவிலின் உள்ளே நடக்கத் துவங்க, இதழ் களில் புன்னகை மலர்ந்தது.

அட! அம்மாவின் கோரிக்கை சிவபெருமானைச் சென்று அடைந்துவிட்டது போல? சிரிப்பு பொங்கியது. உள்ளே அவனைப் பார்க்கலாம் என்ற ஆசை உந்த கோவி லுக்கு உள்ளே வந்து நந்தி பகவானுக்கு அபிஷேகம் நடக்கும் இடத்தைத் தேடி வந்து அம்மாவின் அருகே அமர பாக்கியத்தின் இதழ்களில் புன்னகை பெரிதாக வந்தது.

''அட இங்கே பாருடா, மருந்தீசுவரர் நிஜமாவே என் பெண்ணை கயிறு கட்டி இழுத்து வந்து விட்டாரே?'' என்று பாக்கியம் சிரிக்க அவளும் ஆமோதிப்பாக தலை அசைத்தாள்.

''நான் இப்போதான் நந்தீஸ்வரர் காதில் என் பெண் கல்யாணம் நல்லபடியா நடக்கணும் என்று சொல்லிட்டு வந்தேன். அடுத்த நிமிடம் நீ இங்கே இருக்கிறாய் மனசெல்லாம் நிறைஞ்சு இருக்கு பாரதி. இந்த வரன் தான் உனக்கு என்று ஆண்டவன் எழுதி வச்சு இருக்கான் பாரதி'' என்று நெகிழ்ச்சியுடன் சொல்ல அவள் தடு மாற்றத்துடன் அம்மாவைப் பார்த்தாள்.



''உங்களுக்கு இந்த பையனை ரொம்பப் பிடிச்சு இருக்காம்மா?''

''எனக்கு மட்டும் இல்லை பாரதி. உங்க அப்பாவுக்கும் பிடிச்சு இருக்கு. நீயும் பார்த்துப் பேசி பாரு. உனக்கும் கட்டாயம் பிடிக்கும்'' என்று சொல்ல அவள் உச்சு கொட்டினாள்.

திருமணம் பற்றிய பேச்சை மகள் ரசிக்கவில்லை என்று உணர்ந்ததுமே, கோவிலுக்குள் வாக்குவாதம் வேண்டாம் என்பது ஒன்று. கோவிலில் இறைவனின் புகழை மட்டுமே பாட வேண்டும் என்ற இரண்டு காரணங்களும் சேர்ந்து கொள்ள, பாக்கியம் பேச்சை மாற்ற முயன்றார்.

''உனக்குத் தெரியுமா? இந்த கோவில் ரொம்பப் பிரசித்தி பெற்றது. அகஸ்திய முனிவருக்கு மருத்துவ ரகசியங்களை சிவபெருமானே இங்கே சொல்லி அருளியதாக ஐதீகம். அத்துடன் வால்மீகி முனிவர் இங்கே வந்து சிவபெருமானை வணங்கி வரம் பெற்ற தாகவும் சொல்வாங்க.''

''தெரியும். சென்னையின் வரலாறு குறித்து படித்த போது, ஒவ்வொரு பகுதியின் பெயர் காரணம் குறித்த விளக்கம் படித்தேன். இந்த இடத்திற்கு பெயரே திரு வால்மிகியூர் என்றும், காலப்போக்கில் மருவி திருவான் மியூர் ஆகி விட்டதாகவும் சொல்வாங்க. இங்கே பக்கத்தில் வால்மீகிக்கே கோவில் இருக்கு'' என்று பாரதி விளக்கம் சொல்ல, பாக்கியம் வியப்படைந்தார்.

''உனக்கு துணி வடிவமைப்பு மட்டும்தான் தெரியும் என்று நினைத்தேன். கோவிலின் தல புராணம், பெயர் காரணம் கூடச் சொல்கிறாயே?''

''இதென்ன பெரிய விஷயம்? இன்னும் சொல்லட்டுமா? இந்தக் கோவிலில் காமதேனு தொடர்ந்து லிங்கத்திற்கு பால் அபிஷேகம் செய்வதாகவும், அதனால் லிங்கம் வெண்மை நிறத்தில் இருப்பதாக நம்பிக்கை இருக்கு. அதனால் அவரின் பெயரே பால் வண்ண நாதர்'' என்று மேலும் விளக்கம் சொல்ல பாக்கியத்தின் முகத்தில் இப்போது பெருமிதம் வந்தது.

''இந்தக் கோவிலைச் சுற்றிலும் ஐந்து தீர்த்தங்கள் இருக்கிறது ஜன்மநாசினி, காமநாசினி, பாபநாசினி, ஞானத்யானி, மோக்ஷத்யானி என்று ஐந்து தீர்த்தங்கள் இந்தக் கோவிலைச் சுற்றி இருக்கு. இந்த சிவபெருமானை பிரதோஷா காலத்தில் வழிபடுவது விசேஷம். விளக்கம் போதுமா? இன்னும் கொஞ்சம் வேண்டுமா?'' என்று பாரதி கேட்க பாக்கியம் மட்டும் இல்லாமல் கோவிலின் வெளி பிரகாரத்தில் அமர்ந்து இருந்த பலரும் பாராட்டினர்.

''உங்க பெண்ணுக்கு இவ்வளவு விஷயம் தெரிஞ்சு இருக்கே? இந்த மாதிரி ஒரு பிள்ளை கிடைக்கக் கொடுத்து வச்சு இருக்க வேண்டாமோ?'' என்ற பாராட்டுமடல் காதில் விழுந்து பாக்கியத்தையும் பாரதியையும் குளிர வைத்தது. கோவிலில் இருந்து வரும் போது, 'பாண்டியனை', சந்திக்க முடியவில்லை என்ற ஏமாற்றம் அடி மனசில் ஒளிந்து இருக்க, மீண்டும் ஒரு முறை அம்மாவிடம் திருமணம் இப்போதைக்கு வேண்டாம் என்ற பேச்சை ஆரம்பிக்க முயன்றாள் பாரதி.



''முதலில் வரமாட்டேன் என்று பிடிவாதமாக வெளியே நின்ற நீ ஏன் உள்ளே வந்தாய் பாரதி? இந்த வரன் தான் உனக்கு ஏற்றவன் என்று இறைவன் காட்டிய சகுனம் என்று நான் சொல்கிறேன்.''

''நான் உள்ளே வந்ததுதான் திருமணம் பற்றிய உங்களின் சகுனம் என்றால் நீங்கள் யாரை வேண்டுமானாலும் வரச் சொல்லுங்க. ஆனால் எனக்குப் பிடித்த மாப்பிள்ளையைதான் கல்யாணம் செய்து கொள்ள முடியும். உங்களுக்குப் பிடித்து இருக்கிறது என்பதற்காக ஒருவனை திருமணம் செய்து கொள்ள முடியாது'' என்று உறுதியுடன் பாரதி சொன்னபோது அவளின் மனத்தில் 'பாண்டியன் என்ற பெயரில் புகழேந்தியின் உருவம்' அமர்ந்து இருந்தது.

''அம்மா, எனக்கு தொழில் பண்ணனும். முதலில் ஒரு பொட்டிக் வைக்கணும். அப்புறம் அப்பா கடைக்கு நான் ஆடைகள் சப்ளை பண்ணனும்.''

''அப்ப வேலூரில் கார்மெண்ட் பேக்டரி வைச்சு இருக்க மாப்பிள்ளை செலக்ட் பண்ணி வச்சு இருக்கேன். அவரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அடுத்த கொள்முதலே அப்பாவை உங்க பேக்டரியில் பண்ணச் சொல்லி விடுகிறேன்.''

''நான் என்ன சொல்கிறேன்? நீங்க என்ன சொல நீங்க? நானே முயற்சி பண்ணி ஆரம்பத்தில் இருந்து என்னுடைய முயற்சியால் தொழிலை வளர்க்கணும்'' என்று கோபத்தோடு பாரதி சொன்னாலும் பாக்கியத்தின் புன்னகை மாறவில்லை. மகள் தொழிலை பற்றி தான் பேசுகிறாள். திருமணத்தை மறுக்கவில்லை!

''நீ கல்யாணம் பண்ணி உன் புருஷென் வீட்டுல போய் என்ன வேண்டுமானாலும் செய்து கொள். வேண்டாம் என்று சொல்லலை.''

''இருபது வருஷம் பெற்று வளர்த்த பெற்றோர்கள் புரிந்து கொள்ள மாட்டாங்க. எங்கேயோ பிறந்து, வேறே சூழ்நிலையில் வளர்ந்து என்னுடைய விருப்பு வெறுப்பு களை பற்றிய எந்த விபரமும் தெரியாமல், ரெண்டு நிமிஷம் பார்த்து, இருபது நாளில் கல்யாணம் பண்ணி கொண்ட கணவன், என்னைப் புரிந்து கொள்ளணும் என்று எதிர்பார்ப்பது உங்களுக்கே ஓவரா தெரியலை'' என்று கேட்ட பாரதியின் கோபம் அடங்குவதாக இல்லை.

ஹோட்டலில் கல்யாணப் பேச்சை ஆரம்பித்தபோதே அவளுக்கு எரிச்சல் வந்தது. பொது இடம் என்பதால் அதை வெளிக்காட்ட முடியவில்லை. இப்போது அம்மா அதே பேச்சைத் தொடரவும், தன் கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்ல அவள் தயங்கவில்லை. அம்மா எப்போதுமே கட் அண்ட் ரைட்டாகப் பேசுவார். அப்பா நமக்கு சாதகமாகப் பேசக் கூடும் என்ற எண்ணத் தில் ஓய்வாக அவர் இருந்த பின்னிரவு நேரத்தில் அவரிடம் வந்தாள்.

''அப்பா, இப்ப எனக்குக் கல்யாணம் வேண்டாம்பா. நான் சொந்தமா தொழில் செய்ய நினைக்கிறேன்பா'' என்று பேச்சை ஆரம்பித்தாள்.

''பொட்டிக் வைக்கப் போகிறாய் என்று அம்மா சொன் னாள். என்னடா அப்பா கடைக்குப் போட்டியா பாரதி? அப்பா பாவமில்லை?'' என்று சிரித்தார்.



''உங்க கடை கஸ்டமர் வேறே. என் கடைக்கு வரக் கூடிய கஸ்டமர் வேறே. ஒன்றுமே தெரியாத மாதிரி பேசக்கூடாது. நான் சொந்தக் காலில் நிற்க ஆசைப் படுகிறேன்பா. ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க.''

''அட! என்னம்மா? நீ இப்பவும் உன் சொந்தக் காலில் தானே நிற்கிறாய்? வாடகைக்கு வேறு யார் காலையாவது எடுத்து இருக்கிறாயா? எனக்குத் தெரியாதே! நீ சொல்லவே இல்லை. இது முன்னாடியே தெரிந்து இருந்தால், நிறைய நேரம் பயணம் செய்யும்போது, நீட்டி மடக்க முடியாமல் அவஸ்தைப் படும் என் காலை கழட்டி வச்சுட்டு வாடகை கால் எடுத்து இருப்பேனே?'' என்று கேலிப் பேச்சுடன் முடித்துவிட அவளுக்கு வேறு வழி இன்றிப் போனது.

அம்மா கடுமையாகப் பேசி, முகத்தைச் சுளித்து முடியாது என்று சொன்னால், அப்பாவின் செல்ல பெண் என்பதால் அவர் 'முடியாது' என்ற அதே வார்த்தையை சர்க்கரை தடவி சிரிப்போடு சொன்னார்.

மாப்பிள்ளையின் அருமை பெருமை என்று தாங்கள் கருதிய விஷயங்களை பாக்கியமும், ராஜேந்திரனும் மாறி மாறி எடுத்துச் சொல்ல பாரதி ஒவ்வொன்றுக்கும் பதில் வைத்து இருந்தாள்.

''ஒரே பையன்'' என்பதை ஒரு விசேஷமாக அவ ளிடம் சொன்னால், ''நான் கேட்டேனா?'' என்று அம்மா விடம் எரிந்து விழுந்தாள்.

''நானும் ஒரே பெண், அவனும் ஒரே பையன் குழந்தைகளுக்கு பெரியப்பா, சித்தி, அத்தை இந்த

மாதிரி உறவு முறைகள் எப்படி தெரியும்?'' என்று எரிச்சல் பட்டாள்.

''நல்லா படிச்சு இருக்கான். நல்ல வேலையில் இருக்கான்'' என்று பேச்சை ஆரம்பித்தால், ''படித்தால் மட்டும் போதுமா? நல்ல பழக்க வழக்கங்கள் வேண்டாமா?'' என்று வழக்கடித்தாள்.

''பக்கத்திலேயே இருக்கிறான். அவசரம் என்றால் நான் ஓடி வந்து பார்க்க வசதியா இருக்குமே'' என்று அக்கறையோடு சொன்னால், ''நான் கல்யாணம் ஆகிப் போனாலும் அங்கேயும் வந்து உங்க அரசாங்கத்தை நாட்டுவீங்களா?'' என்று சண்டைக்கு நின்றாள்.

பொறுமையான விளக்கங்களை கைவிட்டு, ''கடைசியா நீ என்னதான்டி சொல்ற?'' என்று அதட்டலாகக் கேட்க அவள் திருவிழாவில் தொலைந்து போன குழந்தை மாதிரி விழித்தாள்.

''என்ன சொல்வது? கால் டாக்சி டிரைவரை லவ் பண்ணுகிறேன் என்றா? முதலில் அந்த ஈர்ப்பு நிஜம் தானா?''

''கொஞ்சம் டைம் கொடுக்கக் கூடாதா அம்மா...?'' என்று இறங்கிய குரலில் கேட்க அவருக்கு ஒரு மாதிரி ஆனது.

''சரி மனசை போட்டுக் குழப்பிக்காதே பாரதி. மாப்பிள்ளை வீட்டுல நாளைக்கு வரச் சொல்லி இருக்கிறேன். முதலில் கல்யாணம் என்ற பேச்சை ஆரம்பிக்கும்போதே வரச் சொன்ன இடம். வந்து பார்த்து விட்டுப் போகட்டும் பாரதி. நீ பாரு. பேசு. உனக்கு மாப்பிள்



ளையைப் பிடிக்கவில்லை என்றால் உன்னைக் கட்டாயப்படுத்த மாட்டேன்'' என்று இதமாக முடித்தார் பாக்கியம்.

''சரிம்மா. ஆனால் எனக்குப் பிடித்து இருந்தால் தான் திருமண ஏற்பாடுகளை தொடர்வேன் என்ற இந்த வார்த்தையை நீங்க மறந்து விடக்கூடாது அவங்க வந்து போன பிறகு என்னை மூளை சலவை செய்யக் கூடாது. இப்பவே சொல்லிட்டேன்'' என்ற நிபந்தனையுடன் அதற்கு மேல் என்ன காரணம் சொல்லி மறுப்பது என்று புரியாமல், சம்மதம் சொன்னாள்.

''அதே மாதிரி நானும் சொல்லி விடுகிறேன். பிடித்தாலும் பிடிக்கவில்லை என்றாலும், நீ உன் மனசில் என்ன நினைக்கிறாய் என்பதை நேரடியா தெளிவா சொல்லி விடணும். மனசுக்குள் வச்சு மறுக்கக் கூடாது ஓகே?'' என்று அனுசரணையாகக் கேட்க அவளும் சந்தோஷமாகத் தலை அசைத்தாள்.

அம்மாவும் பெண்ணும் பேசிய உரையாடலை ஹாலில் இருந்த வண்ணம் கேட்டு கொண்டு இருந்த ராஜேந்திரனின் மனத்தில் மகள் இயல்பான வாழ்க்கைக்குத் தயாராகிறாள் என்ற நம்பிக்கை தோன்றியது.

அந்த நம்பிக்கையில், புகழேந்தி பாரதியைப் பார்க்க தங்களின் வீட்டிற்கு வருவதற்கு முன்பே, அவனின் கடந்த காலம் அவனுக்கு சொல்லிவிட வேண்டும் என்ற எண்ணத்துடன், மறுநாள் பிற்பகல் இரண்டு மணி அளவில் அவன் அறைக்கு வெளியே இருந்த பணியாளரிடம் தன் அடையாள அட்டையைக் கொடுத்து சந்திக்க அனுமதி வேண்டி நின்றார் ராஜேந்திரன்.

# 9

'ராஜேந்திரன் டெக்ஸ்டைல்ஸ் கடையின் உரிமையாளர், ராஜேந்திரன் உங்களை சந்திக்க வந்து இருக்கிறார்' என்று சொன்ன அந்த அடையாள அட்டையைப் பார்த்தபோது புகழேந்திக்கு வித்தியாசமாகத் தெரியவில்லை.

தொழில் செய்யும் ஒருவர் வங்கி மேலாளரைத் தேடி வர எத்தனையோ காரணம் இருக்கலாம். அவரது கணக்கு இங்கே இருக்கலாம். அதில் ஏதாவது விசாரிக்க வந்து இருக்கலாம். புதிதாக விரிவாக்கம் செய்ய தேவையான கடன் உதவி பெற வந்து இருக்கலாம் என்ற எண்ணத்துடன் வரச் சொன்னவன் சாதாரணமான புன்னகையுடன் வரவேற்றான்.

''சொல்லுங்க ஸார்.''

''சாரி மிஸ்டர் புகழேந்தி நான் உங்களிடம் முன் அனுமதி கேட்டு கொண்டு வந்து இருக்க வேண்டும். ஆனால் உங்களிடம் பேச வேண்டிய விஷயத்தை தள்ளிப் போட மனம் இல்லை. நீங்க நாளைக்கு உங்க அம்மாவுடன் வீட்டுக்கு வருவதாக பாக்கியம் சொன்னாள். அதனால் தான் உடனே கிளம்பி வந்து விட்டேன். முன் அனுமதி இன்றி திடீர் என்று உங்களைத் தொந்தரவு செய்வதற்கு மன்னித்துக் கொள்ளுங்க. உங்களிடம்



கொஞ்ச நேரம் தனியாகப் பேச வேண்டும். மதிய உணவு நேரம் முடிவதற்குள் திரும்பி வந்து விடலாம். இப்ப உங்களால் வர முடியுமா?'' என்று கோரிக்கை வைத்தார்.

முதலில் அவர் என்ன பேசுகிறார் என்றே புரியாமல் விழித்தவன் சில வினாடிகளிலேயே உணர்ந்தான். இவர் பாரதியின் அப்பா. மை காட்! பாரதியின் பெயர் பதிந்த அளவிற்கு அவளின் அப்பா பெயர் மனசில் பதியவில்லையே? நல்லவேளை யார் நீங்க, நீங்க ஏன் அலுவலக நேரத்தில் என்னுடன் தனியாகப் பேச வேண்டும் என்று கேட்காமல் போனான்!

''சாரி ஸார், நான் உங்களை இதற்கு முன்பு பார்த்ததில்லையா? அதனால் அடையாளம் தெரியவில்லை. பாரதியின் அப்பா என்று இப்ப தான் புரிந்து கொண்டேன். சாரி, என்ன சாப்பிடுறீங்க?'' என்று புன்னகையுடன் உபசரிக்க, அவருக்கும் நிம்மதிப் பெருமூச்சு வந்தது. மனத்தில் ஒரு சந்தோஷ மின்னல் கூட வந்தது.

இவனுக்கு பாரதியைப் பிடித்து இருக்கு. தன்னை பாரதியின் தந்தை என்று தான் அடையாளம் காண்கிறான்! இவன் தன் தொழிலையோ, அதன் வருமானத்தையோ கணக்கில் எடுத்துக் கொள்ளவே இல்லை. அதனால் தான் தன் அடையாள அட்டையையும் பெயரையும் இனம் காண முடியவில்லை. இவன் மகளை நன்றாக வைத்துக் கொள்வான் என்ற திருப்தி வந்தது.

''இங்கே எதுவும் வேண்டாம். நாம் பக்கத்தில் எங்கேயாவது ரெஸ்டாரண்டில் போய் சாப்பிட்டுக் கொண்டே பேசலாமே?'' என்று கேட்க அவனுக்கு உள்ளுக்குள்

பயம் சூண்டது. பாரதிக்கு தன்னைப் பிடிக்கவில் லையோ?

சே! அப்படி இருக்காது. அப்படி இருந்தால் தன்னைத் தேடி வந்து சொல்ல வேண்டிய அவசியம் என்ன? போகிற போக்கில் தரகர் மூலமாகவோ, ஒரு போன் அழைப்பிலோ சொல்லி இருப்பார். இது வேறு விஷயம். என்னவாக இருக்கும்?

இதயத் துடிப்பு கூடுவதை அவனால் உணர முடிந்தது. அவன் பதில் சொல்லாமல் யோசனையில் இருப்பதைப் பார்த்த ராஜேந்திரன் அவனுக்கு தன்னுடன் வர இஷ்டம் இல்லையோ என்று நினைத்தார்.

''மிஸ்டர் புகழேந்தி, உங்களுக்கு இந்த டைம் சரிப் படாதா? ஏதாவது அவசரமான வேலை இருக்கா? இன்று மாலை சந்திக்கலாமா?'' என்று வருத்தத்துடன் கேட்க அவன் எழுந்தான்.

''இல்லை, என்ன வேலை நிலுவையில் இருக்கு. யாரிடம் சொல்ல வேண்டும் என்று சில நிமிடங்கள் யோசித்தேன். அவ்வளவு தான். போகலாம் வாங்க.''

உயர்தர உணவகத்தில், உண்டேன் என்று பேர் பண்ணியபடி, பதட்டத்தை மறைத்து பேச்சை ஆரம்பித் தார்.

''புகழ்! இதை எப்படி உங்களிடம் சொல்வது என்று தயக்கமாக இருக்கு. ஆனால் சொல்லியே ஆக வேண் டும் என்ற உறுதியும் இருக்கு. இது பாரதியின் கடந்த கால வாழ்க்கையின் ஒரு பகுதி'' என்ற பீடிகையுடன் பேச்சை ஆரம்பிக்க புகழேந்தி அவரையே பார்த்தான்.



முகத்தில் புன்னகை சிறியதாகி, அந்த இடத்தில் யோசனை ஆக்கிரமித்தது.

''சொல்லுங்க.''

''பாரதிக்கு முதலில் அரசாங்கம் ஒதுக்கீட்டில் கோவை பீ.எஸ்.ஜி. கல்லூரியில் தான் படிக்க இடம் கிடைத்தது'' என்று சொன்னதும் நிமிர்ந்து அமர்ந்தான். தன்னை முதன் முறை பார்த்தபோது, அவள், 'நீங்க கோவையா?' என்று கேட்டது நினைவில் வந்தது.

''ஓ! நல்ல காலேஜ் தானே?'' ஏன் அங்கே படிக் கலை?''

''முதலாம் வருடம் ஹாஸ்டலில் தங்கி அங்கே படித் தாள். அங்கேதான். அப்போ வீட்டை விட்டு தனியாக இருந்ததால்... கேள்வி கேட்கத் தடை போட ஆள் இல் லாமல்...'' அவர் வார்த்தைகளுக்கு தடுமாறிக் கொண்டு இருக்க அவன் வியப்புடன் பார்த்தான்.

''பாரதிக்கு அங்கே ஏதாவது லவ் அஃபேர் இருந்ததா அங்கிள்?'' என்று நேரடியாகக் கேட்டதில் அவருக்கு சந்தோஷமும் வருத்தமும் சேர்ந்தே வந்தது.

அதுவரை சொன்ன சாரில் இருந்து அங்கிளுக்கு மாறியது சந்தோஷத்தைக் கொடுத்தாலும், இப்படி நேரிடையாக பாரதி வேறு ஒருவனைக் காதலித்தாளா என்று கேட்கும் நிலை வந்து விட்டதே என்ற வருத் தமும் வந்தது.

''என்ன சொல்ல நினைக்கறீங்களோ அதை தைரிய மாகச் சொல்லுங்க. அந்தக் காலத்தில் காதல் திரு மணங்கள் கம்மியா இருந்ததற்குக் காரணம் பெண்கள்

அதிகம் வெளியே போய் வர வாய்ப்பு இல்லை. ஆனால் இப்ப காலம் மாறி விட்டது. மேலும் காதல் தப்பு என்றும் சொல்லிவிட முடியாது.''

''காலேஜில் படிக்கும் நிறைய பேரை பற்றி எங்களுடன் நிறைய விஷயம் பகிர்ந்து கொள்வாள். அதில் அடிக்கடி வரும் பெயர்கள் சிவாவும் வானதியும்.''

''ம்ம்ம், அவர்கள் இருவரும் பாரதியுடன் படித்தவர்களா?''

''வானதி இவளுடன் படித்தவள். சிவா இறுதி ஆண்டு மெக்கானிகல் என்ஜினியரிங்.''

''சிவா சீனியரா?'' என்றவன் குரலில் 'அவர்களின் பரஸ்பர ஈர்ப்பு சிறுபிள்ளை தனமானது' என்று சொல்ல வழி இல்லாமல் போனதால் வந்த பொறாமை இருந்தது.

''இவர்கள் மூவரும் இன்னும் சில மாணவ மாணவிகளுடன் சேர்ந்து அடிக்கடி வெளியே சாப்பிட, ஷாப்பிங், என்று போவார்கள். பாரதி வீட்டில் செல்லமாக வளர்ந்தவள் என்பதாலும் வேலை பற்றி எதுவுமே தெரியாது என்பதாலும், கடைகளில் வாங்க வேண்டிய பொருட்களை சிவாவும், ஹாஸ்டலில் தேவையான உதவிகளை வானதியும் செய்வதால், ரொம்ப சந்தோஷமாக இருப்பதாகச் சொல்லி இருக்கிறாள்'' என்று பெருமூச்சினை வெளியேற்றினார்.

''அந்த சிவா தான் நீங்க சொன்ன...?'' என்று கேட்க அவர் மௌனமாகத் தலை அசைத்தார். அவரால் தொடர்ந்து பேச முடியவில்லை.

''ஓ! அப்புறம் என்ன ஆச்சு?''



''முதலாம் ஆண்டு தேர்வு நடப்பதற்கு முன்னாடி, இறுதி ஆண்டு மாணவர்கள் ஊட்டிக்கு சுற்றுலா சென்றார்கள். நானும் வானதியுடன் போகட்டுமா என்று பாரதி கேட்டாள். சம்மதம் சொன்னேன். வானதி ஏழமையான குடும்பத்தில் பிறந்தவள் என்பதால் வெளியே தெரியாமல் பாரதி செலவு பண்ணுவாள். இந்த சுற்றுலா பயணத்துக்கும் அவளுக்கும் பணம் அனுப்பினேன்'' என்று சொல்லும்போதே குரல் தழுதழுத்தது. கண்களில் கண்ணீரும் வர, அவன் பதறினான்.

''அங்கிள் ஏன் ஒரு மாதிரி ஆகிட்டீங்க? இப்ப அந்த பையன்..?'' என்று கேள்வியை முடிக்காமல் நிறுத்தினான். உயிரோடு இல்லையா என்று கேட்க முடியவில்லை. அதற்கு காரணம் மூன்று. யாராக இருந்தாலுமே, மரணம் என்பது வருந்தத் தக்க விஷயம். அடுத்தது அவனின் இள வயது. மூன்றாவது. அது தானாக நேர்ந்த இயற்கையான மரணம் இல்லையோ என்ற பயம்.

''அந்த சுற்றுலாவில், ஏரியில் படகுப் பயணம் மேற்கொண்டபோது, அவன் ஏரியில் விழுந்து மரணம் அடைந்து விட்டான். அதுவே பாரதிக்கு அதிர்ச்சி என்றால், அதைத் தொடர்ந்து நடைபெற்ற போலீஸ் விசாரணைகள், உடன் படிப்பவர்களின் கேள்விக் கணைகள், கல்லூரியில் அமைக்கப்பட்ட விசாரணை கமிட்டி என்று பல விதங்களில் அவளுக்கு மன உளைச்சல், அதற்கு பதில் சொல்ல முடியாமல் ஒய்ந்து போனாள். அவள் முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை. அங்கிருந்து அழைத்து வந்து விட்டேன். இங்கே தனியார் கல்லூரியில் சேர்த்து படிக்க

வைத்தேன். கூடவே மருத்துவ சிகிச்சையும் தொடர்ந்தது.

''படகு கவிழ்ந்து விபத்து மாதிரி நடந்து எல்லோருக்கும் அடிபட்டு விட்டதா?'' என்று பதட்டத்துடன் கேட்க அவர் மறுப்பாக தலை அசைத்தார்.

''பாரதி மயக்கம் போட்டு விழுந்ததில், தலை படகின் விளிம்பில் பட்டு சின்ன காயம்தான். ஆனால் மனம் ரணப்பட்டு இருந்தது. அதை ஆற்ற சைக்கோ தெரபி, கொடுத்தோம்.''

''ஓ! என்ன மாதிரி சிகிச்சை? யார் கொடுத்தாங்க?'' என்றவன் முகத்தில் இப்போது கவலை படிந்து இருந்தது.

''ஆழ்நிலை மனத்துடன் பேசி, கோவையில் அந்த ஓராண்டில் நடைபெற்ற நினைவுகளை மறக்க வைத்தோம். சில மருந்துகளும், எடுத்துக் கொண்டாள். ஒரு வருடம் தொடர்ந்து என் குடும்ப நல மருத்துவரின் கண்காணிப்பில் இருந்தாள். அதன் பிறகு நார்மலாகி விட்டாள்.''

''ம்ம்ம், நானும் படிச்சு இருக்கேன். ஹிப்னோதெரபி (Hypnotherapy) என்று சொல்வாங்க. புகை, குடி போதை மருந்துகளுக்கு அடிமையானவங்களை குணப் படுத்த, ஆழ்நிலை மனதில் சில எண்ணங்களை பதிய வைக்க, இந்த முறை பயன்படுத்தப்படும் என்று படித்து இருக்கிறேன். இப்போ பாரதியின் உடல்நிலையிலோ, மனநிலையிலோ முன்பு இருந்ததற்கும் இப்போதைக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா?'' என்று கவலையுடன் விசாரித்தான்.



(Hypnotherapy addresses such positive or negative memories. We heal by resolving the emotional charge attached to the past experiences. The moment these subconscious tendencies are healed, we set ourselves free of the past and can live completely in the present moment. We are then in touch with the most potent part of our being.)

''அப்படி எதுவும் இல்லை புகழ். இப்போதைக்கு அவளுக்கு அந்த ஓராண்டில் நடந்த நிகழ்வுகள் நினைவில் இருக்காது. அதனால் சில முறை வெளியிடங்களில் கோவையில் சந்தித்த நபர்களைச் சந்திக்க நேர்கையில் தடுமாறி இருக்கிறாள். அவர்கள் கோபத்துடன் சண்டையிட்டுச் சென்று இருக்கிறார்கள். அதில் அவளின் தோழி வானதியும் அடக்கம். பாரதியின் வாழ்க்கையில் கடந்த கால சம்பவம் உங்களுக்குத் தெரியாமல் இருக்கக் கூடாது என்று சொல்லி விட்டேன். இதற்காக பாரதியை...''

''என்ன மாமா நீங்க? அது ஒரு அன்பான துணையைக் கண்டதும் வந்த இயல்பான ஈர்ப்பு அது காதலாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அது காதலாகவே இருந்தாலும், அவன் உயிரோடு இல்லை என்ற போது அவளை அப்படியே தனியாக விட்டு விட முடியுமா? அது ஒரு நல்ல பெற்றோருக்கு அழகாகுமா? அவன் உயிரோடு இருந்து நல்லவனாகவும் இருக்கும் பட்சத்தில், அவனுக்கு திருமணம் செய்து கொடுக்க நினைக்கலாம். இப்ப அதற்கு வழி இல்லையே? அதனால் அதை மறந்து விடலாம் மாமா. என்னைப் பொருத்த வரை ஒரு சொல், ஒரு இல் தான். அது பாரதி தான். மேலே நடக்க வேண்டிய

காரியங்களைப் பாருங்க' என்று ஆதரவுடன் சொல்ல அவர் புகழேந்தியின் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டார்.

பேச்சு ஆரம்பிக்கும் போது சாராக இருந்தது நடுவில் அங்கிளாக மாறி, இப்போது மாமாவாக மாறிய மாயத்தை அவர் கவனித்தார். மனம் பெருமிதத்தில் விம்மியது. இந்த பையனை பெண் வேண்டாம் என்று சொல்லி விடக் கூடாதே என்ற பதட்டம் தோன்றியது.

''ரொம்ப சந்தோஷம் மாப்பிள்ளை. இதை உங்களிடம் சொல்ல வேண்டும் என்று மனசுக்குள்ளே போராடிக் கொண்டு இருந்தேன். நீங்க எப்படி எடுத்துக் கொள்வீர்களோ என்ற பயம் இருந்தது.''

''இந்தக் காலத்தில் இதெல்லாம் ஒரு விஷயமே இல்லை மாமா.''

''இல்லை புகழ். நான் அப்படி நினைக்கவில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பாரதியின் நிலை உங்களுக்குத் தெரியாது என்பதால் இப்படிப் பேசுறீங்க. கிட்டத்தட்ட ஒரு மாசம் அவள் சுயநினைவில் இல்லை புகழ். இந்த விஷயம் திருமணத்திற்குப் பிறகு வேறு யார் மூலமாவது உங்களுக்குத் தெரிய வந்து நீங்க பாரதியை தவறாக நினைக்கக் கூடாது என்பதற்காகத்தான் முன்னாடியே சொல்லி விட்டேன்'' என்று சொன்னவரின் குரலில் வருத்தம் இருந்தது.

''கடந்த மூன்று ஆண்டுகளில் வேறு ஏதாவது பாரதிக்கு உடல் நலத்தில் பிரச்னை வந்ததா?''

''இல்லை...''



''பிறகென்ன மாமா? தைரியமா இருங்க நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று நம்பிக்கை அளித்தான்.

''உங்களுக்குச் சந்தேகம் இருந்தால், என்னுடைய நண்பரும் குடும்ப மருத்துவருமான மோகனைப் பார்த்து விடலாமா?''

''திருமணப் பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்பு நீங்க பேசி இருப்பீங்க தானே?''

''ஆமா...''

''என்ன சொன்னார்?''

''இப்போதைய மனநிலையில் அவள் விரும்பி திருமணம் செய்தால் வேறு பிரச்னை வர வாய்ப்பில்லை என்று தான் சொன்னார்.''

''பாரதிக்கு என்னைப் பிடித்து இருக்கு தானே?''

''இன்னும் வெளிப்படையாகச் சம்மதம் என்று சொல்லவில்லை. சொந்தத் தொழில், லட்சியம் என்று பேசிக் கொண்டு இருக்கிறாள். உங்களை நேரில் பார்த்துப் பேசினால் மனம் மாறி விடுவாள் என்று நினைக்கிறேன்.''

''அவளின் லட்சியத்திற்கு துணை நிற்பது என் கடமை மாமா. நம்ம வீட்டிலேயே முன்னால் அவள் தனியாக தொழில் செய்ய வேண்டிய மாறுதல்கள் செய்து கொடுக்கிறேன். பண உதவி வேண்டுமானாலும் வங்கி மூலம் ஏற்பாடு செய்யலாம். அதை அவளிடம் நீங்க தாராளமாச் சொல்லலாம். நான் தான் மாப்பிள்ளை என்று பாரதிக்குத் தெரியுமா?''

''ம்ம்ம்...'' என்று முனகியவருக்கு உள்ளே குறுகுறுத்தது. இந்த நல்ல மனிதனை மகள் ஏற்றுக் கொள்ள வேண்டுமே என்ற எண்ணம் தோன்றியது.

"பிரச்சனை வரும் போது பார்த்துக் கொள்ளலாம் என்று இருப்பவன் நான். அப்படி நடக்குமா? இப்படி நடக்கா விட்டால்? என்று கற்பனையில் மூழ்குவதில்லை. கவலைப் பட ஆரம்பித்தால் அதற்கு முடிவே இருக்காது. கவலையை விட்டுட்டுக் கல்யாண வேலையை பாருங்க மாமா" என்று சொல்ல கொஞ்ச நஞ்சம் அடி மனதில் ஒளிந்து இருந்த பயம் விடைபெற்றுச் சென்றது.

## 10

புகழ் தன் அம்மாவுடன் பாரதியைப் பார்க்க வருவதாகச் சொல்லி இருந்த நாளின் காலை பொழுது புலரும் போதே, பாக்கியத்தின் சுப்ரபாதம் தொடங்கி விட்டது.

"பாரதி, இன்னிக்கு கடைக்குப் போகிறேன். படம் பார்க்கப் போகிறேன். லைப்ரரிக்கு போகிறேன் என்று ஊர் சுத்த கிளம்பி விடாதே!" என்று காலையில் ஆறரை மணிக்கு கையில் காபி கப்பைக் கொடுத்த போதே அம்மா ஆரம்பிக்க அவள் முறைத்தாள்.

"என்னைப் பார்த்தால் எப்படிம்மா இருக்கு? நம்ம கடைக்குப் போவதும், ஒரு நாள் பிரெண்ட்சோட சினிமாக்குப் போனதும், உங்க பாஷையில ஊர் சுத்துறதா? ஏம்மா இப்படி பேசறீங்க?"



"உன்னுடைய நல்லதுக்குதான் சொல்கிறேன். உன்னை ஒருத்தர் ஒரு வார்த்தை கை நீட்டி குத்தம் சொல்லிடக் கூடாதே என்ற பயம் எனக்கு தான் தெரியும். உனக்கென்ன எல்லாத்தையும் மறந்துட்டு..." என்று என்ன பேசுகிறோம் என்ற உணர்வே இல்லாமல், பேசிய பாக்கியத்தை, "வாயை மூடு..." என்ற ராஜேந்திரனின் அதட்டல் திகைக்க வைத்தது.

"தேவை இல்லாத விஷயத்தை இப்ப இழுக்காதே..." என்ற கணவனின் கடினமான குரல் பாக்கியத்தை மட்டும் இல்லாமல் பாரதியையும் திகைக்க வைத்தது.

"என்ன ஆச்சுப்பா? ஏன் இவ்வளவு கோபம்? நீங்க இவ்வளவு டென்ஷன் ஆகி நான் பார்த்ததே இல்லையே?" என்று கேட்ட பாரதியை வியப்புடன் பார்த்தார் பாக்கியம்.

"எப்ப பார்த்தாலும் உன்னை ஏதாவது சொல்லிக் கொண்டே இருக்கிறாள் இல்லையா? அதான்..." என்று சொன்னாலும் மனைவியை அவர் பார்த்த பார்வையில் எச்சரிக்கை இருந்தது. அந்தப் பார்வை பரிமாற்றத்தை அவளும் உணர்ந்தாள்.

ராஜேந்திரன். பாக்கியம் இருவருக்குமே வித்தியாசமான பாவனை தெரியவில்லை. இவளுக்கு நான் பேச வந்தது நிஜமாகவே புரியவில்லையா?

* * *

அன்று மாலை பெண் வீட்டுக்கு வருவதாக வாக்குக் கொடுத்து இருந்த பூரணி வழக்கம் போல குளித்து முடித்து எட்டரை மணிக்கு உணவுக்காக வந்து அமர்ந்த மகனை வியப்புடன் பார்த்தார்.

''மாலையில் பாரதி வீட்டுக்குப் போகணும் என்று சொன்னேனே? நினைவிருக்கா புகழ்? சாயங்காலம் சீக்கிரம் வந்து விடுவாயா?''

''சீக்கிரம் என்றால் எத்தனை மணிக்கு வரணும்?''

''நாலு மணிக்கு அவங்க வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்லி இருக்கிறேன். இங்கே இருந்து போக அரை மணி நேரம் ஆகும். ஒரு மூன்று மணிக்குள் வந்து விட்டால் நிம்மதியா இருக்கும்.''

''நாலு மணிக்கு அவங்க வீட்டுக்குப் போக பதினோரு மணிக்கு வந்து விட்டால் எப்படி இருக்கும்?'' என்ற கேள்வியில் திகைத்தார்.

''என்னடா சொல்ற? பேங்க் போகலையா?''

''நான் பேங்க் போகிறேன் என்று உங்களிடம் சொன்னேனா?'' என்று கண் சிமிட்ட அவரின் முகமும் மலர்ந்தது.

''ஆறுக்கு முன்னாடி குளிச்சு கிளம்பி எட்டரை மணிக்கே சாப்பிட உட்கார்ந்தால் நான் என்ன நினைப் பது?''

''சாயங்காலம் பாரதியைப் பார்க்கப் போவதால், காலை யில் சாப்பிடக் கூடாதா? இதென்னம்மா அநியாயமா இருக்கு?''

''டேய் நான் சாப்பிடுவதையா சொன்னேன்? வெளியே போகத் தயாரா வந்து இருப்பதனால் ஆபீஸ் போகிறாயோ என்று நினைத்தேன்.''

''வெளியே கிளம்பினால் பேங்க் தான் போகணுமா? வேற வேலை இருக்கு என்று நினைக்கலாம். பொண்ணு



வீட்டுக்குப் பழம் இனிப்பு வாங்கப் போகிறான் என்று நினைக்கலாம். இல்லை பெண் பார்க்கும் படலத்திற்கு புது உடை வாங்க மாப்பிள்ளை கிளம்பி விட்டார் என்று நினைக்கலாம். அதுக்கும் மேலே பொண்ணுக்கு பரிசு கொடுக்க ஏதாவது ஷாப்பிங் பண்ணப் போகிறான் என்று நினைக்கலாம். இப்படி எத்தனை 'லாம்'கள் இருக்கு தெரியுமா'' என்று சிரிப்புடன் கண் சிமிட்டி கேட்க புன்னகை செய்தார் பூரணி

''நீ பாரதியைப் பிடிச்சு இருக்கு என்று சொன்ன பிறகும் நான் அப்படிச் சொல்லி இருக்கக் கூடாது''

''அவளுக்கு சின்னதா கிப்ட் வங்கி இன்றே நிச்சயம் பண்ணி விடலாம் என்று நினைத்தேன். நீங்க வரீங் களா?''

''கல்யாணம் பண்ணிக்கப் போகும் பெண்ணுக்கு பரிசு வாங்க நான் எதுக்கு? நீ போய்ட்டு வா'' என்று ஒதுங்க புன்னகை செய்தான்.

மாலை மூன்றரை மணிக்கே கிளம்பும் போது, ''அம்மா புடவை எடுத்துக் கொண்டீங்களா? ஸ்வீட்? கிப்ட்...?'' என்று நூறு தடவை சரி பார்த்துவிட்டு, அம்மாவுடன் பாண்டியனின் வண்டியில் ஏறிய நேரம், அங்கே பாரதி யிடம் சூடான விவாதம் நடத்திக் கொண்டு இருந்தார் பாக்கியம்.

''என் பாரதி இப்படிச் சொல்லச் சொல்ல கேட்காமல் பிடிவாதம் பிடிக்கிறாய்? அம்மா சொல்வதற்காக ஒரு பட்டுப் புடவை கட்டிக் கொள்ளக் கூடாதா?''

''யார் பிடிவாதம் பிடிக்கிறா? நீங்களா? நானா? அவங்க சும்மா வந்து பார்த்துட்டுப் போகட்டும் என்று

சொன்னீங்க என்று உங்களுக்காக சம்மதம் சொன்னது நான். நான் தெரியாமல் தான் கேட்கிறேன். அவங்க என்னைப் பார்க்க வராங்களா? என் புடவையைப் பார்க்க வராங்களா?''

''நீ தெரியாமல் கேட்டாலும் நான் தெரிஞ்சே பதில் சொல்கிறேன். ஆள் பாதி ஆடை பாதி என்று கேட்டதில்லையா? எதுக்கு இப்ப விவாதம் பண்ணுகிறாய்?''

''அவங்க பாட்டுக்கு வந்து பார்த்துட்டுப் போகட்டும். உன்னை எதற்கும் கட்டாயப்படுத்த மாட்டேன் என்று நீங்க சொன்னதை நீங்களே மறந்துட்டு நீங்க தான் விவாதம் பண்ணிட்டு இருக்கீங்க? அதைச் செய், இதைச் செய், என்று நச்சரிக்கிறீங்க. சாதா புடவை கட்டினாலே நடக்கும்போது நாலடிக்கு ஒரு முறை புதையல் எடுக்கணும். இதுல பட்டுப் புடவை வேறேயா? சத்தியமா முடியாது'' என்று தீர்மானமாக மறுத்தாள்.

''அவங்களுக்காக இல்லை என்றாலும்...''

''அம்மா, வீட்டில் தினம் இருப்பது மாதிரி இயல்பான தோற்றத்தில் பார்ப்பதை விட்டு பட்டுப் புடவை கட்டி இருந்தால் தான் பெண்ணைப் பிடிக்கும் என்ற மாதிரி எண்ணம் அவங்க மனசில் இருந்தால், அவங்க எனக்கு வேண்டாம்'' என்று சண்டைக்கு நின்ற மகளிடம் தடுத்துப் பேச முற்பட்ட பாக்கியத்தை ராஜேந்திரன் நிறுத்தினார்.

''அவளைக் கட்டாயப்படுத்த வேண்டாம். இறைவன் என்ன எழுதி இருக்கிறானோ அது தான் நடக்கும். இந்த காலத்தில் யாரும் இதைப் பெரிசா சொல்ல மாட்டாங்க. நிச்சயம் பூரணிம்மாவோ, மாப்பிள்ளையோ பெரிசு



பண்ண மாட்டாங்க என்று தோணுது விடு'' என்று ராஜேந்திரனும் மகளுக்கு சாதகமாகப் பேச பாக்கியத்திற்கு கவலை மூண்டது.

''சுடிதாராவது நல்லதா போட்டுட்டு வா. அதுவும் இல்லாமல் ஜீன்ஸ், டி ஷர்ட் என்று வந்து நின்று, என் மானத்தை வாங்கிடாதே'' என்று வெளியேற அவள் ஜன்னல் வழியே வெறித்தாள். தோட்டத்தின் அழகும் குளுமையும் மனதில் பதிந்து இலகுவாக்கியது.

குளியல் அறைக்குள் புகுந்தவள் தலைக்கு ஷாம்பூ போட்டு அலசி, டிரையரில் காய வைத்து, மயில் கழுத்து வண்ண ஆடையில் பிங்க் வண்ண மணிகள் வைத்து தைத்த சல்வாரை எடுத்து அணிந்தாள். தளரப் பின்னிய ஒற்றை பின்னல், அதில் தொங்கிய முல்லைச் சரம், மெலிதான அலங்காரம், என்று கிளம்பி கண்ணாடியில் பார்க்க அவளுக்கே புன்னகை மலர்ந்தது.

''ரயில் சிநேகம் மாதிரி சில நேரங்களில் சில மனிதர்கள் வந்து போவார்கள். அதைப் பெரிதாக நினைக்கக் கூடாது'' என்று தனக்குள் ஒரு முறை சொல்லிக் கொண்ட போது வாசலில் கார் வந்து நின்ற சப்தம் கேட்டதும் கை கடிகாரத்தைப் பார்த்தாள்.

மணி நாலு அடிக்க இரண்டு நிமிடங்கள் இருந்தது. 'அடேயப்பா! நேரக் கணக்கை கச்சிதமாகப் பார்க்கிறார்களே' என்ற வியப்பு தோன்ற கால்கள் ஜன்னலை நோக்கி நகர்ந்தது. அவர்கள் வந்த வாகனம் கண்ணில் பட அவளின் விழிகள் வியப்பில் விரிந்தது. இன்டிகா! டாக்சியா? இவர்களிடம் சொந்த வாகனம் இல்லையா?

இந்த வண்டியும் அந்த வண்டியும் ஒன்றா? உடனே அறிந்து கொள்ள வேண்டும் போல தோன்ற, ஜன்னலின் ஒரு புறமாக நின்று கழுத்தை நீட்டிப் பார்க்க வண்டியின் பதிவு எண் தெரிந்தது. அதே வண்டி தான். சில மனிதர்கள் வந்து போவார்கள் பெரிதாக நினைக்கக் கூடாது என்று மனசைத் தேற்றினால், அடுத்த வினாடி கடவுள் அவனையே கண் முன்னால் கொண்டு வந்து இன்று இங்கே நிறுத்தினால் அதை என்ன சொல்வது?

அந்த வினாடியில் அவளுக்கென்று விதிக்கப்பட்டவன், 'அவன் தான்' என்று முடிவு செய்தாள். வேறு யாரையும் அவளால் மணக்க முடியாது. அப்பாவிடம் எனக்கு புகழேந்தியைப் பிடிக்கவில்லை என்று சொல்ல வேண்டும். பாண்டியனை கல்யாணம் பண்ணிக் கொள்வது பற்றிப் பிறகு பார்க்கலாம். அம்மாவின் அழைப்பிற்காக நகம் கடித்தபடி அறையில் காத்திருந்தாள்.

அவளின் பதட்டத்திற்கும் குழப்பத்திற்கும் நேர்மாறான மனநிலை ஹாலில் நிலவியது. முகமலர்ச்சியுடன் வரவேற்று உபசரித்து அமர வைத்த சம்பந்தி வீட்டினரிடம் பெருமையாக மகனைப் பற்றி பூரணி சொல்ல ராஜேந்திரனும் பாக்கியமும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகை செய்து கொண்டனர்.

''என் பையனைப் பற்றி நானே பெருமையா சொல்லிக்கக் கூடாது. பெண் வீட்டில் போய் டிபன் சாப்பிட்டு, கன்னா பின்னாவென்று கேள்வி கேட்டு, வீட்டுக்குப் போய் முடிவை தெரிவிக்கிறோம் என்று சொல்லக் கூடாது. கல்யாணம் செய்து கொள்ளும் உத்தேசம் வந்த பிறகு தான் பெண்ணைப் பார்ப்பேன் என்று பிடிவாதமா



இருந்தான். பாரதி போட்டோவை பார்த்த உடனேயே பிடிச்சுப் போயிருச்சு. கல்யாணம் பண்ணிக் கொள்ள முடிவு பண்ணிய பிறகு தான் பெண் பார்க்கவே கிளம்பினான்...''

''சும்மா இருங்கம்மா, எல்லா அம்மாக்களுக்கும் அவங்கவங்க பசங்க உயர்வு. அவங்க ஏதாவது நினைத்துக் கொள்ளப் போறாங்க'' என்று அடக்க முயன்றான்.

''அம்மா சொல்றதில தப்பா நினைக்க என்ன இருக்கு புகழ்? இந்தக் காலத்து பொண்ணுங்களும் சுய கௌரவம் பார்க்கறாங்க இல்லையா? அதனால் உங்க முடிவு உண்மையிலேயே பாராட்டப் பட வேண்டிய நல்ல முடிவுதான்'' என்று ராஜேந்திரன் சொல்ல பாக்கியமும் பூரணியும் புன்னகை செய்தனர்.

பெரியவர்கள் மூவரும் உற்சாகமாக பேசிக்கொண்டு இருக்க, பாரதியை எப்போது அழைத்து வருவார்கள் என்று ஆவலுடன் வீட்டைச் சுற்றிப் பார்வையை ஓட்டினான். அந்த கலகலப்பான பேச்சில் கலந்து கொள்ளாமல் புகழேந்தி இருந்ததைக் கவனித்தது பாக்கியம் தான்.

''நாம் பாட்டுக்கு பேசிட்டு இருக்கிறோம். இவங்க எப்ப பேச்சை முடித்து எப்ப பெண்ணை நாம் கண்ணில் காட்டுவாங்க என்று மாப்பிள்ளை மனசுக்குள் திட்டுறார்'' என்று சொல்ல மூவரும் சட்டென்று சிரித்தனர்.

''பாகி, நீ கமலாம்மாவை டிபன் கொண்டு வரச் சொல்லிட்டு பாரதியைக் கூட்டிட்டு வா'' என்று மனைவியை அனுப்பிய ராஜேந்திரனின் கண்களில் 'பெண்ணுக்கு பிடிக்க வேண்டுமே? அவள் என்ன சொல்லப்

போகிறாளோ?' என்ற கவலை சூழ்ந்ததை பாக்கியத்தால் உணர முடிந்தது.

''இதோ!'' என்று கணவனிடம் சொன்னவர் பூரணியிடம் திரும்பினார்.

''நீங்க வெளிப்படையா பேசுவதால் நானும் ஒரு விஷயம் சொல்லி விடுகிறேன். எங்க இரண்டு பேருக்கும் மாப்பிள்ளையைப் பிடிச்சு இருக்கு. பாரதி இப்பதான் படிப்பை முடித்தாள். உடனே கல்யாணமா என்ற தயக்கம் அவள் மனசில் இருக்கிறது'' என்று நிறுத்தியவர் புகழந்தியைப் பார்த்தார்.

''நீங்க தப்பா எடுத்துக் கொள்ளக் கூடாது'' என்று பாக்கியம் தயங்க, ''அவளுக்குப் பிடித்தால் உடனே கல்யாணத்தை வைத்து விட நாங்க ரெடி...'' என்று ராஜேந்திரன் இடையிட்டார்.

''பரவாயில்லை மாமா. எப்படியும் பாரதி சம்மதம் சொல்லாமல் கையைக் காலை கட்டி நான கட்டாயத் திருமணம் செய்ய முடியாது இல்லையா?'' என்று கேலியாகக் கேட்டான்.

''ஆமா.''

''அப்புறம் என்ன? போய் பாரதியை அழைச்சட்டு வாங்க அத்தை. இப்பவாவது பாரதி என்னைப் பார்க்கட்டும். பார்த்த பிறகு தன் முடிவை சொல்லட்டும்'' என்ற புகழேந்தியின் அந்த சந்தோஷ வார்த்தைகள் அங்கே இருந்த மற்ற மூவரின் மனதையும் குளிர்வித்தது.

''நீங்க டிபன் சாப்பிடுங்க. நான் பாரதியை அழைச்சுட்டு வரேன்'' என்று சொல்லிவிட்டு எழுந்தார்



பாக்கியம். அறைக்கதவு பாதி திறந்து இருக்க, ''மாப்பிள்ளை வீட்டுல வந்துட்டாங்க, போகலாமா பாரதி?'' என்று குரல் கொடுத்தபடி சென்றார் பாக்கியம்.

''வரேன், ஆனால் அதுக்கு முன்னாடி ஒரு கண்டிஷன்...'' என்று கடின முக பாவனையுடன் சொல்ல பாக்கியம் முறைத்தார்.

''காபி கொடு. பாட்டு பாடு! டான்ஸ் ஆடு. என்று எல்லாம் சொன்னால் எனக்குக் கெட்ட கோபம் வரும். இப்பவே சொல்லிட்டேன்...''

''ஏன் பாரதி, நீ பள்ளியிலும் கல்லூரியிலும் டான்ஸ் ப்ரோக்ராம் பண்ணி இருக்கிறாய் தானே? அதை சொல்ல வேண்டியது தானே? திறமைகளை ஏன் மறைக்க வேண்டும்...?'' என்று சொல்லும் போதே அவளின் முகத்தில் ஒரு நிழல் வந்து படிந்ததை பாக்கியம் கவனிக்கவில்லை.

## நினைவலை 4

நல்ல மாம்பழ மஞ்சளில் கருஞ்சிவப்பு நிற பார்டர் கட்டிய அந்த நாட்டிய உடையில் கல்லூரி மேடையில் அவள் ஆடும் காட்சி...

''மறைந்திருந்தே பார்க்கும் மர்மம் என்ன?

அழகர் மலை அழகா இந்த சிலை அழகா?

மறைந்திருந்தே பார்க்கும் மர்மம் என்ன...?''

''வாவ்! நீ டான்ஸ் ஆடுவாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அதிலும் க்லாசிகல் டான்ஸ். சூப்பர் பாரதி...'' என்று ஆர்வத்துடன் ஓடி வந்து கை குலுக்கினான்.

''தாங்க்ஸ். இப்ப சீனியர் என்ற பந்தா எல்லாம் போய் விட்டதா?''

''ஹா ஹா! அதெல்லாம் சும்மா. சீனியர் மாணவர்களும் ஜூனியர் மாணவர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பழகிக் கொள்ள ஒரு வாய்ப்பாக ராகிங் பயன்படுத்தப்படும். இப்ப நீயும் நானும் ப்ரண்ட்ஸ்.''

''அப்ப சரி நிஜமா சொல்லுங்க, டான்ஸ் எப்படி இருந்தது...''

''சூப்பரா இருந்தது பாரதி...''

''நான் ஏதாவது ஒரு காரியம் பிரமாதமா செஞ்சால் அதை வெறுமனே வாயால் சொல்ல மாட்டாங்க எங்க அப்பா. கையோடு ஒரு பரிசு கொடுத்து தான் வாழ்த்தே சொல்வாங்க.''

''பரிசா? கொடுத்து விட்டால் போச்சு...'' என்றவன் சுற்றிலும் பார்வையை ஓட்டினான். கல்லூரி மேடையை அலங்கரிக்க ப்ளாஸ்டிக் மலர்களைப் பயன்படுத்திச் செய்த தோரணம் தொங்கிக் கொண்டு இருந்தது. அதில் இருந்து ஒரு மஞ்சள் மலரைக் கிள்ளி பறித்தான்.

''இந்தா, உன்னுடைய அற்புதமான நடனத்தைப் பாராட்டி இந்த பரிசு...''

''ஐ! இது நல்ல கதையா இருக்கே? இது கல்லூரி ஆடிட்டோரியத்தில் இருக்கும் பூ. உங்களிடம் இருக்கும் ஏதாவது ஒரு பொருளைக் கொடுத்தால் தான் அது பரிசு. அக்கம் பக்கம் எல்லாம் இருப்பதை எடுத்துக் கொடுத்தால் அது திருட்டு.''

''ஓகே பேபி ரிலாக்ஸ். நான் கொடுக்க ரெடி. ஆனால் நான் கொடுப்பதை கடைசி வரையில் பத்திரமா வைத்துக் கொள்ளணும். உன்னால் முடியுமா?''



''முதலில் கொடுங்க. அப்புறம் கண்டிஷன் போடுங்க.''

''பொருளுக்கான விலை மதிப்பைப் பார்க்கக் கூடாது.''

''மை காட்! நீங்க வள வளா கொழா கொழா. இது வேலைக்கு ஆவதில்லை...''

''என் பொருளை தந்து விட்டேன் பத்திரமா வைத்துக் கொள்...'' என்று சொல்லியபடி தான் கழுத்தில் அணிந்து இருந்த தங்க பூண் போட்ட அந்த உருத்திராட்சத்தைக் கழட்டி, அவள் இடது கையை எடுத்து அதில் வைத்து, வலது கையால் அதை மூடினான்.

''இது எங்க அம்மா எனக்கு பூஜை பண்ணி போட்டு விட்டாங்க. அதை நான் உனக்குக் கொடுத்து இருக்கேன். என்னைப் பொருத்த வரை விலை மதிப்பில்லாதது. பத்திரமா வச்சுக்கோ.''

''தாங்க்ஸ்.''

* * *

பாரதி கடந்த கால நினைவுகளில் மூழ்கி சொன்ன நன்றி என்ற வார்த்தை மட்டும் சப்தமாக வந்து விட பாக்கியம் அவளை திரும்பி முறைத்தார்.

''அவங்க கேள்வி கேட்க மாட்டாங்க என்றதற்கு தாங்க்ஸ் சொல்கிறாயா? ரொம்ப நல்லது. நீ வேண்டுமானால் மாப்பிள்ளையைப் பார்த்து நீ சமைப்பாயா? என்னைக் கண் கலங்காமல் வைத்துக் கொள்வாயா? என்று நல்லா நாலு கேள்வி கேளு. போகலாமா?'' என்று கடுப்பாகக் குரலை லேசாக உயர்த்திச் சொல்ல பாரதி விழித்தாள்.

அம்மா பேசியதில் கடைசி சில வார்த்தை மட்டுமே காதில் விழுந்தது.

''ம்ம், போகலாம். அஞ்சு நிமிஷம் உட்கார்வேன். அப்புறம் எழுந்து வந்து விடுவேன். அதற்கு பல்லைக் கடிக்கக் கூடாது'' என்று தாயைத் தொடர, மனத்தில் இருக்கும் கோபத்தை வெளிக்காட்டும் நேரம் இது இல்லை என்ற எண்ணத்துடன் அமைதியாக நடந்தார் பாக்கியம்.

# 11

யார் வந்து இருந்தாலும் என் நிலை இதுதான் என்று சொல்லாமல் சொல்லும் விதமாக, 'இந்த காலத்தில் இப்படியும் ஒரு பெண்ணா?' என்று பார்ப்பவர்கள் வியக்கும் வண்ணம் குனிந்த தலை நிமிராமல், படிகளில் இறங்கி அப்பாவின் அருகே அமர்ந்த பாரதிக்கு, சில நிமிடங்களிலேயே கழுத்து வலித்தது.

அந்த மாதிரி தலை கவிழ்ந்து அமர்ந்து அவளுக்குப் பழக்கம் இல்லையே? ஒன்று இரண்டு என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டே அமர்ந்து இருந்த பாரதி, தன்னை நிமிர்ந்து பார்க்கும் முதல் பார்வையின் பாவனைக்காக புகழேந்தி காத்திருக்க அவள் நிமிர்ந்த பாடில்லை.



''பாரதி, இப்படி குனிஞ்ச தலை நிமிராமல் அமர்ந்து இருக்கிறாயே? நிமிர்ந்து மாப்பிள்ளையை நல்லா பார்த்துக்கோ. போட்டோவைக் காட்டி ஏமாத்திட்டாங்க என்று பின்னால் சொல்லக் கூடாது'' என்று அம்மா சொன்னதற்கும், லேசாக விழி உயர்த்தி ஒரு புன்னகை செய்தாளே ஒழிய புகழ் இருக்கும் பக்கம் திரும்பவில்லை.

''பாரதி கையில் உங்க போனை கொடுங்க மாமா'' என்று ராஜேந்திரன் காதில் புகழேந்தி சொல்ல அவர் வியப்புடன் பார்த்தார்.

''இருபதடி தூரத்தில், அவள் கண் முன்னால் இருக்கும்போது போன் எதுக்கு? தனியா பேசணுமா மாப்பிள்ளை?'' என்று கேட்டவரின் குரலில் அளவு மீறிய அன்பும் இருந்தது. மருமகனின் நல்ல மனத்தை இந்த பெண் புரிந்து கொள்ள மாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கிறாளே என்ற கவலை தோன்றியது.

''தனியா பேசணும் மாமா. ஆனால் அதை அவளா கேட்ட பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்ப உங்க போனை அவளிடம் கொடுங்க'' என்று சொல்ல அவளிடம் நீட்டிய அடுத்த வினாடி, அதில் ஒரு பிக்சர் மெசேஜ் வந்தது.

''என்னப்பா இது?'' என்று கேட்டபடி போனை பார்த்தவள் கண்கள் விரிந்தது. கையில் ஒரு சிவப்பு ரோஜா பூங்கொத்துடன், ''என்னை மணம் செய்து கொள்கிறாயா?'' என்ற வாசகத்துடன் 'அவன்' புகைப்படம் வர அவள் போனை வியப்புடன் பார்த்தாள்.

''எங்கே இருக்கிறாய்?'' என்று குறும் செய்தி அனுப்பிய அடுத்த வினாடி, 'உன் கண் எதிரே' என்ற

தகவல் வந்து சேர அவசரமாக நிமிர்ந்து பார்த்தவளின் விழிகள் வியப்பில் விரிந்தது.

''ஹேய் நீங்களா புகழேந்தி...?'' என்று கேட்டபடி எழுந்து அவன் அருகே வர சுற்றிலும் இருந்த மூவரும் அவள் என்ன பேசுகிறாள் என்பது அறியாமல் திகைப்புடன் விழித்தனர்.

வழியில் போகிற போக்கில் சந்தித்த ஒருவன், தன் மனசை சலனப்படுத்த இடம் கொடுக்கக் கூடாது. தன்னைப் பெற்றவர்கள் அவனைவிட முக்கியம் என்ற முடிவுக்கு வந்து, பெண் பார்க்கும் படலத்துக்கு தன்னைத் தயார் பண்ணிக் கொண்ட பாரதிக்கு, புகழேந்தி என்ற பெயரில் அவனே மாப்பிள்ளையாக வந்து அமர்ந்து இருந்ததைப் பார்த்ததும் சந்தோஷம் பொங்கியது.

இவன் பெயர் பாண்டியன் இல்லையா? கால் டாக்சி பதிவேடுகளில் அப்படி தானே இருந்தது? அது அவனுடைய கார் இல்லையா? அதான் தன்னை அழைத்துச் செல்ல அவ்வளவு தயங்கி இருக்கிறான். இவ்வளவு தெளிவாகப் பேசுபவன் டிரைவராக இருக்கிறானே என்ற சந்தேகம் அன்றே வந்தது என்ற எண்ணம் தோன்ற, உற்சாகமாக இருக்கையில் இருந்து எழுந்தாள்.

''யா, இட் இஸ் மீ புகழ்'' என்று குறும்பாகச் சொல்ல அவள் பெருமையுடன் புன்னகைத்து நம்ப முடியாமல் தலை அசைத்தாள்.

''மை காட், நான் உங்களைப் பாண்டியன் என்று நினைத்து...'' என்று ஆரம்பித்து நாக்கைக் கடித்துப் பேச்சை நிறுத்தினாள்.



''பாண்டியன் என்று நினைத்து...'' என்று அவன் ஊக்க, அவள் சுற்றிலும் பார்வையை ஓட்டினாள். அம்மா அப்பாவோடு, அவன் தாயாரும் அமர்ந்து இருப்பதைப் பார்த்ததும் புன்னகை செய்தாள்.

''அதை அப்புறமா சொல்கிறேன்'' என்று அவனிடம் சொல்லிவிட்டு அவசரமாக பூரணியின் அருகே வந்து அமர்ந்தாள்.

''ஹலோ ஆன்ட்டி! டிபன் வச்சது எல்லாம் அப்படியே இருக்கே? நான் செய்யலை ஆன்ட்டி. தைரியமா சாப்பிடலாம்'' என்று சிரித்துவிட்டு, ''சொல்லலையாம்மா'' என்று அம்மாவை பேச்சுக்குள் இழுத்தாள்.

மகளின் குரலில் இருந்த உற்சாகத்தையும் அவளின் இலகு கேலி பேச்சையும் கேட்ட பாக்கியத்திற்கு நிம்மதி வந்தது. இனி மகளினால் பிரச்னை வராது. அவளை எந்த வேலையையும் கட்டாயப்படுத்தி செய்ய வைக்க முடியாது. புகழேந்தியை அவளுக்குப் பிடித்து இருக்கிறது என்பதை அவள் கண்களின் பளபளப்பில் கண்டு கொள்ள முடிந்தது. மகளின் திடீர் மாற்றத்துக்குக் காரணம் புரியா விட்டாலும் பாக்கியமும் ராஜேந்திரனும் நிம்மதிப் பெருமூச்சை வெளியிட்டனர்.

''அத்தை அப்பவே டிபன் சாப்பிட சொல்லிட்டு தான் உன்னைக் கூப்பிட வந்தாங்க பாரதி. நீ வந்து உன் விருப்பத்தைச் சொன்ன பிறகு தான் சாப்பிடணும் என்று அம்மா காத்திருந்தாங்க'' என்று புகழேந்தி சொல்ல, அவள் ''சாப்பிடுங்க ஆன்ட்டி'' என்று உபசரிக்க புகழேந்தியின் முகம் மலர்ந்தது.

''பாரதி மாப்பிள்ளைக்கு தோட்டத்தைச் சுத் அப்படியே நீங்க இரண்டு பேரு காண்பிக்கிறாயா?

ஏதாவது பேசிக்கணும் என்றாலும்...'' என்று முடிக்காமல் நிறுத்த அவள் பூரணியை திரும்பிப் பார்த்தாள்.

''என்னை ஏன் பார்க்கிறாய்? உங்க அப்பா சொல்லியாச்சே? போய் பேசிட்டு வாங்க. உங்க அம்மாவிடம் இந்த போளி எப்படி செஞ்சாங்க என்று அதற்குள் கேட்டுக் கொள்கிறேன்'' என்று சொல்ல இருவரும் எழுந்தனர்.

ஹாலில் இருந்து வாசலுக்கு வரும் வரை இருவரும் ஒன்றும் பேசவில்லை. ஓரக்கண்ணால் ஒருவரை ஒருவர் மற்றவர் பார்க்காத போது பார்த்துக் கொண்டனர். படி இறங்கும் வேளையில் சற்று தூரத்தில் நிறுத்தி வைத்து இருந்த காரில் சாய்ந்து அலைபேசியில் யாரிடமோ பேசிக் கொண்டு இருந்த பாண்டியன் இவர்களைக் கண்டதும் போனை விலக்கி மரியாதையாக புன்னகை செய்ய, அதை அங்கீகரித்தபடி பாரதியை பார்த்தான்.

''இவர் தான் நீ கேட்ட பாண்டியன். மேடமை அன்று காலேஜிற்கு அழைத்துப் போனது என் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சியா அமைந்து விட்டது பாண்டியன். மேடம் உன் பிசினெஸ் ஓஹோ என்று வரணும் என்று அன்னைக்கே வாழ்த்துச் சொன்னாங்க தெரியுமா?'' என்று புன்னகையோடு அறிமுகப்படுத்தியவன் முகத்தில் குறும்பு இருந்தது.

''உங்களை மாதிரி நல்லவங்களின் வாழ்த்துக்களில் தான் எங்க முன்னேற்றம் இருக்கு'' என்று நன்றியுடன் சொல்ல அவள் புன்னகை செய்தாள்.

''நன்றி எல்லாம் வேண்டாம். நீங்களே நிறைய நல்ல காரியங்கள் பண்ணுறீங்க. அந்த பெண்ணுக்கு சர்ஜரி



நல்லபடியா முடிஞ்சதா?'' என்று விசாரித்ததும் அவன் நெற்றியில் தட்டிக் கொண்டான்.

''நீங்க குழந்தைக்கு 8500 ரூபாய் கொடுத்தீங்க. அதுக்கு தேங்க்ஸ் சொல்லலை பாருங்க. முன்னே பின்னே தெரியாத குழந்தைக்கு பணம் கொடுத்த உங்க மனசு யாருக்குமே வராது. குழந்தை நல்லா இருக்குது மேடம். சாரை வீட்டில் விட்டுட்டுப் போய் பார்ப்பேன்.''

''தேங்க்ஸ் எதுக்குங்க? நீங்க ரெண்டு லட்சம் வசூல் பண்ணி இருக்கீங்க. உங்க முயற்சிக்கு என்னால் முடிந்த சின்ன துளி. அதைப் பார்த்து எனக்கும் ஆசை வந்தது தெரியுமா?'' என்று சொல்லிவிட்டு புகழேந்தியை ஜாடையாகப் பார்க்க அவனும் புன்னகை செய்தான்.

''அதுல மூன்றில் ஒரு பங்கு சார் சொல்லி கிடைத்த உதவி. அவரே பத்தாயிரம் ரூபாய் கொடுத்து இருக்கார்'' என்றதும் அவளின் பார்வை புகழை மீண்டும் ஒரு முறை வருடி விலகியது.

''போதும் பாண்டியன் எனக்கு சளி பிடிச்சுக்கப் போகுது. போகலாமா பாரதி?'' என்று அழைக்க அவள் சிரிப்புடன் முன்னே நடந்தாள்.

இருவரும் பல நிமிடங்கள் எதுவும் பேசாமல் நடக்க, ''இந்த வீடு கட்டி எவ்வளவு நாள் இருக்கும் பாரதி? முப்பது வருஷம் இருக்குமா?'' என்று தானே பேச்சைத் துவக்கினான் புகழேந்தி.

''தெரிஞ்சுட்டு என்ன பண்ணப் போறீங்க?''

''அதைத் தெரிஞ்சு ஒன்றும் பண்ணப் போவதில்லை. பேசாமலே இருப்பதற்கு இது தேவலை என்று

நினைத்தேன்'' என்றவனை கூர்மையாகப் பார்க்க, அவளின் பார்வையைத் தாங்கி நின்றான்.

''முதன் முதலில் கார் பழுதாகி, நான் சாலையில் லிஃப்ட் கேட்டு நின்றபோதே, என்னை உங்களுக்குப் பார்த்து இருக்காங்க என்ற விஷயம் உங்களுக்குத் தெரியுமா?'' என்றவளின் குரலில் ஆராய்ச்சி இருந்தது.

''இல்லை. தெரியாது'' என்று அவன் வேகமாக தலை அசைத்ததும் உள்ளே ஒரு கோடி மலர்கள் பூத்தது போல இருந்தது.

''என்ன அப்படி ஒரு சந்தோஷம்?''

''ஒரு வேளை நிச்சயிக்கப்பட்ட பெண் என்பதால் உதவி செய்தீர்களோ என்ற எண்ணம் இருந்தது. அது இல்லை என்று தெரிந்ததால் வந்த சந்தோஷம்'' என்றவளின் முகத்தில் பெருமிதம் இருக்க அவன் தோளைக் குலுக்கினான்.

''ரொம்ப சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டாம். நான் சாதாரண மனிதன். இதுவே உன்னை மாதிரி ஒரு அழகான இளம்பெண் என்று சொல்லாமல் ஒரு பாட்டி உதவி கேட்டு இருந்தால் செய்து இருப்பேன் என்று சொல்லி இருக்க முடியாது'' என்று சொல்ல அவளின் முகத்தில் மேலும் புன்னகை பெரிதானது.

''அழகான பெண் என்றதும் என்ன சந்தோஷம் பாரேன்'' என்று அவன் மேலும் சீண்ட அவள் இப்போது சத்தமாகச் சிரித்தாள்.

''பாராட்டு எந்த மனிதனையும் புன்னகைக்க வைக்கும் என்னுடைய சந்தோஷத்திற்கு காரணம் அது அல்ல.''



''வேறென்ன காரணம்?''

''காரணம் இல்லை. காரணங்கள்...''

''என்ன காரணங்கள்...?''

''நான் அப்படி. நான் இப்படி என்று பெருமை பீற்றும் மனிதர்களிடையே நான் சாதாரணமான மனிதன் என்று ஒப்புக் கொள்வதே பெரிய விஷயம். அது எனக்குப் பிடிச்சு இருக்கு'' என்று ரசனையுடன் சொல்ல, அவன் மீது யாரோ ஒரு கூடை பூவை சொரிந்தது போல இருந்தது.

''அப்புறம்...?''

''முகத்தில் எவ்வளவு பிரகாசம்? உங்களைச் சுற்றிலும் வெள்ளை ஆடை தேவதைகள் நம்தன நம்தன பாடுறாங்களா?'' என்று கேட்க சிரித்தான்.

''சீக்கிரமே நீ அந்த மூன்று வார்த்தைகளை சொன்னால் நடக்கலாம்.''

''எந்த மூன்று வார்த்தைகளை?'' என்றவளின் கண்கள் பளபளத்தது.

''உனக்குத் தெரியாத வார்த்தைகளைச் சொல்லிக் கொடுக்கும் நேரம் இது அல்ல. நீ அடுத்த காரணம் சொல்லு?'' என்று அவன் நழுவ அவள் புன்னகையுடன் தொடர்ந்தாள்.

''அன்று காரில் போகும்போது, நான் பதட்டமாக இருக்கிறேன் என்று இலகுவாக்க கதை சொன்னீர்களே? அதுவும் பிடிச்சு இருந்தது.''

''பட்டியல் இன்னும் இருக்கா?''

"நான் ஏன் வீட்டுக்கு வந்தேன் என்பதற்கான உங்க ஊகம், ஆறு மாசம் படிக்காமல் கடைசி அரை மணி நேரத்தில் என்ன படிப்பே என்ற கேள்வி, எல்லாமே எனக்குப் பிடிச்சு இருந்தது'' அவள் தயக்கத்துடன் இழுக்க, குரலில் இருந்த நாணம் அவனைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

"அப்புறம்..." என்றவன் பார்வை அவளை வருடியது.

"சின்ன குழந்தை மருத்துவ சிகிச்சைக்கு நீங்க செய்த உதவி அழகான பெண்ணுக்கு மட்டும் தான் உதவி செய்வேன் என்று உங்களைப் பற்றி நீங்களே சொன்ன குற்றச்சாட்டுக்கு வலு இல்லாமல் செய்து விட்டது. சந்தேகத்தின் பலனை உங்களுக்குக் கொடுக்க முடிவு பண்ணி விட்டேன்'' என்று சொன்னவளின் முகம் விகசித்தது.

அந்த பிரகாசம் அவனை ஈர்க்க அவர்களுக்கு இடையே இருந்த தூரத்தைக் குறைத்து நெருங்கி வந்து, "இன்னைக்கு பெண் பார்க்கும் படலத்துக்கு வேறே வழி இல்லாமல் பொம்மை மாதிரி நின்று போகலாம் என்று வந்தாயா?'' என்று விசாரித்தான்.

"அப்படிச் சொல்ல முடியாது. உங்க முகம் அப்பப்போ மனசில் தோன்றியது. அம்மா கல்யாணம் பற்றிப் பேசியபோது தவிர்த்ததற்கு அதான் காரணம். ஆனால் அப்பா அம்மாவுக்கு நம் வாழ்க்கை பற்றிய அக்கறை இருக்காதா என்ற கேள்வியும் எழுந்ததால் இன்றைய நிகழ்ச்சிக்கு ஒத்துக் கொண்டேன்'' என்று சொல்ல அவன் முகம் ஒரு கணம் வாடி சீரானது.

"இதன் மூலம் என்ன சொல்ல வருகிறாய் என்று தெரியலையே?''



"இதை நான் நம்பணுமா?'' என்றவளின் பார்வையில் நெருக்கம் தெரிய மனம் குளிர்ந்தது.

"நம்புவதும் நம்பாததும் உன் இஷ்டம். ஆனால் சொல்வதை தெளிவான வார்த்தைகளால் சொல்லி விட்டால் நான் அடுத்த நடவடிக்கை எடுக்கலாம். ஏற்கனவே, கேட்ட கேள்வியே தொங்கலில் நிற்கிறது. அதற்கும் இன்னும் பதில் சொல்லவில்லை'' என்று அவளின் மனதை அறிய கொக்கி இட்டான்.

"என்ன கேள்வி கேட்டீங்க?'' என்று கேட்டவளின் குரலும், கொஞ்சலுமே தெரியாது என்று சொல்வது பொய் என்று சொன்னது.

"அதையே மறந்தாச்சா? உங்க அப்பா போனில் உனக்கு ஒரு பிக்சர் மெசேஜ் அனுப்பி இருந்தேனே? பார்க்கலையா?''

"பார்த்தேனே.''

"பதில் வரலையே?''

"அப்பா போனுக்கு மெசேஜ் அனுப்பினால் அப்பா தானே பதில் சொல்லணும்?''

"அதில் இருந்து உடனே வேறு ஒரு நம்பருக்கு ஃபார்வர்ட் ஆனதையும், இந்த போனில் அழிக்கப் பட்டதையும் நான் பார்த்தேனே? இப்ப யார் பதில் சொல்லணும்?'' என்று அவன் நடையை நிறுத்திக் கேள்வி கேட்க அவள் வியப்பும் பெருமிதமும் கலந்த ஒரு பார்வையை அவன் மீது வீசினாள்.

"எடுத்த எடுப்பில கல்யாணம் பண்ணிக்கிறாயா என்று கேட்கறீங்க? படிப்படியாக செல்வது இல்லையா?''

''எப்படியும் கடைசி படிக்கு தானே செல்ல வேண் டும்? அதான் நேரே அங்கேயே சென்று விட்டேன்'' என்றவன் கண்களில் ரசனை கூட இடைவெளி குறைத்து கைகளைப் பற்றினான்.

பேண்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு சிறிய டப்பாவைத் திறந்து ஒரு மூன்று கற்களால் ஆன வைர மோதிரத்தை எடுத்தான். அவள் கேள்வியுடன் பார்க்க, அவளின் வலது கரத்தின் மோதிர விரலைத் தனியாக எடுத்தான்.

''எனக்கு உன்னைப் பிடிச்சு இருக்கு. உனக்கும் என்னைப் பிடிச்சு இருந்தால், கல்யாணம் பண்ணிக்கத் தயார். அதை உறுதி செய்து கொள்ளும் விதமா இதைப் போடட்டுமா?'' என்று கேட்க அவளின் இதழ்களில் சிரிப்பும், கன்னத்தில் சிவப்பும், கண்களில் மின்னலும், ஒரே வினாடியில் வந்து சேர்ந்தது.

''ம்ம்ம்'' என்று முணுமுணுப்பாக பதில் வர, ''சத்தமா வாயைத் திறந்து சொன்னால் என்னவாம்?'' என்று சலித்துக் கொண்டாலும் சந்தோஷமாக விரலில் மோதிரத்தை அணிவித்தான் புகழேந்தி.

''இந்த மோதிரம் அளவு பார்த்து வாங்க அந்த மோதிரம் ஹெல்ப் பண்ணுச்சா?'' என்று குறும்புடன் கேட்க அவளின் கையை எடுத்து தன் கன்னத்தில் வைத்து அழுத்தி. ஆம் என்று தலை அசைத்தான்.

''இப்ப நம்மைச் சுற்றிலும் வெள்ளை உடை தேவதைகள் வருவது மாதிரி தோன்றுதா?'' என்று குறும்புடன் கேட்க அவள் இல்லை என்று தலை அசைத்து சிரித்தாள்.



''அதற்குக் காரணம் இருக்கு ரதி. லவ் ப்ரோபோசல் இன்னும் முழுசா சொல்லி முடியலையே?''

''ர..தி யாரு?''

''அது கூடத் தெரியாமல் இருக்கும் உன்னை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யப் போகிறேனோ?'' என்று செல்லமாகச் சலித்தவன் அவளின் நெற்றியில் லேசாக முட்டி ''நீதான்... நீ மட்டும்தான்'' என்று சொல்லி இன்னொரு மோதிரத்தை எடுத்து அவளிடம் நீட்ட வாங்கிக் கொண்டாள்.

''பயங்கரமான ப்ளானோட வந்து இருக்கீங்க புகழ்?'' என்று விசாரித்தபடி அவனின் கரத்தில் மெல்ல மோதிரத்தை அணிவிக்க, அவள் அவனை முதன் முதலாகப் பெயர் சொல்லி அழைக்கும் அந்த அழைப்பை அவனுக்குள் பரவசத்தைத் தூண்டி விட்டது. அவளின் கையைப் பற்றித் தூக்கி புறங்கையில் மென்மையாக முத்தமிட்டான்.

அந்த முதல் ஸ்பரிசம், முதல் முத்தம் இருவரையும் மௌனமாக்கிவிட வெள்ளை உடை தேவதைகள் அவர்களைச் சுற்றி ஆடிப் பாட, சுற்றுப்புறம் சொர்க்கமானது.

# 12

'தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு உங்களுக்குள் ஏதாவது பேச வேண்டும் என்றால் பேசிக் கொள்ளுங்க'

என்று அனுப்பி வைத்த ராஜேந்திரனுக்கு மனை நிறைந்து இருந்தது.

மாடியில் இருந்து இறங்கி வரும்போது இருந்த அவளின் முக பாவனைக்கும், 'மாப்பிள்ளைக்குத் தோட்டத்தைச் சுற்றிக் காட்டு' என்று சொல்லும்போது பின்னால் போனவளின் முக பாவனைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருந்தது.

முதலில் உணர்ச்சிகள் எதுவும் இன்றி மரக்கட்டை போல அமர்ந்து இருந்ததற்கும், 'சரிப்பா' என்று துள்ளலுடன் கிளம்பியதற்கும் உள்ள வித்தியாசத்தைக் கண்டு பிடிக்காமல் இருக்க அவர் ஒன்றும் முட்டாள் இல்லை. என்ன காரணம் என்பதை கண்டறிய முடிய வில்லை என்றாலும் அவளுக்கு அவனைப் பிடித்து இருக்கு என்பதை உணர்ந்ததால், பெரியவர்கள் தங் களுக்குள் கலந்து பேசி, மூன்று முகூர்த்த நாட்களை பார்த்து வைத்தனர்.

தோட்டத்தில் இருந்து உள்ளே வந்த இருவரின் நடை உடை பாவனையிலும் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றம் இருந்தது. வீட்டில் இருந்து கிளம்பும் போது முன் பின்னாக சென்றவர்கள், ஹாலைக் கடந்து வாசலை அடையும் வரையிலும் கூட எதுவும் பேசிக் கொள்ள வில்லை.

தோட்டத்தில் இருந்து உள்ளே வரும் போது இருவரும் தோளோடு தோள் உரச இணைந்து நடந்து வந்தனர். கைகள் சேர்ந்து இருந்தது. ஒருவரை ஒருவர் நேராக முகம் பார்த்து மலர்ந்த சிரிப்புடன் பேசிக் கொண்டு வந்தனர், நடு ஹாலுக்கு வந்த பிறகே கைகளை விலக்கி சோபாவில் அமர்ந்தனர்.



''பாரதி, மாப்பிள்ளைக்கு நம்ம தோட்டத்தை எல்லாம் சுத்திக் காட்டியாச்சா?'' என்று ராஜேந்திரன் கேட்க அப்பாவிடம், ''ஆச்சுப்பா'' என்று புன்னகை செய்து விட்டு, எழுந்து அடுக்களையில் இருந்த அம்மாவிடம் வந்தாள்.

அங்கே ஒரு பெரிய வெள்ளித் தட்டில், தேங்காய், பழம், தாம்பூலம், மஞ்சள் குங்குமம் என்று பொருட் களை அடுக்கி வைத்துக் கொண்டு இருந்த பாக் கியத்தைப் பார்த்ததும் அவளின் விழிகள் விரிந்தது.

''என்னம்மா இதுதான் மாப்பிள்ளை என்று அப்பா முடிவே பண்ணிட்டாரா? என் சம்மதம் இல்லாமல் எதுவும் செய்ய மாட்டேன் என்று சொன்னீங்க?''

''ஆமா! நாங்க பெற்ற பெண்ணுக்கு யார் மாப்பிள்ளை என்று நாங்க முடிவு பண்ணாமல் வேறே யார் பண் ணுவா? போய் உட்கார். இப்ப தட்டு மாத்திக்கப் போறாங்க. எனக்கு வேலை இருக்கு'' என்று சொல்ல, ''அம்மா. வாட் இஸ் திஸ்?'' என்று அவள் முறைத்தாள்.

கையில் இருந்த தாம்பாளத்தை சமையலறை மேடை மீது வைத்தவர். அவளின் வலது கையை எடுத்து மோதிரத்தைக் காட்டி, ''வாட் இஸ் திஸ்?'' என்று அவளை மாதிரியே திருப்பிக் கேட்க அவளின் முகத்தில் அசடு வழிந்து சிரிப்பும் வந்தது.

''பார்ப்பதற்கு முன்னாடி பிடிக்கலை என்றும், பார்த்த உடனே பிடிச்சு இருக்கு என்றும் நினைத்து நினைத்து மனசை மாற்றிக் கொள்ளும் ஆட்கள் நாங்க இல்லை. எங்களுக்குப் பிடிச்சு இருக்கு என்று அன்றும் சொன் னோம் இன்றும் சொன்னோம். என்றும் சொல்வோம்.''

''நீங்க சொல்வீங்க சரி. அவங்க?'' என்று மடக்கி விட்டதாக எண்ணி கேள்வி கேட்க அவர் சிரித்தார்.

''உன் கையில் இருக்கும் மோதிரமே அவங்க மனதை சொல்லவில்லையா? அவங்க உன்னைப் பார்க்க வரும் போதே, வரும் போதே புடவை, நகை என்று வாங்கிட்டு வந்து இருக்காங்க'' என்று சொன்னதும் அவள் விழி விரித்தாள்.

''எப்படிம்மா...?''

''எப்படி என்றால்...? இந்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறோம் என்று உறுதியான முடிவை எடுத்த பிறகு தான் பொண்ணு வீட்டுக்குப் போகணும் என்று பிடிவாதமா இருந்தாராம் மாப்பிள்ளை. போட்டோ பார்த்த உடனே ஒகே சொல்லி விட்டார். கிளம்பி வந்துட்டாங்க.''

''என் ஆசை கனவு இதைப் பற்றி அக்கறைப் படத் தேவை இல்லையா?''

''நீ தனியா தொழில் செய்ய இருப்பதைக் கூட அப்பா மாப்பிள்ளையிடம் தனியா சொல்லி இருக்கிறார். அதுக்கு அவரே நம் வீட்டின் முன்னால் ஒரு பகுதியை ஒதுக்கி அவள் பொட்டிக் அமைக்கத் தேவையான எல்லாவற்றையும் செய்து தருகிறேன். சுய சம்பாத்தியம் பெண்களுக்கு தன்னம்பிக்கையை வளர்த்து மெருகேற்றும் என்று சொல்லி இருக்கிறார்'' என்று பெருமையுடன் சொல்ல அவள் புன்னகை செய்தாள்.

இதைப் பற்றி இவன் தன்னிடம் ஒன்றும் சொல்லவே இல்லையே? ஆமா நீ உன் லட்சியக் கனவைச் சொல்லி இருந்தால், அவன் அதற்கு பதில் சொல்லி இருப்பான்.



அது உனக்கு நினைவு இருந்ததா என்ன என்று மனசாட்சி குட்ட, அவளுக்கு வெட்கத்துடன் சிரிப்பு வந்தது. புகழைப் பார்த்ததும் தன் லட்சியம் பின்னால் போய் விட்டதா? இல்லை, அப்படி இல்லை. இவன் தான் கனவுக்கு தடை சொல்ல மாட்டான் என்ற நம்பிக்கை வந்து இருக்க வேண்டும் என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டாள்.

''நகரு, வெளியே எல்லாரும் காத்திருக்காங்க'' என்று பாக்கியம் அவளை ஒதுக்கி விட்டு வெளியே தாம்பாளத் துடன் செல்ல அவளுக்கு வியப்பாக இருந்தது

பெண்ணை பார்ப்பது, சொத்தை சொள்ளை என்று சொல்வது, பிறகு அதை சரிகட்ட பொருள் கேட்பது, என்று இருக்கும் இந்தக் காலத்தில் இப்படி ஒரு ஆளா? பெருமையாக இருந்தது. ஏற்கனவே இருந்த விருப்பம் கூடியது. அதன் பிறகு காரியங்கள் விறுவிறுவென்று நடைபெற்றது. ஒரு தட்டில் வாங்கி வந்த இனிப்பு பழங்களுடன், புடவையையும் வைத்துக் கொடுக்க, பாக்கியம் உடனே மகளிடம் அதைக் கொடுத்து கட்டி வரும்படி சொன்னார்.

அரை மணி நேரம் முன்பு பட்டுப் புடவை கட்டினால் தான் என்னைக் கல்யாணம் பண்ணிப்பாங்க என்றால் எனக்கு இந்த மாப்பிள்ளையே வேண்டாம் என்று சண்டித்தனம் செய்த பாரதி.

புடவை கட்டத் தெரியாது என்று பொய் சத்தியம் செய்த பாரதி.

அஞ்சு நிமிஷம் இருப்பேன். பிறகு அறைக்குத் திரும்பி வந்து விடுவேன் என்று சட்டம் பேசிய பாரதி.

ஆடத் தெரியுமா பாடத் தெரியுமா என்று எல்லாம் கேள்வி கேட்டால் எனக்குக் கெட்ட கோபம் வரும் என்று பொரிந்த பாரதி.

அம்மா நீட்டிய அட்டைப் பெட்டியை வாங்கிக் கொண்டு, மறுத்து ஒரு வார்த்தை பேசாமல், புகழிடம் ஒரு பார்வையையும் புன்னகையையும் வீசி விட்டு மாடி அறைக்குச் சென்றாள்.

பதினைந்து நிமிடங்கள் செலவு பண்ணி அடர் பச்சையில் மஸ்டர்ட் வண்ண பார்டரில் கெட்டி ஜரிகையும், ஜரிகைக்கு மேலே வெந்தய நிறத்தில் குட்டி குட்டியாக கோபுரங்கள் பதிந்து இருந்த புடவையை கட்டி, அழகு தேவதையாக இறங்கி வந்த பாரதியைப் பார்த்த புகழேந்திக்கு கண்ணை அந்தப் பக்கம் இந்தப் பக்கம் அசைக்க இயலவில்லை.

''உனக்குப் புடவை கட்டத் தெரியுமோ தெரியாதோ என்று அம்மா பயந்து கொண்டே இருந்தார். ஆனால் நீ ஜோரா கட்டிட்டு வந்து விட்டாயே?'' என்று பெருமை யுடன் பூரணி சொல்ல அவள் கண்கள் கூச்சத்துடன் புகழேந்தியிடம் பாய்ந்து மீண்டது. அவன் வியப்பும் பெருமிதமும் பொங்கி வழிய ரசனையுடன் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

''புடவை ரொம்ப அழகா இருக்கு பாரதி. உனக்குப் பிடிச்சு இருக்கா?''

''பிடிச்சு இருக்கு ஆன்ட்டி...''

''ஆன்ட்டி வேண்டாம். அத்தை என்று சொல்லு. புகழ்! நீ வாங்கிட்டு வந்த பரிசை கொண்டு வந்து



கொடு...'' என்று பூரணி சொல்ல அவன் புன்னகை யோடு எழுந்து வந்தான்.

என்ன இது? இவன் ஏற்கனவே கொடுத்து விட்டானே? அதை அம்மாவிடம் சொல்லாமல் எழுந்து எங்கே வருகிறான்? அருகே வந்து தட்டில் வைத்து இருந்த டப்பாவைத் திறந்து ஒரு செயினை எடுத்தான். இதய வடிவிலான லாக்கெட்டுடன் கூடிய சிறிய செயின். என்ன செய்யப் போகிறான் என்று பாரதி திகைப்புடன் பார்த்துக் கொண்டு இருக்கையில் ராஜேந்திரனின் குரல் இடையிட்டது.

''பூரணிம்மா! நீங்க இவ்வளவு முன்னேற்பாடு களுடன் வருவீங்க என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. மாப்பிள்ளை, பாரதிக்கு பிடிச்சு இருக்கா என்று முதலில் கேட்டு விடுங்க'' என்று ராஜேந்திரன் சொல்ல அவன் திரும்பிப் பார்த்தான்.

''ஏற்கனவே எனக்குத் தெரிந்து இருந்தாலும் உங்க திருப்திக்காக கேட்கிறேன் மாமா. என்னைக் கல்யாணம் செய்து கொள்ள சம்மதமா ரதி?'' என்று கேட்க, அவனது வார்த்தை இதயத்தை வருடியது.

''எங்க அம்மா அப்பாவிற்கு சம்மதம் என்றால் எனக்கும் சம்மதம்'' என்று சொல்ல பாக்கியம் சிரித் தார்.

''என் பொண்ணு பேசுவதைக் கேட்டால் என் காதையே என்னால் நம்ப முடியலையே? இந்த அடக்கம் என்னைக்கும் இருக்கட்டும். ரொம்ப சந்தோஷம் மாப் பிள்ளை. உங்க பரிசை நீங்களே அவ கழுத்தில் போட்டு விடுங்க'' என்று பாக்கியம் அனுமதி கொடுக்க,

'மாங்கல்யம் தந்துனானே...' என்ற மந்திர கோஷம் இல்லாமலேயே கழுத்தில் அணிவித்தான் புகழேந்தி.

அந்த வினாடியில் இரண்டு குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே இருந்தாலும் கூட, அவர்களின் திருமணம் அந்த வினாடியே முடிந்து விட்ட ஒரு திருப்தியும் சந்தோஷமும் அங்கே இருந்த ஐவரின் மனதிலும் எழுந்தது. அடுத்த இருபதாவது நாளில் ஒரு சுபமுகூர்த்த நாள் அவர்களின் திருமணத்திற்குக் குறிக்கப்பட்டது.

''ரொம்ப பக்கமா இருக்கே அண்ணா? கல்யாணம் நல்ல படியா நடத்த முடியுமா?'' என்று கேட்ட பூரணிக்கு ஒரு சிரிப்பு ஒன்றே கிடைத்தது.

''மண்டபம் கிடைப்பது பிரச்னையாக இருக்கும் என்று நினைத்தேன். மதுரவாயலில் கட்சி கூட்டம் நடத்த புக் பண்ணி, கூட்டம் ஒத்தி வைக்கப் பட்டதால், இப்ப ப்ரீயா இருப்பதை உறுதி செய்து விட்டேன். நீங்களும் உங்க பையனும் கல்யாண மண்டபத்துக்கு வந்தால் போதும்'' என்று ராஜேந்திரன் உறுதி அளிக்க, பாரதியின் முகம் மலர்ந்து விகசித்தது.

வீட்டைச் சுற்றிப் பார்க்கவும், கல்யாண ஏற்பாடுகள் குறித்து பேசவும், அவர்களுக்கு நிறைய விஷயங்கள் இருந்தது. பெரியவர்கள் தனியே ஒரு கலந்துரையாடல் நடத்தி கொண்டு இருக்க புகழும் பாரதியும் தனி ராஜாங்கத்தில் திளைத்து இருந்தனர்.

முதல் நாள் பெண் பார்க்க பாரதி வீட்டுக்குச் சென்ற போது மட்டும் அல்லாமல், பத்திரிகை மாடல் பார்க்க, கோவிலுக்குச் செல்ல, சும்மா ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, புடவை வாங்க, நகை வாங்க என்று அடுத்



தடுத்து பாரதியும் புகழும் தனியாகவும் குடும்பத்தின ரோடும் சந்திக்க நேர்ந்த ஒவ்வொரு முறையும் புகழேந்தி பாண்டியனின் காரிலேயே வந்து இறங்கியதும், அவனும் முறையும் தவறாமல் தாங்குவதும் பாரதியின் கண்களில் பட்டது.

முதல் இரண்டு மூன்று முறை பவ்யமாக இருக்கும் டாக்ஸி டிரைவர் என்று நினைத்தவள் அடுத்தடுத்து அவனின் உள்ளார்ந்த அன்பை விளக்கும் செயல்களை பார்த்து நெகிழ்ந்தாள்.

''அதென்ன புகழ் பாண்டியன் நீங்க நிற்கும் திசையைக் கூடத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொள்வார் போல. அவ்வளவு பணிவும் மரியாதையும் ஒரு லோன் கொடுத்ததற்காக வந்ததா?'' என்று வியப்புடன் விசாரித் தாள் பாரதி.

''நீயே சொல்லு. ஒரு பாங்க் மேனேஜர் - வாடிக்கை யாளர் என்ற உறவு இந்த மாதிரி ஒட்டுதலைக் கொடுக்க முடியுமா?'' என்று திருப்பிக் கேட்க அவள், 'ம்ஹூம்! சான்ஸே இல்லை' என்று மறுப்பு தெரிவித்தாள்.

''அப்பா இறந்த சமயத்தில், அம்மா ரொம்ப அப் செட்டா இருந்த நேரத்தில், கோவிலே கதி என்று இருப் பாங்க. சரியா சாப்பிடவும் மாட்டாங்க. மருந்தீசுவரர் கோவிலில், பிரதோஷ சமயத்தில், பகல் முழுதும் சாப் பிடாமல் இருந்ததாலும், கூட்டமாக இருந்ததால், அம்மா மயக்கம் அடைந்து விட்டாங்க. அப்ப பாண்டியன் அவங்களை பத்திரமா வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தான். அவனுக்கு ஏதாவது செய்யணும் என்று நான் ஆசைப் பட்டேன். அப்ப அவன் ஆட்டோ ஓட்டிக் கொண்டு

இருந்தான். சொந்தமாக கார் ஓட்டினால் சீக்கிரம் முன்னுக்கு வரலாம் என்று ஆலோசனை சொன்னேன். அவன் அம்மாவுக்கு செய்த உதவிக்கு நான் செய்த உதவி சின்னது'' என்று சொல்ல அவள் பெருமையுடன் ஆமோதித்தாள்.

பூரணி, புகழ், அவர்களின் உறவு, நட்பு மீது பாரதி வீட்டினர் வைத்த நம்பிக்கையும் மரியாதையும் நாளுக்கு நாள் அதிகரிக்கவே செய்தது. அதே போல, பாரதியின் தாய் தந்தை பழகும் விதமும், பாரதியின் கலகலப்பும் கண்டு, அவர்கள் குடும்பத்தின் மீது பூரணிக்கும் மரியாதை ஏற்பட்டது.

உங்களுக்கு எத்தனை பத்திரிகை வேண்டும்? நாளை உங்க ட்ரெஸ் அளவு கொடுக்க வந்துடுங்க மாப்பிள்ளை. பாரதிக்கு நகை வாங்கப் போகலாமா? கல்யாண வேலைகள் அனைத்துக்கும் ஒற்றை ஆளாக ஈடு கொடுத்த வருங்கால மாமியாரைப் பார்க்கப் புகழேந்திக்கு பெருமையாக இருந்தது.

''அத்தை, அப்பா இறந்த பிறகு இந்த ஒரு வருஷமா வீட்டுக்குள் ஒடுங்கி கிடந்தாங்க. அப்பா இறந்தது சாலை விபத்தில் என்பதால், எங்க வண்டியை விற்று விட்டோம். பிறகும் என்னை வண்டி ஓட்ட விடல. உங்களைப் பார்த்து அம்மாவின் மனசு சீக்கிரம் மாறி விடும் என்ற நம்பிக்கை வந்து விட்டது'' என்று தன் மனக் குறையைப் பகிர்ந்து கொண்ட மருமகனை இன்னும் பிடித்தது. இரு வீட்டினரும் ஒருவர் மேலே மற்றவர் வைத்து இருந்த மரியாதை மேலும் மேலும் வளரும்படி நடந்து கொண்டனர்.



# 13

காலையில் பூரணி பாரதியை அலைபேசியில் அழைத்து, ''புகழ் முகூர்த்த புடவை எடுக்க காஞ்சிபுரம் செல்லலாம் என்று சொல்லி இருக்கிறான் பாரதி. நீயும் வரணும்'' என்று அழைத்தார்.

''என்ன அத்தை இது? அப்பாவே ஜவுளி கடை வைத்து இருக்கிறார். 15 நிமிஷத்தில போகலாம். நமக்கு இல்லாத விலை சலுகையா? இங்கே எடுப்பதை விட்டுட்டு காஞ்சிபுரம் போகணுமா?''

''தெரியலை பாரதி. நீ புகழிடம் பேசி முடிவு பண்ணிக்கோ. அவன் உன்னிடம் சொல்லச் சொன்னான். நான் சொல்லி விட்டேன்'' என்று முடித்து விட்டார் பூரணி.

''ராத்திரி ஒரு மணி வரை கதை பேசிய போது இதை சொல்லலை. இன்னிக்கு பத்து மணிக்குப் போகணும். எட்டு மணிக்கு தகவல் அம்மா மூலம் சொல்கிறாயா? உன்னை என்ன செய்கிறேன் பார்' என்று அவனை அழைத்தாள் பாரதி. முதலாம் ஓசையிலேயே பாய்ந்து எடுத்தவன் பதிலே சொல்லாமல் சத்தமாகச் சிரித்தான்.

''ஹலோ! எதுக்கு இப்படி பீ.எஸ். வீரப்பா மாதிரி சிரிக்கிறீங்க? பல்லு சுளுக்கிக்கப் போகுது'' அவள் கோபமாகப் பேசியதும் அவனின் சிரிப்பை அதிகப்படுத்தவே செய்தது.

''பீ.எஸ். வீரப்பாவா? இந்த கால நடிகர்கள் யாரும் கிடைக்கலையா? ஆமா உனக்கு என்ன வயசு? உங்க அம்மா அப்பா என்னை ஏமாற்றி ஒரு வயசான பெண்ணை என் தலையில் கட்டப் பார்க்கறாங்களா?''

''ஆமா! எனக்கு ஒரு வயசு என்றால் உங்களுக்கு என்ன மூன்று வயசா?'' என்று கேட்க அவன் மேலும் சிரித்தான்.

''அட! கோபத்துல கூட காமெடி செய்கிறாயே?''

''இந்த மாதிரி பேச்சை டைவர்ட் பண்ண நினைக்காதீங்க. ஏன் என்னிடம் சொல்லலை?''

''இப்படி மொட்டையா கேட்டால் நான் எதை என்று நினைப்பது? விஷயத்தைச் சொல்லிக் கேட்டால், கரெக்டா பதில் சொல்ல முடியும்.''

''இன்னிக்கு புடவை எடுக்கப் போகிறோம் என்று நேற்று நைட் ஏன் சொல்லலை?''

''நேற்று நைட் நாம் முக்கியமான விஷயம் எல்லாம் பேசும்போது இந்த சின்ன விஷயம் நினைவில்லை பாரதி.''

''என்ன முக்கியமான விஷயம் பேசினோம்?'' என்று யோசித்தவளுக்கு ஒன்றும் நினைவில் வரவில்லை. பிங்க் கலர் பிடிக்கும், சல்வார் வசதியான உடை. அம்மாவுக்கு பிரியாணி சமைத்த கதை. இந்த மாதிரி முக்கியமான விஷயங்கள் பேசப்பட்டது.

ஒரு வாக்கியத்துக்கு இரு முறை, 'அப்புறம்' சொல்லப்பட்டது. நாலு வார்த்தைக்கு ஒரு முறை சிரிப்பு வந்தது. இரண்டு வாக்கியங்கள் இடைவெளியில் 'சீய்' என்று



வெட்கப்பட்டாள். அவள் தீவிரமாக யோசித்ததைப் பார்த்த புகழேந்திக்கு சிரிப்பு பொங்கியது.

''ஹேய் ரொம்ப சீரியஸா யோசிக்காதே ரதி. மறந்து விட்டாய் என்றால் விடேன். போக இன்று புடவை எடுக்கலாம் என்று முடிவு பண்ணியது நான் இல்லை.''

''பிறகு வேறு யார் எடுத்தது?''

''உங்க அம்மா தான்.''

''காஞ்சிபுரம் போகும் முடிவு?''

''அது நான் எடுத்தது.''

''ஏன்?''

''ஏன் என்றால் என்ன சொல்வது? உன்னுடன் வாழ்க்கை இணை பிரியாமல் இறுதி வரை வாழ கல்யாணம் பண்ணிக் கொள்ள சம்மதம் சொல்லி விட்டேன். இங்கே இருக்கும் காஞ்சிபுரத்திற்குப் போக மாட்டேன் என்று சொல்ல முடியுமா?'

''ப்ச்! இந்த மாதிரி பேச்சை ட்விஸ்ட் பண்ணாதீங்க. அரை மணி நேரம் பயணம் செய்தால் வரும் மைலாப்பூரில் எங்க அப்பாவே ஜவுளிக் கடை வைத்து இருக்கார். அங்கே போகாமல், இரண்டு மணி நேரம் பயணம் பண்ணி காஞ்சிபுரம் போய் புடவை வாங்கணும் என்று என்ன அவசியம்?''

''ஹேய் லூசு, எதையும் மேலோட்டமா பார்க்காதே அதுக்கு அடியில் இருக்கும் நோக்கத்தைப் பாரு. அப்ப கோபம் வராது.''

''அந்த நோக்கம் என்ன என்று எனக்குப் புரியலை. உங்களிடம் கேட்கிறேன், நீங்க விலாவாரியா விளக்கம் சொல்லுங்க.''

''பாரு அதைக் கூட கோபமா தான் சொல்கிறாய். இருந்தாலும் சொல்கிறேன். இங்கே இருந்து காஞ்சிபுரம் எப்படிப் போவோம்?''

''காரில்...''

''எவ்வளவு நேரம் ஆகும்?''

''போக ரெண்டு மணி நேரம் வர ரெண்டு மணி நேரம் அங்கே நாலு மணி நேரம். இன்னிக்கு ஃபுல்லா ஆக்கிடும்.''

''அதுக்கு தான். நாள் பூரா உன்னுடன் இருக்க கிடைக்கும் சந்தர்ப்பத்தை விட மனசு இல்லாமல் தான் காஞ்சிபுரம் போகலாம் என்று சொன்னேன். உங்க அப்பா கடைக்குப் போனால், மிஞ்சி மிஞ்சிப் போனால் ரெண்டு மணி நேரம் தான் சேர்ந்து இருக்க முடியும். உனக்கு என்றால் உங்க கடையில் வேலை செய்பவர்கள் கோடவுனில் இருக்கும் எல்லா புடவைகளையும் ஐந்தே நிமிடத்தில் கொண்டு வந்து அடுக்கி விட மாட்டாங்களா?''

''ஓ.''

''அது மட்டுமில்லை அங்கே உன்னைத் தெரியாத ஆள் இருக்குமா? நாம் எங்கே போனாலும் யார் கண்ணிலாவது பட வேண்டி இருக்கும். ஆங்காங்கே தூணுக்குப் பின்னாடி ஒளிஞ்சு, கண்ணாடி முன்னாடி நின்று புடவை உன் மேலே வச்சு பார்க்கிறேன் என்று சாக்கு சொல்லியபடி.''

''யேய்! திருட்டு ராஸ்கல்'' என்றவளின் குரலில் கோபம் முழுமையாக காணாமல் போய் இருந்தது.



''இன்னொரு காரணமும் இருக்கு ரதி.''

''சொல்லுங்க.''

''இங்கே உங்க கடையில் எடுத்தால், உங்க அப்பாவிடம் பணம் கொடுக்க ஒரு மாதிரி இருக்கும். அவர் அசல் விலை, லாபத்தை குறைச்சுக்கறேன் என்று ஏதாவது குறைச்சுப் போடுவதைத் தடுக்கவும் முடியாது. அந்தப் புடவை விலையை நீ வெளியே சொன்னால் யாராவது ஏதாவது சொல்லக் கூடும். அதைப் பொருட்படுத்த வேண்டாம் என்றாலும் கூட அவசியம் இல்லாத பிரச்னை என்று நினைத்தேன் ரதி.''

''இதை எல்லாம் அப்பாவிடம் சொன்னீங்களா என்ன?''

''சொல்லணுமா பாரதி.''

''புகழ்.''

''ம்ம்ம்...''

''நீங்க இவ்வளவு யோசிப்பீங்களா?''

''இதுக்கு மேலேயும் யோசிப்பேன் கண்ணு.''

''ஆஹா! அப்படி என்ன யோசித்தீங்க? கொஞ்சம் சொல்லுங்க கேட்போம்'' என்றவளின் குரலில் சிரிப்பு இருந்தது.

''நைட் திரும்ப லேட் ஆகிடும். வழியில் காரை ரிப்பேர் பண்ணி...'' என்று அவன் வேண்டும் என்றே ரிப்பேர் பண்ணி...'' என்று அவன் இழுத்து நிறுத்த அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''ரிப்பேர் பண்ணி.''

''கார் நின்றதும், உன்னை மட்டும் தனியா அழைத்துப் போய்.''

''அழைத்துப் போய்.''

''ஆள் நடமாட்டம் இல்லாத காட்டுக்குள் இருக்கும் அந்த...'' என்று நிறுத்திவிட்டு சிரித்தான்.

''அப்புறம், மேலே சொல்லுங்க'' என்றவளுக்கும் சிரிப்பு பொங்கியது.

''என்ன பொண்ணு நீ? இப்படிச் சிரிக்கிறாய்? உனக்குக் கொஞ்சம் கூட பயமே இல்லையே?''

''பேசுறது நீங்களா இருக்கும்போது, எனக்கு எப்படி பயம் வரும் புகழ்?'' என்றவளின் குரலில் நெகிழ்ந்தான்.

''மேலே என்ன நடக்கும் என்று தெரிந்து கொள்ள ஆசைகூட இல்லையா?'' என்று அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், கேலியாகக் கேட்டான்.

''சரி உங்க திருப்திக்காக கேட்கிறேன் என்ன செய்யப் போறீங்க?''

''ஹைவே மோட்டலுக்கு அழைச்சுட்டுப் போய் டிபன் வாங்கி தருவேன்'' என்று சொன்னதும் ரசித்துச் சிரித்தாள் பாரதி.

''காரை ரிப்பேர் பண்ணி அதன் பிறகு தான் சாப்பிடக் கூப்பிடணும் என்று வேண்டுதலா?''

''ஆமா.''

''அதுவும் ஆள் நடமாட்டம் இல்லாத ஹோட்டலுக்கு தான் போகணுமா?''

''ஆமா.''

''ரொம்ப தான் லொள்ளு உங்களுக்கு.''



''பின்னே கல்யாணம் பண்ணிக்கப் போகும் பெண்ணிடம் லொள்ளு பண்ண சான்ஸ் கிடைத்தால் விடலாமா?''

''நீங்க ரொம்ப பேட் பாயா இருக்கீங்க.''

''உன்னிடம் அப்படி தான இருக்க முடியும் ரதி. உன்னிடம் நல்ல பையன் வேஷம் போட்டால் காரியம் நடக்குமா?''

''மணி எட்டரை ஆச்சு. கிளம்ப வேண்டாமா? போனை வைங்க.''

''நீ வை முதலில்.''

''நீங்க வைங்க.''

''நீதானே போன் பண்ணினாய். நீயே வை.''

''நான் தானே போன் பண்ணினேன். அதனால் நீங்க வைங்க.''

''இதென்ன அநியாயம்? போன் பண்ணினவங்க தான் முதலில் வைக்கணும்.''

''நம்ம வீட்டுல எல்லாம் சமத்துவம் தான் நியாயம். ஒருத்தர் போன் பண்ணினால், அடுத்தவங்க தான் வைக்கணும்.''

''இந்த நியாயம் நேற்று இரவு நான் சொன்னபோது நீ ஒத்துக் கொள்ளவில்லையே?''

''அது நேற்று...''

''இதெல்லாம் போங்காட்டம்'' என்று புகழ் மேலும் வம்பு வளர்க்கும் போது, ''புகழ் குளிக்கலையா? மணி ஆகுதுப்பா'' என்ற பூரணியின் குரல் கேட்டது.

''அம்மா கூப்பிட்டதால் இப்ப வைக்கிறேன். இன்னிக்கு நைட் உனக்கு இருக்கு'' என்று செல்லமாகக் கருவ உற்சாகமாகச் சிரித்தாள் பாரதி.

''ராத்திரி பிரச்னையை ராத்திரி பார்க்கலாம் புகழ் பைபை'' என்று சொல்ல இருவரும் ஒரே நேரத்தில் போனை வைத்தனர்.

''விலையைப் பற்றிய கவலை வேண்டாம் பாரதி. உனக்குப் பிடித்து இருப்பது தான் முக்கியம் என்று புகழேந்தி பூரணி இருவருமே சொல்லி விட்டதால் தன் மனத்திற்குப் பிடித்த புடவைகள் சிலவற்றை தனியே எடுத்து வைத்தாள்.

அதில் பெரும்பாலானவை நீலநிறத்தில் இருக்க, பாக்கியமோ, ராஜேந்திரனோ, 'பார்டர் எடுப்பாக இல்லை' ''ஜரிகை நிறம் மங்கலாக இருக்கு' விலை கம்மியா இருக்கு', 'விலை அதிகமா இருக்கு', 'இது அசல் பட்டு இல்லை' என்பது போன்ற காரணங்கள் சொல்லி வேண்டாம் என்று ஒதுக்க, பாரதியின் பொறுமை குறைந்தது.

''புகழ்! புடவையைக் கட்ட போகிறது நான். பார்க்கப் போறது நீங்க. நம் இருவருக்கும் பிடித்த ஒரு புடவையை எடுக்க விடாமல் அம்மாவும் அப்பாவும் தொந்தரவு பண்றாங்க'' என்று காதோரம் வந்து கடிக்க புன்னகை செய்தான்.

''சரி, நாம் முதலில் தேர்வு செய்யலாம். அப்புறமா உங்க அம்மாவிடம் பேசுகிறேன்'' என்று சொல்லி நாலைந்து புடவைகளை அள்ளிக் கொண்டு கண்ணாடி முன்பு சென்று நின்றான்.



புடவையை நான்காக மடித்து அவளின் மேல் வைத்து அவளின் பின்புறம் நின்றபடி, கண்ணாடியில் அவளின் முகத்தையும் தோற்றத்தையும் பார்த்து ரசித்த புகழுக்கு மனம் அங்கே இல்லை. அவளின் தோற்றமும் அருகாமையும் ஸ்பரிசமும் மேலும் கிறங்கடிக்க, ஒரு பட்டுப் புடவையில் அவளைப் பார்த்து சொக்கிப் போனான்.

''ரதி, இந்தப் புடவையில் சும்மா ஏஞ்சல் மாதிரி இருக்கிறாய்'' என்று கிசுகிசுப்பாக சொன்னவன் இதழ்கள் பின்னால் அவள் கழுத்தில் பதிந்தது போலத் தோன்றியது.

''உனக்குப் பிறந்த நாளுக்கு உங்க அப்பா கிப்ட் வாங்கிக் கொடுக்கச் சொன்னாலும் சொன்னார். கடையையே தலை கீழா புரட்டுவாய் போல இருக்கே? இந்த நேவி ப்ளூ சல்வாரை எடு. நிறமும், துணி நயமும், கையில் இருக்கும் மணி வேலைப்பாடுகளும் தூக்குது. இதை நீ போட்டுக் கொண்டால் அப்படியே ஏஞ்சல் மாதிரி இருப்பாய்'' என்று தன் மேல் சல்வாரை வைத்துப் பார்த்துச் சொன்ன ஒரு குரல் பாரதியின் நினைவலையில் ஒலித்தது.

அதன் தொடர்ச்சியாக, அந்தக் குரலுக்கு உரியவனே அருகே நிற்பது போலப் பாவனை செய்து, ''ஏற்கனவே இதே கதையைச் சொல்லி சுடிதார் எடுக்க வைத்தாச்சு. இப்ப அதே வார்த்தை சொல்லி பட்டுப் புடவையா? ரொம்ப ஸ்மார்ட் தான்'' என்று சப்தமாகவே பாரதியின் குரல் வெளிவர புகழ் திகைப்புடன் பாரதியை உலுக்கினான்.

''பாரதி, நான் உனக்கு சுடிதார் எடுத்துக் கொடுத்தேனா? எப்போ? எங்கே? உன் கனவிலா?'' என்று

ரசனையுடன் சீண்டிச் சிரிக்கும் வேளையில் அவசரமாக ராஜேந்திரன் அருகே வந்து அவளின் கை பற்றி இழுத்தார்.

"இந்த நேவி ப்ளு கலர் வேண்டாமே, வேற ஏதாவது பார்க்கலாம்."

"ஏன் மாமா? அது நல்லா தானே இருக்கு. கட்டிக்கப் போகிறவளுக்கும் பிடித்து இருக்கு. பார்க்கும் எனக்கும் பிடித்து இருக்கு. அப்புறம் என்ன? மாமா பாரதிக்கு என்ன பிடிச்சு இருக்கோ எடுத்துக் கொள்ளட்டும் மாமா. கலரிலோ, விலையிலோ, டிசைனிலோ எதிலுமே தலையிட வேண்டாம்" என்று அவன் சொல்லத் தயங்கி னார்.

"நான் சொல்வதற்கு ஒரு காரணம் இருக்கு மாப் பிள்ளை."

"என்ன மாமா சொல்லுங்க..."

"ஏற்கனவே சிவா தனக்குப் பிடித்தது என்று இவளின் பிறந்த நாளைக்கு வாங்கித் தந்த நிறம் அது. அதனால் தான்..."

"அது ஒன்றும் பிரச்னை இல்லை மாமா. எப்போதும் என்ன நடக்குமோ என்று பயந்து பயந்து ஒதுங்கி நின்றால் தான் பிரச்னை பூதாகரமாகத் தெரியும். இது தான் பிரச்னை என்று தெரிந்து விட்டது. இல்லையா? அவளுக்குத் தகுந்த மாதிரி பேசிச் சமாளிக்க என்னால் முடியும் மாமா. நான் பார்த்துக் கொள்கிறேன்." என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல நம்பிக்கையுடன் தலை அசைத்தார் ராஜேந்திரன்.



# 14

பூரணி மீது புகழேந்தி மீதும், அவர்களின் உறவு, நட்பு மீதி பாரதி வீட்டினர் வைத்த நம்பிக்கையும் மரியாதையும் நாளுக்கு நாள் அதிகரித்தது போல, பாரதியின் தாய் தந்தை அன்போடு பழகும் விதமும், பாரதியின் கலகலப்பும் கண்டு, அவர்கள் குடும்பத்தின் மீது பூரணிக்கும் மரியாதை ஏற்பட்டது.

விதவை என்று திருமண வீட்டில் ஒதுங்கி நின்றவரை இழுத்துப் பிடித்துக் கல்யாண சடங்குகளில் பங்கெடுக்க வைத்து கூட்டுக்கு வெளியே வர வைத்த மாமியாரை புகழேந்திக்கு பிடித்துப் போனது. இரு வீட்டினரும் ஒருவர் மேலே மற்றவர் வைத்து இருந்த மரியாதை வளரும்படி நடந்து கொண்டனர்.

"விதவைகள் மங்கள நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் கூடாது என்பதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியாது அண்ணி. ஆனால் பிள்ளைகளின் வாழ்வு நல்லா இருக்கணும் என்று பெற்றவங்களை விட வேறு யாருமே வாழ்த்திவிட முடியாது வாங்க..." என்று இழுத்துப் பிடித்து மேடையில் நிற்க வைத்தார்.

தாரை வார்த்துக் கொடுக்கும்போது பாரதியை கை பிடித்து வாங்க, புகழின் பெரியப்பா பெரியம்மாவை

நிறுத்தினாலும், அவர்களுக்கு பாத பூஜை செய்வதற்கு முன்பாகவே புகழேந்தியுடன் தன் மகளையும் சேர்த்து நிற்க வைத்து மண மேடையிலேயே பூரணிக்கு செய்ய வைத்தார் பாக்கியம்.

வசதியான இடத்தில் பெண் எடுத்து விட்டோமே, பையனின் வாழ்வு சிறப்பாக இருக்குமா என்ற கவலையுடன் இருந்த பூரணிக்கு, பாக்கியத்தின் அந்த வார்த்தையும் செயலும் வயிற்றில் பால் வார்த்தது.

திருமணத்திற்கு முந்தைய தினம் மாப்பிள்ளை அழைப்பில் கோலாகலமான சடங்குகள் நடைபெற்று, இரவு உணவு முடித்து மணமக்கள் தத்தம் அறைக்குச் சென்ற பிறகும் அவர்களுக்கு இடையே பேச்சு நிற்கவே இல்லை. அதுவரை நேரிலும், கண் ஜாடையிலும், பேசிக் கொண்டவர்கள் தனி அறைக்குச் சென்ற உடனே தொலைபேசியை சரணடைந்தனர்.

''ஹேய்! என்ன அதுக்குள்ளே ரூமுக்குப் போய்ட்ட?'' என்று மனத்தாங்கலுடன் புகழ் கேட்க அவள் சிரித்தாள்.

''மணி என்ன பார்த்தீங்களா?''

''பதினோரு மணிக்கு, இதுக்கு முன்னாடி நாம் பேசியதே இல்லையாக்கும்?''

''பேசி இருக்கோம் தான். ஆனால் மற்ற நாளுக்கும் இன்றைய பொழுதுக்கும் வித்தியாசம் இல்லையா? இன்று ஒரே நாள் பொறுத்துக்கோங்க. நாளை இரவு நம்மை யார் கேள்வி கேட்க முடியும்?''

''அதென்ன நாளை வரை பொறுப்பது? இன்றே நம்மை யாரும் கேள்வி கேட்க முடியாது தெரியுமா?''



என்று அவன் மல்லுக்குக் கட்ட அவளுக்கு மனம் உருகினாலும் சிரிப்பும் வந்தது.

''உங்களுக்கு என்னை எவ்வளவு பிடிக்கும்? ஏன் புகழ்?'' என்ற அவளின் வழக்கமான கேள்வியை கேட்க அவன் சிரித்தான்.

''ரொம்பப் பிடிக்கும். தெரியாதா உனக்கு?''

''பிடிக்கும் என்று தெரியும். ஏன் பிடிக்கும் என்று கேட்கிறேன் புகழ்?''

''உனக்கு என்னைப் பிடிக்க என்ன காரணம் சொல்லு பார்ப்போம்.''

''நீங்க எங்க அம்மா அப்பா பார்த்த மாப்பிள்ளை. அதனால் பிடிக்கும்.''

''அவ்வளவு தானா?'' என்றவன் குரலில் ஏமாற்றம் இருக்க அவள் கலகலவென்று ரசித்துச் சிரித்தாள்.

''இப்ப எதுக்கு இப்படிச் சிரிக்கிறாய்?''

''எனக்குப் பிடித்த, என் லட்சியங்களை மதிக்கின்ற, என்னை விரும்புகின்ற, மாப்பிள்ளையுடன் நாளை கல்யாணம். அந்த சந்தோஷத்தில் சிரிக்கிறேன். உங்களுக்கு என்ன நஷ்டம்? நீங்க ஏன் இப்படி உர்ருன்னு இருக்கீங்க?''

''உனக்கு ரொம்ப வாய் ஜாஸ்தியாகி விட்டது. உன்னை நாளைக்கு கவனித்துக் கொள்கிறேன். இப்ப குட் நைட் சொல்லு'' என்றதும், அடுத்த விநாடியே, அவள் 'குட் நைட்' என்று சொல்ல அவன் பல்லைக் கடித்தான்.

''குட் நைட் சொல்லச் சொன்னால இப்படியா சொல்றது?''

''வேறே எப்படிச் சொல்வாங்க?''

''அதுவும் நானே சொல்லித் தரணுமா?''

''தெரியாததைச் சொல்லித் தந்தால் என்னவாம்?''

''நிஜமாவே தெரியலை என்றால் சொல்லித் தரலாம். தெரியாத மாதிரியே நடித்தால்.''

''நான் ஒன்றும் நடிக்கலை.''

''ஒண்ணும் ஒண்ணும் சேர்ந்தால் என்ன வரும் என்று கூடத் தெரியாத சின்ன பாப்பா நீ. இல்லை ரதி?''

''ஒண்ணும் ஒண்ணும் சேர்ந்தால் ஒண்ணு வரும் கரெக்டா?'' என்றவளின் குரலில் குறும்பு கூத்தாட அவன் கோபம் குறைந்து புன்னகை மலர்ந்தது.

''எப்படி ஒண்ணு வரும்?''

''நீங்க ஒண்ணு. நான் ஒண்ணு. இந்த ரெண்டும் சேர்ந்தால் நாம் என்ற ஒண்ணு வரும். அதைச் சொன்னேன்...'' என்று கொஞ்சலாகச் சொல்ல அவனுக்கு கிறக்கம் வந்தது.

''தப்புத் தப்பா விளக்கம் சொல்லக் கூடாது...'' என்றவனின் குரலில் சீண்டல் இருக்க, ''என் விளக்கத்தில் என்ன தப்பு?'' என்று மடக்கினாள் பாரதி.

''நீயும் நானும் சேர்ந்தால், ஒண்ணு வராது. மூணு வரும். உன்னையும் என்னையும் தவிர குட்டி ரதியோ, குட்டி புகழோ, கூடுதலா வரும்'' என்று அவன் ஆரம்பிக்கும்போதே அவளின் முகம் சிவந்தது.

''இப்படி எல்லாம் பேச உங்களுக்கு யார் சொல்லிக் கொடுக்கறாங்களோ?''



''சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை.''

''போதும் புகழ், நான் போனை வைக்கிறேன்...'' என்று சொன்னவள் போனை வைக்கவில்லை.

''சரி ரதி...'' என்று ஒப்புதல் கொடுத்தவனும் வைக்கவில்லை.

''போனை வைக்கிறேன் என்று சொன்னேன்.''

''வச்சுக்கோ என்று நானும் சொன்னேன்.''

''நீங்க வைங்க.''

''நான் தானே போன் பண்ணினேன். நீ வை.''

''ஆனாலும் ரொம்ப பிடிவாதம் புகழ் உங்களுக்கு.''

''உனக்கு ரொம்ப கம்மி.''

''இன்னும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டு இருக்கலாம் என்று தோன்றுது.''

''எனக்கு இப்பவே அங்கே வரணும் போல இருக்கு தெரியுமா?''

''ஹையோ வேண்டாம்.''

''வந்து என்ன செய்வேன் என்று கேட்கலையே?''

''நான் கேட்கலை.''

''நீ கேட்கலை என்றாலும் நான் சொல்வேன்.''

''நான் காதை மூடிக் கொள்வேன்.''

''ஐ டோன்ட் கேர்...'' என்று அதிகாரமாகச் சொன்னாலும், அதன் பிறகு நீண்ட நேரம் அவன் ஒன்றுமே சொல்லவே இல்லை.

''வெறும் வாய் தான் புகழ் உங்களுக்கு'' என்று சொன்னபடி திரும்பியவள் அவளின் பின்னால் நின்ற புகழைப் பார்த்துத் திகைத்தாள்.

''புகழ், இந்த நேரத்தில் இங்கே என்ன பண்றீங்க?'' என்று சொல்ல முயன்று வெறும் காற்று மட்டுமே வந்தது.

''என்னை மாதிரி ஒரு செயல் வீரனை பார்த்து வாய் பேச்சில் வீரன் என்று சொல்லி விட்டாயே? அதான் இல்லை என்று ப்ரூவ் பண்ண வந்துட்டேன்.

''புகழ், யாராவது பார்த்துவிடப் போறாங்க. உங்க ரூமுக்குப் போங்க. ப்ளீஸ்...''

தலை அலங்காரத்தைக் கலைத்து வெறுமனே க்ளிப் போட்ட கூந்தலில் மணக்கும் மல்லிகை நிறைந்து இருக்க அதில் இருந்து வீசிய மணம் அவனை அருகே இழுத்தது. லூசாக இருந்த முடியில் விரல்களை செலுத்தி வருட அவளுக்கு எங்கோ பறப்பது போல இருந்தது.

''பொழுது விடிந்தால் நமக்கு கல்யாணம் ரதி இன்னும் என்ன பயம்? உனக்கு நான் எனக்கு நீ இதை இந்த உலகமே நாளை அறியும் ரதி. பயப்படாதே'' விரல்களும் இதழ்களும் நெற்றியில் இருந்து கன்னம் வழியாக அவள் இதழ்களுக்கு மிக மெதுவாகப் பயணம் செய்ய அவள் இந்த பூமியில் கால் பாவாமல் மேலே மேலே பறந்து கொண்டு இருந்தாள்.

''புகழ்... ப்ளீஸ்... இப்ப வேண்டாம்...''

''பொண்ணுங்க அகராதியில் வேண்டாம் என்றால் வேண்டும் என்று அர்த்தமாம்'' என்று ரகசியம் பேசியவன் குனிந்து இதழ்களில் முத்தமிட்டான்.



''பாரதி இன்னும் தூங்காமல் என்ன செய்து கொண்டு இருக்கிறாய்?'' என்ற பூரணி அம்மாவின் குரல் கேட்டு இருவரும் அவசரமாக விலகினார்கள்.

''புகழ்! நீ இங்கே என்ன பண்ணுகிறாய்?'' என்று அதட்ட அவன் சின்ன சிரிப்புடன் அசடு வழிந்தபடி வெளியேற, ''தூங்கு பாரதி. நாளைக்குக் காலையில் சீக்கிரம் எழுந்துக்கணும்'' என்று புன்னகையோடு அவளின் தலையை வருடிவிட்டுச் சென்றார் பூரணி.

''உனக்கு என்னை ஏன் பிடிச்சது?'' என்று புகழேந்தி பாரதியையும் பாரதி புகழேந்தியையும் முதல் சந்திப்புக்கும் திருமணத்துக்கும் இடையே இருந்த அந்த இருபது நாட்களில் மாறி மாறி கேட்டுக் கொண்ட கேள்விக்கு விடை தெரியாமலேயே மங்கள நாண் பூட்டும் தருணமும் வந்து சேர்ந்தது.

முப்பது முக்கோடி தேவர்களும் அக்னி தேவனின் தலைமையில் அந்த பிரமாண்டமான மண்டபத்தில் அணிவகுத்து நின்று மணமக்களை ஆசீர்வாதம் செய்ய, உறவும் நட்பும் சூழ்ந்து நிற்க, பாரதியின் சங்கு கழுத்தில் மங்கள நாண் பூட்டி, செல்வி பாரதியை திருமதி புகழேந்தியாக மாற்றினான்.

மனம் கவர்ந்தவளின் கரம் பற்றி, சப்தபடிகளைக் கடந்து, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, 'நீ என்னில் பாதி. இன்பத்திலும் துன்பத்திலும் இணை பிரியாமல் உன்னுடன் துணை நிற்பேன்' என்று அக்னி தேவன் முன்னிலையில் சத்தியம் செய்து தன்னில் பாதியாக பாரதியை மனமுவந்து ஏற்றுக் கொண்டான் புகழேந்தி.

* * *

திருமணம் முடிந்த மறுநாள், தேனிலவிற்கென ஊட்டிக்குக் கிளம்ப ஏற்பாடுகள் செய்து விட்டு பெற்றோரிடம் விடைபெற பிறந்த வீடு வந்த பாரதியை உற்சாகமாக வரவேற்றார் பாக்கியம்.

''வாங்க மாப்பிள்ளை'' என்று புகழேந்தியை அணைத்து வரவேற்ற தந்தையையும், நெகிழ்ச்சியோடு ''பாரதி'' என்று ஒற்றை சொல்லால் வரவேற்ற அம்மாவையும் பார்க்க அவளுக்கு வியப்பாக இருந்தது.

பிறந்த நாள் முதல் இருபத்தி இரண்டு ஆண்டுகள் வளர்ந்த இடத்தை விட்டு வெளியேறிய ஒரே நாளில் அம்மா தன்னை இவ்வளவு தேடி இருக்கிறாரா என்ற எண்ணம் தோன்றியது.

''நான் இல்லாமல் போர் அடிக்குதாம்மா? சண்டை போட ஆள் இல்லையா?'' என்று வம்பு வளர்க்க ஒரு அடி வைத்தார் பாக்கியம்.

''என்ன பேச்சு பேசுகிறாய்?'' என்று மகளைக் கண்டித்து விட்டு ''வாங்க மாப்பிள்ளை, உங்களை என் பொண்ணு நல்லா பார்த்துக் கொள்கிறாளா?'' என்று அக்கறையாக விசாரித்தார்.

''அத்தை நான் ஒன்று சொன்னால் தப்பா எடுத்துக் கொள்ளக் கூடாது'' என்ற பீடிகையுடன் புகழேந்தி பேச ஆரம்பிக்க அவர் பதறிப் போனார்.

''என்ன மாப்பிள்ளை சொல்லப் போறீங்க'' என்று படபடத்தை அடக்க முயன்று தோற்ற குரலில் விசாரித்தார்.

''இந்த மாதிரி நீங்க என்னை ஒவ்வொரு வாக்கியத்துக்கும் மாப்பிள்ளை என்று சொல்வது ரொம்ப சங்கடமா



இருக்கு. அதனால் என்னை பேர் சொல்லி கூப்பிடுறீங்களா?ங்க வும் வேண்டாம் என்பது தான் என் வேண்டுகோள். ஆனால் உங்களுக்கு சிரமமாக இருந்தால் வாங்க போங்க என்று பேசிக்கோங்க. ஆனால் மாப்பிள்ளை தயவு செய்து வேண்டாமே'' என்று சொன்னதைக் கேட்டு திகைத்து நின்றார் பாக்கியம்.

''என்ன அத்தை சத்தமே காணோம்?'' என்று மீண்டும் அழுத்தமாகக் கேட்க பாக்கியத்தின் மனநிலை அறிந்து ராஜேந்திரன் இடைமிட்டார்.

''பழைய சம்பிரதாயங்களில் ஊறிப் போனவள். இந்தக் காலத்து மனிதர்கள் மாதிரி மேம்போக்கா பழகத் தெரியாது மாப்பிள்ளை.''

''அடுத்து நீங்க ஆரம்பிச்சச்சா? அத்தைக்குப் பேசிய பேச்சுக்கள் எல்லாமே உங்களுக்கும் பொருந்தும்.''

''இல்லை மாப்பிள்ளை அது வந்து.''

''இனிமேல் நீங்க மாப்பிள்ளை என்று சொன்னால் நான் இந்த வீட்டுக்கு வர வேண்டாம் என்று பார்க்கிறேன்'' என்று புகழேந்தி சொல்ல ராஜேந்திரன் பாக்கியம் இருவரும், 'ஐயோ...' என்று அலறினார்கள்.

''பின்னே என்னம்மா? அதை கொண்டா இதைக் கொண்டா என்று புடுங்குற மாப்பிள்ளை சொல்றதை வார்த்தை பிசகாமல் அப்படியே கேட்பீங்க. நான் இந்த வீட்டுக்கு ஒரு பிள்ளை மாதிரி, என்னை மாப்பிள்ளை என்று சொல்லி தள்ளி வைக்காதீங்க என்று ஒரு மனுஷன் உயிரா பீல் பண்ணி சொன்னால் அதை கேட்க மாட்டேன் என்று இருந்தால், நானும் வர மாட்டேன்

தெரிஞ்சுக்கோங்க'' என்று பாரதி இணைந்து சொல்ல இருவரும் சிரித்தனர்.

''தேங்க்ஸ் புகழ்! என் மகன் என்று நாங்க கட்டாயம் நினைத்துக் கொள்கிறோம். நீ எப்ப நினைத்தாலும் என்ன வேண்டும் என்றாலும் உரிமையா வந்து கேட்கணும். இதை நீயும் நினைவில் வச்சுக்க'' என்று சொல்லிவிட்டு மகளிடம் திரும்பினார் ராஜேந்திரன்.

''புகழ் எப்படி இந்த வீட்டுக்குப் பிள்ளை என்று நாங்க மனசு உவந்து சொல்றோமோ அதே மாதிரி நீ அந்த வீட்டுப் பொண்ணு என்பதை மறக்கக் கூடாது புகழுக்கும், பூரணி அண்ணிக்கும் தெரியாமலோ அவர்களுக்குப் பிடிக்காமலோ எந்தக் காரியத்தையும் நீ செய்யக் கூடாது. அவங்களை அனுசரிச்சு நடக்கணும்'' என்று பாக்கியம் சொல்ல அவள் சிரித்தாள்.

''எனக்கு மாமியார் அம்மா மாதிரி அன்பா இருக்காங்க. ஆனால் அம்மா தான் மாமியார் மாதிரி திட்டிட்டே இருக்காங்க'' என்று கொஞ்சிய பாரதியை அணைத்துச் சிரித்தான் புகழேந்தி.

''அதை நான் பார்த்துக்கறேன் அத்தை. மாமா. நானும் பாரதியும் ஊட்டிக்கு இன்று இரவு ரயிலில் கிளம்புறோம். வர ஒரு வாரம் ஆகும். அதான் போவதற்கு முன்னால் உங்களிடம் சொல்லிவிட்டு, நடுவில் அம்மாவை அப்பப்போ எட்டிப் பார்த்துக்கோங்க என்று சொல்லிப் போக வந்தோம்'' என்று புகழேந்தி சொல்ல ராஜேந்திரனும் பாக்கியமும் ஒருவரை ஒருவர் திகைப்புடன் பார்த்துக் கொண்டனர்.



''ஊட்டிக்கா...? பாரதி இது உனக்குத் தெரியுமா?'' என்று முதலில் சுதாரித்து திகைப்புடன் மகளை விசாரித்தது ராஜேந்திரன்.

''ஏன் மாமா இப்படி கலவரத்தோடு கேட்கறீங்க? ஊட்டி ஹனிமூனுக்குப் போகக் கூடாத இடமா?'' என்று புகழேந்தி சிரிப்புடன் கேட்க அவசரமாக, 'இல்லை மாப்பிள்ளை, அப்படி இல்லை...' என்று இடையிட்டார் பாக்கியம்.

''ஹையோ அத்தை மறுபடியும் முதலில் இருந்தா? போங்க அத்தை நான் உங்க பேச்சு காய்'' என்று சொல்லிவிட்டு சோபாவுக்கு மனைவியையும் அழைத்துக் கொண்டு செல்ல அவர் கணவனைத் திரும்பிப் பார்த்தார்.

''நீ போய் அவங்களுக்குச் சாப்பிட எதாவது எடுத்துட்டு வா, நான் மோகனிடம் பேசிவிட்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு ராஜேந்திரன் அலைபேசியுடன் தன் அறைக்குச் செல்ல, குழப்பம் மாறாமலேயே அடுக்களைக்கு நகர்ந்தார் பாக்கியம். இதுவரை எல்லாம் நன்றாகப் போய்க் கொண்டு இருந்தது. இனிமேலும் பிரச்னை இல்லாமல் போக வேண்டுமே!

## 15

சிவாவின் மரணம் நிகழ்ந்தது ஊட்டியில் என்று ராஜேந்திரன் சொன்னது நினைவில் இருந்தாலுமே,

அதை ஒதுக்கி ஊட்டி போக திட்டமிட்டு இருந்தான் புகழேந்தி. பிரச்னை ஏதாவது வருவதாக இருந்தாலும் ஆரம்ப கால கட்டத்தில் வந்து தீர்த்து விடலாம் என்று எண்ணினான்.

அம்மா அப்பாவின் தயக்கம், பயம், எதுவுமே பாரதியை பாதிக்கவில்லை. புது மணமக்கள் தங்களின் தனி, உலகில் சுற்றுபுறம் பற்றிய நினைவே இன்றி ஒருவரில் ஒருவர் மூழ்கி இருந்தனர்.

''ஏன் உங்க அம்மா ஊட்டியா என்று அலறு கிறார்கள்? பாரீன் ட்ரிப் போக ஆசை என்று அம்மா விடம் சொல்லி இருந்தாயா?''

''நான் அப்படி எதுவும் சொல்லவில்லை. இப்ப நீங்களே என்னை பாரீன் லொகேஷன் கூப்பிட்டாலும் நான் வரமாட்டேன் ஏன் என்று சொல்லுங்க பார்ப் போம்?'' என்று சொல்லி முடிப்பதற்குள் அவளின் கன்னங்கள் சிவக்க அவனுக்குள் குறும்புத்தனம் எட்டிப் பார்த்தது.

''ஏன் அப்படி?''

''ஆமா உங்களுக்கு ஒன்றுமே தெரியாது. என்னைக் கேளுங்க.''

''நிஜம்ம்ம்மா பாரதி, பொண்ணுங்க மனசுல என்ன நினைக்கிறாங்க என்றே கண்டு பிடிக்க முடியாது. அவங்க மனசு கடலை விட ஆழமானது என்று சொல்வாங்க. படித்ததும் பசங்க மட்டும் படிக்கும் ஸ்கூல், காலேஜ் கூட பிறந்தது யாரும் இல்லை கேர்ள் ப்ரெண்ட்சும் கிடை யாது. பொண்ணுங்க கூட பேசிப் பழகிய அனுபவம் இல்ல. இதுல என்னைக் காரணம் கண்டு பிடிக்கச்



சொன்னால் எப்படி ரதி?'' என்றவன் வார்த்தைகள் அக்மார்க் பொய் என்று கண்களில் இருந்து குறும்பு சத்தியம் செய்தது.

''முதன் முதலில் பார்த்த போது அப்பாவி என்று நினைத்தேன். நீங்க அடப் பாவி! என்று இப்ப தானே தெரியுது.''

''அப்பாவியோ அடப்பாவியோ, கேள்விக்கு பதில் சொல்'' என்றவன் கரங்கள் அவளின் இடையில் பதிந்து முன்னேற அவள் கையைப் பற்றி தடுத்தாள்.

''சும்மா இருங்க புகழ்! ஹாலில் உட்கார்ந்து இதென்ன அட்டகாசம்? அம்மா அப்பா யாராவது வந்து விட்டால் எப்படி இருக்கும்? உங்க சேட்டைக்கு நேரம் காலமே கிடையாதா?''

''நேற்று தான் நமக்கு கல்யாணம் ஆகி இருக்கு. நேரம் காலம் இல்லாமல் இந்த மாதிரி செய்ய தான் ஹனி மூனே போறது?'' என்றதும் அவசரமாக வாயை கைகளால் பொத்தினாள் பாரதி.

''ஆண்டவா, கொஞ்சம் கூட கூச்சமே இல்லையே?''

''இதுதான் ரதி இயல்பு. நம்ம ஒருத்தரை ஒருத்தர் முழுசா பார்த்து முடிச்ச பிறகு வெளியே பார்க்கலாம் என்று தானே இப்ப பாரீன் ட்ரிப் வேண்டாம் என்று சொன்னாய்?'' என்றவன் விரல்கள் நெற்றியை வருடி கன்னத்தின் வழியே இதழ்களுக்கு வர அவள் மென்மை யாக முத்தமிட்டாள்.

''ரதி இன்னும் நிறைய நான் உன்னிடம் எதிர்பார்க் கிறேன்'' என்று சொன்னவன் குரல் குழைந்து உருக அவள் உதட்டைப் பிதுக்கினாள்.

''இந்த உதட்டை ஏன் இந்த பாடு படுத்துகிறாய்? பாவம் அது'' என்று அவளின் இதழ்களைப் பிரித்து விலக்கியவன் விரல்கள் அங்கிருந்து நகர மறுத்தது.

''என்ன பண்றீங்க?'' என்றவள் குரல் கிசுகிசுப்பாக வந்தது.

''தெரியலை, என் கை என்னவோ பண்ணுது'' என்று மேலும் கிறங்கியவன் இன்னும் நெருங்கினான்.

''உங்க கை என்ன பண்ணுது என்று உங்களுக்கே தெரியாதா?'' என்று கொஞ்சியவளும் அவனிடம் இருந்து விலக முற்படவில்லை.

''தெரியாது. ஏன் பாரீன் ட்ரிப் வேண்டாம் என்றதற்கு நான் சொன்ன காரணம் சரியா என்று கேட்டேனே? பதிலே காணோம்.''

''புகழ் பேச்சுக்கு எதிர் பேச்சே பேசக்கூடாது என்று எங்க அம்மா சொல்லி இருக்காங்க. நான் அம்மா பேச்சை தட்டவே மாட்டேனே'' என்று கண்களை விரித்து கதை பேச அவன் சிரித்தான்.

''இது வார்த்தையில் மட்டுமா? செயலிலும் இருக்குமா?'' என்றவன் கரங்கள் அவளின் கன்னத்தைப் பற்றி நிமிர்த்தியது.

''பாரதி செய்றதை மட்டும் தான் சொல்வாள்.''

''ஆனால் புகழேந்தி சொல்லாததை தான் செய்வான்'' என்று குழைந்தவன் அவளின் இதழ்களில் அழுத்தமாக தன் முத்திரை பதிக்க அவர்களைச் சுற்றிலும் பூமழை பொழிந்தது ரோஜா பூத்தது. மயில்கள் ஆடின. குயில்கள்



பாடின. இந்த பூலோகம் அவர்களுக்குத் தூரமாகப் போனது.

* * *

மருத்துவரிடம் பேசிவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு தன் அறைக்குள் வந்த ராஜேந்திரன் தன் குடும்ப மருத்துவரும் நண்பருமான மோகனுக்கு அழைத்தார்.

''ஹேய் ராஜா, என்ன இந்த நேரத்துல கூப்பிட்டு இருக்க? கல்யாணம் முடிச்ச களைப்பில இன்று கடைக்குப் போகலயாக்கும்? கல்யாணம் அமோகமா நடந்தது பாரதி கூட ரொம்ப சந்தோஷமா இருந்தா. உன் கவலை எல்லாம் தீர்ந்து விட்டது தானே?'' என்று உற்சாகமாக விசாரித்தார்.

''தெரியலை மோகன், அதுக்கு தான் உன்னை அழைத்தேன்'' என்றவரின் குரலில் பயம் இருந்தது.

''மாப்பிள்ளையும் பாரதியும் நேற்று நார்மலா இருந்தாங்க தானே? ஏதாவது பிரச்னையா?''

''இந்த மாதிரி விஷயங்களை எல்லாம் நாகுக்கு இல்லாமல் இந்த காலத்துல கேட்க முடியாது மோகன்.''

''உன் மகளின் நிலைக்கு நீ கேட்டு இருக்கணும். சரி, நீ என்ன விஷயமா எனக்கு போன் பண்ணினாய் சொல்லு'' என்று மருத்துவராகப் பேச்சை மாற்றினார்.

''பாரதியை மாப்பிள்ளை ஹனிமூனுக்கு ஊட்டிக்கு அழைத்துக் கொண்டு செல்கிறேன் என்று சொல்கிறார்.''

''ஓ. பாரதி அதுக்கு என்ன சொன்னாள்?''

''ஒன்றும் சொல்லவில்லை சாதாரணமாக தான் இருந்தாள்.''

''பிறகென்ன? நீ ஏன் குழம்புகிறாய்?''

''இல்லை... அங்கே... போனால்... அவளுக்கு.''

''பிரச்னை வருமா, இல்லையா என்று இங்கேயே உட்கார்ந்து பூவா தலையா போட்டு பார்க்க முடியாது ராஜா. எல்லா விஷயத்தையும் எல்லா நேரமும் மறைத்து வைக்கவும் முடியாது. மூன்று வருடம் ஆகி விட்டது இல்லையா? இதுவரை அவளிடம் பிரச்னை இல்லை. இனியும் வராது என்றே நம்புவோம்.''

''நான் மாப்பிள்ளையிடம் பழைய விஷயம், அவள் மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொண்டது உட்பட, சுருக்கமா சொல்லி இருக்கிறேன். அதனால் அவர் பார்த்துக் கொள்கிறேன் என்று தான் சொல்கிறார். ஆனால் எனக்கு தான்...''

''பயப்படாதே ராஜா, காலம் எவ்வளவோ அருமையான மருந்து. அது நிறைய மாற்றங்களை ஏற்படுத்தும். அது பாரதியிடம் வந்து இருக்கு என்று நான் நம்புகிறேன். அவங்க சந்தோஷமா இருக்கட்டும். நீ ஒன்றும் தடை போட வேண்டாம். நீ வேண்டாம் என்று சொன்னால் காரணம் சொல்வது சிரமமா இருக்கும்'' என்று மருத்துவராக மட்டும் இல்லாமல் நண்பனாகவும் நின்று முடித்து விட போனை வைத்தார் ராஜேந்திரன்.

நண்பரும் குடும்ப மருத்துவருமான மோகனிடம் பேசிய பிறகு, பெருமளவு நிம்மதி திரும்பி இருந்தாலும் சின்ன சஞ்சலம் இருந்தது. தன் அறையில் இருந்து



அடுக்களைக்குச் செல்லும் போதே ஹாலில் இருந்த மகளையும் மருமகனையும் பார்த்தார். சோபாவில் இருந்த பாவனை அவர்கள் வேறு உலகத்தில் இருப்பதை சொல்ல, மிச்சம் இருந்த சஞ்சலம் மறைந்தது.

''நீங்க ஊட்டிக்குக் கிளம்புங்க. அங்கே பிரச்னை இல்லை என்றால் நீங்க சென்றதே தெரிய வேண்டாம். பிரச்னை வந்தால் சரி செய்ய பயன்படும்'' என்று மனைவி சொன்ன யோசனையை ஏற்றுக் கொண்டார் ராஜேந்திரன்.

அங்கே இருந்த வேளையில், அம்மாவும் அப்பாவும் மாறி மாறி, உபதேசம் செய்ததைக் கேட்டு புகழேந்திக்கு காதில் ரத்தம் வழிந்தது என்றால் பாரதியின் நிலையை என்ன சொல்ல?

''அத்தை, இப்படி மாறி மாறி அட்வைஸ் பண்ணினால் அவள் இனிமேல் இந்த வீட்டுக்கு வருவதற்கே யோசிக்க ஆரம்பித்து விடுவாள். கவலைப் படாதீங்க. நான் பார்த்துக் கொள்கிறேன். அம்மாவும் சட்டென்று கோபப்படும் ஆளும் இல்லை'' என்று அதட்டிய பின்பே அவர்களின் உபதேசம் ஓய்ந்தது.

''அத்தை, பாண்டியனை தினமும் இரவில் வீட்டில் படுத்துக் கொள்ளச் சொல்லி இருக்கிறேன். நீங்க அப்பப்போ போனில் பேசிக் கொள்ளுங்க. நடுவில் எட்டிப் பார்த்துவிட்டு வாங்க. தனியாக இருப்பதால் அவங்க பீல் பண்ணக்கூடாது'' என்று அத்தையிடம் புகழேந்தி தனியாக வேண்டுதல் விடுத்து, அதை நிறைவேற்ற வாக்குறுதியும் அளித்து இருந்தார் பாக்கியம்.

''நாங்க வர ஒரு வாரம் ஆகும்மா, அத்தையைப் பார்த்துக்கோங்க'' என்று மகள் அடுத்த சில நிமிடங்களில் சொல்ல பாக்கியத்திற்குச் சிரிப்பு வந்தது.

''சரிங்க பாட்டிம்மா, உங்க அத்தையை நான் பத்திரமா பார்த்துக் கொள்கிறேன்'' என்று சொல்லி வழி அனுப்பி வைத்தார் பாக்கியம்.

* * *

அம்மா ஜாக்கிரதை. நாங்க கிளம்புறோம். உங்களைத் தனியாக விட்டுச் செல்ல எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. பாண்டியனை இரவில் வந்து இங்கே படுத்துக் கொள்ளச் சொல்லி இருக்கிறேன். வேண்டாம் என்று சொல்லிடாதீங்க. எதுவா இருந்தாலும் எனக்கு போன் பண்ண யோசிக்க வேண்டாம்'' என்று பூரணியிடம் விடை பெற்ற புகழேந்தியை கவலையுடன் பார்த்தாள் பாரதி.

''அத்தை இதுக்கு முன்னாடி தனியா இருந்து இருக்காங்களா?'' என்று ரயில் நிலையத்துக்குச் செல்லும் போது கவலையுடன் விசாரித்த மனைவியை ஆசையுடன் பார்த்தான் புகழேந்தி.

''அப்பா இறந்து ஒரு வருஷம் ஆகிறது. அதன் பிறகு நான் இப்போது தான் வெளியூர் கிளம்புகிறேன். பேங்க் வேலை என்பதால் காலையில் போய் மாலையில் வந்து விடுவேன். இரவு தனியாக தங்கியதே இல்லை. அதான் கவலையா இருந்தது'' என்று மனதில் உள்ளதை பகிர்ந்து கொண்டான்.

''நம்ம அப்பப்போ பேசலாம். ஏதாவது பிரச்னை என்றால் உடனே பிளைட் பிடித்து ஓடி வந்து விடலாம்''



என்று உள்ளார்ந்த அன்புடன் பாரதி சொல்ல அவன் நிறைவுடன் புன்னகை செய்தான்.

''இந்த மாதிரி பொண்டாட்டி கிடைத்தால் எந்தக் குடும்பத்திலும் சண்டையே வராது ரதி'' என்றவன் குரலில் புது மாப்பிள்ளை பாவனை வந்து இருந்தது.

சென்னையில் இருந்து ரயிலில் மேட்டுப்பாளையம் வரை சென்று அங்கிருந்து காரில் ஊட்டி வந்து சேர்ந்தவர்களுக்கு அந்த இளங்காலைப் பொழுது இனிய வரவேற்பைக் கொடுத்தது. ரயில் நிலைய வாசலில் ஏற்கனவே பதிவு செய்து இருந்த வாடகை கார் பெயர் பலகையுடன் காத்திருக்க அதில் வந்து ஏறினார்.

''வழியில் முகம் கழுவி ஒரு கப் காபி சாப்பிடலாம். ரொம்ப பெரிய ஹோட்டலா இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. சின்ன கடையாக இருந்தால் கூட கொஞ்சம் நிறுத்துங்க'' என்று சொன்னான் புகழ்.

''ஊட்டி போய் விடலாமே புகழ்?''

''இல்லை எனக்குக் காலையில் கண் விழித்தால் உடனே காபி வேண்டும். எங்க அம்மா அப்படி என்னைப் பழக்கப் படுத்தி வச்சு இருக்காங்களே? காபி இல்லா விட்டால் ஒன்றுமே ஓடாது.''

காரோட்டி சொன்ன மெஸ் முன்பு அணி வகுத்து நின்ற வாகனங்கள் அந்த மெஸ்ஸில் கிடைக்கும் உணவின் சுவையை எடுத்துச் சொன்னது.

''நீயும் வருகிறாயா பாரதி'' கேட்ட புகழுக்கு, 'இல்லை நான் வெளியே காபி டீ குடிப்பதில்லை' என்று மறுப்பாகத் தலை அசைத்தவள் காரில் இருந்து இறங்கி

நின்றாள். பத்து நிமிடங்களில் திரும்பியவன் முகம் நல்ல காபி குடித்த திருப்தியில் இருந்தது.

''சூப்பர் காபி ரதி. நீ மிஸ் பண்ணி விட்டாய். அந்த பச்சை புடவையில் இருக்கும் பெண் உன்னைக் கோவையா என்று கேட்டாங்க. நான் சென்னை என்று சொல்லி விட்டு வந்தேன். உனக்குத் தெரியுமா பாரு?'' என்று சிரிப்புடன் கை காட்ட, அவள் திரும்பிப் பார்த் தாள்.

''ம்ஹூம்'' என்று மறுப்பாகத் தலை அசைத்த பாரதிக்கு அவளை அடையாளம் தெரியவில்லை.

''இந்த உலகத்தில் ஒரே மாதிரி ஏழு பேர் இருப்பாங்க என்று சொன்னேனா? ஒரே மாதிரி இருப்பாங்க சரி, ஒரே பேருலயும் இருப்பாங்களா? அவள் பெயர் பாரதி தானே என்று கேட்டாள்'' என்று தொடர்ந்து புகழ் சொன்னதும் திகைப்புடன் அந்த பெண்ணை மீண்டும் திரும்பிப் பார்த்தாள். யார் இவள்? இவளைப் பார்த்து இருக் கிறாளா? எங்கே? எப்போ? கேள்விகள் குடைய தலை விண் விண் என்று தெறித்தது.

''அவள் பெயர் ரதி என்று சொன்னேன். உனக்கு நினைவிருக்கா ரதி, பிரெண்டா? ரிலேடிவா? போய் பேசணுமா?'' என்று கேட்டதற்கும் அவளிடம் இருந்து பதில் இல்லை. நினைவலைகளில் 'அந்த பெண்ணை' தேட முயற்சி செய்து கொண்டு இருந்தாள்.

சற்று முன்பு விசாரித்த அந்தப் பெண்ணின் குரலில் கொஞ்சம் கோபம் கலந்து இருந்ததை அவனால் உணர முடிந்தது. இவள் மண்டையைப் பிடித்துக் கொள்வதாகப்



பார்த்தால் அந்த சிவாவுடன் தொடர்பு கொண்டவளாக இருக்கலாம். அவசரமாக முகத்தை சீர் படுத்தினான்.

''ஹேய், தெரியலை என்றால் விடேன். இதுக்கு ஏன் இவ்வளவு மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்கிறாய்? நாம் ஹனிமூனுக்கு வந்து இருக்கிறோம் மற்றவர்களைப் பற்றி அதிகம் யோசிக்க வேண்டிய தில்லை. வா போகலாம்'' என்று கை பற்றி இழுத்து வந்தான் புகழேந்தி.

அவர்கள் ஊட்டியை அடையும் முன்பே ராஜேந்திரன் விமானத்தின் மூலம் கோவை சென்று ஊட்டிக்கு வந்து சேர்ந்து இருந்ததை அவர்கள் அறிய மாட்டார்கள்.

பயணக் களைப்பு தீர படுக்கையில் சிறிது நேரம் புரண்டு விட்டு, சின்னச் சின்ன சீண்டல்களுடனும், சிரிப்புகளுடனும், பதினோரு மணி அளவில் குளித்து காலை உணவை முடித்து, தங்கி இருந்த விருந்தினர் இல்லத்துக்கு அருகே இருந்த பொட்டானிக்கல் கார்ட னுக்கு வந்தனர். தாவரவியல் கை பற்றி நடை பழகிய போது அவர்களின் திருமணப் பேச்சு வந்தது.

''அதென்ன புகழ் என்னை வீட்டுக்குப் பார்க்க வரும் போதே புடவை, நகை என்று வாங்கிட்டு வந்து அசத் திட்டீங்க. போட்டோவில் பார்த்த உடனே பிடிச் சுருச்சா?'' என்று சீண்ட அவன் சிரிப்புடன் மறுத்தான்.

''போட்டோவில் பார்ப்பதற்கு முன்பே பிடிச்சுருச்சு தெரியாதா?''

''இந்த மாதிரி விஷயங்களை எத்தனை தடவை வேண்டுமானாலும் திருப்பித் திருப்பிக் கேட்கலாம்

தெரியுமா'' என்றவளின் குரலில் மயக்கமும் முகத்தில் சிவப்பும் குடி வந்தது.

''இந்த ஆசை எனக்கு மட்டும் இருக்காதா?'' என்றவன் கரங்கள் இடையை வளைத்து அருகே இழுக்க அவள் நெருங்கி வந்தாள்.

''இருக்கலாம் தப்பில்லையே?''

''தப்பில்லாத கணவனின் ஆசையை நிறைவேற்ற லாமே? என்னை முதலில் பார்த்த போது நீ என்ன நினைத்தாய்? அதை நீ சொல்லு.''

''உண்மையைச் சொல்லட்டுமா? பொய் சொல்லட்டுமா?''

''பொய்யே சொல்லு அது தான் ஸ்வீட்டா இருக்கும்...'' என்றவன் கண்கள் சிரிக்க அவளும் சிரிப்பில் இணைந்தாள். அவளின் சிரிப்பைப் பார்த்து உல்லாச மாகப் பாடினான்.

பொய் சொல்லப் போறேன். பொய் சொல்லப் போறேன்
நீ ரொம்ப அழகியடி
பொய் சொல்லப் போறேன் பொய் சொல்லப் போறேன்
நான் கொஞ்சம் அசிங்கமடி
சின்னஞ் சிறு சிலையை சிரிக்க வைப்பேன்
உள்ளங்கை ரேகை எழுத்தில் வைப்பேன்
அழகின் மின்னல் கண்ணில் அடிக்க
ஆசை வெள்ளம் நெஞ்சில் அடிக்க



என்னில் நானே மூழ்கி போனேன்
சின்ன கண்மணி சிரித்த சிரிப்பினிலே

''உங்களுக்கு அந்த பயமெல்லாம் வேண்டாம். இங்கே உண்மையும் ரொம்ப ஸ்வீட்டா தான் இருக்கும்.''

''அப்ப சொல்வதில் என்ன தயக்கம்?''

''முதல் பத்து நிமிடங்கள் உங்களைப் பற்றிய இம்ப்ரெஷன் எதுவும் என் மனசில் விழலை. ஆனால் கார் ரிப்பேர் ஆன டென்ஷன் மறைந்து சுமுகமான மனநிலை வந்த பிறகு உங்களைப் பார்த்த போது ஒரு கால் டாக்சி டிரைவர் இவ்வளவு யோசித்து அழகா பேசுகிறாரே என்று ரொம்பப் பெருமையா தான் நினைத்தேன்' என்று சொல்லி முடிக்கும் முன்பே அவன் சத்தமாகச் சிரித்தான்.

''ஆனால் உன்னைப் பார்த்த உடனே தேர்வு சமயத்தில் கூட இவ்வளவு கேசுவலா இருக்கிறாயே என்று நான் நினைத்தேன். கொஞ்சுண்டு கோபம் கூட வந்தது தெரியுமா? என்று புகழேந்தி சொன்னதும் முறைத்தாள்.

''கோபித்துக் கொள்ளாதே பாரதி. நான் சொல்வது உண்மை. உண்மை சில சமயங்களில் கசப்பாக இருக்கும். என்ன செய்வது? ஆனால் இன்னொரு உண்மை சொல்லட்டுமா? வந்த கோபம் அடுத்த அஞ்சு நிமிஷம் கூட தாக்குப் பிடிக்கவில்லை அது தெரியுமா?'' என்று சிரிக்க, அவளுக்கும் சிரிப்பு வந்தது.

''பொதுவா என் கோபத்தை நான் வெளியே காட்டிக் கொள்ளும் ரகம் இல்லை. அத்துடன் ஏற்கனவே பதட்டத்தில் இருக்கும் உன்னை டார்ச்சர் பண்ணக

கூடாது என்று இலகுவாகப் பேசி உன்னை சரி செய்தேன். உன்னை சரி செய்கிறேன் என்று நான் அங்கே சறுக்கினேன்'' என்று கேலியாகச் சொல்ல அவள் சிரித்தாள்.

''இதுதான் என் மேல் கோபப்பட்ட அழகா?''

''நம்ம கோபத்துக்கு அவ்வளவுதான் ஆயுள்'' என்று கண் சிமிட்டி உள்ளம் மேலும் குளிர்ந்தது.

''எல்லாத்துக்கும் மேலே போகும் போது மோதிரத்தைக் கழட்டி கொடுத்து குழந்தையின் வைத்திய செலவுக்கு வச்சுக்கோ என்று சொன்ன வினாடியை என் வாழ்வில் என்றுமே நான் மறக்க மாட்டேன் பாரதி. அது ஒரு அற்புதமான வினாடி'' என்றவன் கண்களில் அந்த காதலும் கனிவும் பொங்கி வழிந்தது.

''நீங்க கூட அந்த பெண்ணுக்கு இருபதாயிரம் கொடுத்தீங்க. நீங்க செய்ததைப் பார்த்து தானே காப்பி பண்ணினேன். அதென்ன பெரிய விஷயமா புகழ்?''

''என் பணம் பத்தாயிரம் தான் ரதி, பிரண்ட்ஸ் கொடுத்தது இன்னொரு பத்தாயிரம். ஆனால் இந்த பணம் அவன் என்னிடம் நேரடியாகக் கேட்ட பிறகு தானே கொடுத்தேன். ஆனால் நீ? யாரும் உன்னிடம் கேட்காமல் தானாக முன் வந்து கொடுத்தது பெரிய விஷயம் தான் பாரதி. அதுவும் கையில் பணம் இல்லாத நிலையில் மோதிரத்தைக் கொடுத்து ரொம்பவே என் மனசை கவர்ந்தது'' என்றவன் முகமும் கண்களும் பளபளத்து அவனின் மனநிலையை விளக்க, அவள் திகைப்புடன் பார்த்தாள்.



# 16

அழகைப் பார்த்து, அறிவைப் பார்த்து, என் சொத்து சுகத்தைப் பார்த்து, விரும்பினேன் என்று சொல்லும் மனிதர்களிடையே, உன் இளகிய மனதைப் பார்த்து விரும்பினேன் என்று சொன்ன புகழேந்தியின் நேர்மையும், வாதமும் பாரதியின் மனதில் அழுத்தமாகப் பதிந்தது.

''என்ன ரதி, அப்படிப் பார்க்கிறாய்? பார்வையாலேயே சாப்பிட்டு விடும் உத்தேசமா?'' என்று கேலியாகச் சிரிக்க, அவள் பெருமூச்சு விட்டாள்.

''ஊட்டியை சூடேத்தும் அளவுக்கு ஏன் இவ்வளவு பெரிய பெருமூச்சு பாரதி?''

''நீங்க என்னை விரும்பிய அளவுக்கு நான் உங்களை விரும்பவில்லையோ என்று எனக்குக் கில்டியா இருக்கு புகழ்.''

''என்ன உளறல் இது? நான் உங்க வீட்டுக்கு உன்னைப் பார்க்க வந்தபோது, ஒரு சல்வாரில் உம்முன்னு மூஞ்சியை வச்சுக்கிட்டு, மாப்பிள்ளை யார் என்று கூடப் பார்க்காமல் உட்கார்ந்து இருந்த போசிலேயே உன் மனசுல நான் இருக்கேன் என்று தெரிஞ்சுடுச்சு தெரியுமா?''

''அது எப்படித் தெரியும்? நான் உண்மையிலேயே வேறே யாராவது ஒரு பையனை லவ் பண்ணி இருந்தால்

கூட தான் அப்படி உம்முன்னு இருந்து இருப்பேன்'' என்று விடாமல் சீண்ட அவன் சிரித்தான்.

''நீ இந்த மாதிரி லாஜிக் இல்லாமல் கன்னா பின்னாவென்று உளறுவாய், என்று தெரிந்து தான் கடவுள் அன்றே உங்க அப்பா மொபைலுக்கு ஒரு பிக்சர் மெசேஜ் அனுப்பச் சொல்லி ஆணையிட்டார். அந்த பிக்சர் மெசேஜ் பார்த்துட்டு அம்மணி முகத்தில் வந்த பிரகாசம், 'உன் மனசுல நான்மட்டும்தான் இருக்கேன்' என்று சத்தமா சொல்லுச்சு. அது தெரியாதா? என்று குறும்புடன் சொல்லி, கண் சிமிட்டிச் சிரிக்க அவனுக்கு பதில் சொல்ல முடியாமல் முதுகில் ஒரு அடி கொடுத் தாள் பாரதி.

''ஆம்புலன்ஸ் வரச் சொல்லுங்க. நான் எங்கே இருக் கிறேன்?'' என்று முனகலான குரலில், பாரதியின் செல்ல அடிக்கு, அளவுக்கு அதிகமாக ரியாக்ஷன் கொடுக்க, அவள் இன்னும் வேகமான அடி ஒன்றை வைத்தாள்.

''நிஜமாவே இப்ப ஆஸ்பத்திரி தேடணும் பாரதி'' என்றவன் பார்வை சுற்றிலும் அலைந்தது.

முதலில் ஓரடி இடைவெளியில் துவங்கிய அவர் களின் நடை மெல்ல நெருங்கியதில், இருவரின் கைகளும் இணைந்தது பேச்சு சுவாரஸ்யத்தில் புகழின் கைகள் அவளின் இடையை வளைத்துக் கொள்ள, அவளின் தலை சுவாதீனமாக அவன் தோளில் சாய்ந்து கொண்டது. தேனிலவிற்கு என்று ஊட்டிக்கு வந்த புதுமணத் தம்பதிகளின் இயல்பாக இருக்கக் கூடிய ஒருவரை விட்டு ஒருவர் விலக விருப்பம் இல்லாத நடை பயணத்தின் முடிவில் நான்கு கிலோ மீட்டர் தூரத்தை கடந்து ஏரி பகுதிக்கு வந்து சேர்ந்து இருந்தனர்.



''ரதி, கார்டனில் இருந்து பேசிட்டே நாலு கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்து இருக்கோம். கால் வலியே தெரியலை. பசிக்குதா? மிளகாய் பஜ்ஜி, அவித்த மக்கா சோளம் இது மாதிரி ஏதாவது சாப்பிட வாங்கிட்டு வரட் டுமா?'' என்று கேட்டவன் அவளிடம் இருந்து பதிலே இல்லையே என்று திரும்பிப் பார்த்தான்.

''டைம் போனதே தெரியவில்லை. நீ என் பக்கத்தில் இருந்தால், உலகமே மறந்து விடும்'' என்று கிறக்கத் துடன் புகழேந்தி சொன்ன வார்த்தைகள் அவளைச் சென்று அடைந்ததாகத் தெரியவில்லை.

அவளின் கண்களில் ஏதோ யோசனை தேடல்!

''ரதி, டயர்டா இருக்கா? நீ இந்த பெஞ்சில் உட்கார். நான் ஸ்னாக்சும் தண்ணீர் பாட்டிலும் வாங்கிட்டு வரேன்'' என்று சொல்ல அவளிடம் மாற்றம் இல்லை.

''என்ன ஆச்சு, கால் வலிக்குதா?''

''.....''

''தலை வலிக்குதா?''

''.....''

''அம்மா ஞாபகம் வந்துடுச்சா? போன் பேசுகிறாயா?''

''.....''

''ரூமுக்குப் போகலாமா? ஆட்டோ பிடிக்கட்டுமா?''

''.....''

''ஹேய் என்ன ஆச்சு? ஒண்ணுமே பேசாமல் இருக்கிறாய்?'' என்று மீண்டும் கேட்க, அவள் அமர்ந்து இருந்த பெஞ்சில் இருந்து எழுந்து போய் ஏரிக்கரையின் அருகே நின்றாள்.

''பாரதி, போட்டிங் போகலாமா?'' என்று ஆர்வமாக அவன் கேட்டதற்கு, ''ம்ம்ம்ம்...'' என்ற முனகல் மட்டுமே வெளிவந்தது.

''வரிசை ரொம்ப ஜாஸ்தியா இருக்கு. நான் போய் பயணச்சீட்டு வாங்கி வருகிறேன். கும்பலோடு கோவிந்தா வேண்டாம். பெடலிங் போட்டிங் தனியா போகலாம் தானே?'' என்று கேட்டு விட்டு அவன் வரிசைக்குப் போக அவள் இருக்கையில் அமர்ந்தாள்.

உள்ளே என்னவோ நெஞ்சுக்குள் பிசைவதைப் போல இருந்தது. என்னவோ சரி இல்லாத ஒரு உணர்வு தோன்றியது. இங்கே அவள் ஏற்கனவே வந்து இருக்கிறாளா? எப்போது யாருடன்? நினைவு கூற முடியவில்லை. தலையைப் பிடித்தபடி கவிழ்ந்து அமர்ந்தாள். எவ்வளவு நேரம் அப்படி இருந்தாளோ?

''ஹேய் பப்லூ, என்ன போர் அடிச்சுடுச்சா? படகு வந்து விட்டது வா போகலாம்'' என்று இடது கையால் அவளைப் பற்றி இழுத்தவன் மறு கையில் ஒரு கவர் நிறைய தின்பண்டங்களும் தண்ணீர் பாட்டிலும் இருந்தது. திகைப்புடன் அவள் அவனை அமைதியாகப் பின் தொடர அவன் ஏதேதோ பேசிக்கொண்டே வந்தான்.

ஏரிக்குள் கொஞ்ச தூரம் சென்ற பிறகு பெடல் பண்ணாமல் மெதுவாக மிதந்தபடியே தூரத்தில் தெரிந்த இயற்கைக் காட்சிகளையும், அருகே வந்த மீன்கள், நீர் பறவைகள், பூக்கள், மனிதர்கள் என்று எதையாவது சுட்டிக் காட்டி நெருங்கி அமர்ந்து பேசிய புகழேந்தியின் பேச்சுக்கு பிரதிபலிப்பு இல்லை.



''ரதி என்ன ஆச்சு? ரொம்ப தூரம் நடந்து வந்தது பசிக்குதா? உனக்குப் பசி வந்தால் பத்தும் பறந்து விடும் என்று ஏற்கனவே உங்க அம்மா சொன்னாங்க'' என்று சொல்லியபடி எலுமிச்சை சாறும் மிளகாய்ப் பொடியும் தடவிய அவித்த சோளத்தை ஒரு டிஷ்யூ பேப்பரில் சுற்றி அவளிடம் நீட்டி, 'சாப்பிடு' என்று கைகளில் திணிக்க அதை வாங்கியவள் முகத்தில் அளவு மீறிய ஆங்காரத்துடன் அதைத் தூக்கி எறிந்தாள்.

''ஏரியைச் சுத்தமா வச்சுக்கணும் என்று இவ்வளவு நேரம் கதை பேசிட்டு நாமே தூக்கிப் போட்டால் எப்படி?'' என்று அதட்டியவன் கை தேர்ந்த லாவகத்துடன் அந்த சோளம் நீரில் விழும் முன்பே தாவிப் பிடித்து, ''ஹவ் இஸ் இட்?'' என்று பெருமையுடன் கேட்ட அதே வினாடி, 'சிவா' என்ற உச்சஸ்தாயியில் வந்த அலறலுடன் அவள் மயங்கிச் சரிந்து இருந்தாள்.

தேனிலவிற்கென ஊட்டிக்கு வந்த இடத்தில், உல்லாசமாக படகு சவாரி செல்லும் வேளையில் திருமணம் ஆன மூன்றாவது நாள், தன் மனைவி இப்படி மயங்கி விழுவாள் என்பதை எதிர்பாராத புகழேந்தி அரண்டு விட்டான். பாரதி சப்தமாக அலறிய, ''சிவா...'' என்ற அலறல் அவன் காதிலும் விழுந்தது. அவளைக் கவலையுடன் நோக்கினான்.

தேவை இல்லாமல் கூடுதலாக ரிஸ்க் எடுத்து விட்டோமோ என்ற பயம் வந்தது. புகழேந்தி தவித்து தடுமாறியது சில வினாடிகள்தான்.

''ரதி.. ரதிம்மா.. கண்ணை முழிச்சுப் பாரு. நான் புகழ் பேசுறேன் பாரு'' என்று சில வினாடிகள் கன்னத்தில்

தட்டியும் கண் விழிக்கவில்லை என்றதும் ஒரு கை பிடி தண்ணீரை அவள் முகத்தில் தெளித்தான் லேசாக இமைகள் சுருங்கி அசைந்தாலும், கண்கள் முழுமையாக திறக்கவில்லை என்றதும் அவசரமாக கரையோரத்திற்கு படகை செலுத்தினான்.

வெகு தூரம் சென்று இருக்கவில்லை என்றாலும், மனதில் பதட்டம் இருந்ததால் அவனால் படகை வேகமாக மிதிக்க இயலவில்லை. அலைபேசியில் தங்கி இருந்த விருந்தினர் இல்லத்திற்கு தகவல் கொடுத்து சூழ்நிலையைச் சொல்லி ஆம்புலன்சுக்கு ஏற்பாடு பண்ண சொன்னான்.

படகு கரையை வந்து அடையும் நேரம் ஆம்புலன்ஸ் தயாராக இருக்க அவளை அதில் ஏற்றியவனுக்கு, அவளின் சுவாசம் மெலிதாக வர அவன் பதட்டம் அதிகரித்தது. ஒருவர் காலை ஒருவர் வாரிக் கொண்டு தங்களின் முதல் சந்திப்பைப் பற்றி நெகிழ்ந்து கொஞ்சிக் கெஞ்சி சீண்டிப் பேசிச் சிரித்து சில நிமிடங்கள் தான் ஆகிறது என்பதை நம்பச் சிரமமாக இருந்தது.

அதையும் மீறி சிவா என்று பாரதி அலறியதைக் கேட்டதும் மனசில் மூலையில் வலித்தது. மனம் கண்டதையும் நினைத்துக் கலங்க அவன் திக்குத் தெரியாத காட்டில் சூழ்ந்து வரும் இருளில் தனியாக மாட்டிக் கொண்டதைப் போல திகைத்து நின்றாலும், மடியில் படுத்து இருந்த மனைவியின் முகத்தை ஆதரவுடன் வருடத் தவறவில்லை புகழேந்தி.

அவள் மயக்கம் போட்டு விழுந்ததில் இருந்து ஆம்புலன்சுக்கு வர இருபது நிமிடங்கள் சென்று இருக்கும்.



அதன் பிறகு மருத்துவமனைக்கு வந்து சேர மேலும் பத்து நிமிடம் ஆகி இருக்கும். அரை மணி நேரமும் அவள் கண்களை மூடி சுய நினைவின்றி படுத்து இருந்ததைப் பார்க்க அவனுக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது. அவனுடைய கட்டுப்பாட்டையும் மீறி சில துளிகள் நீர் அவளின் கன்னத்தில் வடிந்து இருக்க அவள் மெல்ல அசைந்தாள்.

''பாரதி'' என்று மென்மையாக கன்னத்தில் தட்ட அவள் தலை அசைத்தாள். ஆனாலும் பேச்சு வரவில்லை. மலங்க மலங்கப் பார்த்தாள்.

''பாரதி, நான் யார் என்று தெரியுது தானே?'' என்று பயத்துடன் கேட்க அவள் தெரியும் என்ற பாவனையில் தலை அசைத்தாள். அவளை நெருங்கி தோளில் கையைப் போட்டு, ''ஆர் யூ ஓகே?'' என்று விசாரித்தான்.

அவனின் கேள்விக்கான பதிலை வார்த்தைகளினால் சொல்லாமல் அவன் தோள் வளைவில் சாய்ந்து கொள்ள அதுவரை இருந்த குழப்பம் எல்லாம் வினாடியில் மறைந்து அவளை அணைத்துக் கொண்டான் புகழேந்தி.

''நீ ரொம்ப நேரம் கண் விழிக்காமல் இருந்ததும், நான் பயந்து விட்டேன் ரதி. என் உயிரே என் வசம் இல்லை தெரியுமா?'' என்று கவலை பொங்கிய குரலில் சொன்னவன் முகம் அவளின் தோள் வளைவில் புதைய கைகள் அவளை இறுக்கி அணைத்தது. புகழேந்தியின அணைப்பும், 'என் உயிர் என் வசம் இல்லை' என்ற நெகிழ்வான வார்த்தைகளும், பாரதியை பாதிக்க சின்ன விம்மலுடன் அவன் மேல் சாய்ந்து கொண்டாள்.

''ரதிம்மா! உனக்கு என்ன பிரச்னை என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எதுவா இருந்தாலும் சரி, சமாளிக்கலாம். உன்னுடன் நான் இருப்பேன் அழக் கூடாது'' என்று முதுகை வருடி ஆறுதல் வார்த்தைகளைச் சொன்னபோது மருத்துவமனை வந்து இருந்தது. வண்டி நின்றதும், முகத்தைத் துடைத்து விட்டான்.

''நான் நல்லா இருக்கிறேன். ரூமுக்குப் போகலாமே? ஹாஸ்பிடல் வேண்டாம். ப்ளீஸ்'' என்று பலவீனமான குரலில் சொல்ல அவன் மறுத்தான்.

''அதை டாக்டர் சொல்லட்டும். நீ சும்மா இரு'' என்று அதட்டினான். ஆனால் மருத்துவரின் முகமோ அவளை பரிசோதனை செய்த பிறகு கவலைக்குச் சென்றது.

''B.P. கம்மியா இருக்கு. இதுக்கு முன்னாடி எப்போ செக் பண்ணினீங்க. லோ B.P.க்கு மருந்து ஏதாவது எடுத்துட்டு இருக்கீங்களா?'' என்று கேட்டதும் புகழேந்தி அவளைக் கேள்வியாக நோக்க அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

''இல்லை டாக்டர்...''

''காலையில் சாப்பிடலையா?''

''இல்லை சாப்பிட்டாள். பேசிகிட்டே ரொம்ப தூரம் நடந்து விட்டோம். அத்துடன் வெயிலில் போட்டிங் போனோம். பாதியில் மயங்கி விட்டதால் இங்கே அழைத்து வந்தோம். டயர்டா இருக்கலாம்'' என்று புகழேந்தி சொல்ல அவள் கண்களை மூடிக் கொண்டாள்.

''காலையில் என்ன சாப்பிட்டீங்க?'' என்று விசாரித்த படி மீண்டும் பரிசோதனை செய்து விட்டு திருப்தி இல்லாமல் தலை அசைத்தார்.



''கல்யாணம் ஆகி இரண்டு நாள் தான் ஆகி இருக்கும் என்று சொல்றீங்க. அதிக அலைச்சல், எக்சைட்மெண்ட், ரொம்ப நேரம் நடப்பது, டீஹைட்ரேஷன், எல்லாம் சேர்ந்து விட்டது என்று நினைக்கிறேன். இரண்டு மணி நேரம் இங்கே இருக்கட்டும் மிஸ்டர் புகழேந்தி. உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?'' என்று கேட்க அவசரமாகத் தலை அசைத்தான்.

''இல்ல டாக்டர்...'' என்று பயத்துடன் சொன்ன புகழேந்தியை அவள் கவலையுடன் பார்த்தாள்.

''நான் நல்லா தான் இருக்கேன். வீட்டுக்கு போகலாம் ப்ளீஸ்...''

''சும்மா இரு பாரதி, ரொம்ப பயந்து போய் இருக்கேன். நீ நல்லா இருக்கிறாய் என்று டாக்டர் சொல்லட்டும்'' என்றவன் குரலிலும் முகத்திலும் பதட்டம் இருந்தது. பாக்கியத்திற்கு அழைத்தான்.

''அத்தை நான் புகழேந்தி பேசுறேன்...''

''சொல்லுங்க மாப்பிள்ளை. சாப்பிட்டீங்களா? பாரதி நல்லா இருக்காளா?'' என்று சரளமாக விசாரிக்க அவன் அதற்கு பதில் சொல்லாமல் ''மாமா இருக்காங்களா? கடைக்கு போயிட்டாங்களா?'' என்று விசாரித்தான்.

''வெளியூருக்கு போய் இருக்காங்க என்ன விஷயம்?'' என்ற பாக்கியத்தின் குரலில் பதட்டம் இருந்தது.

''நான் உங்களிடம் ஒரு விஷயம் கேட்கணும். டென்ஷன் ஆகாதீங்க. பக்கத்தில யார் இருக்கா?''

''வேலைக்காரங்க இருக்காங்க. பாரதி எப்படி இருக்கிறாள்? எங்கே இருக்கிறாள்? அவளுக்கு ஒன்றும் இல்லையே? நீங்க என்ன விஷயம் சொல்லுங்க...''

''பாரதி பக்கத்தில் இருக்கா. நல்லா இருக்கா...'' என்று சொன்னவன் குரலில் ஏதோ ஒன்று குறைந்ததை அவரால் உணர முடிந்தது.

''என்ன ஆச்சு? சீக்கிரம் சொல்லுங்க.''

''நாங்க ஊட்டி லேக்கில் போட்டிங் போனோம். அப்ப பாரதி மயக்கம் ஆகிவிட்டாள்...''

''ஹய்யோ என்ன சொல்றீங்க மாப்பிள்ளை...?''

''ஆமா அத்தை. ரொம்ப தைரியமான பொண்ணு என்று நினைத்தேன். அவள் இப்படி மயக்கம் போட்டு விழுவாள் என்று நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவே இல்லை. டாக்டர் B.P. ரொம்ப கம்மியா இருக்கு என்று சொன்னார். இதுக்கு முன்னாடி ரத்த அழுத்தம் குறைந்து வைத்தியம் பார்த்து இருக்கீங்களா அத்தை?'' என்று கேட்க நடுங்கியது. இவ்வளவு சீக்கிரம் இப்படி ஒரு பிரச்சனை வரும் என்று எதிர்பார்க்கவில்லை.

''பாரதி நினைவுடன் இருக்கிறாளா? பேச முடியுமா?''

''ட்ரிப்ஸ் போட்டு இருக்காங்க. குழப்பமான மனநிலையில் இருக்கிறாள். சரியாகப் பேசவில்லை. நான் கேட்கும் கேள்விகளுக்கு பதிலே சொல்லவில்லை. அதான், நான் உங்களை அழைத்தேன்.''

''நான் உடனே விமானத்தில் கிளம்பி வருகிறேன் மாப்பிள்ளை...'' என்று பதட்டத்துடன் பாக்கியம் சொல்ல அவன் திகைத்தான்.

''ஏன் அத்தை? அவசரம் என்றால் நீங்க இங்கே வருவதை விட, நான் அவளை சென்னைக்கு அழைத்து கொண்டு வருவது தானே பெட்டர்.''



''நீங்க தனியா அங்கே இருக்க வேண்டாம். உடனே சென்னைக்கு வந்துடுங்க'' என்று சொல்ல, ''சரி நான் யோசித்து விட்டுச் சொல்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, குழப்பத்தோடு இணைப்பை துண்டித்தான்.

# 17

பாக்கியத்திடம் பேசி முடித்து போனை வைத்த புகழேந்திக்கு கவலை தோன்றியது. அவன் நினைக்கும் அளவுக்கு இது சாதாரணப் பிரச்சனை இல்லையோ? மெல்ல எழுந்து அருகே வந்து கன்னத்தை வருடினான். அவனின் தொடுகையை உணர்ந்த பாரதி கண்களை விழிக்கவில்லை. கண்களை திறக்காவிட்டாலும் பாரதி தூங்கவில்லை என்பதை புகழேந்தியாலும் உணர முடிந்தது.

கடந்த சில மணி நேரங்களாக அவள் யோசனையில் இயல்பாகப் பேசாமல் யோசனையில் மூழ்கி இருப்பதற்கு என்ன காரணம்? ஏற்கனவே மறந்து இருந்ததாக சொன்ன... இல்லை இல்லை... சிகிச்சை மூலம் மறக்கடிக்கப் பட்டு இருந்த சிவாவின் மரணம் பற்றிய நினைவுகள் வந்து விட்டதா? அதனால் ஒதுக்கம் காண்பிக்கிறாளா?

எப்படி சரி செய்வது? வாய் விட்டுப் பேசினால், அழுதால் ஆறுதல் சொல்லலாம். தனக்குள்ளேயே இறுகி

போனால் என்ன செய்வது? கேள்விகள் துளைத்து எடுக்க, என்ன பேசுவது என்று தெரியாமல் அமர்ந்து இருக்க, வாசல் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டு அவன் திரும்பி பார்த்தான். வாசலில் நின்றது ராஜேந்திரன்.

ராஜேந்திரனை அந்த நேரத்தில் அந்த மருத்துவ மனையில் பார்க்க நேர்ந்ததில் பாரதி, புகழேந்தி இருவருக்குமே அதிர்ச்சியாக இருந்தது.

''மாமா, நீங்க எப்படி இந்த நேரத்தில் இங்கே?'' என்று வியப்புடன் புகழேந்தி வாய் விட்டுக் கேட்க பாரதியோ கூர்மையுடன் அப்பாவை ஆராய்ந்தாள்.

கேள்வி கேட்ட புகழுக்கு பதில் சொல்லாமல் கட்டிலின் அருகே நகர்ந்த ராஜேந்திரன், அவளின் நெற்றியை வருடி, ''பாரதி...'' என்றவர் கண்ணீரில் தத்தளித்த குரலில் அழைக்க அவள் அவரின் கைகளை விலக்கினாள்.

''எனக்கு என்ன ஆச்சு?'' என்றவளின் கேள்வியில் இறுக்கம் மட்டுமே இருந்தது.

''உனக்கு ஒன்றும் ஆகவில்லை பாரதி. குறைந்த ரத்த அழுத்தத்தினால் வந்த மயக்கம் தான் சரி ஆகி விடும்...''

''நான் இப்ப நடந்ததை கேட்கவில்லை'' என்று அவள் சொன்னது காதில் விழாததால், முந்தைய வாக்கியத்தை தொடர்ந்து பேசினார் ராஜேந்திரன்.

''வெகு தூரம் நடந்ததால் வந்த மயக்கம். சீக்கிரம் சரி ஆகி விடும்'' என்ற தந்தையின் பதிலில் ரத்த அழுத்தம் அவளுக்கு எகிறியது.

''நான் ரொம்ப தூரம் நடந்தேன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?''



''அது... வந்து... நான்...'' என்று தயங்கியவர் சங்கடத்துடன் புகழை பார்த்தார்.

''என்னை பார்த்துப் பேசுங்க. தேனிலவில் மகளையும் மருமகனையும் பின் தொடர்ந்து வந்து இருக்கீங்க. உலகத்திலே எந்த தகப்பனும் செய்யாத ஒரு வேலை இது.''

''இல்லை பாரதி, உன்னுடைய நன்மைக்காக...''

''பேசாதீங்க. நீங்க என்னுடைய நன்மையை என்னிக்குமே நினைத்ததே இல்லை. உங்களுக்கு உங்க கௌரவம் மட்டும் தான் பெரிசா தோன்றும். அதுக்கு நடுவில் பொண்ணோட மனசை ஒரு பொருட்டா நினைத்தே பார்க்க மாட்டீங்க அப்படித்தானே?''

''பாரதி...'' என்ற அவரின் தழுதழுப்பான குரல் அவளை எட்டியதும் ஆவேசமாக அவரின் சட்டையை கொத்தாக பிடித்து உலுக்கினாள்.

''சிவாக்கு என்ன ஆச்சு? எனக்கு எப்படி சிவாவை பற்றி எந்த நினைவு இல்லாமல் போச்சு? என்ன பண்ணினீங்க?'' என்று பிடித்து உலுக்க அவர் தடுமாறினார்.

''பாரதி, என்ன இது? மாமாவை விடு. ட்ரிப்ஸ் ஏறுது பார். அமைதியா இரும்மா. எதுவா இருந்தாலும் நான் பேசுறேன்'' என்று அவரிடம் இருந்து புகழேந்தி விலக்க முயல அவனையும் தள்ளி விட்டாள்.

''விடுங்க என்னை, இவர் என்ன செய்தார் என்று உங்களுக்குத் தெரியாது.''

''பாரதி, உனக்கு என்ன ஆச்சு என்று எனக்குத் தெரியும். உங்க அப்பா திருமணத்துக்கு முன் என்னிடம்

சொல்லி விட்டார்'' என்று நெற்றியை வருடி சமாதானப் படுத்த முயன்ற புகழேந்தியை நேருக்கு நேர் பார்த்தாள்.

''நீங்க என்னை நம்புறீங்களா?''

''ஹேய் இதென்ன கேள்வி? நிச்சயமா நம்புகிறேன்.''

''அப்படி என்றால் நான் சொல்வதை மறுத்துப் பேசாதீங்க. இவரைப் போகச் சொல்லுங்க. நாம் எப்ப கிளம்பலாம் என்று நீங்க டாக்டரை பார்த்துக் கேட்டுட்டு வாங்க'' என்றதும் அவன் சங்கடமாகத் திரும்பி பார்த்தான்.

''அவரை கிளம்ப சொல்லுங்க. எனக்கு அவரிடம் பேசப் பிடிக்கல.''

''ஏன் பாரதி, அப்பா உன்னைப் பார்க்கத் தானே...?''

''என்ன பேசறீங்க புகழ்? என்னைப் பார்க்க வந்து இருக்கிறார் என்று சப்போர்ட் பண்றீங்களே? எப்படி பார்க்க வந்தார்? நான் மயக்கமடைந்து விட்டேன் என்று நீங்க போன் பண்ணி, பதறி அடிச்சு சென்னையில் இருந்து பறந்து வந்தாரா? தேனிலவு வந்த பெண்ணைப் பின் தொடர்ந்து வந்து இருக்கிறார். அவர் எதையும் தெரியாமல் செய்யலை. வேண்டும் என்றே செய்து இருக்கிறார். இவரோ, இவரின் மனைவியோ மீண்டும் நம்மை வந்து சந்திக்க வேண்டாம்'' என்று கடுமையான குரலில் சொல்ல, புகழேந்தி மேற்கொண்டு எதுவும் பேசுவதற்கு முன் அவர் வெளியேறினார்.

ராஜேந்திரன் மருத்துவமனைக்கு வரும் முன்பு குறைவாக இருந்த இரத்த அழுத்தம், அவர் வந்து சென்ற பிறகு கணிசமான அளவு அதிகரித்து இருக்க, சில மருந்துகளை எழுதி கொடுத்து விட்டு மறுநாள் பரிசோதனைக்கு வர சொல்லிவிட்டு அனுப்பினார் மருத்துவர்.



அடுத்த இரண்டு மணி நேரத்தில் மருத்துவமனையில் இருந்து கிளம்பியவர்கள், அறைக்கு வந்ததும் படுக்கையில் சரிந்த பாரதியின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்து கொண்டே இருந்தது. அருகே வந்து படுத்து, அவளின் முகத்தை தன் புறம் திருப்பி கண்களை நேராக பார்த்தான்.

''பாரதி...'' என்று அழைத்தபடி அவன் தோளில் கை வைத்த புகழேந்தியை திடுக்கிட்டு திரும்பி பார்த்தாள்.

''நான் தான். பயந்து விட்டாயா? உடம்பு இன்னும் சரி இல்லையா? ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?'' என்று விசாரிக்க, மறுப்பாகத் தலை அசைத்தாலும் அவளின் கண்கள் அவனை நேராகப் பார்க்கவில்லை.

''சாரி. என்னால உங்களுக்குச் சிரமம்'' என்று தட்டுத் தடுமாறிச் சொல்ல, திகைப்புடன் பார்த்தான்.

''இப்ப நீ அழுவதற்கு என்ன காரணம் என்று நான் தெரிந்து கொள்ளலாமா பாரதி? அதுக்கு மேலே இப்ப எதுக்கு சாரி சொல்கிறாய்? சொல்லு'' என்று கேட்டதும் கண்களை துடைத்துக் கொண்டு தன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''உங்களுக்கு என் மேல் கோபம் வரவில்லையா புகழ்?'' என்று கேட்டவளை தன் மார்பில் சாய்த்து தலையை வருடி கொடுத்தான்.

''எதுக்கு உன் மேல் கோபம் வரணும் பாரதி?''

''நான் சிவா பற்றிய விபரங்களை உங்களிடம் சொல்லாமல் விட்டதற்கு கோபம் வரலையா?'' என்று கேட்டவளின் முகவாயை பற்றி நிமிர்த்தினான்.

''நீ வேண்டும் என்றே எனக்கு சொல்லக் கூடாது. என்னிடம் மறைத்தே ஆக வேண்டும் என்று முயற்சி செய்தாயா?''

''இல்லை. ஆனால்...''

''இதை புகழிடம் சொல்லாதீர்கள் என்று உங்க அப்பாவிடம் சொன்னாயா?''

''இல்லை...''

''இதை மறைக்க உங்க அப்பா உன்னிடம் கேட்டு நீ அனுமதி கொடுத்தாயா?''

''இல்லை...ஆனால்...''

''இது எதுவுமே இல்லை என்ற போது உன் மேல் கோபம் கொள்ளவும் எனக்கும் எந்தக் காரணமும் இல்லை பாரதி. அது மட்டும் இல்லை. நீ நினைத்து இருந்தால் இப்போதும் இந்த விஷயத்தை என்னிடம் சொல்லாமல் மறைத்து இருக்கலாமே? ஏன் செய்யவில்லை?''

''என்று நாம் திருமணம் செய்து கொண்டோமோ, அன்றே நமக்கு ஒளிவு மறைவு இல்லாமல் இருக்கணும் என்று நினைக்கிறேன்.''

''நமக்குள் ஒளிவு மறைவு வேண்டாம் என்று நினைத்தாய் அல்லவா? அதே மாதிரி தான் நானும் அக்னி சாட்சியாக, இவளை இன்பத்திலும் துன்பத்திலும் இறுதி வரை விட்டு விலகாமல் காப்பேன் என்று மந்திரம் ஓதி, உன்னை நான் மணந்து இருக்கிறேன் பாரதி. எனக்கு நீ மட்டும் போதும்...''

''இது நான் சம்பந்தப்பட்ட விஷயம் தான். இதை நீங்க தெரிந்து கொள்வதும், சரியான விதத்தில் புரிந்து கொள்வதும் அவசியம் தான்.''



''உன் கடந்த காலத்தைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. உன் எதிர்காலத்தை தான் நான் பகிர்ந்து கொள்ள ஆசைப் படுகிறேன். உனக்கும் அந்த எண்ணம் இருந்தால் போதும். நம் வாழ்க்கை ஜோராக இருக்கும்'' என்று உறுதியான குரலில் சொல்ல அவள் அவனை கட்டிக் கொண்டாள்.

''எனக்கு ரொம்ப கில்ட்டியா இருக்கு புகழ். என்னால் ஒரு இருபது வயசு பையன் இந்த உலகத்தில் இல்லை. அதை நினைக்கும் போது...''

''ரிலாக்ஸ் பாரதி. பதினேழு வயசு என்பது ரொம்ப சின்ன வயது. அதிலும் வீட்டை விட்டு வெளியே சென்று தனயே தங்கும் போது, அன்பாக அக்கறையுடன் சில உதவிகள் செய்யும் ஆண் மீது ஈர்ப்பு வருவதில் தப்பில்லை. அது காதலாக நீ எண்ணி...'' என்றதும், அதுவரை அவன் மார்பில் சாய்ந்து கண்ணீருடன், குழைந்த குரலில் பேசிக் கொண்டு இருந்த பாரதி வெடுக் என்று விலகினாள்.

''புகழ், நீங்க யாரை பற்றி பேசிட்டு இருக்கீங்க?'' என்று கேட்டவளின் குரலில் கோபம் சேர்ந்து இருப்பதன் காரணம் புரியாமல் விழித்தான்.

''ஏன் பாரதி? சிவாவை பற்றி தான். நீ சொல்லா விட்டாலும் எனக்கு முன்பே தெரியும் ரதி...''

''எப்படி தெரியும்?''

''உங்க அப்பா சொன்னார்...''

''அப்பா..? எப்ப சொன்னார்...? இங்கே வந்த போதா?''

''இங்கே இல்லை. நான் உங்க வீட்டுக்கு வருவதற்கு முன்பே, என்னை வங்கிக்கு தேடி வந்து சொல்லி விட்டார் பாரதி.''

''என்னவென்று...?'' என்று கேட்டவளின் குரலில் இருந்த கோபத்தையும் கடின தன்மையையும் உணராமலே அவளை சமாதானப்படுத்த முயன்றான்.

''அது இப்ப எதுக்கு பாரதி? நீயும் நானும் கணவன் மனைவி. அதுவும் விரும்பி கல்யாணம் செய்து கொண்ட புதுமண தம்பதியினர். தேவை இல்லாத கடந்த காலத்தைப் பற்றி பேச வேண்டாமே?''

''கடந்த காலம் என்பது சரி. தேவை இல்லாத என்பதை என்னால் ஒத்து கொள்ள முடியாது. அது என் மனதில் ஆழமாக பதிந்து போன அழகான நினைவுகள். என்றென்றும் நான் மறக்க விரும்பாத நினைவுகள்.''

''சிவா பற்றிய விஷயம் தேவை என்று சொல்கிறாயா?''

''ஆமாம்! அது பற்றி உங்களுக்கு என்ன தெரியும் என்று முதலில் சொல்லுங்க. உண்மைகள் அப்படியே உங்களை வந்து சேர்ந்து இருக்க வாய்ப்பு இல்லை.''

''உங்க அப்பா மேலே நம்பிக்கை இல்லையா?''

''இல்லை...''

''அவர் பொய் சொல்லி இருப்பார் என்று நம்புகிறாயா?''

''அது முழுக்க முழுக்க உண்மையாக இருக்குமா என்று தெரியலை.''



''என்ன ஆச்சு உனக்கு? எதுக்கு மாமா மேலே அவ்வளவு கோபம்? அவர் என்ன பண்ணினார்?'' என்று அவளின் முகவாயை பற்றி நிமிர்த்த அவள் மறுபுறம் திரும்பி கொண்டாள்.

''சிவாவின் மீது எனக்கு ஈர்ப்பு. அவனைக் காதலித்தேன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றவளின் கேள்வியில் உச்ச பட்ச உஷ்ணம் இருந்தது.

''எனக்கு நேரிடையாகத் தெரியாது. பாரதி. உங்க அப்பா சொன்ன....''

''போதும்! எங்க அப்பா சொன்னதை அப்படியே நம்பி விட்டீர்கள். ஒருத்னை காதலித்து, அவன் மரணம் அடைந்ததால், என் வாழ்க்கை வீணாகிவிடக் கூடாது என்ற எண்ணத்தில் எனக்கு பெரிய மனசு பண்ணி, நீங்க மறு வாழ்க்கை கொடுத்ததா நினைச்சு இருக்கீங்க அப்படி தானே? ஒரு விஷயம் பற்றி சம்பந்தப் பட்டவர்களிடம் பேசவில்லை என்ற போது, நேரிடையாக தெரியாத ஒரு விஷயத்தை பற்றி, இவ்வளவு பெரிய பொய்யை சர்வ சாதாரணமாகச் சொல்ல உங்களுக்கு எப்படி மனசு வந்தது?''

''பாரதி...'' என்று அவளின் தோள் பற்ற முயன்றவனை விலக்கி உதறினாள்.

''இந்த மாதிரி பேச்சுக்கள் காதில் விழுவது பிடிக்காமல் தானே மூன்று வருஷம் முன்னால் பேச பிடிக்காமல் அமைதியா இருந்தேன். அப்ப ஊரும் உலகமும், பேசினதையே தாங்க முடியலை. ஆனால் இப்போ...'' என்றவள் குரலில் கோபம் கொப்பளித்தது.

''பாரதி ப்ளீஸ் கொஞ்சம் அமைதியா இரு.''

''இப்போ என்னை பெற்று வளர்த்த பெற்றோர்கள் சொல்றாங்க. நீதான் என் எதிர்காலம் என்று நான் ஏற்று கொண்ட கணவன் சொல்கிறான். இதுக்கு மேலயும் எங்கே போய் முட்டி கொள்வது? எதுக்கு எனக்கு இந்த ஞாபகம் வந்தது என்றே தெரியலை. ஒரு ஆண் ஒரு பெண்ணோடு பேசினால் பழகினால் காதலாக மட்டும் தான் இருக்கணுமா? இதென்ன அநியாயம்?''

''பாரதி, உனக்கு தான் வாய் இருக்கிறது என்று அளவில்லாமல் பேசிக் கொண்டே போகாதே. உன்னுடைய கடந்த காலத்தில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரிய வாய்ப்பில்லை பாரதி. அதை நான் தெரிந்து கொள்ளவும் ஆசைப் படவில்லை. அன்று காஞ்சிபுரத்தில் புடவை எடுக்கச் சென்ற போது நீயும், என்னிடம்...'' என்று சொல்லி பேச முடியாமல் நிறுத்தினான்.

''அன்று நான் என்ன சொன்னேன்? சொல்லுங்க. எதற்கும் தயங்க வேண்டாம். என்னிடம் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் இருக்கு.''

''இதே வார்த்தை சொல்லி தான் எனக்கு சுடிதார் வாங்கி தந்தீங்க. இப்ப மீண்டும் பட்டுப் புடவையா என்று கேட்டாய்...''

''நீங்க என்ன வார்த்தை சொன்னீங்க?''

''அப்படியே தேவதை மாதிரி இருக்கிறாய் என்று சொன்னேன்...''

''தேவதை மாதிரி காதலன் மட்டும் சொல்லக் கூடிய வார்த்தையா என்பது பொதுவான வார்த்தை இல்லையா



புகழ்? அதை அம்மா அப்பா அண்ணன், யார் வேண்டுமானாலும் சொல்லலாம் தானே?'' என்றவளின் பதிலில் வேகமும் கோபமும் இருந்தது. நீயும் என்னை புரிந்து கொள்ளவில்லையே என்ற ஆதங்கம் பொங்கியது.

''அதை தான் நானும் சொல்கிறேன். நான் உனக்கு இதற்கு முன்னால் ஆடை பரிசளித்தது இல்லை என்ற போது இந்த வார்த்தை எப்படி வந்தது என்று யோசிக்க மாட்டேனா? அதில் தப்பு இருக்கா சொல்லு?'' என்று வேகமாகக் கேட்க முதல் முறையாக அவளின் முகத்தில் யோசனை வந்தது.

''எனக்கு சிவாவுடன் நேரடி பழக்கம் கிடையாது. சிவா பற்றிய தகவல் சொன்னது உங்க அப்பா. உங்க அப்பாவின் கருத்துக்கும் உன் எண்ணங்களுக்கும் வேறுபாடு இருந்தால் அதை விளக்க வேண்டியது உன் கடமை. செய்தாயா நீ?'' என்று கேட்க அவள் திகைப்புடன் பார்த்தாள்.

''நீ சொல்வதை அதை நான் நம்ப மறுத்தாலோ, கேள்வி கேட்டாலோ நீ சண்டை போட்டால் அதில் அர்த்தம் இருக்கு. நேரடியாக நமக்குள் எந்த பேச்சு வார்த்தையும் நடந்து இருக்காத நிலையில், என் எண்ணம் தவறு என்றால், அதை திருத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் உனக்கு இருக்கு பாரதி. அது சரி என்று பட்டால் நீயாக வந்து என்னிடம் விபரம் சொல்லு. நான் கொஞ்ச தூரம் வெளியே நடந்து விட்டு பதினைந்து நிமிடத்தில் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு கிளம்பினான்.

# 18

அறையை விட்டு வெளியே வந்து கால் போன போக்கில் வேகமாக நடந்து சென்ற புகழேந்தி அரை மணி நேரம் கழிந்த பிறகு, கால்கள் வலி எடுக்கவே கையை திருப்பி மணி பார்த்தான். எட்டரை. தங்கி இருந்த ஓய்வு விடுதி தூரத்தில் கண்ணில் பட்டது. எப்படியும் ஒரு கிலோமீட்டர் தூரம் இருக்கும்!

அவளுக்கு உணவு அனுப்ப சொல்லிவிட்டு வந்து இருக்கலாமோ என்று தோன்றிய எண்ணம் உடனே மறைந்தது. இல்லை. அவளைத் தனியாகச் சாப்பிட சொல்வது சரியல்ல. மதியமும் ட்ரிப்ஸ் ஏறியது தான். மனச சங்கடத்துடன் இருக்கும் போது அவளை தனியே விட்டு வந்து இருக்கக் கூடாது என்று தோன்றியது. தன் கோபம் கொஞ்சம் கூடுதலோ? மனம் குற்ற உணர்வில் குறுகுறுத்தது. நடையை எட்டி போட்டான்.

அலைபேசியில் ஓய்வு இல்லத்தின் எண்களை அழுத்தி பத்து நிமிடத்தில் உணவை கொண்டு வர சொல்லி ஆணை பிறப்பித்தான். இணைப்பை துண்டித்த போதே அழைப்பு வந்தது. அம்மா!

காலையில் இருந்து பேசவே இல்லையே? பாக்கியம் அத்தையிடம் பேசிய பிறகு அம்மாவிடமும் பேசி



இருக்க வேண்டும். பாரதி மாமாவை கோபித்து கொண்டதில் அவளுக்கு தெரியாமல் சமாதானப்படுத்தி, அவரை ஊருக்கு அனுப்பும் மும்முரத்தில் இது மறந்து விட்டது.

ப்ச்! தன்னை தானே நொந்து கொண்டு எடுத்தான். "ஹலோ அம்மா... எப்படி இருக்கீங்க?"

"புகழ்! நல்லா இருக்கேன்பா. நீ எப்படி இருக்க?" என்று கேட்கும் போதே அவனை அறியாமல் ஒரு பெருமூச்சு வெளியேறி இருக்க வேண்டும். "புகழ், என்ன ஆச்சு?" என்று அம்மாவின் பதட்டமான குரல் கேட்டதும் சமாளித்தான்.

"ஒன்றும் ஆகலைம்மா. நான் நல்லாதான் இருக்கேன்..." என்று சொல்லும் போது 'தான்' என்ற வார்த்தையை சேர்த்து பூரணியை மேலும் குழப்பினான்.

"என்னடா ஒரு மாதிரி பேசுகிறாய்? பாரதி எங்கே?"

"அவள் ரூமில் இருக்காம்மா..."

"இந்த ராத்திரி நேரத்தில் அவளை தனியா ரூமில் விட்டு விட்டு நீ எங்கே போனாய்?" என்ற பூரணியின் கேள்வியில் சந்தேகம் முளை விட்டு இருந்தது.

"சும்மா ஒரு வாக்கிங் வெளியே வந்தேன்மா. சாப்பிட்டீங்களா?" என்று விசாரிக்க, அவன் குரலில் இருந்த சோர்வு பூரணியின் மனதில் பட்டது.

"வாக்கிங் ஏன் தனியே வந்தாய்?" என்று ஆரம்பிக்கும் போதே பூரணிக்கு முகம் சுருங்கியது. திருமணம் முடிந்த இரண்டாவது நாள் மனைவியை அறையில் விட்டு விட்டு, இவன் வெளியே என்ன வெட்டி

முறிக்கிறான்? ''புகழ், பாரதிக்கு ஒன்றும் பிரச்சனை இல்லையே?'' என்று கவலையுடன் கேட்க அவனுக்கு உள்ளே அலாரம் அடித்தது.

''அதெல்லாம் ஒன்றும் இல்லைம்மா. இவ்வளவு நேரம் அங்கே தான் இருந்தேன். இரவு உணவு சொல்வதற்காக வெளியே வந்தேன். ரூமுக்கு திரும்பி கொண்டு இருக்கிறேன்.''

''புகழ், நான் ஒன்று சொல்வேன். நீ தப்பா எடுத்துக் கொள்ளக் கூடாது...''

''சொல்லுங்கம்மா...''

''பாரதி வசதியான வீட்டில் செல்லமாக வளர்ந்தவள். திருமணத்தில் ஆண்களுக்கு வாழ்க்கை முறையில் மாற்றம் வராது. ஆனால் பெண்களுக்கு பிறந்தது முதல் பழகிய வீட்டை விட்டு விலகி இன்னொரு வீட்டிற்கு வருவதே சவால் தான். அந்த வீட்டை தன் வீடாக எண்ணி ஒட்டுறவுடன் பழக அவளுக்கு அவகாசம் தேவைப் படும். அதுவரை நீ கொஞ்சம் பொறுமையாதான் போகணும் புகழ். பார்த்து நடந்துக்கோ.''

''என்னம்மா என்னென்னவோ பேசறீங்க? நீங்க நினைப்பது மாதிரி எங்களுக்கு எந்த சண்டையும் இல் லைம்மா...''

''இல்லாவிட்டால் சந்தோஷம். கொஞ்ச நேரம் முன்னாடி பாக்கியம் அண்ணி பேசினாங்க. நீ எப்ப வருவாய் என்று விசாரித்தாங்க.''

''ஞாயிறு காலை தான் வருவேன் என்று ஏற்கனவே சொல்லிட்டு வந்தேனே?''



''அதான் நானும் சொன்னேன். அவங்க கேட்டதும் எனக்கே சந்தேகம் வந்துவிட்டது. அதுதான் உன்னிடம் உடனே பேசினேன். ஏதாவது மாற்றம் இருக்கா என்ன?'' என்று அவர் கவலையுடன் கேட்ட போது சென்னைக்கு திரும்பிப் போவதாக சொன்னால் அவர் மனம் மேலும் கவலை படும். வேண்டாம் என்று முடிவு செய்தான்.

''இல்லைம்மா...''

''நீ ரூமுக்கு போனதும் என்னிடம் பாரதியை பேச சொல்லு. மறக்காமல் சாப்பிடுங்க'' என்று போனை வைக்க அவனுக்கு பெருமூச்சு வந்தது.

மகனின் முகத்தை பார்க்காமல், குரலில் இருந்தே ஏதோ சரி இல்லை என்று ஊகிக்கும் தாயின் புத்திசாலித் தனம் பார்த்து பெருமிதம் வந்தது. கூடவே கொஞ்சம் பயமும் வந்தது. இவரிடம் எந்த விஷயத்தையும் மறைக்க முடியாது. தூரத்திலேயே இப்படி என்றால் வீட்டில் இருக் கும் போது மனவேறுபாடு என்பதை ஒரு பார்வையில் அவரால் கண்டு பிடித்து விட முடியும்.

மன வேறுபாடு எதுவாக இருந்தாலும் ஊட்டியில் இருந்து கிளம்புவதற்குள் சரி செய்து விட வேண்டும். இதை தொடர விட முடியாது. அறைக்கு சென்றதும் மன் னிப்பு கேட்டு இயல்பாக பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று அடுக்கடுக்காய் முடிவுகள் எடுத்து விட்டு உள்ளே வந்தான் புகழேந்தி.

உள்ளே நுழையும் போதே பதட்டத்துடன் அவள் நிமிர்ந்த காட்சி கண்ணில் பட்டது. தான் செல்லும்போது இருந்த அதே இடத்தில் அசையாமல் இருந்தாள். அரை மணி நேரத்திற்கும் மேலாக ஒரே இடத்தில் இருக்கக

கூடிய பெண்ணா? ஒரு இடத்தில் நிற்காமல் துறுதுறு வென்று ஓடிக் கொண்டே இருப்பாளே? வாய் ஒரு நிமிடம் பேசாமல் இருக்குமா?

இவளை இப்படி பார்க்கச் சங்கடமாக இருந்தது. ஒரு நாளைக்கே, இல்லை அரை நாளைக்கே தனக்கு இப்படி என்றால் ஒரு மாதம் இவள் பேசாமல் இருந்தால், அந்த பெற்றோரின் மனம் என்னமாக துடித்து இருக்கும்?

ராஜேந்திரன்-பாக்கியம் தம்பதியினரின் மன நிலையை ஊகிக்க முடிந்தது. பரிதாபம் வந்தது. ''ஐ ஆம் சாரி பாரதி'' என்ற மனதில் இருந்த வருத்தத்தை எல்லாம் குரலில் கொண்டு வந்து சொல்ல அவசரமாக நிமிர்ந்தாள்.

கடந்த அரை மணி நேர தனிமையில் அவன் வார்த்தைகளில் இருந்த நியாயம் புரிந்து இருந்தது. அவளுக்கு என்ன கோபம் என்றாலும் அதை அவன் அவளின் பெற்றோர்களிடம் காட்டி இருக்க வேண்டும். இவன் என்ன தப்பு செய்தான்? அவன் மன்னிப்பு கேட் கின்றானா? வெளியே போகும் போது சில வார்த்தைகள் கடுமையாக பேசியதற்கு மன்னிப்பு கேட்கின்றானா?

தப்பு செய்யாத நிலையில் மன்னிப்பு கேட்டு, பேச்சு வார்த்தையை துவக்கி, அவன் முதல் அடி எடுத்து வைத்த பிறகும் தான் பேசாமல் இருப்பது முறையல்ல. அவன் பேச காரணமானது தன் பேச்சுக்கள். அதற்கு தான் மன்னிப்பு கேட்க வேண்டாமா?

''இல்லை புகழ். நீங்க ஏன் மன்னிப்பு கேட்கணும்? நீங்க என்ன தப்பு பண்ணினீங்க? பண்ணியதெல்லாம் நானும் எங்க அம்மா அப்பாவும் தான். நான் தான்



உங்களிடம் மன்னிப்பு கேட்கணும்'' என்று அவன் முகம் பார்க்காமல் மெல்லிய குரலில் சொல்ல புகழ் மேலும் வருந்தினான்.

அவளுக்கும் தனக்கும் இதையே பத்தடி தூரம் இருக்கலாம். தன் வலது கையை நீட்டி, கண்ணால் அழைத்து, ''பாரதி...'' என்ற கனிவு ததும்பும் குரலில் சொல்லி நிறுத்த, அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அந்த பார்வை அவளை என்னவோ செய்தது. கடந்த காலம் எதிர்காலம் இரண்டுமே கருத்தில் இருந்து தற்காலிகமாக காணாமல் போனது.

அவன் குரலில் இருந்த கனிவும், கண்களில் இருந்த அழைப்பும், வரவேற்பாக தன் புறம் நீண்டு இருந்த வலது கரமும், மட்டுமே நினைவில் நிற்க முந்தைய வாக்குவாதம் மறந்து இரண்டே எட்டில் ஓடி வந்து அவன் மார்பில் சாய அவளை இறுக அணைத்து கொண் டான்.

''ஐ ஆம் சாரி புகழ்'' விம்மலுடன் கண்ணீரும் சேர்ந்து வர அவள் திக்கினாள்.

''நமக்குள் சாரி தேவை இல்லை பாரதி. பரஸ்பர நம்பிக்கையும் காதலும் தான் இப்ப அவசியம். எனக்கு அது உன் மேலே நிறைய இருக்கு.''

''எனக்கும் இருக்கு புகழ்'' என்றவளின் குரல் திக்கினாலும் வார்த்தைகள் வெளி வந்தது.

''சந்தோஷமான தாம்பத்திய வாழ்க்கைக்கு இது தான் அடிப்படை தகுதி. அது இருந்தால் போதும். பிரச்சனை களை சமாளித்து விடலாம்.''

''நான் இப்ப என்ன செய்யணும் சொல்லுங்க?''

''இப்ப நான் உன்னை அணைத்து இருக்கிறேனே? உனக்கு கஷ்டமாகவோ வெறுப்பாகவோ இருக்கா? உண்மையை சொல்லு'' என்று அவன் கேட்டு முடிக்கும் முன்பே அவள் மறுப்பாக தலை அசைத்து இருந்தாள்.

''இல்லை புகழ். இங்கே இருப்பது என் மனசுக்கு நிம்மதியையும் பாதுகாப்பு உணர்வையும் தருகிறது'' என்று சொல்ல அவன் முகம் மலர்ந்தது.

''புகழ்! நீங்க ஒரு விஷயம் புரிஞ்சுக்கணும்...''

''சொல்லு ரதி...''

''நான் விரும்பியது, கல்யாணம் பண்ணிக்கணும் என்று ஆசைப்பட்டது எல்லாமே உங்களை பார்த்து தான். உங்களை மட்டும் தான்...''

''அது எனக்குத் தெரியாதா? ஐ லவ் யூ டூ பாரதி. ஒன்லி யூ...''

''கொஞ்ச நேரம் முன்னால் உங்களிடம் சண்டை போட்டேன் இல்லையா?'' என்று ஆரம்பித்தவளின் குரலில் ஆழ்ந்த வருத்தமும் விழிகளில் ஈரமும் இருக்க அவன் மென்மையாக துடைத்து விட்டான்.

''என்னிடம் மட்டுமா சண்டை போட்டாய்? உங்க அப்பாவை கூட தான் அழ அழ விரட்டிவிட்டாய். பாவம் பாரதி..''

''அப்பா மேலே எனக்கு கோபம் வந்ததற்கு காரணம் இருக்கு புகழ்...''

''ரிலாக்ஸ் பாரதி. இருக்கட்டும். அதை பற்றி நாம் அப்புறம் பேசலாம். இப்ப சாப்பாடு வந்து விடும்.



பசியில் இருக்கும் போது சின்ன பிரச்சனை கூட பூதாகரமாக தெரியும். முதலில் சாப்பிடலாமா?'' என்று கேட்க அவள் அமைதியாக அறையின் ஓரம் இருந்த உணவு மேஜையில் அமர்ந்தாள்.

''ஏற்கனவே உணவு வந்து விட்டதா? நீ சொன்னாயா? நான் வேறே சொல்லி விட்டேனே?'' என்று அவன் பதறிய வேகத்தில் அவளின் கோபம் குறைந்து புன்னகை எட்டி பார்த்தது.

''நீங்க சொன்னது தான். இரண்டு நிமிடம் முன்பு தான் வந்து சேர்ந்தது.''

''கை கழுவிட்டு ரெண்டே நிமிஷத்தில் வந்து விடுகிறேன்'' என்றவன் திரும்பி வந்த போது, இரண்டு தட்டுகளில் உணவு பரிமாறி இருந்தாலும் அவள் முகம் எங்கோ தூரத்தில் தெரிந்த மலை முகட்டை வெறித்து கொண்டு இருந்தது.

''என்ன ஆச்சு?'' என்று அவளின் உச்சியை மெல்ல வருடி, முகவாயை பற்றி நிமிர்த்தி விசாரித்தான்.

''ஒன்றும் இல்லை.''

''என்ன டிபன் அனுப்பி இருக்காங்க? சப்பாத்தியா? உனக்கு பிடிக்குமா? ஏதோ ஒன்று சூடாக சாப்பிட்டால் நல்லா இருக்கும்'' என்று மேலே துருவாமல், அதை அப்படியே விட்டு விட்டு, அமர்ந்தான்.

மெத்துமெத்தென்று எண்ணை இல்லாமல் செய்த புல்காக்களும், ஆவி பறக்கும் பாசிப்பயரில் செய்த டாலும், வெள்ளரிக்காய் காரட் துருவி போட்டு எலுமிச்சம் பழம் பிழிந்த சாலடும், கண்களை பறித்தது.

''பார்க்க நல்லா இருக்கு. சாப்பிட எப்படி இருக்குமோ? உனக்கு சமைக்கத் தெரியுமா?'' என்று தொடர்ந்து பேச்சு கொடுத்தபடி சாப்பிட ஆரம்பித்தான். அவளிடம் இருந்து பதில் வரவில்லை. கைகள் தட்டில் இருந்த சப்பாத்தியை பிய்க்கும் முயற்சியில் இருந்தது.

''உனக்கு சமைக்க தெரியாது என்பதற்காக இவ்வளவு சோகமாக இருக்க வேண்டியதில்லை. அம்மா சமைப்பாங்க. சமையல் புக் நாலு வாங்கித் தருகிறேன். அதை வச்சு ரெண்டு பேரும் சமையல் கற்று கொள்ளலாம்'' என்று சீண்டியதற்கும் அவளிடம் இருந்து பதில் இல்லை.

''பாரதி, நீ இப்படி அடிக்கடி உன் கூட்டுக்குள் போய் ஒளிந்து கொண்டால் நான் என்ன செய்வது? வெளியே தெரியாமல் உன்னை இயல்பாக்க முயற்சி செய்கிறேன். கொஞ்ச நேரம் முன்பு அம்மா என்னிடம் பேசினாங்க'' என்றவன் குரலில் கண்டனம் இருக்க அவள் தவிப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

''உன்னிடம் பேசணும் என்று சொன்னாங்க. நான் ரூமுக்கு போனதும் பேசச் சொல்கிறேன் என்று சொன்னேன். உன்னை தனியாக விட்டு ஏன் வெளியே இருக்கிறேன் என்று கேட்டாங்க.''

''......''

''அம்மா ரொம்பவே ஷார்ப். அவங்க என் மேலே உயிரையே வச்சு இருக்காங்க. அதுவும் அப்பா போன பிறகு அவங்களுக்கு அந்த அன்பும் பிரியமும் ரொம்ப ஜாஸ்தியாகி விட்டது. என் முக பாவனையில் இருந்தே விஷயம் ஊகித்து விடுவாங்க...''



''......''

''இப்ப நமக்குள் ஏதோ பிரச்சனை என்ற சந்தேகம் அவங்களுக்கு வந்து விட்டது. அதை வளர விட கூடாது...''

''அதுக்கு நான் என்ன செய்யணும்?'' என்று குனிந்த தலை நிமிராமல் விசாரித்தாள்.

''நீ அம்மாவிடம் பேசணும். பேச்சு என்றால் சும்மா இல்லை. கலகலப்பாக, நீ நார்மலாக இருக்கிறாய் என்று அவங்க நம்புகிற மாதிரி பேசணும்.''

''பதினைந்து நிமிடம் கழித்து பேசுகிறேன்...''

''இந்த குரலில் பேசினால், அவங்க நிச்சயம் நம்ப மாட்டாங்க பாரதி...''

''புகழ், ப்ளீஸ், பத்து நிமிடம் அவகாசம் கொடுங்க...''

''ஓகே, எனக்குப் புரியுது பாரதி. ஆனால் நீ பேசாமல் ஒதுங்கி நின்றால் உன் மனசு பாரம் குறைய வாய்ப்பு கம்மி. பேசினால் தான் குறையும்...''

''ம்ம்...''

''நான் உங்க அப்பாவிடம் பேசினேன் பாரதி..'' என்று சொல்லி முடிக்கும் முன்பே ஆக்ரோஷமாய் முறைத்தாள்.

''நாங்களாக பேசும் வரை தொடர்பு கொள்ள வேண்டாம். நீங்க முதலில் ஊருக்கு கிளம்புங்க என்று சொல்லிவிட்டேன்'' என்று அவன் சொன்ன அடுத்த வாக்கியம் அவளின் கோபத்தை கணிசமாக குறைத்தது.

அதை அவனும் கவனித்த வினாடியே மனம் லேசாகி, அவளின் மனநிலையை தன்னால் சரியாக கணிக்க

முடிகிறது என்ற எண்ணம் வந்ததில் சின்ன புன்னகை மலர்ந்தது.

## 19

அன்று பிற்பகல் மருத்துவமனையில் இருந்து மன வருத்தத்துடன் வெளியேறிய ராஜேந்திரனை, அடுத்த சில நிமிடங்களில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினான் புகழேந்தி.

ராஜேந்திரனின் மனதை தேற்றி ஆறுதல் சொல்லி, ஆயிரம் ப்ளீஸ், போட்டு, 'நீங்க சென்னைக்கு கிளம்புங்க மாமா. நான் பாரதியை பார்த்து கொள்வேன். இப்போதைக்கு இங்கே தங்கி நீங்க எதுவும் செய்ய முடியாது. ஏன் சிரமப்பட்டு கொண்டு இங்கே இருக்க வேண்டும்? அவளின் கோபம் குறைந்த பிறகு நானே பேசுகிறேன்'' என்று அனுப்பி வைத்தான். அது அவளுக்கு தெரிய வேண்டிய அவசியம் இல்லை. அவள் நிம்மதியாக இருந்தால் போதும் என்ற திருப்தியுடன் அவளை பார்த்து புன்னகை செய்தான்.

''உங்க அப்பா இந்நேரம் கிளம்பி இருப்பார் பாரதி. உங்க அப்பா உங்க அம்மாவிடம் என்ன சொன்னாரோ தெரியவில்லை. அத்தை அம்மாவிடம் பேசி, அம்மா என்னை துருவினாங்க...'' என்று சலிப்புடன் புகழ் சொல்ல அவள் கவலையுடன் பார்த்தாள்.



''என்ன ஆச்சு?''

''இங்கே நடந்த எந்த குழப்பமும், தனியாக இருக்கும் எங்க அம்மாவுக்கு இப்ப உடனே தெரிய வேண்டிய அவசியம் இல்லை என்று உங்க அப்பாவிடம் சொல்லி இருந்தேன். ஆனால் அங்கே என்ன நடந்தது என்று தெரியலை. அம்மா என்னை என்ன பிரச்சனை எப்போ வருகிறாய் என்று கேட்டாங்க. நான் பிரச்சனை ஒன்றும் இல்லை. ஏற்கனவே சொன்ன மாதிரி ஞாயிறு அன்று வருவேன் என்று சொல்லி சமாளித்து விட்டேன். நீயும் இப்போதைக்கு காப்பாற்றி விடு'' என்று பாதி உண் மையும், மீதி தன் எதிர்பார்ப்பும் கலந்து சொல்ல அவள் மெதுவாக தலை அசைத்தாள்.

''மெதுவா தலை அசைக்கிறாய்? இங்கே இருக்க இஷ்டம் இல்லையா?''

''இல்லை... இங்கே... நான்...'' என்று தடுமாறிய வளுக்கு மனதின் எண்ணங்களுக்கு வார்த்தை வடிவம் கொடுக்க முடியவில்லை. தேனிலவு தம்பதியினராக இருக்க முடியாவிட்டால் ஏன் இங்கே இருக்க வேண் டும்? சென்னைக்கு செல்லலாமே என்று சொல்ல விரும்பி, சொல்ல முடியாமல் தயங்கியதை அவனால் உணர முடிந்தது.

''பாரதி, நாம் உடனே கிளம்பி சென்னை சென்றால் ஏகப்பட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டி வரும். உனக்கு உடல் நிலை சரி இல்லை. மருத்துவ வசதி தேவை என்றால், போய்த்தான் ஆக வேண்டும். இப்ப அந்த மாதிரி தேவை இல்லையே? இங்கேயே இருக்கலாமே பாரதி...''

''ம்ம். சரி. ஆனால் உங்களுக்கு...''

''சீக்கிரமே எல்லாம் சரியாகி விடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு பாரதி. திருமணத்திற்கு முன்பு நீயும் நானும் போனில் பேசி கொள்வோமே. அந்த மதிரி பேசி சிரித்தால் போதும். நான் இன்னும் சில நாட்கள் காத்திருக்க தயார்'' என்று சொல்ல அவள் பெருமூச்சுடன் தலை அசைத்தாள்.

''இன்னும் ஒரு வேண்டுகோள். அம்மாவிடம் பேசிடு...'' என்று சொல்ல அவனிடம் இருந்து அலைபேசியை வாங்கி சகஜமாக பேச முயன்றாள்.

''என்ன சமையல் பண்ணினீங்க? சென்னையில் மழையா? சாப்பிட்டீர்களா? பாண்டியன் வந்தாச்சா? வீட்டில் கட்டிட வேலை நடக்குதா? என்று சில கேள்விகளை கேட்டு விட்டு போனை வைத்த போது பூரணிக்கு மட்டும் இல்லாமல் புகழேந்திக்கும் திருப்தி வந்தது.

''தாங்க்ஸ் பாரதி..'' என்றவன் அவளை அணைத்து கன்னத்தில் முத்தமிட்டான். ''புகழ்...'' என்ற அழைப்புடன் அவள் விலக முயல, ''குட் நைட் டார்லிங்'' என்று சொல்லி விட்டு இப்போது நெற்றியில் முத்தமிட்டவன், படுக்கைக்கு விலக்கி சென்று சில நிமிடங்களில் தூங்கியும் விட்டான்.

புகழேந்தி தூங்கிய பிறகு, அவசரமாக சென்று அவன் அருகே படுத்தவள், அவன் மீது கையை போட்டு தூங்க முயன்றாலும், மனதில் ஓராண்டுக்கு முந்தைய நினைவுகள் வந்து அலைமோத ஆரம்பித்தன. தன் எண்ணங்களிலிருந்து விடுபட முயன்ற பாரதி, அவனை மேலும் நெருங்கி படுத்து கொண்டாள். அவன் கைகள் தூக்கத்திலேயே தன்னோடு சேர்த்து தழுவி கொள்ள அவளையும் அறியாமல் தூங்கிப் போனாள்.



* * *

**ஊ**ட்டியில் மேக மூட்டம் விலகி இருக்காத அதிகாலை நேரத்தில், கண்ணாடி ஜன்னல்களையும், கனத்த திரைசீலைகளையும் தாண்டி புகமுக்கு குளிர் உரைக்க, கனத்த ரஜாயை இன்னும் இழுத்து கழுத்து வரை சரியாக போர்த்த முயன்ற போது மார்பில் ஏதோ தட்டுப்பட விழித்தான்.

தன்னை ஒட்டி படுத்து மார்பில் தலை வைத்து தூங்கி கொண்டு இருந்த பாரதியை கண்டதும் கண்கள் கனிந்தது. தூக்கம் கலைந்து காணாமல் போனது. முந்தைய நாள் நினைவுகள் வந்தது. எப்போது தூங்கினாளோ தெரியவில்லை. பாவம் என்ற எண்ணம் தோன்றியது.

அவளை சேர்த்து அணைத்து கொண்டதில் குளிரும் குறைந்து மனதில் இதமும் பரவ, அந்த நேர சுகத்தை அனுபவிக்க விடாமல் அலைபேசி அழைத்தது. அது அலைபேசி அழைப்பு தானா என்று உணர்வதற்கு முன்பே நின்று விட அவன் கண்டு கொள்ளவில்லை.

ஊட்டியின் இதமான குளிரில், மனைவியின் அருகாமையில் தன்னை மறந்து தூங்கி விட்டான். எவ்வளவு நேரம் கழிந்ததோ? பாரதிக்கு விழிப்பு வந்து அவனிடம் இருந்து விலக முயற்சி செய்யும் போது தன்னோடு சேர்த்து அணைத்து கொண்டான்.

''இப்படி காலங்கார்த்தால எழுந்து அர்ஜென்டா செய்ய வேண்டிய வேலை ஒன்றும் இல்லை பாரதி. பேசாமல் படு.''

''இல்லைங்க, உங்க போன் மணி அடிச்ச மாதிரி இருந்தது.''

''எனக்கு கேட்கலையே?''

''எனக்கு கேட்டுது. பாருங்க. அவசரமான தகவலா இருக்கப் போகுது'' என்று அவள் சொன்ன பாவனையில் மனம் இன்றி எழுந்தவன் அலைபேசியை பார்த்ததும் அதிர்ந்தான். பாண்டியன்! என்ன இந்நேரத்தில் அழைத்து இருக்கிறான்? அம்மாவுக்கு உடல் நலக்குறைவா? உடனே ஒரு பதட்டம் தொற்றி கொள்ள, அவசரமாக அவனை மீண்டும் அழைத்தான்.

அம்மாவிடம், பாரதி பற்றிய கேள்விகளுக்கு விளக்கம் சொல்ல வேண்டி இருக்குமோ என்ற கவலை வர அவசரமாக அறையை விட்டு வெளியே தோட்டத் துக்கு வந்தான்.

''என்ன பாண்டியன் போன் பண்ணி இருக்க? அம்மா நல்லா இருக்காங்களா?''

''அம்மா நல்லா இருக்காங்க. சாரி சார், உங்களிடம் ஒரு தகவல் அவசரமா சொல்ல வேண்டி இருந்தது அதான் அதிகாலையில் தொந்தரவு பண்ணி விட்டேன். மன்னித்து கொள்ளுங்க.''

''பரவாயில்லை. இப்ப தான் கண் விழித்தேன். என்ன விஷயம் சொல்லு.''

''நீங்க திரும்பி வரும் வரை, இரவு உங்க வீட்டில் தங்க ஒத்து கொண்டேன் இல்லையா? அதை நிறைவேற்ற முடியாமல் சின்ன பிரச்சனை வந்துவிட்டது.''

''என்ன ஆச்சு பாண்டியன்? நீ இப்ப எங்கே இருக் கிறாய்?''



''இப்ப நான் காரில் கோவை வந்து கொண்டு இருக்கிறேன் சார். ஒரு அவசரமான சொந்தப் பிரச்சனை. தவிர்க்க முடியாமல் கிளம்பி விட்டேன். இன்று இரவு உங்க வீட்டுக்குப் போக முடியாது. முன்னாடியே உங் களிடம் சொல்லி விட்டால் நீங்க அம்மாவுக்கு வேற ஏற்பாடு பண்ணி கொள்வீங்களே'' என்றவன் குரலில் பதட்டம் நிறைந்து இருந்தது.

''அம்மா உன்னை வேண்டாம், நானே சமாளித்து கொள்வேன் என்று தான் சொன்னாங்க. நான் தான் தனி வீடாக இருக்கே என்று பயந்தேன். பரவாயில்லை. ஆனால் உன் குரலில் என்ன இவ்வளவு பதட்டம்? என்ன பிரச்சனை? ஏதாவது உதவி தேவையா?''

''இல்லை பரவாயில்லை சார். நீங்க கல்யாணம் முடிச்சு தேனிலவுக்கு போய் இருக்கீங்க. இந்த நேரம் உங்களைத் தொந்தரவு பண்ண எனக்கு இஷ்டம் இல்லை சார். தாங்க்ஸ்.''

''நான் தேனிலவு பயணத்தை பாதியில் முடித்து கொண்டு கிளம்பப் போவதில்லை. என்ன விஷயம் என்று சொன்னால் பிரச்சனையை சமாளிக்க ஒரு தீர்வு சொல்வேன் இல்லையா? பதட்டமாக இருக்கும் போது உன்னால் ஒழுங்கா யோசிக்க முடியாது. சொல்லு பாண்டி.''

''நான் சென்னைக்கு ஏன் வந்தேன் என்று உங்களுக்கு தெரியுமே சார்...?''

''ஆமா! ஏதோ ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அந்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு சீக்கிரம் ஒரு நல்ல நிலைக்கு வரணும் என்று சொன் னாயே...? பாண்டி.. அந்த பெண்ணுக்கு...?''

''அதே தான் சார். இப்போதைக்கு என் பெண்ணுக்கு கல்யாணம் பண்ணும் உத்தேசம் இல்லை. இன்னும் மூன்று வருடம் ஆகும் என்று சொல்லி என்னை இந்த பக்கம் அனுப்பி விட்டு அந்த பக்கம் வேறே கல்யாணம் ஏற்பாடு பண்றாங்க சார்.''

''ஓ மை காட்! அவங்க வீடு இங்கே எங்கேயோ தானே இருக்கு. ஊட்டியில் இருந்து பக்கம் தானே? நான் வேண்டுமானால் போய் பேசட்டுமா?''

''உங்களால் இப்ப உடனடியா மேட்டுப்பாளையம் வரை போக முடியுமா? நான் அங்கே வர ரெண்.டு மணி ஆகிவிடும் சார். அதற்குள் அவளுக்கு எதுவும் ஆகி விடக் கூடாதே என்று பயப்படுகிறேன்'' என்றவன் குரலில் பதட்டமும் அக்கறையும் இருந்தது.

''நீ அட்ரஸ் சொல்லு. நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் அங்கே இருப்பேன்'' என்று சொல்ல அவன் அழுதே விட்டான்.

''நான் உங்களுக்கு நிறைய கடமைப்பட்டு இருக் கிறேன் சார்'' என்று சொல்லி முகவரியை கொடுக்க அவன் அறைக்கு அவசரமாக திரும்பினான்.

''பாரதி, நான் ஒரு முக்கியமான வேலையாக மேட்டுப்பாளையம் வரை செல்ல வேண்டும். நீயும் என்னுடன் வருகிறாயா?''

''இந்த நேரத்திலா?''

''ஆமா, ஒரு அவசரமான உதவி, ஒரு பெண்ணின் உயிரை காப்பாற்றணும்...'' என்று சொன்னதும் வியப் புடன் நிமிர்ந்தாள்.



''காரில் போகும் போது விபரம் சொல்கிறேன். நீயும் என்னுடன் வா. ஒரு பெண் இருந்தால் இந்த நேரத்தில் அந்த வீட்டில் பேச உதவியாக இருக்கும்'' என்று சொன்னதும் எழுந்தாள்.

யார் அந்த பெண்? அவளுக்கு என்ன ஆபத்து? அந்த தகவல் இவனுக்கு எப்படி வந்தது? அவள் இவனுக்கு என்ன வேண்டும்? அவளை இவன் எப்படி காப்பாற்ற போகிறான்? நெஞ்சில் ஆயிரம் கேள்விகள் படையெடுத் தாலும், முன் தினம் உடல்நிலை சரி இல்லாமல் மருத்துவமனையில் இருக்க நேர்ந்து அசதியாக இருந்தாலும், புகழ் சொன்ன வார்த்தைக்கு கட்டுப்பட்டு முகத்தை துடைத்து கொண்டு பதினைந்து நிமிடங் களில் வாசலுக்கு வந்த மனைவியை பெருமிதத்துடன் பார்த்தான் புகழ்.

அருகே அமர்ந்து இருந்த கணவனை சில முறை திரும்பி பார்த்தாலும், பாரதி கேள்விகள் எதுவும் கேட்கவில்லை. முன்தினம் இரவு அவன் கேள்விகள் எழுப்பி விட்ட பழைய நினைவுகள், இன்னும் மனதில் நிழலாடி கொண்டு இருந்ததால் அவளின் அமைதி நீண்டது.

''பாரதி, எங்கே போகிறோம் என்று கேட்கவில் லையா?'' காதோரம் புகழின் குரல் கேட்க அவள் நினைவலையில் இருந்து மீண்டு திரும்பி பார்த்தாள்.

''ம்ம்ம், மேட்டுப்பாளையத்தில் யாருக்கோ பிரச்சனை என்று சொன்னீங்களே? காலையில் போன் பண்ணியது யாரு?''

''பாண்டியன்...''

''பாண்டியனா..? சென்னையில் இருந்தா? அத்தைக்கு ஏதேனும்...?'' அவளின் முகத்தில் பதட்டம் வந்து இருந்தது. அந்த பதட்டம் அவனை மகிழ வைத்தது. அவள் தோளின் மீது கை போட்டு அருகே இழுத்து, ''அம்மா நல்லா இருக்காங்க'' என்று உறுதி அளிக்க அவளின் முகம் மலர்ந்தது.

''பாண்டியனுக்கு ஒரு சின்ன பிரச்சனை. பாரதி, நீ முதலில் என்னுடன் காரில் வந்த போது நான் கோவையா என்று கேட்டது உனக்கு நினைவிருக்கா?'' என்று விசாரிக்க அவள் திகைப்புடன் தலைஅசைத்தாள்.

''ம்ம்ம் இருக்கு...''

''ஏன் அப்படி கேட்டாய்?''

''அப்போது கோவையில் இருந்த சம்பவங்கள் நினைவில் இல்லையே? காரில் மருதமலை முருகன் படம் இருந்தது. நீங்க ரொம்ப கலகலப்பாக பேசினீங்களா? நீங்க எனக்கு தெரிஞ்சவங்களா இருந்து நான் மறந்து விட்டேனோ என்று சந்தேகம் வந்தது. அதை ஏன் இப்போ கேட்கறீங்க?''

''ஆனால் அந்த சந்தேகம் உனக்கு எப்படி வந்தது?''

''அன்றைய தினத்திற்கு ஒரு வாரம் முன்பு தி-நகரில் இதே மாதிரி ஒரு சம்பவம் நடந்தது. அங்கே என்னால் என்னுடன் படித்த வானதியை நினைவு கூற முடிய வில்லை. அவள் ரொம்ப கோபித்துக் கொண்டாள்'' என்றவளின் குரலில் வருத்தம் இருக்க அவன் திரும்பிப் பார்த்தான்.

''அந்த வானதி யார்? இப்ப எங்கே இருக்கிறாள்?''



''கோவை தான் அவளுக்கு சொந்த ஊர். ஏன் கேட்கறீங்க?''

''சும்மா தகவலுக்குக் கேட்டேன். கேட்கக் கூடாதா? உன் ப்ரெண்ட்ஸ் பற்றிய தகவல் எனக்குச் சொல்ல மாட்டாயா பாரதி...''

''சொல்வேன். இப்ப பாண்டியன் பிரச்சனைக்கு வாங்க. நாம் இப்போ எங்கே எதுக்குப் போகிறோம்?''

''அந்த காரின் சொந்தக்காரன் பாண்டியன் என்று தெரியும் இல்லையா? அவன் கோவையில் இருந்து சென்னைக்கு பிழைப்பு தேடி வந்தவன்...''

''அவருக்கு வேண்டியவங்களுக்கு பிரச்சனையா? அதுக்காக போகிறோமா?''

''ஆமா, அவன் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ள விரும்பினான். படித்து முடித்த உடனே, நீயே உன் சாப்பாட்டுக்கு அடுத்தவங்க கையை எதிர்பார்க்கும் நிலையில் எந்த தைரியத்தில் பெண் கேட்கிறாய்? பணம் சம்பாதித்து ஒரு நல்ல நிலைக்கு வந்த பிறகு பெண் கேள் என்று அனுப்பி விட்டாங்க. இவனும் இரண்டு ஆண்டுகள் அவகாசம் கேட்டு வந்துவிட்டான். அந்த காலம் முடிவதற்கு முன்பே அந்த பெண்ணுக்கு வேறே இடத்தில் திருமணம் பேசி முடிக்க முயற்சி செய்றாங்க...''

''அந்தப் பெண்ணுக்கு பாண்டியனைப் பிடித்து இருக்கா தெரியுமா? இவராக எதையாவது நினைத்து கொண்டு இருக்கப் போகிறார்...'' என்று அவசரமாக இடையிட்டாள் பாரதி.

''உன் சந்தேகத்தை அந்த பெண்ணிடம் நீயே கேட்டு தெளிந்து கொள். அந்த பெண்ணிடம் பேசத்தான் உன்னை நான் அழைத்து வந்து இருக்கிறேன்.''

''அது தெரியாமலேயே நாம் பெண் வீட்டில் போய் பேசுவது நியாயமா புகழ்?'' என்று கேட்ட பாரதியின் கண்களில் இன்னும் அவநம்பிக்கை இருந்தது. தன்னை வாட்டிய சோகம் இன்னொரு பெண்ணுக்கும் நிகழ விட கூடாது என்ற உறுதி தெரிந்தது.

''அந்த பெண் சங்கரி, பாண்டியனுக்கு நைட் போன் பண்ணி அழுது இருக்கிறாள். நீ இல்லாவிட்டால் செத்து விடுவேன் என்று சொல்லி அழுது இருக்கிறாள். அவனும் சென்னையில் இருந்து கிளம்பி வருகிறான். அவன் வர மூன்று மணி ஆகிவிடும். அதற்கு முன்னால் நம்மை அந்த வீட்டுக்குப் போகச் சொன்னான். இல்லை என்றால் எனக்கு எப்படி தகவல் தெரியும் சொல்லு? எல்லோரையும் சந்தேகப் படக் கூடாது பாரதி...'' என்றவன் குரலில் கண்டனம் இருக்க அவள் திரும்பி முறைத்தாள். அதன் பிறகு மேட்டுப்பாளையம் வந்து சேரும் வரை பாரதி பேசவே இல்லை. ஆனால் ஊருக்குள் கார் நுழைய அவளின் கண்கள் விரிந்தது.

''பாண்டியன் சொன்ன பொண்ணு இங்கேயா இருக்காங்க?'' என்றவளின் கண்களில் ஆச்சரியம் இருக்க அவனும் வியப்புடன் தலை அசைத்தான்.

''ஆமாம். ஏன்?''

''இந்த ஊரில் எங்கே?''

''எல் எஸ் புரம் இரண்டாவது தெரு.''



''எல் எஸ் புரமா? அவங்க அம்மா அப்பா பேரு?''

''என்ன பாரதி, இவ்வளவு கேள்விகள் கேட்கிறாய்? அங்க யாரையாவது உனக்குத் தெரியுமா?''

''சொல்லுங்களேன்... ப்ளீஸ்..'' என்று கன்னத்தை பிடித்து உலுக்க அவன் தோளை குலுக்கினான்.

''நான் கேட்கலையே? முழு முகவரி தெரியும். பெண்ணின் பெயர் தெரியும். அம்மா அப்பா பேர் தெரியலையே? வேண்டுமானால் பாண்டியனிடம் கேட்கட்டுமா?'' என்று புகழ் விசாரிக்கும் போதே கார் அந்த குறிப்பிட்ட தெருவிற்குள் நுழைந்தது.

''புகழ்! இந்த தெருவா...?'' என்று பாரதி கேட்டு முடிக்கும் முன்பே, ''இந்த ஹோட்டலுக்கு அடுத்த வீடு என்று நினைக்கிறேன், நம்பர் சரி பாருங்க டிரைவர்...'' என்று புகழ் சொல்ல அந்த வாகனம் நின்ற வீட்டை பார்த்து திகைத்த பாரதி கண்கள் அந்த வீட்டை விட்டு நகரவே இல்லை.

அந்த வீட்டுக்கு அவள் வந்து இருக்கிறாள். இரண்டு வேளை விருந்து உண்டு இருக்கிறாள். அந்த வீட்டின் தலைவிக்கு மகளாக சீராடி இருக்கிறாள். அது சிவாவின் வீடு!

## 20

பாண்டியன் தனக்கு அனுப்பி இருந்த முகவரியை கண்டு பிடித்து, காரை விட்டு இறங்கிய புகழேந்தி, பாரதி

வெறித்த கண்களுடன் காரிலேயே அமர்ந்து இருப்பதை பார்த்துக் குழம்பினான். மறுபுறம் வந்து கார் கதவை திறந்து விட்டவன், ''இந்த வீடு தான் பாரதி, இறங்கு'' என்று கை பற்றி இறக்க முயலும் போது, அவளின் கண்களில் கண்ணீர் பொங்கி ததும்பியதை கண்டதும் அவன் பதறினான்.

''பாரதி என்ன ஆச்சு? ஏன் அழுகிறாய்?''

''இது... இதுதான்... சிவாவின் வீடு... இங்கே... நான் வந்து இருக்கிறேன்...''

''மை காட்! இது எனக்குத் தெரியாது பாரதி. நான் வேண்டும் என்றே உன்னை இங்கே அழைத்து வரவில்லை. பாண்டியனுக்கு உதவி செய்வதாக நினைத்துக் கொண்டு உன்னை கஷ்டப்படுத்தி விட்டேனா? சாரி பாரதி'' என்று வருத்தத்துடன் சொல்ல அவள் மறுப்பாகத் தலை அசைத்தாள்.

''இல்லை புகழ், நான் நேற்று இரவே, இங்கே வரணும் என்று நினைத்து கொண்டே தூங்கினேன். நான் மனதில் நினைத்த விஷயத்தை, உங்களிடம் சொல்லாமலேயே நீங்க நிறைவேற்றி இருக்கீங்க. அதற்கு நான் நன்றி சொல்லணும்'' என்று பொங்கி வழிந்த கண்ணீரை துடைத்தபடி, தழுதழுத்த குரலில் சொல்ல அவன் கண்களை துடைத்து விட்டான்.

''அப்புறம் எதுக்கு ரதி அழுகிறாய்?''

''நான் சிவா இருக்கும் போது இங்கே வந்து இருக்கிறேன் புகழ். அவங்க அம்மா தங்கை எல்லோரும் என்னிடம் ரொம்ப பிரியமா இருந்தாங்க. அவன் இறந்த



போது வரவில்லை. அதற்கு பிறகு இப்பதான்...'' என்று திணறும் போது மீண்டும் கண்ணீர் துளிர்த்தது.

''பாரதி, சிவாவின் மரணம் நிகழ்ந்து மூன்று ஆண்டுகள் முடிந்து விட்டது. இந்நேரம் இங்கே இருப்பவர்கள் அந்த மரணத்திற்கு பழகி இருப்பார்கள். நீ எமோஷனலா பேசினால், அது அவர்களின் ஆறிய காயத்தை கீறுவதற்கு சமம். ப்ளீஸ் புரிஞ்சுக்கோ'' என்று சொல்ல அவளும் தலை அசைத்தாள்.

புடவை முந்தானையால் முகத்தை அழுத்தமாக துடைத்தாள். வந்த வேலையை கவனிக்கலாம். சங்கரியின் மனதில் இருப்பது பாண்டியன் தானா? அதை முதலில் கண்டு பிடிக்க வேண்டும்.

அது உண்மை என்றால், இங்கே அவளை பாண்டியனுக்கு கொடுக்க சிவகாமியை சம்மதிக்க வைப்பது சுலபமாக இருக்குமா? பேசிப் பார்க்கலாம். தன் வார்த்தைக்கு மதிப்பு இருக்கும். அவள் இந்த வீட்டின் செல்ல பெண்.

''வாங்க புகழ்'' என்று அவனின் கை பற்றி நம்பிக்கையுடன் அந்த வீட்டில் கால் எடுத்து வைத்தவள், ஹாலில் இருந்த சிவகாமியை கண்டதும் ''அம்மா...'' என்று நடுங்கிய குரலில் அழைத்தாள். அவருக்கு தன்னை நினைவிருக்குமா? பார்த்து மூன்று ஆண்டுகள் ஆகி விட்டதே?

பழகிய குரல் கேட்டு திரும்பிய சிவகாமி, அங்கே பாரதியை கண்டதும் ஓடி வந்து, ''பாரதி, உனக்கு என்னை பார்க்க வீடு தேடி வர மனசு வந்ததா? சிவாவை பார்க்கக் கூட வராமல் இருந்து விட்டாயே? நீ வருவாய்

என்று நினைத்தேன். என்னை ஏமாற்றி விட்டாய். உங்களைச் சொல்லி என்ன பயன்? அந்த கடவுளே தன் தலை எழுத்தை கோணலா எழுதி விட்டான். நான் யாரை குற்றம் சொல்ல?'' என்று ஆதுரத்துடன் கட்டிக் கொண்டு புலம்ப தவித்தாள்.

''அம்மா அழாதீங்க. அப்ப எனக்கு உடல்நிலை சரி இல்லாமல் போய் விட்டது. ப்ச்! வருத்தப்படாதீங்க. இது என்னுடைய கணவர் புகழேந்தி. உங்களைப் பார்க்க வந்தோம். எப்படி இருக்கீங்கம்மா? சங்கரி எங்கே?'' என்று அவரின் முதுகை வருடி, தன் கண்ணீரை அடக்கி, கேட்டாள்.

''மன்னித்து கொள்ளுங்க. பாரதியை மட்டும் தான் பார்த்தேன். பாரதி எனக்கு பிறக்காத பொண்ணு. உங்களைப் பார்க்கவில்லை. வாங்க'' என்று புகழை வரவேற்றவர், ''ரூமில் இருக்கா பாரதி'' என்று மகளை பற்றி சொன்னார்.

''ஏன் காலேஜ் போக வேண்டாமா? மணி எட்டாச்சே?''

''இல்லை, இன்னிக்கு காலேஜ் போக வேண்டாம் என்று சொல்லி விட்டேன். நல்ல நேரத்தில தான் நீ வந்து இருக்கிறாய். இன்று அவளை நிச்சயம் பண்ண எங்க அண்ணன் வீட்டில் இருந்து வராங்க. நீ உன் மாப்பிள்ளையோடு இந்த நேரத்தில் வந்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம்...'' என்றதும் புகழும் பாரதியும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.

''அம்மா, உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச தான் நாங்க இந்நேரம் இங்கே வந்தோம்'' என்று புகழை பார்த்தபடி பேச்சை ஆரம்பித்தாள் பாரதி.



''சொல்லும்மா. உன்னை பார்த்த சந்தோஷத்தில் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. இந்நேரத்தில் நீ எப்படி இங்கே வந்தாய்?''

''அம்மா, உங்க அண்ணன் பையனை கல்யாணம் செய்து கொள்ள சங்கரிக்கு இஷ்டமா?'' என்று கேட்டதும் அவர் கண்களில் கோபம் வந்தது.

''இஷ்டம் இல்லாமல் என்ன? இவங்க அப்பா போனதில் இருந்து இத்தனை வருஷமா, இந்த ஹோட்டலுக்கு முதல் போட்டு கொடுத்து, கூடவே நின்று அவனையும் இவளையும் படிக்க வச்சு ஒரு ஆளாக எங்க அண்ணன் உருவாக்கினால், அவருக்கு நன்றிக் கடனைத் திருப்பிச் செலுத்த இவளுக்கு கசக்குதா? எங்க அண்ணன் மகனை பிடிக்கலை என்று சொல்லி விடுவாளா? நீ இந்தக் கேள்வியை இப்ப என்னிடம் ஏன் கேட்கிறாய்?''

''அம்மா, கல்யாணம் என்பது நன்றி கடனாக செய்வது இல்லைம்மா.''

''நன்றி கடனுக்காக இல்லை என்றாலும் எங்க அண்ணன் பையனுக்கு என்ன குறை? எப்படி இருந்தாலும் சரி, இவள் அந்த வெறும் பயலை கட்டிக் கொள்ள நான் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன்'' என்று ஆவேசமாக சிவகாமி சொல்ல புகழ் இடையிட்டான்.

''இல்லை ஆன்ட்டி, பாண்டியன் வெறும் பயல் இல்லை. இப்ப அஞ்சு லட்சம் பெருமானமுள்ள சொந்த கார் வைத்து வாடகைக்கு ஓட்டி வருகிறான். கை நிறைய சம்பாதிக்கிறான். இன்னும் இரண்டு வருடத்தில் அவனே ஒரு முதலாளி ஆகி நான்கு பேருக்கு வேலை கொடுக்கும், அளவுக்கு வளர வாய்ப்பு இருக்கு. எனக்கு அவனை நல்லாத் தெரியும்...''

''உங்களுக்கு பாண்டியனை பற்றி தெரியலாம். எங்க அண்ணன் பற்றியோ, அவர் பையனை பற்றியோ தெரியுமா?''

''தெரியாது ஆன்ட்டி. ஆனால் எனக்கு பாண்டியனை பற்றி நல்லா தெரியும்.''

''எங்க அண்ணன் பையனும் நல்லவன் தான்...''

''அம்மா, அவர் நல்லவனா இல்லையா என்பதே இங்கே பிரச்சனை இல்லை. அவரை சங்கரிக்கு பிடிச்சு இருக்கா இல்லையா என்பது தான் கேள்வி. கல்யாணத் துக்கு அது தான் முக்கியம். நீங்க சங்கரியை கூப்பிட்டுக் கேளுங்க. அவள் கல்யாணத்துக்கு சம்மதம் என்று சொல்லிவிட்டால் நாங்க மேற்கொண்டு உங்களிடம் பேசவில்லை...''

''இப்பவே உங்க முன்னாடியே கேட்கிறேன். அவளே சம்மதம் சொல்வாள்'' என்று சொல்லி விட்டு மகளை அழைத்தார் சிவகாமி. அவரின் நம்பிக்கையான குரலை கேட்டதும் பாரதி குழப்பத்துடன் புகழை பார்த்தாள்.

''உனக்கு மாமா பையனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள சம்மதமா என்று பாரதிக்கு தெரியணுமாம். உன் வாயால் ஒரு முறை சொல்லி விடு சங்கரி'' என்று பதுமையாக நடந்து வந்தவளிடம், சிவகாமி சொன்னார்.

புகழ் அங்கே பாரதியுடன் இருப்பதை கண்டதும் ஒரு கணம் யோசனையில் புருவம் சுருக்கி விட்டு, ''சம்மதம்...'' என்று முணுமுணுப்பாக சொல்லிவிட்டு உள்ளே திரும்பிச் செல்ல முயன்றாள்.

அவளின் நடையிலும், சம்மதம் தெரிவித்த பாவனை யிலும் ஏதோ ஒன்று பாரதியை குழப்பியது. அவள்



துறுதுறுப்பானவள். இத்தனை ஆண்டுகள் கழித்து வந்து இருக்கும் தன்னை அடையாளம் கண்டதாக காட்டி கொள்ளவில்லை. ஒரு புன்னகை இல்லை. தன் மேல் கோபமாக இருந்தால் கூட அவளால் அதை ஜீரணிக்க முடியும். ஆனால் இந்த வெறித்த பாவனை அவளை என்னவோ செய்தது.

''சங்கரி, ஒரு நிமிஷம் நில்லு'' என்று அதட்டலாக சொன்னாள் பாரதி.

''யார் நீங்க? நீங்க ஏன் என்னை அதட்டுறீங்க? இத்தனை நாள் எங்கே இருந்தீங்க? நேற்று காலையில் கூட என்னைத் தெரியாது என்று தலை ஆட்டி விட்டு போனவங்க தானே? இப்ப இங்கே எதுக்குப் பஞ்சாயத்து பண்ண வந்து இருக்கீங்க. எங்க குடும்ப விஷயத்தில் தலையிட நீங்க யார்?''

''மிஸ் சங்கரி, யார் மீதோ இருக்கும் கோபத்தை உங்க திருமணத்தில் காட்டாதீங்க. பாரதி மேலே உங்களுக்கு கோபம் இருந்தால் அதை நாம் தனியாகப் பேசிக் கொள்ள லாம். முதலில் பாரதி கேட்ட கேள்விக்கு மனசாட்சி படி பதிலை சொல்லுங்க'' என்று புகழேந்தி இடையிட திரும்பி முறைத்தாள்.

''நீங்க யார் சார்? உங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நீங்க கேட்கும் கேள்விக்கு நான் ஏன் பதில் சொல்லணும்?''

''நேற்று நீங்க பேசியதற்கும், இன்று நீங்க பேசுவ தற்கும் நிறைய வித்தியாசம் இருக்குதே மிஸ் சங்கரி. நான் பாண்டியனின் நண்பன். அவன் மேல் நிறைய அன்பும், அக்கறையும் வைத்து இருப்பவன். இப்ப பதில்

சொல்வீங்களா?'' என்று அழுத்தமான குரலில் கேட்க அவளின் முகத்தில் அதிர்ச்சி பரவியது.

''பாண்டியனை... உங்களுக்கு... எப்படித் தெரியும்..?'' கேள்வி திக்கித் திணறி வெளியேற, கண்கள் அருவியை கொட்ட தயாரானது. அந்த முக மாற்றம் பாரதிக்கு வேண்டிய தகவலைச் சொல்ல ஒரே எட்டில் அருகே வந்த வேகத்தில், அவளின் தோள் மீதே மயங்கி சரிந் தாள் சங்கரி.

''சங்கரி என்ன ஆச்சு?'' என்று கன்னத்தில் தட்டி அவளை எழுப்ப முயல அவளின் கண்கள் மெல்ல மெல்ல மூட ஆரம்பித்தது.

''அக்கா... நான்... தூக்க மாத்திரை... சாப்பிட்டுட் டேன்....'' என்று திக்கி திணறியபடி சரிய சிவகாமி பதறி னார்.

''ஹையோ என்ன வேலை பண்ணி விட்டாய் சங்கரி? சிவா தான் என் தலையில் கல்லை தூக்கி போட்டு விட்டு போனான் என்றால் நீயும் ஏன் இப்படி செய்து விட்டாய்?

''ஆன்ட்டி, பேசிக் கொண்டு இருக்க இப்ப நேரம் இல்லை. உடனே மருத்துவமனைக்கு எடுத்து செல்ல லாம். வாசலில் கார் இருக்கு. கிளம்புங்க. பாரதி தூக்கு...''

''இல்லை சார், என்னைக் காப்பாற்ற முயற்சி பண்ணா தீங்க. எனக்கு உயிர் வாழ இஷ்டம் இல்லை'' என்று உடன் வர மறுத்தவளை சட்டையே செய்யாமல், தன் இரு கைகளிலும் அள்ளினான்.

''பாரதி, நீ காரை ரெடி பண்ணு. போனில் பக்கத்தில் எந்த ஹாஸ்பிடல் இருக்கு என்று கூகிளில் தேடி.



சிகிச்சைக்கு ஏற்பாடு பண்ணு. போகும் போது அங்கே டாக்டர்ஸ் ரெடியா இருக்கணும். நீங்களும் வாங்க. கார் வெளியே இருக்கு'' என்று வேகமாக உத்தரவுகளை பிறப்பித்தவன் சன்னமான குரலில் வெளி வந்த சங்கரியின் மறுப்புகளை சட்டையே செய்யவில்லை.

''ஓங்கி ஒரு அறை விட்டேன் என்றால் தெரியும். பல் 32-ம் கொட்டி போகும். உயிரை விட காதல் பெரிசா? இந்த உயிர் நீ இஷ்டப்பட்டு வந்ததில்லை. இந்த வாழ்க் கையை முடித்துக் கொள்ள உனக்கு எந்த உரிமையும் இல்லை'' என்று அதட்டிய புகழேந்தியை பாரதியும் சிவகாமியும் வியப்புடன் பார்த்தார்கள். அவர்களின் பார்வையை உணராமல் பேசினான்.

''உன் தந்தையும் இல்லாமல், 21 வயசில் மகனை முழுசா பறி கொடுத்துவிட்டு, இவ்வளவு கஷ்டத்தையும் தாங்கிக் கொண்டு அவங்க இருப்பது உனக்காகத் தானே? உனக்காக உயிர் வாழும் உங்க அம்மாவின் அன்பு வேண்டாம். பாண்டியனை கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியா விட்டால் செத்து போகவும் தயார். ஆனால் அம்மாவுக்காக அம்மாவின் மன நிம்மதிக்காக, உங்களுக் காக உங்க கஷ்ட சம்யத்தில் ஆதரவு கரம் நீட்டிய அவருடைய அண்ணன் மகனை கல்யாணம் செய்து கொள்ள மாட்டாயா?''

''கல்யாணம் என்பது மனசுக்கு பிடிச்சு...''

''ஆமா! மனசுக்கு பிடித்தவனுடன் கல்யாணம் நடந்தால் சந்தோஷம் தான். ஆனால் நடக்கவில்லை என்றால் செத்துவிடலாமா?'' என்று வேகமாக கேட்க பாரதியே திகைத்து நின்றாள்.

அவன் என்ன நினைத்து இங்கே வந்தான்? இங்கே என்ன பேசிக் கொண்டு இருக்கிறான்? ''புகழ்'' என்று சத்தம் இல்லாமல் முன் சீட்டில் அமர்ந்து இருந்தவன் கவனத்தை ஈர்க்க முயன்ற பாரதிக்கு வெற்றி கிடைக்க வில்லை.

''பாண்டியனை கல்யாணம் செய்து கொள்ள வேண் டும் என்று மட்டும் நீ நினைத்து இருந்தால் அது நிறை வேற எத்தனையோ வழி இருக்கு. உங்க அம்மா தானே நீ சொல்வதை கேட்க மறுத்தாங்க. உன் மாமாவிடம் பேசினாயா? மாமா மகனான மாப்பிள்ளையிடம் பேசி னாயா? உன் மனதில் இருப்பதை சொன்னாயா?''

''அம்மாவை மீறி... எப்படி ஸார்... நான் அவர்களிடம் பேசுவது...?''

''முயற்சி செய்யாமல் உயிரை மாய்த்து கொள்ள முடிவெடுத்தது என்ன நியாயம்? மற்றவர்களை விட்டு தள்ளு. இப்ப உனக்காக சென்னையில் இருந்து அவசரமாக கிளம்பி வந்து கொண்டு இருக்கிறானே? அவனுக்கு நீ என்ன பதில் சொல்ல போகிறாய்?'' என்று அதட்ட அவள் பதில் சொல்ல முடியாமல் கண்ணீர் பெருக்கினாள்.

''புகழ். போதும். அவளே நொந்து போய் இருக்கிறாள். அவளை அப்புறமா திட்டி கொள்ளலாம்'' என்று பாரதி இடையிட்டதும், கோபம் குறைந்து மனைவியை திரும்பி பார்த்தான்.

''பாரதி, இந்த வீட்டுக்குள் நுழையும்போது எப்படி யாவது இவளை பாண்டியனுக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும் என்ற உறுதியுடன் தான் நுழைந்தேன். ஆனால் இப்ப அந்த முடிவே ஆட்டம் கண்டுவிட்டது.



ஒரே பெண்ணை வைத்து இருக்கும், அவள் நன்மையை நாடும் இவங்களை தனியா விட்டுட்டு சாகவும் துணிந்து விட்டவளை என்னால் மன்னிக்க முடியலை. சாரிம்மா'' என்று மனைவிக்கு விளக்கம் சொன்ன கையோடு சிவகாமியிடமும் மன்னிப்பு கோரியவனை வியப்புடன் பார்த்தார்கள். அடுத்தடுத்த வேலைகளை மின்னல் வேகத்தில் செயல்படுத்தினான்.

பிற்பகல் மூன்று மணிக்கு பாண்டியன் மருத்துமனை வந்து சேர்வதற்குள், சங்கரியின் சிகிச்சை முடிந்து அவளின் உடல் உறுப்புகள் எல்லாம் இயல்பாக செயல் படுவது உறுதி செய்யப்பட்டு இருந்தது.

தனக்காக திருமணத்திற்கு சம்மதம் சொன்ன மகள் உயிரை துச்சமாக மதித்து மாய்த்து கொள்ள முயன்றது. சிவகாமியை கலங்கடித்து இருந்தது. வீட்டுக்குள் நுழையும்போது தனக்கு இருந்த நோக்கம் சிவகாமியை பார்த்ததும் மாறிவிட்டது. என்று ஆவேசமாக மகளை திட்டிய புகழ், சங்கரியை திட்டும் போது சொன்ன கருத்துக்கள் அவன் மேல் அளவு மீறிய மரியாதையை ஏற்படுத்தியது. அவன் சான்றளிக்கும் பையன் நல்ல வனாக இருப்பான் என்று நம்ப வைத்தது.

பாண்டியனை பற்றி அண்ணனிடம் பேசி, சங்கரியின் மன நிலையைச் சொல்லி, ஏற்கனவே சிவாவை இழந்து தவிக்கும் எனக்கு இன்னொரு மரணத்தை சந்திக்க சக்தி இல்லை என்று புலம்ப வைத்தது.

''வாங்க மாப்பிள்ளை'' என்று பாண்டியனை சிவ காமியே மனமுவந்து வரவேற்றதும் நடந்தது. தாயின் மனமாற்றத்துக்கு காரணம் புகழேந்தி என்று சங்கரியை நம்ப வைத்தது!

மதிய உணவு தயாரிப்பிற்காக வீட்டிற்கு சென்ற அம்மாவிடம், அண்ணனின் டயரியை எடுத்து வர சொன்னாள் சங்கரி. அதை புகழிடம் காட்டி, 'மாமா' என்ற அழைப்புடன், பாரதியின் மனநிலையை அறியாமலேயே, 'சிவாவின் பார்வையில் பாரதி' என்ற பெயரில் அவனின் டயரியில் அவளை பற்றி எழுதி இருந்த கவிதைகளை அவனிடம் காட்டி மகிழ்ந்தாள்.

## கருவறை தோழி

மறக்கவில்லையடி!

கல்லூரி பிள்ளையாருக்கு
காலையில் போட்ட தோப்பு கரணங்கள்
மறக்கவில்லையடி!

சில்லறை கேட்டு ஆட்டோக்காரரிடம்
நீ போட்ட சண்டைகள்
கணக்கில்லாமல் நட்புக்கு
நீ செய்த செலவுகள்
மறக்கவில்லையடி!

பந்தயம் கட்டி,
பரிசுகள் கேட்டு
அடம் பிடித்த நிகழ்வுகள்
மறக்கவில்லையடி!



ஒரு வழி பாதை என்று இல்லாமல்,
ஒன்றுக்கு பத்தாக திருப்பி கொடுக்கும்
தாராள தருணங்கள் என்றும் மறக்காதடி
நீ கல்லூரி தோழி அல்ல
என் தாயின் கருவறை தோழி!

'கருவறை தோழி' என்ற தலைப்பில் சிவா எழுதி வைத்து இருந்த கவிதை அவன் மனதை கவர்ந்து நெகிழ வைத்தது.

சிவா பாரதியின் மேல் கொண்ட அன்பினை சான்று காட்டி விளக்கம் சொல்ல அதை மெய் மறந்து கேட்டு இருந்தான் புகழ். சிவாவின் பிரிவில் வாடும் பாரதியின் மனநிலையை துல்லியமாக உணர முடிந்தது.

சங்கரி உரிமையாக பேசிய பேச்சுக்கள் பாரதியின் காதில் புகை வர வைத்தது.

''அதான் பாண்டியன் வந்தாச்சே, கல்யாணம் பேசி முடிச்சாச்சு. வாங்க நாம் ஊட்டி போகலாம்'' என்று புகழை கை பற்றி இழுக்க வைத்தது.

''இருப்பா, சங்கரியை டிஸ்சார்ஜ் பண்ணி வீட்டில் விட்டுட்டு போகலாம்'' என்று சாக்கு சொன்ன புகழைப் பார்த்து பல்லைக் கடிக்க வைத்தது.

## 21

சங்கரியின் உடல்நிலை சீராகிவிட்டது என்றாலும், இரவு மருத்துவர்களின் கண்காணிப்பில் இன்று இரவு

மட்டும் தங்கி செல்லட்டும் என்று சொல்லிவிட, மாலை மயங்கி இரவு வந்ததுமே பாண்டியன் புகழிடம் வந்து கை குவித்தான்.

''சார், உங்களை நான் ரொம்பத் தொந்தரவு பண்ணி விட்டேன். இப்போ எல்லா காரியமும் நல்ல படியா முடிந்து விட்டது. இதற்கு மேலும் நீங்க இங்கே இருந் தால் என் மனசாட்சி என்னைக் கொன்று விடும் சார். மேடம் மருத்துவமனையிலேயே உட்காரக் கூட சரியான இடம் இல்லாமல் இங்கேயே எவ்வளவு நேரம் இருப் பாங்க? நீங்க ஊட்டிக்கு கிளம்புங்க சார் ப்ளீஸ்'' என்று சொல்ல அவன் பாரதியை பார்த்தான்.

''போகலாமா பாரதி?''

''முதலில் அதை செய்யலாம். நீங்க பாண்டியனுக்கு உதவி செய்ய ஊட்டியில் இருந்து கிளம்பியது நிஜம் தான். ஆனால் இப்போ இங்கே இருப்பதன் மூலம் அவ னுக்கு நிச்சயமா நீங்க உதவி பண்ணவில்லை.''

''ஏன் அப்படி சொல்கிறாய்?''

''சென்னையில் இருந்து இவளைப் பார்ப்பதற்காக பறந்தோடி வந்து இருக்கும் பாண்டியனை சங்கரியிடம் தனியா ரெண்டு நிமிஷம் பேச விட்டீங்களா?''

''அவங்களுக்கு தனிமை கொடுப்பதற்காக சொல் கிறாயா? ஓகே ஓகே'' என்று தோளை குலுக்கி புன்னகை செய்தான்.

''சரி பாண்டியன், உன் இஷ்டப்படி நான் கிளம்பு கிறேன். இனி நீ உன் ஆளை பத்திரமா பார்த்துக்கோ. உங்க மாமியார் உன் கல்யாணத்திற்கு ஓகே சொல்லிட் டாங்க. இனிமேல் என்னை இங்கே இருக்க விடுவாயா



என்ன? உங்க அம்மாவிடம் தகவல் சொல்லி சம்மதம் வாங்கிடு'' என்று சிரித்தான்.

''ஆன்ட்டி, இன்னும் ஒரு வாரத்துக்கு இங்கே தான் இருப்போம். ஏதாவது உதவி தேவை என்றால் கூப்பிடுங்க. உங்க பையன் மாதிரி நினைத்து கொள்ளுங்க. தயங்க வேண்டாம்'' என்று சிவகாமியிடம் விடை பெற்றான்.

''கல்யாண நாள் குறித்ததும் வருகிறோம். இந்த மாதிரி இன்னொரு முறை பைத்தியக்காரத்தனம் பண்ண கூடாது. தைரியமா வாழ்க்கையை எதிர்கொள்ளணும். வாழ்க்கையில் எந்தக் கஷ்டம் வந்தாலும் எதிர்த்துப் போராட நினைக்கணுமே தவிர அதை முடித்து கொள்ள நினைக்கக் கூடாது. சந்தோஷமா இருக்கணும்'' என்று சங்கரியிடம் விடை பெற்று கிளம்பினான்.

கார் எங்கே போகிறது என்று கவனிக்காமல் அவனை முறைத்து கொண்டு இருந்த பாரதியை பார்த்து புன் னகை செய்தான்.

''என்ன பாரதி, நானும் மதியத்தில் இருந்து பார்த்து கொண்டே இருக்கிறேன். ரொம்ப டென்ஷனாவே இருக்கிறாய்? என்ன விஷயம்?''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை...'' என்று மெல்லிய குரலில் சொன்னவளின் முகம் இருட்டில் வெளியே வெறித்து கொண்டு இருந்தது.

''பொய் சொல்கிறாய்...''

''ப்ச்! இல்லை...''

''அப்ப என்னைப் பார்த்து, என் கண்ணைப் பார்த்து சொல்லு...'' என்று அவளின் முகவாயை பற்றித் திருப்பிக் கேட்க அவள் அவனை பார்த்தாள்.

''என்ன சொல்லணும்? நான் எப்பவும் இருக்க மாதிரி தான் இருக்கேன்....''

''நான் என்ன வித்தியாசம் என்று சொல்லட்டுமா?''

''ப்ச்...''

''உனக்கு பொறாமை...''

''வாட் நான்சென்ஸ்?''

''என்னை மாமா மாமா என்று அழைத்து சங்கரி என்னிடம் பிரியமாக பேசியது உனக்கு பிடிக்கவில்லை. கரெக்டா...?'' என்று கேட்க அவள் திகைப்புடன் விழித்தாள்.

''எதையாவது உளறாதீங்க புகழ்...''

சங்கரி மீது தனக்கு பொறாமை என்று அவன் சொல்லும் வரை அவள் அதை உணரவில்லை. தங்களுக்கு திருமணம் முடிந்து விட்டது. பாண்டியனை மணக்க வேண்டும் என்பதற்காக தான் உயிரை மாய்த்து கொள்ளும் அளவுக்கு போனவள் சங்கரி. இவர்கள் இருவரும் பேசியதை பார்த்து தனக்கு பொறாமை வர கூடுமா?

அவளால் நம்ப முடியவில்லை. ஆனால் பொறாமை இல்லை என்றால், அங்கே தங்க முடியாமல் கிளம்ப தவித்ததற்கு வேறு என்ன காரணம் சொல்ல முடியும்? இத்தனைக்கும் தன்னை ஆசையோடு வரவேற்றார் சிவகாமி.

''சரி நான் உளறுகிறேன் என்றே வைத்து கொள்வோம். என் தப்பான எண்ணங்களை நீ திருத்தி விடு. ரூமுக்கு போனதும், சாப்பிட்டு தூங்க போய் விடக்



கூடாது. இன்று நாம் நிறைய பேசணும்...'' என்று அவளின் தோள் மீது கை போட்டு அருகே இழுத்து கொண்டவன் அடுத்து அவளை யோசிக்க விடாமல் ஏதேதோ பேசிக் கொண்டே வந்தான்.

''கொஞ்ச நேரம் பேசாமல் வாங்க புகழ். காலையில் சீக்கிரம் எழுந்தது தூக்கம் வருகிறது'' என்று கண் மூடி தூங்க முயன்றவள் வெற்றி பெற்றாள்.

ஒரு மணி நேர குட்டி தூக்கத்தை முடிவுக்கு கொண்டு வர, கார் நின்றதும் ''எஸ் பாரதி, இறங்கு'' என்று புகழ் சொல்ல இறங்கியவள் கண் முன்னால் பரந்து விரிந்து இருந்த 'அந்த கல்லூரி வளாகத்தை' பார்த்து திகைத்தாள். அது அவள் ஓராண்டு காலம் சிறகடித்து பறந்த இடம். ஆடை வடிவமைப்பு குறித்த படிப்பு சொல்லி கொடுக்கும் அந்த சிவப்பு கட்டிடம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது.

''புகழ்... இது... இங்கே.. நான்...'' என்று தன் இரண்டு கன்னங்களிலும் கைகளை வைத்து கண்களை விரித்து அந்த கல்லூரி வளாகத்தை விழுங்கி விடுபவள் போல ஆர்வத்துடன் பார்த்தவளை வாஞ்சையுடன் அணைத்து கொண்டான்.

''ஃபீலிங் கிரேட்...?''

''ம்ம்ம், பள்ளி பருவம் முடந்து முதன் முதலில் அடி எடுத்து வைத்த கல்லூரி அல்லவா? பனிமலர் காலேஜை விட இது தான் என் மனசுக்கு பிடித்தது புகழ். இங்கே எனக்கு நிறைய ப்ரெண்ட்ஸ். நிறைய அனுபவங்கள். நிறைய உணர்வுகள்...'' என்று அமர்ந்தவள், அந்த மண் தரையை வருடினாள்.

''இவ்வளவு நேரமாக திறக்காமல் இருந்த வாய், உங்க காலேஜ் காம்பஸ் பார்த்த உடனே திறந்து விட்டதே? சங்கரி சரியாக சொல்லி இருக்கிறாள்'' என்று பெருமையுடன் சொல்ல அவள் மெதுவாக தலை அசைத்தாள்.

அவளின் தோளை பற்றி நடத்தி சென்று ஓரமாக இருந்த சிமிண்ட் பெஞ்சில் அமர வைத்து தானும் அருகே அமர்ந்தான். இரவு எட்டரை மணிக்கும், கல்லூரி வளாகத்தில் ஆங்காங்கே மாணவர்களின் நடமாட்டம் இருந்தது.

கல்லூரி வளாகத்தை கண்டதும் அடைத்து இருந்த உணர்வுகளின் கதவுகள் திறந்து கொள்ள, அவள் கனவில் மிதப்பவள் போல பேச ஆரம்பித்தாள்.

''நான் காலேஜில் சேர்ந்த போது சிவா இறுதி ஆண்டு படித்து கொண்டு இருந்தான். அதோ அந்த பிள்ளையார் கோவிலில் தான் அவனை முதன் முதலில் பார்த் தேன்...''

''அவனும் நானும் ஒரே கலர் ஆடை அணிந்து இருந்ததால் என்னை பாட்டு பாடச் சொல்லி கலாட்டா செய்தார்கள். பார்த்த முதல் நாளே, 'அண்ணன் ஒரு கோவில் என்றால்' என்று பாடினேன். அவனுக்குச் சிரிப்பு தாங்கவில்லை. கூட இருந்த பசங்களும் அவனை கலாட்டா பண்ணிய போது கூட அவனுக்கும் என் மேல் ஏதோ ஒரு பிரியம் வந்து இருக்க வேண்டும்.''

''...இங்கே வெல்கம் பார்ட்டி நடந்தது. வானதியை பார்த்தேன். கிராமத்து பெண். பயந்த சுபாவம் உடை யவள். ராகிங் பார்த்து மிரண்டவள். எனக்கு வானதியை



தவிர நிறைய ப்ரெண்ட்ஸ் உண்டு. வானதிக்கு என்னை தவிர சிவா மட்டுமே ப்ரெண்ட்...''

''...இல்லை ப்ரெண்ட் என்று நான் நினைத்தேன். ஆனால் அவள் அதுக்குமே மேலே வைத்து இருந்ததாக சொன்னாள். சிவாவிற்கு எங்க ரெண்டு பேரையுமே பிடிக்கும். அவன் எனக்கு அண்ணன் மாதிரி. அவன் ரொம்ப நல்லவன். வானதியும் ரொம்ப நல்லவள் தான்...''

''...எல்லா சனிக் கிழமையும் நாங்க டவுனுக்கு போவோம். கோவிலுக்கு, கடைக்கு செல்வது, வெளி யில் சாப்பிடுவது எல்லாம் நடக்கும். சாயங்காலம் ஏழு மணிக்கு ஹாஸ்டலில் இருக்கணும் என்று வார்டன் கண்டிப்பா சொல்வாங்க. ஆனால் ஒவ்வொரு முறையும் லேட் ஆகிடும். ஏதோ ஒரு காரணம். அப்ப நிறைய தடவை சிவா காப்பாற்றி இருக்கிறான்...''

''...... ஒரு நாள் ஆட்டோ பிடித்து கொடுத்து, ஒரு நாள் லிஃப்ட் கொடுத்து, ஒரு நாள் ஜன்னல் வழியே எங்களை ஏற்றி விட்டு, இதெல்லாம் பார்த்து வானதி சிவாவை காதலித்து இருக்க வேண்டும்...''

அவன் கேட்கிறானா இல்லையா என்ற கவனம் கூட இல்லாமல், அந்த சூழ்நிலையில் ஒன்றி போய், தான் போக்கில் பேசிக் கொண்டு இருந்தவளை பிரியத்துடன் பார்த்தான் புகழேந்தி.

பேசு பேசு, என்று ராஜேந்திரனும் பாக்கியமும் தவம் இருந்து காத்திருந்த போது பேசாமல் அமைதி காத்தவள், முந்தைய தினம் ராஜேந்திரனுடன் சண்டைக்கு நின்றவள், கல்லூரி வளாகத்தில் காலடி எடுத்து வைத்த

நிமிடத்தில் இருந்து, மூச்சு விடாமல் பேசுவதை வியப்புடனும் வாஞ்சையுடனும் பார்த்து கொண்டு இருந்தான் புகழ். கடைசியாக சொன்ன வார்த்தையில் அதுவரை கடைப்பிடித்த மௌனத்தை தொடர முடியாமல் மெல்லிய குரலில் இடையிட்டான்.

''வேண்டும் என்று ஊகமாக சொன்னால் என்ன அர்த்தம் பாரதி? உன்னிடம் அவள் சொல்லவில்லையா?''

''அவள் என்னிடம் சொல்லவில்லை. அவள் பயந்த சுபாவம் உடையவள். வீட்டுக்கு கட்டுப்பட்டவள். ஆனால் சிவா என்னிடம் கோடி காட்டி இருக்கிறான். சின்ன பெண். அவள் மனசில் இந்த நேரத்தில் ஆசையை விதைக்கக் கூடாது. நான் நல்ல நிலைக்கு வரணும். அவள் படிப்பை முடிக்கணும். நாலு வருஷம் கழித்து சொல்லணும் என்று சொல்வான். அது தான், அந்த மனசுக்குள் பூட்டி வைத்த காதல் தான், இன்றைய குழப்பம் எல்லாவற்றிற்கும் காரணமாகி விட்டது புகழ்...''

''என்ன பிரச்சனை பாரதி? ஆரம்பத்தில் இருந்து என்ன நடந்தது என்று சொல்கிறாயா? மனதிலேயே பூட்டி வைத்தால் அழுத்தம் ஜாஸ்தி தான் ஆகும். உன் உணர்வுகளை என்னை நம்பி என்னிடம் பகிர்ந்து கொள்கிறாயா பாரதி?'' என்று மென்மையான குரலில் கேட்க அவள் மௌனமாக தலை அசைத்தாள்.

''நாம் ஊட்டிக்கு போகிறோமா? இல்லை இங்கேயே தங்க போகிறோமா?'' என்று சில கணங்கள் அமைதிக்கு பிறகு, விசாரித்தாள்.



''கோவையில் எனக்கு நாளை ஒரு முக்கியமான வேலை இருக்கு பாரதி. அதனால் இங்கே தான் தங்க போகிறோம்'' என்று சொன்னவனின் கண்கள் பளபளத்தை அவள் கவனிக்கவில்லை.

''அப்படி என்றால், நாம் அறைக்கு போய் விடலாமே புகழ். இங்கே பொது இடத்தில் பேசுவது வேண்டாம்...'' என்று முகத்தை துடைத்து கொண்டு பெஞ்சில் இருந்து எழ அவனும் பின் தொடர்ந்தான்.

அடுத்த பதினைந்து நிமிடங்களில் தங்கும் இடம் வந்து சேர்ந்து, அடுத்த பதினைந்து நிமிடங்களில் உண்டேன் என்று பேர் பண்ணி விட்டு படுக்கையில் அவளை ஒரு சின்ன கிண்ணத்துடன் நெருங்கினான் புகழ்.

''என்ன புகழ்...?''

''நீ சரியாகவே சாப்பிடலை. அதான் டெசர்ட் எடுத்து வந்தேன். இந்த ஸ்வீட் மட்டும் சாப்பிடு.''

''ப்ச்! எனக்கு வேண்டாம் புகழ்...''

''ஷ்! இது கோவை அன்னபூரணி ஹோட்டல் ஸ்பெஷல் ஸ்வீட். என்ன ஸ்வீட் என்று உன்னால் கண்டுபிடிக்க முடியுதா என்று பார்...'' என்று சொல்லி அவளின் கண்களை ஒரு கையால் பொத்தி விட்டு, மறு கையால் ஸ்பூனில் எடுத்து ஊட்டினான் புகழ்.

''ஹைய், பாசந்தி இது கூடத் தெரியாதா..?'' என்று உதட்டை சுழிக்க, அவன் சிரித்தான்.

''அதை நான் முன்பே சொல்லி இருந்தால் நீ சாப்பிட்டு இருப்பாயா? ஓகே, அதை விடு. இப்படி

சிரிச்சுட்டே இருக்கும் போதே அந்த மேட்டரையும் பேசி முடித்து விடலாம். சொல்லு பாரதி, சிவாவை நீ எங்கே எப்போ பார்த்தாய்?'' என்று பேச்சை ஆரம்பித்தான் புகழ்.

''முதலாம் ஆண்டு மாணவர்கள் சேர்ந்த போது அவர்களுக்கு உதவி செய்ய சில சீனியர் மாணவர்கள் செயல்பட்டு கொண்டு இருந்தார்கள். அதில் அவனும் இருந்தான். அப்ப தான் காலேஜில் இருந்த பிள்ளையார் கோவிலில் வைத்து முதலில் பார்த்தேன்...''

''இறுதி ஆண்டு மாணவன் என்றால் ராகிங் பண்ண மாட்டார்களா?''

''முதல் வாரம் கண்காணிப்பு ஜாஸ்தி இருக்கும் என்பதால் தான் ராகிங் செய்யவில்லை. ஆனால் பத்து நாட்கள் கழித்து மாலை நேரங்களில் ஆங்காங்கே நிற்க வைத்து ராகிங் நடக்கும். கொஞ்சம் தைரியமாக பேசுபவர்களை மீண்டும் மீண்டும் ராகிங் செய்வார்கள். அதனால் பயந்த மாதிரி நிறைய பேர் நடித்தார்கள். என்னை ராகிங் பண்ணும் போது சீனியர் ஒருவருக்கு பூ கொடுத்து லவ் யூ சொல்ல சொன்னாங்க...'' என்றவளின் குரல் நடுங்கியது.

''இன்னிக்கு இருக்க எல்லா காலேஜிலும் எல்லா வருடங்களிலும், முக்கால் வாசி பசங்களை, பொண்ணு பையன் வித்தியாசம் இல்லாமல் சொல்ல சொல்வது என்று எனக்கு தெரியும். அதில் பழகி நிஜ லவர்ஸ் ஆனவங்களையும் எனக்குத் தெரியும்'' என்று சொல்லி அவளின் கையைப் பற்றி அழுத்த அவள் புன்னகை செய்தாள்.



''அங்கே இருக்கலாம். அங்கே கும்பலாக நின்றவர்களில் சிவாவும் இருக்க, சிவாவிடம் போய் பூவை நீட்டி 'ஐ லவ் யூ' என்று சொல்ல சொல்கிறார்கள் என்று சொல்லி விட்டேன்...''

''ஓ...? ஆனால் சிவாவிடம் ஏன் அப்படி சொன்னாய்?''

''சிவா தான் ஏற்கனவே எனக்கு பழக்கமான ஆள். அவனை கோவிலில் பார்த்து 'அண்ணன் ஒரு கோவில் என்றால்..' பாட்டு பாடி இருந்தேனே. அதனால் அவன் என்னைப் புரிந்து கொள்வான் என்று நினைத்தேன். நீங்க ஏன் இப்படி கேள்வி கேட்கறீங்க?''

''இதை நீ உங்க அப்பாவிடமும் சொல்லி இருப்பாய் அல்லவா? நீ என்ன மனநிலையில் இருந்து எப்படி சொன்னாய் என்பது வெளியூரில் இருப்பவர்களுக்கு எப்படி தெரியும் பாரதி?'' என்ற புகழின் கேள்வி இடையில் வர அருகே படுத்து இருந்தவள் ஆவேசமாக எழுந்தாள்.

''நீங்க சந்தேகப் படுறீங்களா புகழ்?''

''பைத்தியம் மாதிரிப் பேசாதே. நான் உன்னுடைய கோபத்துக்கும் குற்ற உணர்வுக்கு என்ன காரணம் என்று அறிய முயற்சி செய்கிறேன்.''

''சிவா மனதில் நீ எப்படி இருந்தாய் என்பதை தான் இன்று மதியம் பூராவும் சங்கரி சொல்லிக் கொண்டு இருந்தாள். அதைக் கேட்ட பிறகும், அவன் டயரியில் உன்னை பற்றி எழுதி வைத்து இருந்த, 'கருவறை தோழி' என்ற கவிதையை பார்த்த பிறகும் சந்தேகப் பட எனக்கு ஒன்றும் பைத்தியம் இல்லை பாரதி'' என்று சொன்னதும் அவள் கண்களில் கண்ணீர் பெருகி வழிந்தது.

''அந்த கவிதை படித்தீங்களா புகழ்? அதை அவன் எப்போ எழுதினான் தெரியுமா? அந்த கவிதையை பார்த்த பிறகு தான் சிவகாமி அம்மாவின் கோபமே குறைந்தது தெரியுமா?'' என்று கலங்கிய குரலில் சொல்ல அவன் பதறி அவளை அணைத்து கொண்டான்.

''ஹேய் என்ன திடீர் என்று இவ்வளவு எமொஷன லாகி விட்டாய்? என்ன ஆச்சு? எதுக்கு ஆன்ட்டி கோப பட்டாங்க? உன் மேலேயா? சிவ மேலேயா? எப்போ?'' அவளின் முதுகை வருடியபடி, விசாரணையை தொடர்ந் தான்.

''கல்லூரியில் முதலாம் ஆண்டு விழாவில், 'மறைந்து இருந்து பார்க்கும் மர்மம் என்ன?' என்ற பாட்டுக்கு நான் டான்ஸ் ஆடினேன். அதை பார்த்து நிறைய பேர் பாராட்டி னாங்க. அதில் சிவாவும் இருந்தான். அப்ப அவனிடம் வெறுமனே பாராட்டினால் எப்படி? பரிசு கொடுக்கணும் என்று வம்பு பண்ணியதில், அவன் கழுத்தில் போட்டு இருந்த உருத்திராட்சம் கோர்த்த ஒரு சங்கிலி எடுத்து என்னிடம் கொடுத்து விட்டான். அப்போதான் பிரச்சனை ஆரம்பித்தது...'' என்றவளின் கண்கள் மீண்டும் கலங்க ஆரம்பித்தது.

# 22

தன் அணைப்பில் இதமான ஆறுதலை பாரதி உணர்ந்தாலும் அவளின் அழுகை நிற்கவில்லை என்



பதை உணர்ந்த புகழேந்தி, தன் குரலில் சிறிது கடுமையை கூட்டினான்.

''நீ ரொம்ப தைரியசாலி என்று நினைத்தேன். அதெல்லாம் வெளி பார்வைக்கு ஷோ தான் போல. முடிந்து போன விஷயத்தை எண்ணி அழுவதில் பிரயோஜனம் இல்லை பாரதி. இனி வரும் காலத்தை எப்படி சந்தோஷமாக கழிக்கணும் என்று பார்க்க வேண்டும். உனக்கு ரொம்ப கஷ்டமா இருந்தால் நீ இதைப் பற்றி எனக்குச் சொல்லவே வேண்டாம். எனக்கு எந்த விபரமும் தேவை இல்லை. சந்தோஷமா இருப்பது மட்டும் தான் வேண்டும்..'' என்று கடுமையான குரலில் சொல்ல, அவள் கண்களை துடைத்து கொண்டாள்.

''புகழ், உங்களிடமாவது உண்மையில் என்ன நடந்தது என்று சொல்லாவிட்டால், எனக்கு மனம் ஆறாது...''

''ஓகே, சொல்லு. ஆனால் அழாமல் சொல்லு.''

''எனக்கு பரிசாக சிவா கொடுத்த அந்த சங்கிலியை அவன் கழுத்தில் இருந்து கழட்டக் கூடாது என்று அவங்க அம்மா சொல்லி போட்டு இருக்காங்க...''

''அம்மா சென்டிமெண்ட் என்ற முறையில் கொடுத்த பரிசா? இல்லை வேறே எதுவும் முக்கிய காரணமா?''

''ரெண்டும் கலந்தது. அவனுக்கு ஜோசியம் பார்த்த போது 22 வயசில் அவனுக்கு தண்ணியில் கண்டம் இருக்கு என்று சொன்னாங்களாம். அதனால் மார்க்கண் டேயன் சிவபெருமானிடம் சரணடைந்த மாதிரி, சிவ னிடம் வேண்டி கொண்டு இந்த ருத்திராட்சம் கோர்த்த மாலையை அவனுக்கு போட்டு விட்டு இருக்காங்க.

இவர் காலேஜ் படிக்கும் பகுத்தறிவு வாதி இல்லையா? அதனால் இந்த விஷயத்தை சொல்லவில்லை. அதன் முக்கியத்துவம் தெரியாமல் பெருமையா என்னிடம் கொடுத்து விட்டு அடுத்த முறை வீட்டுக்கு போன போது அவங்க அம்மா சத்தம் போட்டு இருக்காங்க.''

''கடவுளே! அப்ப இந்த விபத்து நடந்த போது வேண்டும் என்றே மகனை இழந்து விட்டோம் என்று அவங்களுக்கு ரொம்ப மனசு கஷ்டமா இருந்து இருக்குமே...?'' என்று வருத்தத்துடன் சொல்ல ஆமோதிப்பாக தலை அசைத்தாள்.

''இப்ப புரியுதா என் குற்ற உணர்வின் அளவு? அன்று நான் பரிசு வேண்டும் என்று அவனை வம்பு செய்யாமல் இருந்து இருந்தால் அவன் அந்த செயினை கழட்டி இருக்க மாட்டானே?''

''இந்த உலகத்தில் நடக்கும் செயல்கள் எல்லாம் நம்மால் நடக்கிறது என்று சொல்ல முடியாது. அது இறைவன் விதித்த படி நடக்கும். அதற்கு நாம் கருவிகள் மட்டுமே...''

''என்னிடம் கொடுத்து இருக்கேன் என்று சொன்னதும் அம்மாவுக்கும் பையனுக்கும் இடையே சண்டை நடந்து இருக்கு. அவங்க அம்மா என்னைப் பற்றி ஏதோ தவறா சொல்லிவிட, அப்ப அரை நிமிடத்தில், அங்கேயே அம்மா முன்னாடி சொன்ன கவிதை இது. அதை எழுதியது கூட சிவா இல்லை. சங்கரி தான்...''

''ஓ! நான் கூட நினைத்தேன் அந்த டயரியில், இந்த கவிதை மட்டும் வேறு எழுத்தில் இருக்கே என்று நினைத்தேன். அதை கேட்டால் திரும்பவும் சந்தேகமா



என்ற கேள்வி வந்து விடக் கூடாதே? அந்த நேரம் அவனுக்கு கையில் அடி பட்டு இருக்கலாம் என்று சமாதானப்படுத்திக் கொண்டேன்''என்று புகழ் சொன்னதும் அவள் அதிர்ச்சியில் நிமிர்ந்து பார்த்தாள்.

'சிவா விரும்புவது உன்னைதான். நான் அவனுக்கு தங்கை மாதிரி' என்று இந்த கவிதையை சாட்சியாக வைத்து சொன்ன போது கூட, வானதி ஏன் நம்பவில்லை என்பதற்கான காரணம் புரிந்தது. அது சிவாவின் கையெழுத்து இல்லை என்பதால் நம்பவில்லை என்ற உண்மை கால தாமதமாக புரிந்தது. அப்போது அவள் மேல் 'என்ன பெண் இவள்?' என்று எரிச்சல் தான் வந்தது.

''பாரதி, என்ன ஆச்சு? அமைதியாகி விட்டாய்? நீ சிவா வீட்டுக்குப் போனாயா? ஆன்ட்டி என்ன சொன்னாங்க?'' என்று புகழ் தோளை உலுக்கி கேட்ட பிறகே நடப்புக்கு வந்தவள், அவன் என்ன பேசினான் என்பதே புரியாமல் அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

''என்ன இப்படி பார்க்கிறாய்? இன்றோடு இந்த பேச்சு வார்த்தைக்கு முற்று புள்ளி வைக்க வேண்டும். நீ சிவா கதையை தொடர்ந்து சொல்லு..'' என்று மீண்டும் ஊக்க அவள் சில கணங்கள் புரியாமல் பார்த்தாலும் விட்ட இடத்தில் இருந்து தொடர முயன்றாள்.

''சிவா என்னைப் பற்றிச் சொன்னதும், அவங்க என்னைப் பார்க்கணும் என்று சொல்ல, வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அம்மா அந்த சங்கிலி பற்றிப் பேசவே இல்லை. செயினை திருப்பிக் கொடுத்தேன். சிவா வாங்கவில்லை. வேறு வழி இன்றி, நானாகவே அவங்க அம்மாவிடம்

சென்று மன்னிப்பு வேண்டி, உங்களை மாதிரியே, நானும் அவனுக்கு நீண்ட ஆயுள் வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். பிரதோஷ விரதம் இருக்கிறேன் என்று சொல்லி வந்தேன். மூன்று பிரதோஷங்கள் இருக்கவும் செய்தேன். ஆனால் அதன் பலன் தான் இல்லாமல் போனது...'' என்று சொன்னவளுக்கு அடக்க மாட்டாமல் கண்ணீர் பொங்க, விம்மினாள்.

''ஷ்! பாரதி, சின்னக் குழந்தை மாதிரி என்ன இது? கீதையில் கிருஷ்ண பரமாத்மா என்ன சொல்லி இருக்கிறார் என்று தெரியுமா? முயற்சி தான் நாம் செய்ய முடியும். முடிவு இறைவன் கையில் அல்லவா? சிவாவின் மரணத்திற்கு நீ என்ன செய்தாய்? நீ வருந்த என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லையே?''

''இல்லை புகழ், நான் முன்பே வானதியைச் சமாதானப் படுத்தி இருந்தால், சிவாவை வானதியிடம் பேசி விடு என்று வற்புறுத்தி இருந்தால், ஒருவேளை சிவாவின் மரணம் நிகழாமல் இருந்து இருக்குமோ என்று என் மனம் படுத்துகிறது...''

''என்ன உளறல் இது பாரதி? அப்படி இருந்தால், இப்படி நடந்து இருந்தால், என்று இந்த உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு செயலுக்கும் மாற்று பாதையை பற்றி நினைத்துக் கொண்டு இருந்தால் நாம் நம் வாழ்க்கையை எப்போது எப்படி வாழ்வது? முதலில் எல்லா காரியங்களுக்கும் நீ தான் பொறுப்பு என்று நினைப்பதை நிறுத்து'' என்று அதட்டலாகச் சொல்ல ஒரு கணம் திகைப்புடன் பார்த்தாலும் அடுத்த வினாடி பதில் சொல்ல முயன்றாள்.



''வானதி சிவா இருவருமே நான் சொன்னால் கேட்டு கொள்பவர்கள். அவர்களிடம் நான் முன்பே பேசி...''

''என்ன பேசுவாய் பாரதி?'' என்ற புகழின் ஆவேச மான குரல் வரிசையாக தொடர்ந்த கேள்வி கணை களுடன் இடையிட்டது.

''சிவா வானதியின் படிப்பை முன் நிறுத்தி, அவளிடம் தன் காதலை சொல்லவில்லை என்றால், அதற்கு நீ எப்படிப் பொறுப்பாக முடியும்? தான் காதலிக்கிறவன் மனதில் தான் இருக்கிறோமா இல்லையா என்பதைக் கூட கண்டறிய முடியாத ஒருத்தியின் காதல் தோல்வி அடைந்தால் அதற்கு நீ எப்படி பொறுப்பாக முடியும்? எல்லாத்துக்கும் மேலே அவனின் சாவு எப்படி நடந்தது? அது விபத்து என்று தானே அப்பா சொன்னார். அவன் தவறி விழுந்தான் என்று நினைத்தேனே! இல்லையா?''

''இல்லை, வானதியால் சிவா கையில் இருந்த மோதிரத்தை பிடுங்க முடியாமல் போனதால்...''

''சிவாவிடம் உன் மோதிரம் எப்படி போனது?''

''கல்லூரியில் ஒரு முறை வானதி... ப்ச்! இதை எல்லாம் நீங்க ஏன் கேட்கறீங்க? அதுவும் இவ்வளவு கடுகடுவென்ற குரலில் கேட்டால், எனக்குச் சொல்லப் பிடிக்கவில்லை'' என்று எரிச்சலுடன் சொல்லிவிட்டு முகத்தை வேறு புறம் திருப்பிக் கொள்ள, சில வினாடிகள் முறைத்தவன் பின் சிரித்தான்.

''இப்ப எதுக்கு சிரிக்கிறீங்க?''

''ஏன் பாரதி, சுதந்திர நாட்டில் சிரிப்பது கூட தப்பா?'' என்று கேட்கும் போதே அவனுக்கு மேலும் சிரிப்பு

பொங்க அவளின் அருகே வந்து அவளின் மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டான்.

ஒரு கையை உயர்த்தி, அவளின் வலது கன்னத்தை வருடி, ''நீ கோபமா இருப்பது மாதிரி நடிக்கும் போது அழகா இருக்கிறாய் என்று பொய் சொன்னால் உன் கோபம் போய் விடும் அல்லவா?'' என்று கண் சிமிட்ட, அவனின் பாவனையில் கோபம் போகவில்லை என்றாலும் குறைந்தது.

''விளையாடாதீங்க புகழ்! நான் சீரியஸா பேசிக் கொண்டு இருக்கிறேன்..''

''ரெண்டு பேரும் ஒரே நேரத்தில் சீரியஸா பேச கூடாதும்மா. ஒருத்தர் சீரியஸா இருந்தால் அடுத்தவர் இலகுவா மாறணும். எதிர் துருவங்கள் தான் ஒன்றை ஒன்று ஈர்க்கும் என்று கேள்விப் பட்டதில்லையா? சொல்லு சிவா கையில் உன் மோதிரம் எப்படி போச்சு?''

''ஒரு முறை மெக்கானிகல் ஒர்க் ஷாப்பில் சிவாவை பார்க்க நாங்க போய் இருந்த போது, அங்கே வானதி, கையில் ஒரு லேத் மேஷின் வெட்டி விட்டது. கையில் காயம். நிறைய ரத்தம். அப்ப அவசரமா மருத்துவ மனைக்கு கூட்டிட்டு போகும் போது அந்த நேரம் கையில் பணம் அதிகம் இல்லை. என் மோதிரத்தை கொடுத்தேன். வானதி வீட்டில் ஆள் வந்து அவர்கள் பணம் திருப்பி தந்த போது என் மோதிரத்தை மீட்டு என்னிடம் கொடுக்க வந்தான். அவன் செயின் என்னிடம் இருந்ததால், அதை ஈடு செய்வதாக நினைத்து, இது என் பரிசா உன்னிடமே இருக்கட்டும் என்று சொல்லி இருந்தேன்...''



''ஓ! சரி, அன்று நீங்க மூவரும் போட்டிங் போன போது என்ன நடந்தது?'' என்று புகழ் கேட்க அவள் சில நிமிடங்கள் அமைதி காத்தாள்.

''இத்தனை வருஷம் பொத்திப் பொத்தி வைத்ததால் வந்த பிரச்னை போதும் பாரதி. இது ஒன்றும் போலீஸ் விசாரணை இல்லை. உனக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கும் நோக்கமும் எனக்கு இல்லை. நீ எல்லோரையும் போல சந்தோஷமான ஒரு குடும்ப வாழ்வு வாழணும். அவ்வளவு தான் இன்றோடு இந்தப் பிரச்னைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விடுவோம். சிவாவின் மரணத்தோடு தொடர்புடைய, உன் குற்ற உணர்வு என்ன என்பதை நான் புரிந்து கொள்வதற்காக தான் கேட்கிறேன் பாரதி சொல்லு சிவா எப்படி இறந்தான்?'' என்று மீண்டும் அழுத்தமாகக் கேட்க அவள் பெருமூச்சுடன் சொல்ல ஆரம்பித்தாள்.

''அவங்க கடைசி வருடம் என்பதால் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பு, ப்ரெண்ட்ஸ் எல்லோரும் ஊட்டி போனாங்க. நாங்க முதலாம் ஆண்டு மாணவர்கள் என்ற போதும், சிவா அழைத்ததால், அவன் கல்லூரியை விட்டுச் செல்லப் போகிறான். அதனால் கடைசியாக கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அவனிடம் தன் காதலை உறுதி செய்யும் நோக்கத்தில், அவனுடன் இருக்கும் ஆசையில் வானதியும், அவளுடன் நானும், போனோம். அப்ப போட்டிங் போகும்போது...'' என்றவளுக்கு அன்றைய தின நினைவுகள் வந்து சூழ்ந்து கொண்டதில் வார்த்தைகள் தொண்டையை விட்டு வெளியே வர மறுத்தது. அதுவரை மடியில் படுத்து இருந்தவன் எழுந்து அவளை அணைத்துக் கொண்டான்.

''முடிந்து போனதை நினைத்து வருத்தப்படுவதில் அர்த்தம் இல்லை. இப்ப நீ அழுவதால், போன உயிர் திரும்பி வரப் போவதில்லை. அவன் உன் மேல் வைத்து இருந்த தன்னலம் இல்லாத அன்பிற்கு, பதிலாக, என்று சொல்லா விட்டாலும், இன்று நாம் அவன் தங்கையின் உயிரைக் காப்பாற்றியதன் மூலமும், அவளுக்குப் பிடித்த மாப்பிள்ளையை திருமணம் செய்து கொள்ள வைத்ததன் மூலமும் நாமும் நம் பங்கை செய்து விட்டோம். இன்னும் உன் தொழிலில் அவளையும் பங்குதாரராக சேர்த்துக் கொண்டு பொருளாதார ரீதி யிலும் அவளுக்கு எவ்வளவோ உதவி செய்யலாம். நீ வருத்தப்படாதே'' என்று சொல்ல, அவள் அவன் மார்பில் புதைந்து, அவன் சட்டையிலேயே தன் முகத் தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

''இது நல்ல ஐடியாவாக இருக்கு. அதைப் பற்றி பேசுவதற்கு முன்பு கடந்த கால கதையைச் சொல்லி விடுகிறேன். படகு சவாரியின் போது, வானதி சிவா விடம் தன் காதலைச் சொல்ல, 'உனக்கு என்ன வயசு? படிக்கிற வேலையை விட்டுட்டு, இந்த மாதிரி பேச தான் உன்னை காலேஜுக்கு அனுப்புறாங்களா?'' என்று என் முன்பே அவன் சத்தம் போட்டான். அது அவளுக்குப் பெரிய அவமானமாகப் போய் விட்டது.''

''மைகாட்! காதல் சொல்வதும், ஏற்றுக் கொள்வதோ, மறுப்பதோ... அதை அடுத்தவர் மனம் நோகாமல் செய்வது எவ்வளவு முக்கியம்..? ப்ச்! இன்று ஒரு உயிர் அநியாயமாகப் போய் விட்டதே; என்று மனம் வருந் தினான் புகழ்.



''விதி...! வேறென்ன சொல்வது? என்னை முறைத்த வினாடியில், என் கழுத்தில் இருந்த சிவாவின் சங்கிலி அவள் கண்ணில் பட்டு இருக்க வேண்டும். அவன் வானதியை மறுப்பதற்குக் காரணம் நான் தான் என்ற எண்ணம் அவளுக்குள் விழுந்து இருக்க வேண்டும். என் கழுத்தில் இருந்த சங்கிலி அவன் கையில் இருந்த மோதிரம், இரண்டையும் மாறி மாறி பார்த்தவள் அவன் கையில் இறுக்கமாக இருந்த மோதிரத்தைக் கழட்டுவது சிரமம் என்பதால், என் கழுத்தில் இருந்த சங்கிலியைப் பிடுங்கி ஏரிக்குள் எறிந்து விட்டாள்.''

''அந்த நேரத்தில்... ஹையோ... சிவா... உன் செயின்... என்று நான் பதறி அதை பிடிக்க முயன்று எழுந்ததில் போட் ஆடியதா? சிவாவே செயினை எடுக்கலாம் என்று குதித்தானா? அவன் ஸ்விம்மிங் சேம்பியன் தான். ஆனால் அந்த ஏரியில் இருந்த செடி கொடிகளில், சேற்றில் சிக்கிக் கொண்டானா? அவனைக் காபபாற்ற போட்டில் இருந்த யாரும் முயலவில்லையா? முயன்று முடியவில்லையா? என்ன நடந்ததோ? எனக்குத் தெரியவில்லை.

''நான் அங்கேயே அந்த விநாடியே மயக்கமடைந்து விழுந்து விட்டேன். அந்த நேரம் என் தலையிலும் அடிபட்டு இருந்தது. நான் சுய நினைவிற்கு வர மூன்று நாட்கள் ஆகி இருந்தது. சென்னை மருத்துவமனையில் தான் நான் கண் விழித்தேன்...'' என்று பெருமூச்சுடன் சொல்லி விட்டு தான் மார்பில் சாய்ந்து கொண்டாள் பாரதி.

மார்பில் சாய்ந்தவளை இறுக்கமாக தழுவி, அவளின் முதுகை வருடி வார்த்தைகள் இல்லாமலேயே தன்

பாவனையால் ஆறுதல் சொல்லியபடி கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தான் புகழேந்தி.

சில நிமிடங்கள் அவளுக்கு ஆறுதல் தந்தவன், பிறகு அவளை விலக்கி, "சரி உங்க அப்பா சொன்னது சரி தானே? இது ஒரு விபத்து என்று ஒத்துக் கொள்வதில் உனக்கு என்ன பிரச்னை? உன் மனத்தில் குற்ற உணர்வு? இதில் உன் பெற்றோர்கள் மேல் கோபப்பட என்ன காரணம்?" என்று நிதானமாக விசாரிக்க அவள் முறைத்தாள்.

"இவ்வளவுக்கு பிறகும் வானதி போலீசில் நானும் சிவாவும் காதலர்கள் என்று சொல்லி இருக்கிறாள். அதை எங்க அப்பா அம்மாவும் நம்பி இருக்காங்க. என்னிடம் கேட்க வேண்டாமா? என்னை நம்ப வேண்டாமா?" என்று வேகமாகக் கேட்க அவன் புன்னகை செய்தான்.

"நியாயமான கேள்வி. உன்னை உன் பெற்றோர்கள் கட்டாயம் நம்பணும். நானும் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் உன் கல்லூரியில் நடந்த எல்லா விஷயத்தையும் நீ அவங்களுக்கு சொல்லி இருப்பாய் அல்லவா?" என்று நிதானமாகக் கேட்டான்.

"கட்டாயம்... சொல்லி இருக்கிறேன்..."

"சிவா உனக்கு ட்ரெஸ் எடுத்துக் கொடுத்தது, அவன் உனக்கு செயின் பரிசு கொடுத்தது. நீ அவனுக்கு மோதிரம் கொடுத்தது, எல்லாமே..."

"ஆமா..." என்றவளின் குரல் இப்போது உள்ளே பானது முதல் பதிலில் வந்த அளவு வேகம் இல்லை. அவனை முறைக்க முயன்று தோற்றாள்.



"நல்ல பழக்கம்தான் வானதிக்கும் இது தெரிந்து இருக்கும் இல்லையா?"

"ம்ம்ம்."

"சிவா பற்றி பேசும் போது அவனை அண்ணா என்று குறிப்பிட்டு உங்க வீட்டிலோ, கல்லூரியிலோ, ஹாஸ்டலில் வானதியிடமோ பேசி இருக்கிறாயா?" என்று கேட்க அவள் திகைத்தாள்.

'பதில் சொல்லு.'

"இல்லை.... அவன்... இவன்... என்று ஒருமை பேச்சு மட்டும் தான்..."

"செய்யும் தவறுகளை எல்லாம் நீ செய்து விட்டு உன்னைச் சுற்றி இருப்பவர்கள் மேல் பிழை கண்டு பிடிப்பது என்ன நியாயம் சொல்லு" என்று அவன் கேட்க அமைதியாக இருந்தாள்.

மனம் அவன் கேள்விகளுக்கான விடைகளை கண்டு பிடிக்க முயன்று கொண்டு இருந்தது.

திருமணம் ஆன பிறகு, தன் கணவனுடன் இன்னொருவனுடன் காதல் கொண்டு இருக்கும் ஒரு பெண் பிரியமாகப் பேசுவது தனக்குப் பொறாமையை உண்டு பண்ண முடியும் என்றால்... பதினேழு வயதில், உலக அனுபவமே இல்லாமல், கல்லூரியில் அடி எடுத்து வைத்து இருக்கும் ஒரு இளம் பெண், சிவாவும் தன் காதலை வானதியிடம் வெளிப்படையாக பகிர்ந்து கொள்ளாத வேளையில், அவளை விட வசதியில் பல மடங்கு உயரத்தில் இருக்கும் ஒரு பெண் அவளுடைய காதலனுடன் பேசினால், அவளுக்கு எப்படி இருந்து இருக்கும் என்பதை உணர முடிந்தது.

வானதியின் மன உணர்வுகள் அப்போது புரியவில்லை. ஆனால் இன்று புரிந்தது. ஐயோ பாவம் என்று இருந்தது. அவள் ஏன் காவல் துறையில் அப்படிச் சொல்லி இருக்கக் கூடும்?

அவளுடைய வறுமையான குடும்ப சூழ்நிலை!

போலீஸ் விசாரணை என்றால் ஒதுங்கி நிற்கும் அவளின் கோழைத்தனம்!

அதை அவர்களும் நம்பியது ஏன்?

தன்னிடம் சிவாவின் பரிசாக இருந்த சங்கிலி!

அவனிடம் இருந்த தன் மோதிரம்!

தாங்கள் வெளி இடங்களுக்குச் சேர்ந்து போனதற்கு இருந்த சாட்சியங்கள்!

தன் பிறந்த நாளைக்கு அப்பா கொடுத்த பணத்தில் என்றாலும், கோவையில் இருக்கும் துணி கடைகளை புரட்டிப் போட்டு ஒரு பிறந்த நாள் உடை தேர்வு செய்ய தான் அவளை அலைக்கழித்த விதம்.

இப்படி எத்தனை ஆதாரங்கள்? பெற்றவர்களிடம் தான் பாராமுகம் காட்டியது தவறு என்று தோன்ற ஆரம்பித்தது.

## 23

'தவறை உன் மேல் வைத்து கொண்டு உன்னைச் சுற்றி இருப்பவர்கள் மேல் குறை படிப்பது நியாயமா?''



என்று மனைவியிடம் புகழேந்தி கேட்ட ஒற்றை கேள்விக்கு பதில் தேடும் முயற்சியில், வெகு நேரம் யோசனையில் ஆழ்ந்து இருந்தாள் பாரதி. அவள் முகம் காட்டிய சோகமும், குழப்பமும், கலந்த பாவனை அவன் மனத்தைப் பிசைய, மெல்ல கன்னத்தை வருடினான்.

''பாரதி, உன்னைக் குற்றம் சொல்வதற்காக நான் இதைக் கேட்கவில்லை. நேற்று மருத்துவமனையில், உங்க அப்பாவிடம் நீ காட்டிய பாராமுகம் அவர் மனசை எவ்வளவு சங்கடப்பட வைத்து இருக்கும் தெரியுமா? அதிலும் என் மனைவி பெற்றவர்களின் மனசு குளிரும் படி நடந்து கொள்ள வேண்டும். அதுக்காக தான் இத்தனை கேள்விகளும் கேட்டேன் பாரதி...''

''நான் தப்பு பண்ணி விட்டேன் புகழ்! அம்மா அப்பா மேலேயும் வானதி மேலேயும், கோபத்தைப் பிடித்து வைத்தது தப்பு. நான் சரி என்று எண்ணிய ஒரு கருத்துக்கான அடுத்த பக்கத்தை இன்று நீங்க எனக்கு அறிமுகப்படுத்தி இருக்கீங்க'' என்று கண்களில் பெருகிய நீரை உள்ளே இழுத்தபடி பேசினாள் பாரதி. அவள் பேசப்பேச அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

''படகு விபத்துக்கு பிறகு சிவாவைப் பார்க்கவில்லை. மருத்துவமனையில் எனக்கு நினைவு வந்தபோது, சிவா இறந்து விட்டதாக அம்மா சொன்னாங்க. கோவையில் இருந்து சென்னைக்கு வந்து என்னிடம் ஒரு நாள் வானதி சண்டை போட்டு விட்டுப் போனாள். உன்னால் தான் அவன் என் காதலை ஏற்றுக் கொள்ளவில்லை. காதலை ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் உயிரோடு இருந்து இருப்பான் என்று என்னைத் திட்டித் தீர்த்தாள். அதன் பிறகு நான் அவனைப் பார்க்கவே இல்லை.''

''பாரதி, லீவ் இட். அப்ப அவளும் சின்ன பெண் தானே? மனத்தில் விரும்பியவன் இல்லாமல் போன துயரம் வேறே இருந்து இருக்கும். இன்னமும் உனக்கு அவள் மீது கோபம் இருக்கிறதா?''

''இல்லை புகழ், இப்ப இந்த நிமிஷம் கோபம் இல்லை. கொஞ்ச நேரத்திற்கு முன்னால் வரை, வானதி மேலே தப்பு என்று கோபம் இருந்தது. எப்படி வாய் கூசாமல் என் பெற்றோரிடமும் காவல் துறையினரிட மும் அப்படி ஒரு பொய் சொன்னாள் என்று வெதும்பி இருக்கிறேன். இப்பதான், புரியுது. அவள் தப்பு செய்தாள் என்பது என் ஊகம் தான். காவல் துறையில் வானதி என்ன சொன்னாள்? ஏன் அப்படிச் சொன்னாள் என்று எனக்கு நேரடியா எதுவும் தெரியாது'' என்றவளின் முகம் யோசனைக்குப் போனது.

''அவள் என்ன சொல்லி இருந்தாலுமே அது நமக்கு இப்ப தேவை இல்லாத விஷயம். அவளுக்குமே இப்ப தேவை இல்லாத விஷயம். அவளுமே கடந்த காலத்தை மறந்து, ஒரு நல்ல வாழ்க்கையை வாழ வேண்டிய தருணம் இது. கடந்த காலத்துக்கான டைம் ஓவர். உனக்கு அவள் மேலே இன்னும் கோபம் இருக்கா இல்லையா? அதுக்கு பதில் சொல்லு.''

''உங்களுக்கு வானதியைத் தெரியுமா? பார்த்தீங் களா? அதென்ன இப்ப ஸ்பெஷல் தருணம்..?'' என்று கேட்டதும் அவன் நாக்கைக் கடித்தான்.

''உன்னை மாதிரி தானே பாரதி. அவளும் இந்நேரம் படிப்பை முடித்து இருப்பாள். வேலை கிடைத்து இருக்கும். யார் கண்டா? உன்னை மாதிரியே அவ



ளுக்கும் கல்யாணம் நடந்து இருக்கலாம். இல்லை என்றாலும் விரைவில் நடக்கும் இல்லையா? அப்ப இதை நினைத்து வருந்திக் கொண்டு இருக்க முடியுமா? அது சரியா?'' என்று வேகமாக விளக்கம் சொன்னாலும், அவன் தன்னிடம் எதையோ மறைக்கிறான் என்ற எண்ணம் தோன்றியது.

''இல்லை புகழ். எனக்கு அவள் மேல் எந்தக் கோபமும் இல்லை. ஆனால், அவளை தெரியவில்லை என்று சொன்னதால் அவளுக்கு தான், என் மேல் கோபம் இருக்கும். அது சரி, ஆனால் எப்படி எனக்கு அந்த ஒரு வருட நினைவுகள் மட்டும் மறந்து போனது'' என்று அவன் எதிர்பாராத கேள்வியை அந்த நேரத்தில் கேட்க, ஒரு கணம் தடுமாறினான்.

''உன்னை எனக்கு எவ்வளவு நாளாகத் தெரியும் பாரதி? ஒரு மாசம் இருக்குமா? அப்படி இருக்கும்போது, நேற்று அரை நாள் நீ படுக்கையில் அமைதியாக இருந்ததைப் பார்க்க என்னால் பார்க்க முடியவில்லை.''

''இது நான் கேட்ட கேள்விக்கு பதில் இல்லையே புகழ்...?''

''சொல்றேன்மா! ஒரு மாதம் பழகிய எனக்கே அப்படி இருக்கும்போது, உன்னைப் பெற்று, இத்தனை வருடம் உனக்கு நல்லது கெட்டது பார்த்து பொத்திப் பொத்தி வளர்த்த பெற்றோர்களால், நீ படுக்கையில் சுருண்டு, விட்டதை வெறித்துக் கொண்டு இருப்பதை சும்மா பார்க்க முடியுமா? அப்ப கோபம், வருத்தம் இதெல்லாம் அளவு மீறி இருந்ததால் மன அழுத்தத்திற்கு ஆளாகி இருந்தாய். அதனால் மனோதத்துவ ரீதியான சிகிச்சை

செய்தார்கள்'' என்றவன் குரல் கூடுதல் கவனத்துடன் வெளி வந்தது.

''அது தெரியும். புகழ். ஆனால் குறிப்பிட்ட நினைவுகளை மட்டும் அழிக்க முடியுமா? அப்படி எதுவும் என்னிடம் சொன்னதாக எனக்கு நினைவில்லை.''

''உங்க அப்பா உன்னைப் பற்றிச் சொன்ன பிறகுதான் நான் நெட்டில் இது பற்றி நிறைய படித்தேன் பாரதி. மருத்துவத் துறையில் இதை 'ரிப்ரெஸ்ட் மெமரி லாஸ்' (Repressed Memory Loss) என்று சொல்றாங்க. மனிதனுக்கு துயரம் தரக் கூடிய, கொடுமையான நிகழ்வுகள் ஏற்பட்டால், மனம் அதைப் பதிய வைக்க மறுத்து, அப்படி ஒரு சம்பவமே நிகழாது போல, நினைத்துக் கொள்ளும். இது அந்தத் துயரத்தை எதிர் கொள்ளும் ஒரு விதம். அது ஆழ் மனத்தில், நீண்ட கால நினைவுகள் இருக்கும் இடத்தில், பத்திரமாக இருக்கும். ஆனால் அன்றாடம் செய்யும் செயல்கள் இருக்கும் இடத்தில் அது பற்றிய தடமே இருக்காது...''

''புரியாமல் பேசாதீங்க புகழ். அது போல நடந்து இருந்தால், எனக்கு சம்பவ இடத்திலேயே விஷயம் மறந்து போய் இருக்க வேண்டும். எனக்கு அப்படி நடக்கவில்லை. மருத்துவமனையில் வானதியைப் பார்த்த போது எனக்கு நினைவு இருந்தது...'' என்று வேகமாகச் சொல்ல அவன் புன்னகை செய்தான்.

''நான் படித்ததைச் சொன்னேன். உனக்கு நடந்தது என்று நான் சொல்லவே இல்லையே? மன சோர்வுக்கு அளிக்கப்படும் சில மருந்துகளினாலும் நான் சொன்ன மாறுதல்கள் ஏற்படலாம். இதை 'சைக்கோஜெனிக்



அம்னீசியா' (Psychogenic Amnesia) என்று சொல்வதுண்டு. சிவாவின் மரணத்தையும், வானதியின் குற்றச்சாட்டையும், நீ மறக்க விரும்பினாய். ஹிப்னடைஸ் பண்ணி, ஊட்டியில் நடைபெற்ற துயர சம்பவம் உன் வாழ்க்கையில் நடக்கவே இல்லை என்ற பரிந்துரையை உன் மூளைக்கு சஜஷன் மூலம் செய்தனால் 'அந்த குறிப்பிட்ட சம்பவங்கள்' உன் நினைவில் இல்லாமல் போய் இருக்கலாம்.

''ஆனால இப்ப கடந்த ஒரு மாசத்தில் அப்பப்போ சிவாவின் நினைவும், அது தொடர்பான சில விஷயங்களும், ப்ளாஷ் மாதிரி தெளிவில்லாமல் முகங்களும் எனக்கு வந்து போனது.''

''இருக்கலாம். இந்த நினைவுகள் நீண்ட கால மெமரியில் பதிந்து இருந்ததாலும், மறக்க வேண்டும் என்பதை சஜஷன் முறைப்படி தொடர்ந்து உறுதி படுத்தாததாலும், அது தொடர்பான மனிதர்களையும் இடங்களையும் பார்க்க நேர்ந்த போது, உதாரணத்திற்கு நாம் சேலை எடுக்கும்போது, உனக்கு உன் முந்தைய அனுபவம் நினைவுக்கு வந்து இருக்கலாம் பாரதி. நான் ஏற்கனவே டாக்டரிடமும் இது குறித்துப் பேசினேன். அதில் பயப்படவோ கவலைப் படவோ ஒன்றும் இல்லை'' என்று அவளின் கையை எடுத்து தன் கன்னத்தில் வைத்து அழுத்தி, உள்ளங்கையில் முத்தமிட்டான்.

திருமணம் ஆன இந்த இரண்டு நாட்களில் அவன் பட்ட சிரமங்கள் மனக்கண்ணில் வலம் வந்தது.

தனக்காக அவன் மலையை புரட்டிப் போட்டு இருக்கிறான்!

பெரும்பாலான ஆண்கள் மனைவியை சந்தேகப்பட்டு வார்த்தைகளால் குத்தி கிழிக்கும் வேலையை அவன் செய்யவே இல்ல!

"ஹேய் என்ன ஆச்சு? என்னை இப்ப தான் புதுசா பார்க்கிற மாதிரி இப்படி பார்க்கிறாய்?" என்று அவளை லேசாக உலுக்க அவள் அவனை இறுக்கமாகக் கட்டிக் கொண்டாள். அவளை கையனைப்பாகக் கொண்டு வந்து படுக்கையில் அமர்த்தி கன்னம் வருடினான்.

"இன்னிக்கு நீ ரொம்ப களைப்பாக இருப்பாய். உடல் அளவில் மட்டும் இல்லாமல் மனதளவிலும் உளைச்சல் இருக்கும். நீ ரெஸ்ட் எடு. தூங்கப் போறதுக்கு முன்னாடி உங்க அம்மாவிடமும் எங்க அம்மாவிடமும் சாதாரண ரெண்டு வரி பேசு. கோபம் குறைந்து விட்டது என்று மனப்பூர்வமாக நினைத்தால் உங்க அப்பாவிடமும் பேசு. நேற்று அவர் முகம் பார்க்கச் சங்கடமாக இருந்தது பாரதி" என்று மென்மையாகச் சொல்லி போனை கொடுத்தான். அவனையே சில கணங்கள் கனிவுடன் பார்த்துவிட்டு போனில் தன் வீட்டு எண்களை அழுத்தினாள்.

"ஹேய் பாரதி, நீயா? எப்படி கண்ணு இருக்க?" என்ற அம்மாவின் கலங்கிய குரல் கேட்டு கண்ணில் நீர் துளிர்த்தது.

அம்மா அவளை முடிந்த வரை கண்டிப்பாக வளர்க்க முயற்சி செய்ததால், இந்த மாதிரி கொஞ்சல் வார்த்தைகள் பழக்கம் இல்லை. ஆனால் திருமணமாகி இந்த மூன்று நாட்களில் அம்மாவின் அன்பு வெளிப்படையாக தென்படுவதை உணர முடிந்தது.

"ம்ம், ஆமாம்மா! அங்கே இருந்த வரைக்கும் என்னைக் கண்ணு பொண்ணு என்று எல்லாம்



கூப்பிட்டதே இல்லையே? புதுசா இருக்கு" என்று மெல்லிய குரலில் கேட்க அவருக்கு மனம் பதறியது.

"ஏன் பாரதி இப்படிக் கேட்கிறாய்? எங்களுக்கு நீ ஒரே பெண். நீ நல்லா இருக்கணும் என்பதைத் தவிர நாங்க வேற என்ன நினைப்போம்? அதற்காக சில சமயம் திட்டி இருந்தாலோ, கண்ணு வார்த்தையை பேச்சின் ஊடே பயன்படுத்தா விட்டாலோ, அன்பு இல்லை என்ற அர்த்தமா பாரதி? அது நிறைய இருப்பதால் தான நமக்குள் சண்டைகளே வந்தது."

"என்னம்மா நீங்க சீரியஸா எனக்கு விளக்கம் சொல்ல ஆரம்பிச்சுட்டீங்க? நான் சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன்மா. அதை விடுங்க. நீங்க எப்படி இருக்கீங்க? சாப்பிட்டீங்களா?" என்று விசாரிக்க, மகள் பேசுவதை ஸ்பீக்கர் போனில் கேட்டுக் கொண்டு இருந்த ராஜேந்திரனின் முகம் திருப்தியைக் காட்டியது.

மருமகன் தன்னிடம் வாக்களித்தபடி ஒரே நாளில் மகளைச் சமாதானம் செய்து விட்டானே என்ற சந்தோஷம் தோன்றியது. ஆனாலும் மகள் தன்னிடம் நேரில் பேசவில்லை என்ற வருத்தமும் தோன்றியதை அவரால் மறைக்க முடியவில்லை.

"இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்களிடமும் பேசுவாள்..." என்று கணவனுக்கு கண்களால் ஆறுதல் சொல்லியபடி, மக்களிடம் உரையாடலைத் தொடர்ந்தார் பாக்கியம்.

"ஆச்சு பாரதி, நீ என்ன சாப்பிட்டாய்?'

"அதை ஏன் கேட்கறீங்க? என்ன சாப்பிட்டேன் என்று தெரியாமல் சாப்பிட்டேன். என் கண்ணை கட்டி என்ன

என்று கண்டு பிடிக்கச் சொல்லி உங்க மாப்பிள்ளை எனக்கு டெஸ்ட் வைத்து என்னவோ கொடுத்தார். இந்நேரம் தூங்கி இருப்பேன். உங்களிடம் பேசிட்டு தான் தூங்கனும் என்று ஆர்டர் பண்ணிட்டு லாப் டாப்பை நோண்டிக் கொண்டு இருக்கும் உங்க மாப்பிள்ளையை மிச்ச கேள்வி கேட்டுக்கோங்க'' என்று சலிப்பாக சொல்வது போல நடிக்க, அந்த நடிப்பில் மருமகளுக்கு ஊட்டி விட்டு இருக்கிறார் என்ற செய்தி புதைந்து இருக்க, தாயின் மனம் குளிர்ந்தது.

''அதெல்லாம் வேண்டாம் பாரதி. நீ சந்தோஷமா இருக்கிறாய் என்று தெரிந்தால் போதும். அப்படியே பூரணி அண்ணிக்கும் பேசிடு என்ன?''

''அத்தையிடம் மட்டும் பேசினால் உங்களுக்கு போதுமா அம்மா...?''

''பாரதி....'' என்று சொன்ன பாக்கியத்தின் குரல் தழுதழுத்தது.

''உங்க பக்கத்தில் உட்கார்ந்து, நான் பேசுவதை ஸ்பீக்கர் போனில் கேட்டு சத்தம் இல்லாமல் அழுதுட்டு இருக்க, உங்க வீட்டுக்காரரை ஏதாச்சும் பேசச் சொல்லுங்க...'' என்று சொல்ல, இருவரும் ஒரே நேரத்தில், ''பாரதி... கோபம் போச்சாடா?'' என்று கேட்டனர்.

''சாரிப்பா, நேற்று ஹாஸ்பிடலில் நான் உங்களை அப்படி பேசி இருக்கக் கூடாது என்னை மன்னிச்சுடுங்கப்பா...'' என்று சொன்னவளின் குரல் அதுவரை இருந்த கம்பீரத்தை தொலைத்து கசிந்து உருகியது.

''நீ மன்னிப்பு கேட்கணும் என்று எல்லாம் நினைக்கலை பாரதி. எப்பவும் நீ சந்தோஷமா இருக்கணும். உன்னை யாரும் ஒரு வார்த்தை கை நீட்டி கேள்வி கேட்கக் கூடாது என்று நினைத்தேன் பாரதி. உன் மனசு சங்கடப் படக்கூடாது என்று நாங்களாகவே சில விஷயங்கள் ஊகம் செய்து கொண்டோம். அது தப்பா இருந்தால் என்னை மன்னிச்சிடு பாரதி.''

''இல்லைப்பா, பெரிய வார்த்தை எல்லாம் சொல்லாதீங்க. அன்றைய நிலையில் போலீஸ் கேள்விகள் என்னை நெருங்கக் கூடாது என்று நீங்க என்னைக் காப்பாற்ற ஒரு தந்தையா முயற்சி பண்ணியதில், தப்பே இல்லை. நீங்க மன்னிப்பு கேட்க வேண்டாம் நான் தான் கேட்கணும். சாரிப்பா.''

''உனக்கு உடம்பு எப்படி இருக்கு கண்ணு'' என்ற பாக்கியத்தின் குரல் இடையிட அவள் சிரித்தாள்.

''நேற்று ஹாஸ்பிடலில் சேர்த்து இருக்கிறேன் என்று உங்க மாப்பிள்ளை சொன்னதும் பயந்துட்டீங்களா? நேற்று இரவே ரூமுக்கு வந்து விட்டோம். நான் நல்லா இருக்கேன்மா கவலைப் படாதீங்க.''

''ரொம்ப சந்தோஷமா இருக்கு பாரதி. இதே மாதிரி சந்தோஷத்தோடு நீயும் மாப்பிள்ளையும் இருக்கணும். அத்தையிடமும் பேசி விடு பாரதி. உடம்பை பார்த்துக்கோ சென்னைக்கு வந்ததும் வீட்டுக்கு வா'' என்று அக்கறையும் அன்பும் கலந்து பாக்கியம் பேசிவிட்டு போனை வைக்க திருப்தியுடன் புன்னகைத்த பாரதிக்கு மனம் நிறைந்து இருந்தது.

அடுத்த நிமிடமே பூரணிக்கும் அழைத்து, 'தனியாக இருப்பதில் பயம் இல்லையே அத்தை?' என்று அவரின் நலம் விசாரித்து, 'இங்கே பாண்டியனுக்கு கல்யாணம்

நிச்சயம் ஆகி இருக்கு'' என்ற தகவல் சொல்லி, மேலும் சில நிமிடங்கள் பேசி விட்டுப் போன் இணைப்பை துண்டித்த பாரதி அடுத்த நிமிடம் கணவனின் இறுகிய அணைப்பில் இருந்தாள்.

சோபாவில் இருந்தவன் எப்போது கட்டிலுக்கு வந்தான்? கவனிக்கவே இல்லையே? தான் பேசியவற்றை எல்லாம் ஒட்டு கேட்டானா? திருட்டு ராஸ்கல்..!

''இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா பாரதி?'' என்றவன் குரலில் குறும்பு இருக்க அவன் நெஞ்சில் செல்லமாகக் குத்தினாள்.

''ஹேய்! மை ஸ்வீட் ஹார்ட் இருக்கும் இடத்தை டச் பண்ணாதே'' என்று மிரட்டியபடி, அவளை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''ஐ லவ் யூ புகழ்'' என்று சொன்னதும் அவன் முகம் கனிந்தது.

''மீ டு ரதி...'' என்று சொன்னவன் அவளின் தோளைச் சுற்றி கைகளை போட்டு மென்மையாக அழுத்தினான்.

''உங்களை மாதிரி அனுசரணையான, மனைவியை சந்தேகப்படக்கூடாது என்ற உறுதியுடன் இருக்கும் கணவன் கிடைத்ததற்கு நான் தான் தாங்க்ஸ் சொல்லணும்...'' என்று நெகிழ்ச்சியுடன் சொன்னபோது,

''அப்படி இல்லை. நான் தான் உன்னை மனைவியாக அடைய புண்ணியம் பண்ணி இருக்கணும்'' என்று அவன் மறுத்துப் பேச வாய் திறந்தான்.

''பொறுங்க நான் இன்னும் முடிக்கவில்லை. நன்றி உங்களுக்கு இல்லை. உங்களைப் படாத ஆண்ட



வனுக்கு, உங்களை வளர்த்த உங்க அம்மாவுக்கும்'' என்று கேலியாகச் சொல்ல அவன் விழிகள் விரிந்தது.

பழைய பாரதி திரும்புகிறாள். பதிலுக்கு பதில் மடக்கிப் பேசுகிறாள். மனத்தில் உள்ளத்தை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்கிறாள். நீ செய்வது என் நன்மைக்காக இருக்கும் என்று மனப்பூர்வமாக நம்புகிறாள். இனி வருங்காலம் இனிய பூந்தோட்டமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

நாளை வானதியை சந்திக்க வைத்து விட்டால்? மேலும் பல பல அழகிய கற்பனைகள் விரிந்தது. மனசில் பூ பூத்தது. சுற்றுப்புறம் மேலும் அழகானது.

## 24

காலையில் பாரதி கண் விழிக்கும் போதே ஜன்னல் திரைகள் விலக்கப்பட்டு இருந்ததில், பொழுது விடிந்து வெகு நேரம் ஆகி விட்டது என்பதை உணர முடிந்தது. அவசரமாக எழுந்த போது குளியல் அறையில் புகழின் விசில் சப்தம், சின்ன ஹம்மிங், சில வார்த்தைகள் என்று கலவையாகக் கேட்டது. அவன் மிகுந்த உற்சாகத்துடன் இருக்கிறான் என்பது புரிய அவளின் முகத்திலும் புன்னகை விரிந்தது.

சமீபத்தில் வந்த புது பாடல்.

யார் இந்த சாலையோரம் பூக்கள் வைத்தது?

காற்றில் எங்கெங்கும் வாசம் வீசுது!

யார் எந்தன் வார்த்தை மீது மௌனம் வைத்தது?

இன்று பேசாமல் கண்கள் பேசுது!

நகராமல் இந்த நொடி நீள

எந்தன் அடி நெஞ்சம் ஏங்குதே...

குளிராலும் கொஞ்சம் அனலாலும்

இந்த நெருக்கம் தான் கொல்லுதே

எந்தன் நாளானது இன்று வேறானது!

வண்ணம் நூறானது வானிலே!

படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்து விட்டாலும் கட்டிலில் இருந்து இறங்காமல், அவனின் உற்சாகமான பாட்டை ரசித்தபடி முழங்காலில் ஒருக்களித்து தலை சாய்த்துக் குளியல் அறையைப் பார்த்தபடி அவள் புன்னகையுடன் காத்திருக்க, கதவு திறந்த நொடி புகழ் உறைந்து போனான்.

அவள் அமர்ந்து இருந்த தோரணையே அவனுக்கு அழைப்பு விடுப்பது போல இருந்தாலும், அந்த முகத்தில் இருந்த புன்னகையும், சின்ன மயக்கமும் அவனைக் கிறங்கடித்தது.

''ஹாய்...'' என்ற குரல் கிசுகிசுப்பாக வெளியேற அவன் அருகே வந்தான்.

அப்போது தான் குளித்து முடித்து டவலுடன் வந்த தோற்றமும், இன்னமும் தலையில் இருந்து ஆங்காங்கே



சொட்டிய நீரும், சோப் வாசனையுடன் ஆப்டர் ஷேவ் லோஷனும் சேர்ந்து மணம் பரப்ப, எல்லாவற்றிற்கும் மேலாக அவன் விழிகளில் இருந்த கிறக்கமும், பாரதியை வேறு உலகத்திற்கு அழைத்துச் சென்றது.

''பாட்டு சப்தம் ஊரைக் கூட்டுது'' என்று கேலியாகக் கேட்க நினைத்தவளின் வார்த்தைகள் தொண்டையை விட்டு வெளியே வருவதாக இல்லை.

''பொருத்தமான பாட்டு தானே?'' என்றவன் அருகே வந்து கட்டிலில் அவளை உரசியபடி அமர்ந்தான்.

''ம்ஹூம்? எப்படி...?''

''யார் எந்தன் வார்த்தைமீது மௌனம் வைத்தது?

நகராமல் இந்த நொடி நீள

எந்தன் அடி நெஞ்சம் ஏங்குதே...''

என்று அவன் பாடிக் காட்ட, அவளின் கண்களும் மயக்கத்தைக் காட்ட, மெல்ல அவன் தோள் சாய்ந்தாள். அவளை அணைத்தபடி சில நிமிடங்கள் அசையாமல் இருந்தவன், காதருகே ரகசியம் பேசினான்.

''இன்னிக்கு நம்ம வாழ்வில் ஒரு ஸ்பெஷல் நாள் ரதி. சீக்கிரம் குளிச்சுட்டு வா. நாம் வெளியே போகலாம்'' என்று சொல்ல அவள் கேள்வியுடன் விலகினாள்.

''எங்கே போகிறோம்?''

''சஸ்பென்ஸ்...'' என்று கண் சிமிட்டியதும், அதில் வந்த செல்லக் கோபத்தில், அவன் மூக்கைப் பிடித்து அவள் ஆட்ட, அவள் ஆட்டிய வேகத்திற்கும் மேலாக அவன் தலையை அசைக்க, ஈர தலையில் இருந்து தெறித்த நீர் துளிகள் முகத்தில் பட்டு அவளைச் சிலிர்க்க வைத்தது.

அவளின் முகத்தில் பட்டுத் தெறித்த ஈரத் துளிகளை ஒற்றை விரலால் வருடியவன் அவளை நோக்கி குனிய, அவனைத் தள்ளி விட்டு படுக்கையில் இருந்து இறங்கினாள் பாரதி.

அவசரமாக எழுந்து கொண்டவளின் கை பற்றி இழுத்துக் குளியல் அறைக்குள் தள்ளி, ''குளிச்சுட்டு வா'' என்று கதவை சாத்தி வெளியே தாழ் போட்டான்.

''ட்ரெஸ் எடுத்துக்க வேண்டாமா?'' என்றவளின் சிணுங்கலை அவன் கண்டு கொள்ளவில்லை.

''குளிச்சுட்டு வா, நமக்குள்ளே என்ன?'' என்றவன் குரலில் மேலும் குறும்பே நிறைந்து இருந்தது. குளித்து விட்டு அணிந்து சென்ற நைட்டியை மீண்டும் அணிந்து வெளியே வந்தவள் கட்டிலில் அவன் எடுத்து வைத்து இருந்த ஆடையைப் பார்த்து புருவம் உயர்த்தினாள்.

''புகழ், பட்டுப் புடவை ஏது? நான் ஊரில் இருந்து எடுத்து வரவில்லையே? புதிதா? எப்போ எங்க வாங்கி னீங்க? சொல்லவே இல்லையே?'' என்று ஆச்சரியமாகக் கேட்க அவன் அதைக் கண்டு கொள்ளவே இல்லை.

''நாம் என்ன நடு காட்டில் ஆள் நடமாட்டம் இல்லாத இடத்திலா இருக்கோம் பாரதி? கோவை, சென்னைக்கு அடுத்தபடியா வளர்ச்சி அடைந்த பெரிய நகரம் அங் கிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் மேட்டுப் பாளையத்தில் ஒரு பட்டுப் புடவை வாங்க முடியாதா? வந்து சீக்கிரம் ட்ரெஸ் மாற்றிக் கொள். நாம் கிளம்பணும்'' என்று அவசரப்படுத்தினான்.

''இவ்வளவு கிராண்டா ட்ரெஸ் பண்ணிக் கொண்டு எங்கே போறோம்? கோவிலுக்கா?''



''கோவிலுக்கு மட்டும் தான் பட்டுப் புடவை கட்டிக் கொண்டு போகணுமா? அத்துடன் எங்கே என்று சொன்னால் தான் என்னுடன் வருவாயா பாரதி?'' என்று கேட்டவன் குரலில் 'நான் உன் கணவன் அல்லவா?' என்ற கேள்வி புதைந்து இருக்க அவள் மறுப்பாகத் தலை அசைத்தாள்.

''அப்படி எல்லாம் இல்லை புகழ். இனிமேல் கேட்க மாட்டேன் சாரி.''

''சாரியும் தேவை இல்லை பாரதி. எனக்கு வேண் டியது நம்பிக்கை மட்டுமே...''

''அது மட்டும் போதுமா புகழ்?''

''போதும்...'' கேட்ட கேள்விக்கு பதில் என்ற வேகத்தில் உடனடியாகச் சொல்லியபடி கண்ணாடியில் தலை வாரிக் கொண்டு இருந்தவன் சீப்பைப் போட்டு விட்டு, வேகமாக பாரதியின் அருகே வந்தான்.

''ஹேய் இப்ப நீ என்ன கேட்டாய்?'' என்றவன் குரலில் உல்லாசம் இருந்தது.

''தங்கமான வார்த்தைகளை எல்லாம் திருப்பிச் சொல்ல முடியாது என்று அவள் பிகு பண்ணிக் கொண் டதும் அவன் சிரிப்பு பெரிதாக விரிந்தது.

''நீ திருப்பிச் சொல்ல வேண்டாம் பெண்ணே. நீ சொல்ல வந்த விஷயம் ஏற்கனவே என் காதுகள் வழியே மனத்தில் பதிந்து விட்டது. தாங்க்ஸ்'' என்றவன் அவளை இறுக்கி அணைத்து கன்னத்தில் அழுத்தமாக ஒரு முத்தமும் பதித்து விட்டு நகர்ந்தான்.

அறையை பூட்டிக் கொண்டு கிளம்பிய போதும், டாக்சியில் பயணம் செய்த போதும், ''சாப்பிட வேண்டாமா

புகழ்?'' என்று நினைவு படுத்திய போதும், புன்ன கையை மட்டுமே பதிலாகக் கொடுத்தவன் கார் நின்ற உடன் கை கொடுத்து இறக்கி விட்டான்.

''வா, இங்கே கல்யாண வீட்டில் விருந்து சாப்பிட லாம்.''

''கல்யாணமா? யாருக்கு? உங்க சொந்தக்காரங்களா? பத்திரிகை வந்ததா? நேற்று இரவு கூடச் சொல்லவே இல்லையே? அத்தை காலையில் நினைவு படுத்தினாங் களா?'' என்று அடுக்கடுக்காக அவள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் மறுப்பாகத் தலை அசைத்தவன் வாசலில் பிர மாண்டமாக நின்று இருந்த அந்த டிஜிட்டல் போர்டின் முன்னால் வந்து கை கட்டி நின்று கண்ணால் அவ ளுக்குக் காட்டினான்.

''வானதி வெட்ஸ் விக்னேஷ்'' என்று இருந்த அந்தப் பலகையைப் பார்த்ததும் அவள் திகைப்புடன் நின்றாள். வானதி! அவளின் திருமணம் இங்கே இன்று நடப்பது இவனுக்கு எப்படித் தெரிந்தது? தனக்கு என் சொல்ல வில்லை?

''வானதி கல்யாணம் இன்று என்ற தகவல் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''வானதியிடம் போனில் பேசினேன்.''

''வானதி போன் நம்பர் எப்படிக் கிடைத்தது?''

''சிவா வீட்டு முகவரி கண்டு பிடிக்க முடிந்த என்னால், வானதியின் போன் நம்பரைக் கண்டு பிடிக்க முடியாதா?''

''ப்ச்! புகழ், ஒழுங்கா பதில் சொல்லப் போறீங்களா இல்லையா?''



''நான் உண்மையை தான் ரதி சொல்கிறேன். ஒழுங்கா பேசலை என்று எப்படிச் சொல்கிறாய்?''

''கேலி போதும் புகழ், சொல்லுங்க. இல்லை என்றால் என் தலை வெடித்து விடும்...'' என்று கொஞ்சியவளைச் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''உனக்கு இப்போ என்ன தெரியணும்?''

''எப்படி வானதி போன் நம்பர் உங்களுக்குத் தெரிந்தது?''

''இதெல்லாம் பெரிய விஷயமா ரதி? நீ படித்த காலேஜில் பாங்க் பிரான்ச் இருந்ததா?''

''ஆமா! ஐ ஓ பி..'' என்றவளின் கண்கள் விரிந்தது. 'ஆனால், அதில் உங்களுக்கு தெரிந்தவர்கள் இருந் தாலும், இந்த விஷயம் எப்படி தெரியும்?''

''நீ எந்தக் காலத்தில் இருக்கிறாய் பாரதி? ஒவ்வொரு கணக்குக்கும், கே ஒய் சி என்று ஒரு படிவம் நிரப்பித் தர வேண்டும். அதில் வாடிக்கையாளரின் தொலைபேசி / அலைபேசி எண்களும் பதியப்படும். இந்தக் காலத்தில் அலைபேசி இல்லாதவர்கள், அதிலும் பொறியியல் படிக்கும் மாணவர்கள் இருக்க முடியுமா?''

''அவ்வளவு சிரமப்பட்டு இந்த எண்களைக் கண்டு பிடித்ததன் நோக்கம் என்னவோ?''

''இப்போதைக்கு எனக்கு இருக்கக் கூடிய ஒரே நோக்கம் உன்னை சந்தோஷமா வைத்துக் கொள்வது தான்...'' என்று சொல்ல அவள் திகைப்புடன் பார்த்தாள். இவன் என்ன சொல்கிறான்? தனக்காக, தன் சந்தோஷத் திற்காக இவர்களைப் பார்க்க முயற்சி செய்தானா?

வேகமாக அவனின் கன்னத்தைப் பிடித்து இழுத்து, அவசரமாக முத்தம் வைத்து, ''தாங்க்யூ புகழ்! இப்பவே போய் அவளை நான் பார்க்கிறேன்'' என்று குதூகலத்துடன் சொல்லிவிட்டு உள்ளே நாலு கால் பாய்ச்சலில் ஓடிச் சென்ற பாரதியை புன்னகையுடன் பின் தொடர்ந்தான்.

''மணமகள் அறை எங்கே'' என்று போகிற போக்கில் இருவரை கேட்டு, நான்கு பேரின் மேல் மோதி, ஓடும் போதே திரும்பிப் பார்க்காமல் சாரி சொல்லி, ஒரு நிமிடத்திற்குள்ளாகவே மணமகள் அறையின் வாசலில் வந்து நின்று மூச்சு வாங்கினாள் பாரதி.

''வானதி...'' என்ற அழைப்புடன் கதவைத் தள்ளித் திறந்த பாரதி உள்ளே இருந்த மூவரை, அவர்களின் இறுக்கமான பாவனையை கண்களில் இருந்து பரிதவிப்பைக் கண்டதும் திகைப்புடன் நின்றாள். மணமகளின் தோழிகள் மாதிரியோ, அவளின் வயதை ஒத்த பெண்களின் கேலிச் சிரிப்பிற்கு நடுவில் இருப்பாள் என்று எதிர்பார்த்து வந்தவள், அங்கே இருந்த இறுக்கமான சூழ்நிலையைக் கண்டதும் மென்று முழுங்கினாள்.

''இந்த ரூமுக்கு யார் எல்லாம் வந்தாங்க என்று எனக்குத் தெரியும். இங்கே இருக்கும் பைகளில் எல்லாம் சோதனை போட்டாலே காணாமல் போன நகை கிடைத்து விடும்'' என்று அழுத்தமான குரலில் பேசியது வானதி.

''உனக்கு பைத்தியம் தான் பிடிச்சு இருக்கு. இந்த மாதிரிப் பேசி தான் வம்பை விலை கொடுத்து



வாங்குகிறாய். கொஞ்ச நேரம் வாயை மூடிக் கொண்டு இரு. இங்கே இருக்கவங்க எல்லாம் நம்ம சொந்தக்காரங்க. அவங்க பைகளைச் சோதனை செய்தால், நாளை அவங்க முகத்தில் நாம் விழிக்க வேண்டாமா?'' என்று அதட்டியது அவளின் அண்ணனாக இருக்க வேண்டும்.

''போதும் இந்தப் பேச்சை விடுங்க. நான் என் காசு மாலையைத் தருகிறேன். அதைப் போட்டு அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுங்க. எங்க வீட்டுக்காரங்க பையை சோதனை செய்து அவங்க முகத்தில் கரி பூசும் முயற்சியில் நீங்களும் உங்க தங்கையும் இறங்க வேண்டாம்'' என்று கோபத்துடன் தன் நகையை விட்டு எறிந்தது அவளின் அண்ணியாக இருக்கலாம்.

பாரதி அறைக்குள் நுழைந்த ஒரு நிமிடத்திற்குள் இந்த வாசகங்கள் அவள் காதில் விழுந்து விட அவள் உள்ளே போவதா வெளியே நிற்பதா என்று தெரியாமல் தடுமாறினாள். வாசலில் தடுமாற்றத்தோடு பாரதி நிற்பதைப் பார்த்த அந்த வினாடியில் வானதியின் கண்களில் கனல் பறந்தது.

''இங்கே யாரு உன்னை வரச் சொன்னது? என் வாழ்க்கையை கெடுப்பதற்கு என்றே நீ பிறந்து வளர்ந்தாயா பாரதி?'' என்று அவள் கையைப் பற்றி இழுத்து அறைக்கு வெளியே வந்தவள், கடுமையாக கேட்க திகைத்தாள் பாரதி.

''நான் ஏன் உன் வாழ்க்கையைக் கெடுக்கப் போகிறேன் வானதி? நீ சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தான் ஆசைப்படுவேன். ஏன் இப்படி கேட்கிறாய்?'' என்றவளின் கண்கள் கலங்க ஆரம்பித்தது.

''இதை என்னை நம்பச் சொல்கிறாயா? சென்னையில் சில்லரை இல்லாத ஒரு அவசர நேரத்தில், என்னை நம்பிக் கடனாக நூறு ரூபாய் கொடுக்க யோசித்தவள் தானே நீ? என்னைத் தெரியாத மாதிரி என்னமாக நடித்தாய்?'' என்றவளின் கோபம் அவள் சொற்களில் தெறித்தது.

''உனக்கு விஷயம் தெரியாது வானதி. உண்மையில் எனக்கு அப்போ...'' என்று அவன் விளக்கம் சொல்ல ஆரம்பிக்கும் போதே அவள் கை இரண்டையும் தலைக்கு மேல் குவித்தாள்.

''எனக்கு விஷயம் தெரியாமலேயே இருக்கட்டும். ஏற்கனவே என் கல்யாணத்தில் தலைக்கு மேலே பிரச்னை இருக்கு. நீ புதுசா இன்னொரு பிரச்னையைக் கொண்டு வந்து விடாதே. நீ நல்ல நேரத்தில் இந்த இடத்தை காலி பண்ணு. உனக்குப் புண்ணியமாகப் போகும்'' என்று கோபமும் பயமும் கலந்த குரலில் அவள் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாகச் சொல்லி விட்டு அறைக்குள் அவள் செல்ல, அங்கே வந்து சேர்ந்தான் புகழ்.

''ஹேய் பாரதி என்ன ஆச்சு? ஏன் கண் கலங்கி இருக்கு?''

''ஒன்றும் இல்லை, வாங்க, நாம் கிளம்பலாம்.''

''அவளைப் பார்த்து ரெண்டு வார்த்தைப் பேசிட்டுப் போகலாம் பாரதி.''

''வேண்டாம். அவள் என்னை ஏன் இங்கே வந்தாய் என்று கேட்டு விட்டாள். இதுக்கு மேலேயும் இங்கே இருக்கச் சொல்றீங்களா?''



''ரிலாக்ஸ் பாரதி. நான் ஏற்கனவே அவளிடம் பேசி இருக்கிறேன். நேற்று அவள் நன்றாகத்தான் பேசினாள். இன்று வேறு ஒரு பிரச்னை அதுதான். வா இப்படி உட்காரலாம்'' என்று ஒரு ஓரத்திற்கு அழைத்து வந்தான்.

''பொண்ணு வீட்டில் வைத்து இருந்த நகை பெட்டி காணாமல் போய் விட்டதாம் நேற்று இரவு பல நகைகள் கல்யாண பெண்ணின் உடலில் இருந்ததால், முக்கால் வாசி தப்பித்து விட்டது. ம் ஒரு ஆரம், காணாமல் போய் விட்டது என்று தேடிட்டு இருக்காங்க. மாப்பிள்ளை வீட்டில் அந்த நகையைப் போட்டால், தான் கல்யாணம் நடக்கும் என்று சொல்லிட்டாங்க. அந்த வருத்தத்தில் அவள் ஏதாவது சொல்லி இருந்தால் நீ வருத்தப் படாதே.''

''அவளுக்கு அம்மா அப்பா கூட இல்லைங்க. அண்ணன் தான் படிக்க வைச்சார். இப்ப என்ன செய்வாங்களோ தெரியலையே?'' என்றவள் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.

''பாரதி எங்கே போகிறாய்? நில்லு, நானும் வருகிறேன்'' என்று சொல்லி விட்டு பின்னாலேயே சென்றான். மீண்டும் பெண் அறைக்கு வந்து சேர்ந்தவள் அங்கே இருந்தவர்களைப் பார்த்துப் பொதுவாக கரம் குவித்தாள்.

''நான் வானதி கூட கல்லூரியில் ஒரு வருடம் படித்தேன். பிறகு என் உடல் நிலை காரணமாக சென்னைக்குச் சென்று விட்டாலும் நாங்க நல்ல ப்ரெண்ட்ஸ் அவளின் திருமணத்திற்காக வந்தேன். அந்தத் திருமணம் நடப்பதில் சின்னப் பிரச்னை வந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். அதைத் தீர்க்க நான் உதவி செய்யத்

தயார். காணாமல் போன நகை எத்தனை பவுன் வானதி? சொல்லு'' என்று கேட்க அவள் திகைப்புடன் பார்த்தாள்.

''அது காணாமல் போகவில்லை என்று எனக்குத் தெரியும். இங்கேதான் யாரோ எடுத்து மறைத்து வைத்து இருக்கிறார்கள். இங்கே இருப்பவர்களின் பெட்டியை சோதனை செய்தால் கண்டு பிடித்து விடலாம் என்று சொல்கிறேன். அண்ணன் அதற்கு ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார்.

''இவள் சின்ன பிள்ளைம்மா. கல்யாண வீட்டுக்கு வந்தவங்க பெட்டியை எல்லாம் சோதனை செய்ய முடியுமா? இன்று ஒரு நாளோடு இந்த உறவுகள் முடிந்து விடப் போவதில்லை. எல்லோரையும் சோதனை செய்த பின்பும் நகை கிடைக்கவில்லை என்றால் என்ன செய்ய முடியும்? அதையும் யோசிக்க வேண்டாமா? மாப்பிள்ளை வீட்டில் அவகாசம் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். ஆறு மாசத்தில் நகையைப் போட்டு விடுகிறேன் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறேன்.

''மாப்பிள்ளை வீட்டில் அவகாசம் கேட்டலும் கேட் பீங்க. ஆனால் என் நகையைப் பயன்படுத்த மாட்டீங்க அப்படிதானே?''

''உங்க நகை போட்டு தான் எனக்குக் கல்யாணம் நடக்க வேண்டும் என்றால் இந்தக் கல்யாணம் நடக்காம லேயே போகட்டும்'' என்று திருப்பிக் கொடுக்க அவன் பரிதாபமாக மனைவியையும் தங்கையையும் மாறி மாறிப் பார்த்தான்.

''அண்ணா! நீங்க கவலைப் படாதீங்கண்ணா. வானதி கல்யாணம் பிரச்னை இல்லாமல் நடக்க, நான்



உதவி செய்யத் தயார்'' என்று சொன்னவள் கணவனின் புறம் திரும்பினாள்.

''என்னங்க ஒரு நிமிஷம், உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால், நான் இந்த நகைகளை வானதிக்கு கொடுக்கட்டுமா?'' என்று தாழ்ந்த குரலில் அருகே வந்து கேட்டவளின் கண்களில் தவிப்பு இருந்தது.

## 25

திருமண வீட்டுக்குள் நுழையும் போது தன் பழைய தோழியைப் பார்க்கப் போகிறோம் என்று துள்ளலுடன் நுழைந்த பாரதிக்கு அடுத்த சில நிமிடங்களுக்குள் ஏற் பட்ட அனுபவம் தந்த உணர்வுகள் கணக்கில் அடங் காதவை.

ஏன் வந்தாய் என்று கேட்ட வானதியின் கோபம் தந்த வருத்தம், அண்ணி செய்யும் உதவியை வானதி ஏன் ஏற்க மறுக்கிறாள் என்பதில் வந்த குழப்பம்,

திருமண வீட்டில், நகை கொடுத்தால் தான் கல்யாணம் நடக்கும் என்று சொல்லும் மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் மேல் பொங்கிய கோபம்.

தன் நாத்தனாரின் திருமணத்துக்கு தன் நகையைக் கொடுக்கிறேன் என்று வானதியின் அண்ணி சொன்னது பிடித்து இருந்தாலும், அதை அலட்சியமாகத் தூக்கிப் போட்ட விதம் பிடிக்கவில்லை என்றதால் வந்த எரிச்சல்.

மனைவியின் உதவியை கண்டு கொள்ளாமல் காற்றில் பறக்கவிட்ட அவள் கணவன் மேல் வந்த விரக்தி, என்று பலவிதமான உணர்வுகள் பாரதியைத் தாக்கியது.

முகூர்த்தத்திற்கு இன்னும் சில மணி நேரங்கள் இருக்கும் நேரத்தில் தேவை இல்லாமல் இப்படி இவர்கள் விவாதம் நடத்திக் கொண்டு இருக்கிறார்களே என்ற பதைப்பில் 'தான் தலையிடுவது நியாயமா? அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?' என்பதைப் பற்றி எதுவுமே யோசிக்காமல், 'என் ஆரத்தைக் கொடுக்கட்டுமா?' என்று கண்களுக்குள் பார்த்து நேரடியாகக் கேட்ட பாரதிக்கு என்ன பதில் சொல்வது என்று புகழுக்குப் புரியவில்லை.

ஏற்கனவே கொடுக்க வேண்டும் என்ற முடிவை எடுத்து விட்டாள் என்பதும் புரிந்தது. விலை உயர்ந்த பொருள் தன் சம்மதம் இல்லாமல் கொடுக்கவும் மனம் வரவில்லை. வானதி தன்னை தோழியாக நினைக்கவில்லை என்ற வருத்தத்தில் இருப்பவள் அதை சரி செய்ய நினைக்கிறாள். இதில் தடை சொன்னால் அவளின் மன நிலை பாதிக்கப்படும் அபாயம் இருக்கிறது. பணத்தை விட மனைவியின் சந்தோஷம் முக்கியம். அவசரமாக முடிவெடுத்தான் புகழ்.

''இது உன் நகை பாரதி. உங்க அம்மா அப்பா உனக்குக் கொடுத்தது. நீ தாராளமா என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அதற்கு நான் தடை சொல்ல மாட்டேன்.''

''இல்லை புகழ் இது நம்ம சொத்து நாம் சேர்ந்து தான் முடிவு எடுக்கணும். அம்மா அப்பா எனக்குக் கொடுத்து இருந்தாலும், எப்போ நாம் கல்யாணம் முடிந்து விட்டதோ அப்பவே இது நம் சொத்தாகி விட்டது. இனி அதில் அவர்களுக்கு உரிமை இல்லை. நீங்க



சொல்லுங்க...'' என்று தீர்மானமாகக் கேட்க அவன் புன்னகை செய்தான்.

''சரி, எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அவர்களுக்கு இலவசமாக பெற்றுக் கொள்கிறோம் என்ற தாழ்வுணர்ச்சி இல்லாத மாதிரி கொடு'' என்று குரலை தணித்துச் சொல்ல, 'புரியுது புகழ்' என்று தலை அசைத்து விட்டு வானதியிடம் வந்தாள். தன் கழுத்தில் இருந்த மாங்காய் மாலையை, கழட்டி அவள் கையில் வைத்தாள்.

''உங்க அண்ணனுக்கு எப்ப முடியுதோ அப்ப திருப்பிக் கொடுக்கட்டும். முடியவில்லை என்றாலும் பரவாயில்லை. என் தோழிக்கு நான் கொடுத்த பரிசாக இருக்கட்டும். இப்போதைக்கு இதை வைத்து உன் கல்யாணம் நல்லபடியாக நடக்கட்டும். தேவை இல்லாதது எதையாவது பேச வேண்டாம் என்று சொல்லாதே வானதி. மனசு நிறைஞ்சு சந்தோஷமா தான் கொடுக்கிறேன். மறுக்காமல் வாங்கிக் கொள்'' என்று சொன்னவள் அவளின் அண்ணனிடம் திரும்பினாள்.

''அண்ணா, இது பத்து நாட்களுக்கு முன்பு என் திருமணத்திற்கு புதிதாக செய்தது தான். மற்ற விஷயங்களை மறந்து விட்டு, கல்யாண வேலைகளைப் பாருங்க. என்ன அப்படி நிற்கறீங்க? கிளம்புங்க இந்தக் கல்யாணம் ஜாம் ஜாம் என்று நடக்கணும்'' என்று அதட்ட அவளின் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டான்.

''அம்மா! நீ யார் பெற்ற பிள்ளையோ தெரியலை. சொந்த அண்ணனின் மனைவி நகையை வேண்டாம் என்று வாதம் பண்ணும் வானதி, உன் கையில் இருந்து வாங்கிக் கொண்டாளே? மின்னல் மாதிரி வந்தாய்,

நகையைத் தூக்கி நிமிஷமா கையில் வைத்து விட்டாய். எங்க அம்மாவே உன் ரூபத்தில் வந்து ஆசீர்வாதம் பண்ணி இருக்காங்க என்று நினைத்துக் கொள்கிறேன். சீக்கிரமே இந்த நகைக்குரிய பணத்தையோ, அல்லது இதே மாதிரி நகையோ உனக்கு செய்து கொடுத்து விடு வேன். என்னை நம்பு. நீ தான் என் குல தெய்வம் தாயே... என்று உணர்வுப் பூர்வமாகச் சொன்னவன் அவள் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டான்.

''அண்ணா ப்ளீஸ். என்னென்னவோ பேசறீங்க. பணம் இன்னிக்கு வரும் நாளைக்குப் போகும். பிறக் கும்போது எதையும் எடுத்துக் கொண்டு வரவில்லை. போகும்போதும் எதையும் எடுத்துச் செல்லப் போவ தில்லை. என்னிடம் இருக்கு தருகிறேன். இவர் என் கணவர், புகழேந்தி'' என்று அவன் பக்கம் கை காண்பிக்க அவன் அவசரமாக வந்து அவளின் கைகளைப் பற்றி மீண்டும் நன்றி வார்த்தைகளை உதிர்க்க ஆரம்பித்தான்.

தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை உணர முடியாமல் சிலையாக உறைந்து நின்ற வானதியை பற்றி லேசாக உலுக்கினாள் பாரதி.

''வானதி. உன் கல்யாணம் குறித்த நேரத்தில் ஜாம் ஜாம் என்று நடக்கப் போகிறது'' என்று சந்தோஷமாகச் சொல்ல அவள் சட்டென்று குனிந்து அவளின் காலில் விழுந்தாள்.

''ஹேய் என்ன பண்ற?'' என்று பதறி அவளைத் தூக்க முயல அவளால் முடியவில்லை.

''பாரதி, உன் நல்ல மனசை புரிந்து கொள்ளாமல், உன் வசதியைப் பார்த்தும், உன் திறமைகள் பார்த்தும், உனக்கு இருக்கும் நட்பு வட்டம் பார்த்தும் நான் பொறாமைப்



பட்டு இருக்கிறேன். சென்னையில் உன்னைப் பார்த்த போது உன் வசதி பார்த்து கோபப்பட்டேன். இங்கே நீயாக என் திருமணத்திற்கு வந்த போதும், சிவா பற்றி சொல்லி என் கல்யாணத்தில் குழப்பம் செய்ய வந்து இருக்கிறாய் என்று நினைத்து கடுமையான வார்த்தை களைச் சொன்னேன். ஆனால் நீ?''

''என் கல்யாணத்தைச் சிறப்பாக நடத்த, ஒரு லட்சத் திற்கும் மேல் மதிப்புள்ள தங்க நகைகளை, போகிற போக்கில் என் கையில் வைத்து விட்டாய் உன் நல்ல மனசு யாருக்கு வரும்? உன்னைப் போய் நான் போட்டி யாக நினைத்து, கண்டபடி பேசி, எனக்கு மன்னிப்பே கிடையாது பாரதி. உன்னிடம் மன்னிப்புக் கேட்கக் கூட எனக்கு அருகதை இல்லை பாரதி.''

சிவாவின் மரணத்திற்கு பாரதிதான் காரணமோ என்று அவளைக் குற்ற உணர்வில் தவிக்க விட்டவள் வானதி!

மறதியினால், அவளை இனம் கண்டு பிடிக்கத் தெரி யாமல் பாரதி சென்னையில் தவித்தபோது அவளைக் கடுமையான வார்த்தைகளினால் குத்திக் கிழித்தவள் வானதி.

சுய நினைவின்றி பாரதி மருத்துவமனையில் இருந்த போது, நடந்த விபத்தில், தன் பங்கை சொல்லாமல் மறைத்து, அமைதி காத்த வானதி,

கல்யாண மண்டபத்திற்கு அழைப்பு இல்லாத போதும் வாழ்த்துச் சொல்ல அன்புடன் தேடி வந்தவளை, என் கல்யாணத்தில் குழப்பம் செய்ய வந்தாயா என்று கடுமையான வார்த்தைகளினால் குத்திக் கிழித்த வானதி...

திருமணத்தில் பணத்தினால் பிரச்னை என்பது தெரிய வந்த அடுத்த நிமிடம் யோசிக்காமல் ஒரு லட்சம் பெருமானமுள்ள நகைகளைத் தூக்கிக் கொடுத்த பாரதியின் பெருந்தன்மையில் கூனிக் குறுகி, குற்ற உணர்வில் தவித்துப் போனாள்.

இன்று இறைவன் விதித்த விதியினால், இருவரும் சம வயதினர் என்றாலும், தன் செயல்களின் மூலம் இமயமாக உயர்ந்து நின்று ஜொலிக்கும் பாரதியின் கால்களில் விழுந்து தான் குற்றங்களைச் சொல்லிக் கதறி அழுது, தன் கண்ணீரால் பாரதியின் கால்களை கழுவிக் கொண்டு இருந்தாள் வானதி.

* * *

அடுத்த சில நிமிடங்களில் அந்த திருமண மண்டபத்தின் மணமகள் அறையில் சில நிமிடங்கள் முன்பு இருந்த குழப்பமான சூழல் மாறி கலகலப்பு வந்து சேர்ந்தது.

''என்ன இருந்தாலும் வானதி அண்ணி இவ்வளவு தூரம் தரம் இறங்கி இருக்க வேண்டாம் பாரதி அவங்களைப் பார்க்க மனசுக்கு சங்கடமா இருந்தது'' என்று திருமண மண்டபத்தை விட்டு வெளியே வந்ததும் வருத்தமாகப் பேச்சை ஆரம்பித்தான் புகழ்.

''இல்லை புகழ் அவங்க நிலைமை உண்மையிலேயே பரிதாபத்திற்கு உரியது. அவங்க பெற்றோர் பக்கத்தில் இருந்து நிர்ப்பந்தம் ஏற்பட்டு இருக்கலாம். பெண்களுக்குப் பிறந்த வீடு ஒரு கஷ்டத்தில் இருந்தால் அதைத் தாங்க முடிவதில்லை. என்ன தான் வாழ வந்த வீடு என்று புகுந்த வீட்டைச் சொன்னாலும், அந்த வீட்டையும் விட்டுக் கொடுக்க முடிவதில்லை புகழ்.''



''அதுக்காக சந்துரு சம்பந்தி வீட்டு முன்பு தலை கவிழ்ந்து நிற்கலாமா ரதி?''

''அப்படி ஒரு சூழல் அங்கே வந்து இருக்காது புகழ் நீங்க பார்த்தீங்களே? வானதி அண்ணி தன் நகையைக் கொடுக்கத் தயாரா தானே இருந்தாங்க.''

''ஆனால் அதுக்கு என்ன அவசியம்? நாத்தனாருக்கு என்று அவன் சிரமப்பட்டு வாங்கிய நகைகளை ஒளித்து வைத்துவிட்டு, தன்னுடைய நகைகளை தியாகம் செய்வதாக ஏன் நடிக்க வேண்டும்?''

''அவங்களுக்கு ஒரு தங்கை திருமண வயசில் இருக்கு. திருமண நிச்சயமும் ஆகி இருக்கு. அதற்காக உதவி செய்ய நினைத்து இருக்கலாம்.''

''இல்லை பாரதி உதவி செய்ய நினைப்பதில் தவறில்லை. ஆனால் அதை கணவனிடம் சொல்லிவிட்டு செய்து இருக்க வேண்டாமா? நீ என்னைக் கேட்கவில்லை? நாத்தனாரின் திருமணம் நின்றாலும் பரவாயில்லை, என்று தங்கையின் திருமணத்திற்கு உதவ நினைப்பது கொடூரம் இல்லையா?'' என்ற அவனின் கேள்விக்கு அவளிடம் பதில் இருந்தது.

''கல்யாணம் நிற்க விட்டு இருக்க மாட்டாங்க புகழ். நகைகளையும் கழட்டிக் கொடுக்க அவங்க தயாரா இருந்தாங்க. அதன் மூலம் கணவர் மனத்தில் உயர்ந்த இடத்தை பிடிப்பதோடு, மேலும் நகைகளும் சேர்த்துக் கொள்ளலாம். தங்கையின் கல்யாணம் சிரமம் இன்றி நடக்கும் என்ற எண்ணம் தான் ஒரே கல்லில் பல மாங்காய்கள் அடிக்க ஆசை பட்டதனால் வந்த துன்பம் இது.''

''என்னவோ போ, நான் உன்னை இந்தக் கல்யாண வீட்டிற்கு அழைத்து வந்த நோக்கம் என்ன? இங்கே

நடந்தது என்ன?'' என்று சலித்துக் கொள்ள அவளின் முகம் ஆர்வத்தைக் காட்டியது.

''சாரி புகழ். நீங்க ப்ரெண்ட்ஸ் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து சந்தோஷமா இருக்கணும் என்று அழைத்து வந்து இருக்கலாம். ஆனால்...''

''உனக்கு உன் தோழியே பார்த்த சந்தோஷத்தில்... எனக்கும் ஏதாவது சிறப்பு கவனிப்பு கிடைக்குமென்று நினைத்தேன். நெல்லுக்கு பாயும் நீர் புல்லுக்குப் பாய்வது போல...'' என்று கண் சிமிட்ட அவள் அவனை நெருங்கி அமர்ந்தாள்.

''இதுல நெல் யாரு? புல் யாரு?'' என்றவளின் கைகள் அவனின் இடுப்பைச் சுற்றி வளைத்து இருந்தது தோள்கள் உரசிக் கொண்டு இருக்க அவளின் கண்களில் காதலுடன் கூடிய அழைப்பு இருந்தது.

''யேய் பெண்ணே! அது நான் சொல்லி தான் தெரிய வேண்டுமா? எதற்கும் காரில் கொஞ்சம் தள்ளியே இரு. ரூமில் போய் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளலாம். அப்புறம் இன்னும் அரை மணி நேரத்தில் நாம் ஊட்டி கிளம்புகிறோம்'' என்று உல்லாசமாக சிரித்தவனை வியப்புடன் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? நாம் எதற்கு இங்கே வந்தோம் என்பது மறந்து விட்டதா? நாம் ஹனிமூனுக்கு வந்து இருக்கோம். இனி தான் அதை ஆரம்பிக்கவே போறோம்'' என்று சொன்னவன் குரல் வாக்கியத்தின் முடிவில் தேய்ந்து ரகசியம் பேச, அவன் தலை அவளின் தோளில் சாய, அவளுக்குள் ரசாயன மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தது.



# 26

அடுத்த மூன்று மணி நேரத்தில் கோவையில் இருந்த ஹோட்டல் அறையை காலி பண்ணிவிட்டு, ஊட்டியில் முதல் நாள் அதிகாலை கிளம்பிய அதே குட்டுக்கு வந்து சேர்ந்தபோது, வந்து சேர்ந்து இருந்த இருவரின் மனமும் உல்லாச வானில் சிறகடித்துப் பறக்கத் தயாராக இருந்தது.

''எனக்காக எவ்வளவு சிரமப்பட்டு இருக்கீங்க புகழ்?'' என்றவளின் குரலில் அன்பு, அக்கறை, காதல், ஆதங்கம் எல்லாம் கலந்து இருந்தது.

''உனக்காக இது கூடச் செய்ய மாட்டேனா ரதி? நீ என்னில் பாதி அல்லவா?''

''அப்படியா?'' என்று குறும்பாகக் கேட்டவளின் இதழ்களை சிறை செய்து சில நிமிடங்கள் கழித்தே விடுவித்தான்.

''பேச்சு பேச்சா இருக்கும்போது எதுக்கு நடுவில் ஆக்ஷனில் இறங்குறீங்க?''

''உனக்குப் பிடிக்காத மாதிரி தெரியலையே?'' என்று கேலியாகச் சொல்ல அவன் முதுகிலும் தோளிலும் சில பல அடிகள் விழுந்தது.

''உண்மையைச் சொல்லணும் என்றால் இது தான ஆக்ஷன். நான் செய்தது ரொமான்ஸ்'' என்று மேலும் கிண்டல் அடிக்க அடிகளின் வேகம் கூடியது.

''ரதி, உன்னை இந்த மாதிரி உற்சாகமாகப் பார்க்க வேண்டும் என்பதற்காக தான் இவ்வளவு கஷ்டமும்

பட்டேன். நீ சந்தோஷமாக இல்லை என்றால் நான் எப்படி சந்தோஷமா இருக்க முடியும் சொல்லு?''

''உங்களை மாதிரி ஒரு நல்ல மனிதன் எனக்கு கணவனாக வாய்த்தது. நான் எந்த ஜென்மத்தில் பண்ணிய புண்ணியமோ தெரியலை...'' என்று நன்றியுடன் சொல்ல அவன் புன்னகையுடன் அணைத்துக் கொண்டான்.

''நான் நிஜமாவே அவ்வளவு நல்லவனா ரதி?''

''ஏன் அதில் என்ன உங்களுக்கு சந்தேகம்?''

''புலவர்கள் யாரும் நம்ம அருமை பெருமை எதுவும் பாட்டா பாடவில்லையே. அதனால் தான் கேட்டேன்'' என்று கண் சிமிட்ட அவள் புன்னகை செய்தாள்.

''புலவர்கள் சொல்லாவிட்டால் என்ன? நானே சொல்கிறேன். உங்களுக்கு ஏன் அந்த குறை? எங்க வீட்டுக்காரர் ந..ல்..ல..வ..ர். எவ்வளவு நல்லவர் என்றால், எங்க அப்பாவே அவரிடம் 'என் பொண்ணு அவள் காலேஜில் முதலாம் ஆண்டு படிக்கும்போது ஒரு பையனைக் காதலித்தாள்' என்று சொன்ன பிறகும், அந்த பெண்ணிடம் அதைப் பற்றி ஒரு வார்த்தை கூட கேட்காத பெருந்தன்மையான ஆள் தெரியுமா?'' என்று கேலியாகச் சொன்னதும் அவன் சிரித்தான்.

''என்ன கேட்கச் சொல்கிறாய்? அவனே இறந்து விட்டான். ஹையோ பாவம் அல்ப ஆயுசில் போய்ட்டானே என்ற வருத்தப்படுவதற்கு மேல் அதில் பேச என்ன இருக்கு?''

''ஆனால் அப்பா உங்களிடம் சொல்லும் போது அவனும் நானும் விரும்பியதாகத் தானே சொல்லி இருப்பார்'' என்று சொல்லும்போதே அவளின் குரல் கம்மியது.



''இந்த அழுவாச்சி ரோல் உனக்கு நல்லாவே இல்லை. முதலில் அழுகையை நிறுத்து. ஆமா தெரியாமல் தான் கேட்கிறேன். 18 வயசுல ஒரு பையனைப் பார்த்து ஆசைப் பட்டு, அவன் இறந்து போய் விட்டதால், அந்த பொண்ணு கடைசி வரைக்கும் அவனையே நினைத்துக் கொண்டு கன்னியா நிற்கணும் என்று நீ சொல்வாயா? ஹவ் ஸ்டுபிட்...''

''இல்லை புகழ்...''

''பாரதி. நல்லா சந்தோஷமா வாழ்ந்தவர்களே, எதிர்பாராமல் கணவனை இழந்து விட்டால், விதவைத் திருமணம், விவாகரத்து ஆனவர்களின் மறுமணம், திருமணம் ஆகாமலே சேர்ந்து வாழ்பவர்கள், என்று இந்த மாதிரி பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நேரம் இது இப்ப போய் என்ன பேசற நீ? அவ்வளவு ஏன்? வானதி கல்யாண மண்டபத்தில் போய் நின்ற போது, உன் மனசில் சிவாவை இவள் காதலித்தாள் என்ற எண்ணம் வந்ததா? நல்லா யோசனை பண்ணிப் பாரு'' என்று கேட்டதும் மறுப்பாகத் தலை அசைத்தாள்.

''இல்லை, வானதியே, 'அதை இதை சொல்லி என் கல்யாணத்தில் குழப்பம் பண்ண வந்தாயா?'' என்று என்னைக் கேட்கும் வரை அந்த நினைவு வரலை.''

''உலகத்தில் எல்லாக் காலங்களிலும், எங்கேயாவது சில குதர்க்கமான மனிதர்கள் குண்டக்க மண்டக்க கேள்வி கேட்டு மனிதர்களின் மனதை நோகடிப்பது நடந்து கொண்டே தான் இருக்கும். அதைக் காரணம் காட்டி, நானும் அப்படி அயோக்கியனாக இருக்க வேண்டுமா? நான் நல்லவனாக இருப்பதில் உனக்கென்ன ஆட்சேபணை?''

''ஹேய் எனக்கென்ன ஆட்சேபணை? எனக்கு சந்தோஷம். பெருமை என் கணவன் மற்றவர்களில் இருந்து வேறு பட்டவன் என்று சொல்வதில் சந்தோஷம். அதை தான் சொல்லிக் கொண்டு இருக்கிறேன்.''

''இதுல சுயநலமும் இருக்கு பாரதி. எத்தனை நாளைக்கு உன்னை பக்கத்தில் வைத்து வேடிக்கை பார்க்க முடியும் சொல்லு? அதிலும் கல்யாணம் முடிந்த இரண்டாவது நாள் அந்த மாதிரி ஒரு இடியும் மழையும் பொழிஞ்சால் நான் என்ன ஆவேன்? அதை சரி செய்ய வேண்டாமா?''

''தாங்க் யூ புகழ் என்னை சரியான முறையில் புரிந்து கொண்டதாடு, என் மனசில் இருக்கும் கலக்கங்களையும் விரட்ட நடவடிக்கை எடுத்து இருக்கீங்களே? உங்களுக்கு எப்படி நன்றி சொல்றது என்றே தெரியலை.''

''பாரதி, உன்னை என்னவோ நினைத்தேன். ஆனால் நீ நான் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை...'' என்று உதட்டை தூக்கி கேலி பேச அவள் விழித்தாள்.

''என்ன ஆச்சு? நான் என்ன செய்தேன்...?''

''என்ன செய்யலை என்று கேளு...''

''புரியற மாதிரி பேசுங்க புகழ். எனக்கு தலை சுத்துது.''

''ஓகே வெளிப்படையா கேட்கிறேன். நட்புக்கு இவ்வளவு மரியாதை கொடுக்கும் நீ காதலுக்கு மரியாதை கொடுக்க இவ்வளவு யோசிப்பது நியாயமா பாரதி?'' என்று கேட்டதும் அவள் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

''இல்லை புகழ். நியாயமே இல்லை.''

''புரிஞ்சால் சரி. இதுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்.''



''நல்லா பெரிசா, வாழ்க்கை முழுவதும் மறக்கவே முடியாத மாதிரி, ஆழமா மனசுல பதிவது மாதிரி, ஒரு தண்டனை கொடுங்க பார்ப்போம்'' என்று செல்லச் சிரிப்புடன் சீண்ட, அவளை நெருங்கினான் புகழ்.

''நீயே சொல்லி விட்ட பிறகு எனக்கு என்ன தயக்கம்? கொடுத்து விட வேண்டியது தான். உனக்கு ஆயுள் தண்டனை தான் சரி. என் ஆயுள் முடியும் வரை இமைக்கின்ற நேரம் கூட விலகாமல் என்னுடனே இறுதி வரை சேர்ந்து இருக்க வேண்டியது தான் உனக்கு விதிக்கப்படும் தண்டனை.''

''தண்டனை பெரிசா இருக்கே? கொஞ்சம் பார்த்து பண்ணுங்க பாஸ்'' என்று சிரித்தவளின் இதழ்களில் ஆசையாக முத்தம் வைத்தவன், மேலும் சிரித்தான்.

''பண்ணிடுவோம். கல்யாணம் முடிந்து நாலு நாள் ஆகியும் இன்னும் என் கிட்டே வராமல் ஏமாற்றியதற்கு ஈடு கட்ட, இன்னும் இரண்டு மாசத்துக்கு உனக்கு ராத்திரி தூக்கம் கிடையாது'' என்று சொல்லிவிட்டு அவளை அள்ளிக் கொள்ள அவன் மார்பில் சாய்ந்து சிரித்தாள்.

''என்ன கணக்கு பாஸ் இது? நாலு நாள் நஷ்டத்தை ஈடு கட்ட அறுபது நாள் ரொம்ப ஜாஸ்தியா இருக்கே?''

''பாங்க் மேனேஜரிடம் கணக்கை பற்றி பேசாதே இது வட்டி கணக்கு.''

''வட்டி ரொம்ப ஜாஸ்தி பாஸ்.''

''ஆரம்பிப்பதற்கு முன்பே ஜாஸ்தி என்று சொன்னால் எப்படி? இன்னும் எவ்வளவு இருக்கு?'' என்றவன் கதவைத் தாளிட்டு விட்டு கட்டிலுக்கு வந்தான்.

''இந்த ஊருக்கு ஹனிமூன் கிளம்பும் போது, உன் மனசில் குடைந்து கொண்டு இருக்கும் நினைவுகள் எல்லாம் மறந்து போக வைக்க வேண்டும் என்று நினைத்தேன் பாரதி. ஆனால் இப்ப தான் புரியுது வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் சேர்ந்து இருப்பது தான் எதையும் மறக்க வேண்டாம். எல்லாமே இனிமையான நினைவுகள், அவை ஒவ்வொன்றும் தரும் அனுபவ பாடங்கள் வாழ்க்கைக்கு அவசியம் என்பது இப்ப தான் புரியுது பாரதி.''

''உண்மை தான் புகழ். சிவாவின் மரணத்தை நீங்க எடுத்துக் கொண்ட விதமும், என் மனசில் இருக்கும் குறைகளைத் தீர்க்க வானதி, சங்கரியைத் தேடிச் சென்ற விதமும் அழகோ அழகு புகழ்.''

''வானதியை நான் தேடிச் சென்றேன் என்பது உண்மை தான். ஆனால் சங்கரி பிரச்னை நான் தேடிச் செல்லவில்லை...''

''அதுவும் நன்மைக்கே சிவாவின் மரணத்திற்கு நான் தான் காரணம் என்ற குற்ற உணர்வு எனக்கு இருந்தது தானே? சங்கரியைக் காப்பாற்றி, அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைய நாம் உதவி பண்ணினோம். என்பதில் எனக்கு சந்தோஷம் தான் புகழ்...''

''சிவாவின் மரணத்திற்கு நீ எப்படி பொறுப்பாக முடியும் பாரதி?''

''புகழ், எங்க அம்மா சொன்ன மாதிரி நான் அந்த ருத்திராட்ச மாலையை வாங்காமல் இருந்து இருக்க வேண்டும். வானதியின் மருத்துவ செலவுக்கு என் மோதிரத்தைக் கொடுக்காமல் இருந்து இருக்க வேண்டும்.



வானதி சிவாவை விரும்புகிறாள் என்று தெரிந்த பிறகு, நான் வழக்கம் போல கலகலப்புடன் அவனுடன் சிரித்துப் பேசுவதை தவிர்த்து இருக்க வேண்டும். அது இவளின் மனத்தில் பொறாமையைத் தூண்டி விட்டது தானே?''

''நீ அநியாயத்துக்கு நல்லவள் ஆக இருக்கிறாய் பாரதி. உலகத்தில் நடக்கும் அத்தனை விஷயங்களுக்கும் நீ தான் காரணம் என்று நினைத்துக் கொள்கிறாய். உண்மை அது இல்லை. இதை நீ இனியாவது உணர்ந்து கொள்ள வேண்டும்.''

''சரி பாஸ். இனிமேல் நான் என்ன செய்யணும் என்ன செய்யக் கூடாது என்பதை நீங்களே சொல்லிக் கொடுங்க. அதை அப்படியே கடை பிடிக்கிறேன். போதுமா?''

''பேச்சு மாற மாட்டாயா?''

''நிச்சயமா மாற மாட்டேன் பாஸ்...''

''அப்ப முதலில் இங்கே ஒண்ணு கொடு'' என்று வலது கன்னத்தைத் திருப்பிக் காட்டினான் புகழ். அவள் ஒரு வினாடி கூட யோசிக்காமல் கன்னத்தில் செல்லமாக ஒரு அறை வைக்க அவன் அலறினான்.

''அடி பாவி, இங்கே ஒண்ணு கொடு என்றால் இப்படி அடிக்கிறாய்...?''

''சொல்றதை தெளிவா சொல்லுங்க பாஸ் கன்னத்தில் ஒன்று கொடு என்றால் நான் என்ன நினைப்பது சொல்லுங்க?'' என்று கண் சிமிட்டியவளின் முகத்தில் குறும்பு கூத்தாடியது.

சிரிப்போடு அவளை நெருங்கியவன் அவளுக்குரிய தண்டனையை, கணவன் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி மனசிறையில் ஆயுள் தண்டனை விதித்தான்.

••

மனம் கவர்ந்த கள்வனின் மனச் சிறையில் விரும்பியே கூடிக் கொண்ட பாரதியும், தன் தண்டனையை சந்தோஷமாக அனுபவிக்க ஆரம்பித்தாள்.

தாம்பத்தியம் என்பது ரோஜா பூக்கள் நிரம்பிய பாதையில் செய்யும் பயணம் இல்லை. அது மேடு பள்ளங்களும், ஏற்றத் தாழ்வுகளும், இருக்கக் கூடிய பயணம்.

இந்தப் பயணத்தில், வாழ்க்கையை பகிர்ந்து கொள்ளும் துணையை நம்பி, வாழ்க்கையை ஒளிவு மறைவின்றி பகிர்ந்து கொண்டால், பரஸ்பரம் நம்பிக்கையும் காதலும் வைத்தால், பயணிக்கும் பாதையில் எதிர் வரக் கூடிய முள்ளும் மலராகும் என்பதில் சந்தேகம் இல்லை.

எந்த நினைவுகளை அவளின் மனத்தில் இருந்து நீக்க வேண்டும் என்று ஊட்டியில் அடி எடுத்து வைத்தார்களோ, அதே ஊர், இன்று அவள் மனம் முழுக்க மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்க்கும் இனிமையான நினைவுகளை நிரப்பி அனுப்பி வைத்தது.

வாழ்க்கை வாழ்வதற்கே!

அதைப் புரிந்து கொண்டார்கள்.

இனி எல்லாம் சுகமே...!